வரு.75 இல. 05 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
24 பக்கங்கள் 100/-
2023 ஜனவரி 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 29 Sunday, 2023

75 நமோ நமோ தாயே இன்னும் 6 நாட்கள்

02 கபன் புடவை வேண்டுமென கேட்டவர் மரணம்



05 பொருளாதாரத்தை சீர்குலைக்க அனுமதிக்க முடியாது!




24 தடையும் தீர்வும்







# தமிழ் அரசியல் கைதிகள் சிலரது விடுதலைக்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலரே முட்டுக்கட்டை



- உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளர் நாயகத்திடம் நீதி அமைச்சர் விஜேயதாச சுட்டிக்காட்டு
- சிறைகளில் இருக்கின்ற ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் மிக விரைவில் விடுவிக்கப்படுவதாகவும் உறுதி


தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அவர்களது வழக்குகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் அதற்கான விடுவிப்பு ஒப்புதல்களை சட்டப்படி தெரிவிக்க வேண்டும். ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு விருப்பம் தெரிவிக்க மறுத்து விடுகின்றனர். அதனாலேயே சில அரசியல் கைதிகளை இன்று வரையிலும் விடுவிக்க முடியாமலுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச்செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவை அவரது பிறந்த தினமான கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார். 06



A/L பரீட்சை நடைபெறும் காலத்தில்

## மின்வெட்டு ஏற்படின் உடனே அறிவிக்கவும்



உயர் தரப் பரீட்சை நடைபெறும் ஜனவரி 26 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவால் மின்வெட்டுக்கான ஒப்புதல் வழங்கவில்லையென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 06

இந்திய அதிஉயர் விருது பெற்ற

## குமார் நடேசனுக்கு இன்று பாராட்டு விழா



இந்திய அரசாங்கத்தின் 'பிரவாசி பாரதீய சம்மான்' என்ற அதிஉயர் விருதைப் பெற்ற எக்ஸ்பிரஸ் நியூஸ் பேர்ப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசனுக்கு இன்று பாராட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விருதுபெற்ற அவரை 06

யாழ். நயினாதீவு அம்மன் கோயிலில் அதிசயம்

## திடீரென நிலத்திலிருந்து மேல் கிளம்பிய அம்மன் சிலை



யாழ். நயினாதீவில் முருகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள அம்மனின் திரு உருவச் சிலையொன்று நிலத்திலிருந்து மேற்கிளம்பியுள்ள சம்பவம் ஆச்சரியத்தையும், அதேசமயம் பக்தர்களுக்கு பரவசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. நயினாதீவு மேற்குப் பகுதியில் வாழும் மக்கள் ஆதிகாலந்தொட்டு 06

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

### குமார் நடேசன் அவர்களுக்கான விருது தேசிய பத்திரிகைகளுக்கான கௌரவம்!

இந்திய அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி சான்றோருக்கு வழங்கப்படுகின்ற உயர்விருது ஒன்றைப் பெற்றுள்ளார் குமார் நடேசன் அவர்கள். வீரகேசரி பத்திரிகையை வெளியிடுகின்ற எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான குமார் நடேசன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'பிரவாசி பாரதீய சம்மான்' என்னும் இவ்விருது இந்திய அரசின் மிகவும் கௌரவத்துக்குரிய உயர்ந்த விருதாக மதிக்கப்படுகின்றது.

இந்திய அரசின் இத்தகைய உயர்கௌரவத்தைப் பெற்றுள்ள குமார் நடேசன் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவொன்று கொழும்பு-6, வெள்ளவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறுகின்றது. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இப்பாராட்டு விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் பா. அனந்த பாலகிட்ணர் தலைமையில் நடைபெறுகின்ற இவ்விழாவில் ஊடகத்துறை அன்பர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக கல்விமான்கள், இலக்கியவாதிகள் போன்ற பல்வேறுதுறை சான்றோர் பலர் பங்கேற்கின்றனர். 06



இந்தியாவின் 74 ஆவது குடியரசுத் தினத்தையிட்டு இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயின் தலைமையில் இந்திய இல்லத்தில் பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வுக்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பந்துல குணவர்த்தன, IMF நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சுப்பிரமணியன் ஆகியோர் இந்திய உயர்ஸ்தானிகருடன் உரையாடிக்கொண்டிருந்த போது. (படம்: சுலோச்சன கமகே)



தினேஷ் ஷாப்டர் மரண மரணம்; இரு வாரங்களில் தகவல் 06
அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



இலங்கை மீனவர் ஐவர் மியன்மார் பொலிஸில் 06
யாங்கூன் நிலையத்தில் தடுத்துவைப்பு

## போதைப் பொருள் கடத்தலுக்கு மரண தண்டனையே தீர்வு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்



போதைப்பொருள், கொலை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட கருத்து என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். போதைப்பொருள் பரவல் எந்த வகையிலேனும் கட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், 06

## தீர்வு காணும் விடயத்தில் சகல அதிகாரங்களையும் பயன்படுத்துங்கள்

ஜனாதிபதியிடம் முஷாரப் M.P. வேண்டுகோள்



இனப்பிரச்சினை தீர்வு, காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வு போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கு ஜனாதிபதி தனது சர்வ அதிகாரங்களையும் பயன்படுத்தி தீர்வு காண வேண்டும் என முஷாரப் M.P. ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இனப்பிரச்சினை தீர்வு, காணிப்பிரச்சினைகளுக்கான தீர்வு போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கு ஆணைக்குழுக்களை அமைப்பதும், பேசிப்பேசி காலங்கடத்துவதாக இப்பிரச்சினைகள் 06

## செல்லப்பிராணிக்காக தன் உயிரை மாய்த்த இளைஞன்

கிளிநொச்சியில் சோக சம்பவம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிணற்றுக்குள் விழுந்த தனது செல்லப்பிராணியான நாயை மீட்க கிணற்றில் இறங்கிய இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கிளிநொச்சியில் சிரேஷ்ட 06

சுதந்திர தினக் கொண்டாட்டம்

## கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

75ஆவது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டம் மற்றும் அதன் ஒத்திகை காரணமாக காலி முகத்திடல் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இன்று (29) மற்றும் பெப்ரவரி முதலாம் திகதி 06

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா மார்ச் 03 இல்

8,000 பக்தர்களுக்கே இம்முறை அனுமதி



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம் மற்றும் 04ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை 8,000 இலங்கை, இந்திய 06







# குமார் நடேசனுக்கு கொழும்பில் இன்று பாராட்டுவிழா!!

இந்திய மத்திய அரசினால் வழங்கப்பட்ட உயரிய விருதான பிரவாசி பாரதிய திவாஸ் சம்மான் விருதைப் பெற்றுக்கொண்ட குமார் நடேசனுக்கு கௌரவமளிக்கும் முகமாக இலங்கை தமிழ் முஸ்லிம் ஊட கவியலாளர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள பாராட்டு நிகழ்வொன்று இன்று (29) மாலை கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கர பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கலைஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் நண்பர்கள் மற்றும் ஊடகத்துறைசார்ந்தோர் பலரும் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் முக்கிய உரைகளும் இடம்பெறும்.

பிரவாசி பாரதீய சம்மான் (*Pravasi Bharatiya Divas Samman Award* ) எனப்படுவது வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்தியருக்கான விருதாகும். இது மகாத்மா காந்தி அடிகள் 1915 இல் தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய தினமான ஜனவரி ஒன்பதாம் நாளை நினைவுபடுத்தும் வகையில் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் காலத்திலிருந்தே முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஆண்டுதோறும் இந்தியாவின் ஏதேனுமொரு மாநிலத்தின் தலைநகரில் கோலாகலமாக நடாத்தப்பட்டு வரும் பிரவாசி நிகழ்வில் பல்வேறு நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான இந்திய வம்சாவளியினரின் பிரதிநிதிகளின் நலன்களுக்கு முக்கியத்துவமளிக்கும் விதமாக வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டுவரும் மூன்று நாள் நிகழ்வுகளின் இறுதி வைபவத்தின்போது ஜனாதிபதி தலைமையில் சம்மான் விருதளிப்பது முக்கிய அங்கமாகும்.

பல்வேறு நாடுகளிலும் அரச தலைவர்கள், அமைச்சர்கள், வெளியுறவுதுறை, விண்வெளி ஆய்வுகள், விஞ்ஞான அறிவியல், மருத்துவத்துறை கண்டுபிடிப்புகள், தொழிநுட்பம் மற்றும் கலாச்சார சமூக பொருளாதார நிலைகளில் சாதனைகளை புரிந்தவர்கள் மத்தியிலிருந்து தகுதியானவர்களை தெரிவுசெய்து விருதுகள் வழங்கி கௌரவமளிக்கப்பட்டு வருகிறது.

பிரவாசி பாரதிய திவாசின் 17வது மாநாடும் சம்மான் விருது வழங்கும் விழாவும் கடந்த ஜனவரி 8முதல் 10 வரை இந்தியாவின் மத்தியபிரதேச மாநில நகரமான இந்தூரில் நடைபெற்றது.

அந்தவகையில் வெளிநாட்டில் வாழும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புரிந்த சிறந்த சாதனைகள், உயரிய சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு பிரவாசி சம்மான் விருதுகள் வழங்கப்பட்டன.

பிரவாசி பாரதீய திவாஸ் மாநாட்டில் இத்தடவை இலங்கையில் பிரபல சமூக சேவையாளரும், தேசிய ரீதியில் ஊடகத்துறை சார்ந்த பல்வேறு அமைப்புகளில் கௌரவப் பதவிகளை வகிப்பவரும், வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநருமான குமார் நடேசனுக்கு பிரவாசி பாரதீய சம்மான் என்ற உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் கோபியோ எனப்படும் *Global Organisation for People of Indian Origin* அமைப்பின் இலங்கை கிளைத் தலைவராகவும் பதவி வகிக்கிறார்.

## ரதல்ல கோர விபத்து:

# கபன் புடவை வேண்டுமென கேட்டவர் மரணம்



அன்று சனிக்கிழமை 21ஆம் திகதி டிசம்பர் (2023 ) மாதம் கொழும்பு கல்வி அபிவிருத்தி மன்றம் நடத்தும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசுவழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள ஹட்டன் நகருக்கு சென்றிருந்தேன். அங்கு எமது ஒருங்கிணைப்பாளர் எம்.கே.இல்யாஸ் ஆசிரியர் எம்மை வரவேற்க ஏற்பாடுகளை செய்து விட்டு, சிறிது நேரத்தில் வருவதாக விடைபெற்றார். சிறிது நேரத்திலேயே எனது தொலைபேசி அலறியது.

ம று மு னை யி ல் இல்யாஸ் ஆசிரியரின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

தனது மனைவியின் சகோதரனுடைய குடும்பத்தார் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதாகவும் தான் நுவரெலிய ஆஸ்பத்திரிக்குச் செல்வதாகவும் கூறினார் அவர்.



வான் சாரதி

ஆம் நுவரெலியா, ரதல்ல என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கோர விபத்து பற்றி அறியாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். கொழும்பிலிருந்து சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி வானொன்றுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது.

விபத்து இடம்பெற்ற வீதி மிகவும் குறுகலானது. அதனால் கனரக வாகனங்கள் இவ்வீதியினூடாகச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுமிருந்தது. இவ்வீதி வழியே சென்றால் சுமார் பன்னிரெண்டு கிலோமீட்டர் தூரத்தை மீதப்படுத்தலாம். இதனால் இவ்வீதியை "சோர்ட் கட்" என்று அழைப்பார்கள். அதைப்பற்றித் தெரிந்த சாரதிகளே இவ்வீதியை அதிகம் நாடுகின்றனர். இதனால் ஏனைய பஸ் வண்டிகளை முந்திக்கொண்டு செல்ல விபத்திற்குள்ளான பஸ் வண்டியின் சாரதி இந்தப்பாதையை பயன்படுத்தி இருப்பார் என்றும் நம்பப்படுகிறது. சுற்றுலா சென்ற சில பஸ்கள் அன்று போட்டி போட்டு வேகமாக செலுத்தியதும் இவ்விபத்துக்குக் காரணமாகின்றது. இவ்விபத்து நடைபெற்றதன்பின் கனரக வாகனங்களுக்கு இவ் வீதிவழியே செல்வதற்கு மீண்டும் தடைவிதிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து சுற்றுலாவுக்கென மாணவர்களை ஏற்றிவந்த பஸ் வண்டி ஒன்றும், ஹட்டன், டிக்கோயாவிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த வான் ஒன்றும் மோதிக் கொண்டதால்விபத்துசம்பவித்துள்ளது.

டிக்கோயாவைச் சேர்ந்த சேக் தாவூத் அப்துல் ரஹீம் (வயது 55), சேக் தாவூத் அன்வர் ஸாதாத் (வயது 44) ஆகிய இரண்டு சகோதரர்களின் குடும்பத்தினரே வானில் பயணம் செய்துள்ளனர்.

### இவ்விபத்தில் பலியானவர்களின் விபரம்

அப்துல் ரஹீமின் குடும்பத்தில் ஐவரும்,சேக் தாவூதின் குடும்பத்தில் நால்வரும், வான் சாரதியுமாக மொத்தம் பத்து பேர் குறித்த வானில் பயணம் செய்துள்ளனர். இதில் அப்துல் ரஹீமின் குடும்பத்தில் நால்வாரும் சேக் தாவூதின் குடும்பத்தில் ஒருவருமே பலியாகினர். வான் சாரதி மற்றும் ஆட்டோ சாரதி என மொத்தம் ஏழு உயிர்களை இவ்விபத்து காவு கொண்டது

அப்துல் ரஹீம் குடும்பத்தில் அவரும், அவரது மனைவி பாத்திமா ஆயிஷா வயது 45, புதல்விகளான பாத்திமா மரியம் வயது 13, நபீஹா வயது 8, அன்வர் சாதாத்தின் குடும்பத்தில் இருந்து மொஹமட் சையின் என்று 14 வயதை உடைய மகனுமே மரணமானார்கள். இவர்கள் வாடகைக்கு சென்ற வான் சாரதி தினேஷ் என்று அழைக்கப்படும் நேசராஜா பிள்ளை என்ற வாலிபரும், இவ்விபத்தில் குறுக்கே வந்து மாட்டிய ஆட்டோ வண்டியின் சாரதி 25 வயதை உடைய சண்முகராஜாவும் விபத்தில் பலியானார்கள்.



(படங்கள்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

அப்துல் ரஹீம் குடும்பத்தில் பாத்திமா ஹம்ரா என்ற 14 வயதுடைய மகள் மாத்திரம் உயிர் தப்பினார். இவர் தான் இம்முறை ஜீ.சி.ஈ . உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருந்தார். தான் பரீட்சை எழுதுவது பற்றி தனது சுகவீனமுற்றுள்ள மாமாவிடம் கூறவேண்டும் என்பதற்காக நுவரெலியாவிற்கு பயணமானார்.

இவ்வாறு நாட்டுப் பிரஜைகள் ஏழு பேர் பலியாகி இருக்க, கொழும்பிலிருந்து சுற்றுலா சென்ற மாணவர்களுக்கு உயிர் சேதமோ பாரிய காயங்களோ இல்லை என்றவாறே சில தொடர்பு சாதனங்கள் குரல் கொடுத்தன, வானில் பயணித்து உயிரிழந்தவர்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படாமை கவலை அளிப்பதாக பல்வேறு தரப்பினரும் ஆதங்கம் தெரிவித்தனர்.

விபத்து நடந்த மறுநாள் இரவு தான் சடலங்கள் ஆஸ்பத்திரி சவச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டன. அதன்பின் நுவரெலியா பள்ளிவாசலுக்கு கொண்டுசெல்லப்பட்டு மீண்டும் ஹட்டன் டிக்கோயாவுக்கு எடுத்துவரும் போது நள்ளிரவாகியது. அங்கு பள்ளிவாசலில் வைக்கப்பட்டு அதிகாலை மூன்று மணி தாண்டிய பின்னரே நல்லடக்கம் செய்யப்பட்டன.

டிக்கோயா ஜும்மா பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளராக முப்பது ஆண்டுகளாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் மொஹமட் ரியாத் காதர் இப்படி கூறினார்,

நான் அறிந்த வரையில் இவ்வாறான சோகமான சம்பவம் எமது ஊரில் நடந்தது இதுதான் முதல் தடவை என்று சொல்ல வேண்டும். இவ்விபத்தில் பலியான அப்துர் ரஹீம் பற்றி நிறையச் சொல்லலாம். இந்த விபத்து நடைபெற இரண்டு வாரங்களுக்கு முன் ஒருநாள் பள்ளியில் வைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த கபன் புடவைகள் (மரணித்தபின் அணிவிக்கும் உடை) பற்றி விசாரித்தார். பள்ளிவாசல்களுக்கு கொடுத்து விட்டு மீதியாக வைக்கப்பட்டிப்பதை நுவரெலியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று கூறினேன். இது நமக்கும் பயன்படுமோ தெரியாது என்று அவர் உடன் பதிலளித்தது நினைவில் இருக்கிறது. அதைநினைத்து கவலைப்படுகிறேன். அந்த கபன் துணிதான் அவருக்கு நுவரெலியாவில் பாவிக்கப்பட்டது

இவ்விபத்தில் மரணமான அப்துல் ரஹீம் படுகாயமடைந்த அன்வர் ஸாதாத் ஆகிய இருவருக்கும் இடைப்பட்ட ஒரு சகோதரரான மொஹமட் ரபீக்கை சந்தித்து கேட்டபோது சகோதரர்கள் போகும்போது என்னையும் அழைத்தார்கள்

இவர்களின் பயணத்திற்கு சகல ஏற்பாடுகளையும் நான் செய்து கொடுத்தேன். அவர்கள் என்னை அழைக்க மறந்து போய்விட்டார்கள் எனினும் இடையில் போய் என்னை மொபைலில் அழைத்து 'உன்னை கேட்க மறந்துவிட்டேன் நீயும் வர்றியா? வருவதானால் சொல்லு திரும்பி வருகிறோம்" என்று கேட்டார்கள். "நீங்கள் பாதி தூரம் போய்விட்டீர்கள் நான் நாளை நுவரெலியா போக இருக்கிறேன் அப்போது போய் மச்சானை பார்க்கிறேன்." என்று பதில் கூறியதாக தெரிவித்தார்.

குறித்த விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தாலும்,ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் திருப்பதி கரமாக இல்லை என்றே பலரும் கருத்து தெரிவித்தனர்.

வான் சாரதி திருமணம் ஆகாதவர். இவர் ஹட்டன் குடாகம என்று இடத்தில் வசித்தவர். தனது சகோதரனின் உதவியுடன் வாகனத்தை வாங்கி சில காலங்களுக்கு முன்னர்தான் அதன் கடனை கட்டி முடித்தார். ஆனால் அவரையும் காலன் விட்டுவைக்கவில்லை.



எம்.கே.எம்.அஸ்வர்

# பொரளை இந்து மயானத்தின் நவீன கட்டட தொகுதி பூர்த்தியாக்கப்பட வேண்டும்

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க





பொரளை மயானத்தின் இந்துக்களுக்கான பிரிவில் பூதவுடல்களை தகனம் செய்வதற்காக புதிய கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய நிலையில் திறந்த வெளியிலேயே விறகில் பூதவுடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. மழைக் காலங்களில் இந்த செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெரும் கஷ்டங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக மழைக் காலங்களிலும் பூதவுடல்களை தகனம் செய்யும் வகையில் இந்த புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படுகின்றது.


கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவின் செயற்திட்டத்துக்கு அமைய இந்து கலாசார பாரம்பரிய கட்டடக்கலையை முன்னிறுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொவிட் 19 காரணமாகவும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் இந்த செயற்திட்டம் ஏற்கனவே 30 மில்லியன் ரூபாவுக்குள் ஒப்பந்தகாரர்களினால் பூர்த்தி செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளதாவும் மேலும் இந்த திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தற்போதைய கட்டட பொருள் விலையேற்றத்துக்கு அமைய மேலதிகமாக 50 மில்லியன் ரூபா தேவையெனவும் ஒப்பந்தக்காரர்கள் கோருவதாக காயத்திரி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவிய கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க உட்பட அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப்பிரிவு அதிகாரி டாக்டர் ருவன் விஜயமுனி, கட்டட ஒப்பந்தக்காரர் மற்றும் காயத்ரி விக்கிரமசிங்க ஆகியோர் நேரில் சென்று புதிய நிர்மாணப்பணிகளை பார்வையிட்டிருந்தனர்.

# வலம்புரி கவிதா வட்ட 84 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 84 ஆவது கவியரங்கு 05/02/2023 ஞாயிறுக்கிழமை காலை 10.30 க்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கத்தாரிலிருந்து விடுமுறையில் வந்திருக்கும் கவிஞர் மெய்யன் நடராஜ் தலைமையில் கவியரங்கு இடம் பெறும். நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர், கீழ்க்காண்பவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

நஜ்முல் ஹுசைன் (தலைவர்)
074 143 8447 அல்லது
இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்)
077 738 8149 அல்லது
ஈழகணேஷ் (பொருளாளர்)
071 756 3646



2022 ஆம் ஆண்டுக்கான (The Booker Prize) வென்ற சிஹான் கருணாதிலக்க வின் (The Seven Moons Of Malli Almeida) எனும் நூலின் அறிமுக நிகழ்வு கொழும்பு One Galle Face ல் அமைந்துள்ள சரசவிய புத்தகக் விற்பனை நிலையத்தில் (28) சனிக்கிழமை காலை நடைபெற்ற போது எழுத்தாளரிடமிருந்து நூல்களின் ஒரு தொகுதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பெறுவதை காணலாம்.



இந்தியாவின் கோயம்புத்தூர் ரோட்டரிக் கழகம் மற்றும் இலங்கை அட்டன்ட் டிக்கோயா ரோட்டரி கழகம் என்பன நட்பு கழகங்களாக ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் (27.01.2023) கோயம்புத்தூரில் நடைபெற்றது. நிகழ்வானது கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி கழகத்தின் தலைவர் ஜம்பு குமார் தலைமையில் இடம் பெற்றதோடு இலங்கை அட்டன் டிக்கோயா ரோட்டரி கழகம் சார்பாக அதன் தலைவர் சுப்பிரமணியம் தியாகு கலந்து கொண்டார் இவரோடு 2023/24 ஆம் ஆண்டுக்கான தலைவர் சோமசுந்தரம் கலந்து கொண்டதுடன் கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



கொழும்பு ரமண மகரிஷி பீடத்தினால் கொண்டாடப்பட்ட பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 143வது ஜெயந்தி விழா நிகழ்வில், பகவானின் திருவுருவப் படத்தையும், சிவயோக சுவாமிகள் திருவடிநிலைய – செயலாளர் டி. எஸ். சிவசுப்பிரமணியம் நந்திக்கொடி ஏற்றுவதையும், இராமகிருஷ்ண சாரதா மிஷன் செயலாளர் பிரவிராஜிக்கா ஆத்மதேவ பிராண மாதாஜி, கட்டுவன் சரஸ்வதி இல்லம் – ரமணாலய முனைவர் டாக்டர் எம். ஜெயராஜன், சமய சமூக ஆர்வலர், தர்மகர்த்தா – வரதராஜ விநாயகர் ஆலயம், கணேஷ் ஈஸ்வரன், திருமதி. பிரியா தவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும், திருமதி. காயத்ரி பிரதீப் நன்றி உரையாற்றுவதையும் சிபி சக்கரவர்த்தி நிகழ்வை தொகுத்து வழங்குவதையும் சபையோரையும் படத்தில் காணலாம்.

# அபிவிருத்தி லொத்தர் சபை வரலாற்றில் முதல்முறையாக
# 3 பில்லியன் ரூபாய் இலாபத்தினை ஈட்டி சாதனை படைத்துள்ளது…!

DLB DEVELOPMENT LOTTERIES

ஜனாதிபதி நிதியத்தின் பொது சேவைக்காகவும், மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கும் நிதி திரட்டும் முகமாக 1997, 20ம் இலக்க சட்டம் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபை 2022ம் ஆண்டு தனது வருடாந்த வருமான இலக்குகளை அடைந்து வரலாற்றின் முதல் முறையாக 3 பில்லியன் ரூபாய் இலாபத்தினை ஈட்டி சாதனை படைத்துள்ளது.

கொவிட் நோய் நிலைமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக 2022ம் ஆண்டு அரச மற்றும் தனியார் துறைசார் அனைத்து வணிக நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பல நாட்களாக செயலிழந்து காணப்பட்டதும், அதன் காரணமாக தமது வியாபார இலக்குகள் மற்றும் வருடாந்த வருமான இலக்குகளை அடைய முடியாத நிலையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவும் காணப்பட்டன. அபிவிருத்தி லொத்தர் சபையின் வியாபார நடவடிக்கைகளுக்கும் மேற்கூறப்பட்ட சவால்கள் நேரடியாக தாக்கம் செலுத்திய போதும் அதனை சிறப்பாக கட்டுப்படுத்தவும் முகாமை செய்யவும் தற்போதைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கும், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கும் முடிந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 40 வருட வரலாற்றில் நிறுவனம் முகம் கொடுத்த அனைத்து சவால்கள் மற்றும் இன்னல்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடிய விற்பனை வலைப்பின்னல் ஒன்று நிறுவனத்திற்கு இருத்தல், நிறுவனத்தின் முகாமைத்துவம் மூலம் எடுக்கப்படும் நித்தம் புதுப்பிக்கப்படும் சந்தைப்படுத்தல் திட்டங்கள் மற்றும் உபாயங்களுக்கு அமைய செயற்படும் மாவட்ட விற்பனை விநியோக முகவர்கள் மற்றும் விற்பனை முகவர் வலைப்பின்னலும் அவர்களின் கீழ் கடமையாற்றும் 20,000க்கும் அதிகமான விற்பனை உதவியாளர் குழு மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடும் நிறுவனத்திற்கு பாரிய சக்தியாக அமைகின்றது. மேலும் தற்போதுள்ள பொருளாதார சவால்கள் மத்தியில் தமது லொத்தர் வியாபாரத்தினை பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்கள் ஆற்றும் சேவை மிக முக்கியமானதென்று அபிவிருத்தி லொத்தர் சபை கூறுகின்றது.

பணப் பரிசுகளாக 10 பில்லியன் ரூபாய்க்கு அண்மித்த தொகையினை சுப்பர் பரிசுகள், முதல் பரிசுகள், இரண்டாம் பரிசுகள், மூன்றாம் பரிசுகள் மற்றும் ஏனைய பரிசுகளாக 2022ம் ஆண்டு தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளதுடன், விற்பனை முகவர்களுக்குரிய கமிஷன் பணமாக 03 பில்லியன் ரூபாய்க்கு அதிகமான பணம் வழங்கப்பட்டுள்ளதுடன், அரசு மூலம் விதிக்கப்பட்ட அனைத்து வரி செலவுகளாக 837 மில்லியன் ரூபாய் பணம் அரசுக்கு வழங்கி, ஏனைய செலவுகளையும் மேற்கொண்ட பின்னர் அபிவிருத்தி லொத்தர் சபை 3 பில்லியன் ரூபாய்க்கு அதிகமான இலாபத்துடன் 19 பில்லியன் ரூபாய்க்கு அதிகமான விற்று முதலினை பெற்றுக்கொள்ள முடிந்தது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறிவித்தது.

விசேடமாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவர் மற்றும் முகாமைத்துவத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் 2022ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் தொடர் இவ் வெற்றியினை பெற்றுக்கொள்வதற்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது என நிறுவனம் சுட்டிக் காட்டியது. அதன்போது அனைத்து பிரதேசங்களிலும் விநியோக விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கு அவர்களின் வருடாந்த விற்பனை முகவர் சந்திப்புக்களை "சங்வர்தன அபிமன்" எனும் பெயரில் புதிய வடிவமைப்பில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, முன்னைய சம்பிரதாயங்களை விட வேறுபட்ட விசேட விற்பனை முகவர் சந்திப்புக்களுக்கு நேரடியாக தொடர்புபடும் பிரதேச அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் உள்ளடங்கலாக அதிகார அமைப்பின் பிரமுகர்களையும் அழைத்து விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களின் நீண்ட கால பிரச்சினைகளை தீர்க்க வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறே ஆண்டில் அதிக விற்பனையினை மேற்கொண்ட மாவட்டத்தின் சிறந்த விற்பனை முகவர்களை பாராட்டுதல், அவர்களுக்கு பரிசுப் பணம் மற்றும் சான்றிதழ்களை வழங்கல் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்ச்சிகளில் புதிய முறையில் அவர்களை ஊக்கமளித்தல் 2022ம் ஆண்டு வெற்றியடைய காரணமாக அமைந்தது. மேலும் சபையின் சிரேஷ்ட முகாமைத்துவம் தனது கடமைகளின் மத்தியில் மாவட்ட ரீதியில் விற்பனை தொடர்பாக வேறு வேறாக தேடிப்பார்த்து செயற்படவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் விற்பனை வலைப்பின்னலின் சிறிய குழு சந்திப்புக்களை நடாத்தி, பல பிரதேசங்களில் உள்ள லொத்தர் குடில்களுக்கு தனிப்பட்ட ரீதியாக சென்று விற்பனை உதவியாளர்களுக்கு உள்ள குறைகளை தேடிப்பார்த்து, அவர்களை ஊக்குவித்து, அபிவிருத்தி லொத்தர் சபை குறித்த நம்பிக்கையினை ஏற்படுத்தி அதனூடாக மென் மேலும் லொத்தர் விற்பனையினை அதிகரிக்கச் செய்தல் இவ் வெற்றிக்குரிய இன்னுமொரு காரணமாக அமைந்தது. நாளாந்த லொத்தர் விற்பனையினை அதிகரிக்கச் செய்வதற்கு நடைமுறையில் உள்ள லொத்தர்களின் பரிசளிப்புகளை கண்கவர் வண்ணமாக மாற்றியமைத்து, லொத்தர்களில் மாதாந்தம் விசேட சீட்டிழுப்புக்களை மேற்கொண்டமை இவ்வாறு வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான மேலும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலக்காக கொண்டு புதிய நிகழ்ச்சிகள் பலவற்றினை செயற்படுத்துவதற்கும், அப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மொழி பேசும் மக்களை இலக்காக கொண்டு, தெற்கு மக்கள் இடையேயும் புதிய லொத்தராக விரிவாக்கம் செய்து அதிகதிகமாக பரிசுகள் கிடைக்கும் வண்ணம் பரிசமைப்புக்களை தயாரித்து "வலம்புரி" எனும் பெயரில் புதிய லொத்தர் ஒன்றினை அறிமுகப்படுத்தியமையும் விசேட விடயமாக அமைந்துள்ளது. கடந்த வருடத்தில் நாளாந்த லொத்தர் சீட்டிழுப்புக்களின் போதான அதிக விற்பனையினை மேற்கொள்வதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு முடிந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி வெற்றிகரமான 40வது ஆண்டு நிறைவினை கொண்டாடும் அபிவிருத்தி லொத்தர் சபை தமது நிறுவன சின்னத்துடன் புதிய கண்கவர் வியாபார சின்னத்தினையும் அறிமுகப்படுத்தி, நாளுக்கு நாள் முன்னேறும் புதிய லொத்தர் சந்தையினையும், புதிய தொழில்நுட்பத்துடனான இளைஞர் அணியினையும், இதுவரை எம்முடன் கைக்கோர்த்துள்ள வாடிக்கையார்களையும் இணைத்தல் இப் புதிய வியாபார சின்னத்தினை அறிமுகப்படுத்துவதன் முக்கிய நோக்கமாக அமைந்ததாக அறிவிக்கப்படுகின்றது. மேலும் இவ் லொத்தர் வியாபாரத்தில் புதிய சீட்டிழுப்பு முறைகளை அறிமுகப்படுத்தி பழைய லொத்தர்களுக்கு பதிலாக புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்திலினூடாக 2023ம் ஆண்டுக்குரிய நிதி இலக்குகளை அடைந்து அதிக வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை எதிர்பார்க்கின்றது. நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக மிகப் பெரிய மக்கள் சேவையினை மேற்கொள்ளும் ஜனாதிபதி நிதியத்திற்கும், நாட்டின் கல்வியில் சிறந்த சந்ததியினரை உருவாக்கும் மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிக பங்களிப்பினையும் வழங்க இலாபத்தினை ஈட்டிய நிதியங்கள் இரண்டினை திடப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், முன்னைய ஆண்டுகளை விட அதிக அதிகமாக வெற்றியாளர்களை உருவாக்கவும், நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தியாக அமைந்த தொழில்முனைவோரையும், உயர் பொருளாதார தரத்திலான மக்களையும் உருவாக்குவதற்கு மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் அபிவிருத்தி லொத்தர் சபை எதிர்பார்க்கின்றது.





அபிவிருத்தி லொத்தர் சபையின் சாதனையை ஊடகங்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு, நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷேஹான் சேமசிங்ஹவினதும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் திரு. அஜித் குணரத்ன நாரகலவினதும் தலைமையில் 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன, சந்தைப்படுத்தல் துணைப் பொது முகாமையாளர் திருமதி டாக்டர் அசங்கா குணசிங்க, சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் சானக்க தொடங்கொட, நிதி பிரதிப் பொது முகாமையாளர் செல்வி விஜிதா சோமரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

*படங்கள்: கயான் புஷ்பிக்க*




# பி.எஸ்.எம். சார்ள்ஸின் இராஜினாமா மூலம் வெட்டவெளிச்சமான ஆணைக்குழுவின் பிளவு

தேர்தல் ஆணைக்குழுவின் பெண் உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. 20வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களின் பதவிக் காலம் 21ம் அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து முடிந்து போனாலும், அரசியலமைப்புச் சபை நியமிக்கப் படாததன் காரணமாக முன்னாள் உறுப்பினர்களே அந்த ஆணைக்குழுக்களின் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறான நிலையில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் வந்துள்ளது. தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பிளவுகள் உள்ளதாகவும் இங்கு கூறப்பட்டது. இதற்கிடையில்தான் சிறந்த முன்னாள் நிர்வாக சேவை உத்தியோகத்தாரான பி.எஸ்.எம். சார்ள்ஸ் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகிய செய்தி ஜனாதிபதி செயலாளர் மூலமாகவே கடந்த புதன்கிழமை மாலை ஜனாதிபதிக்கு கிடைத்தது.

“சேர், சார்ள்ஸ் பதவி விலகப் போவதாகத் தெரிவித்துள்ளார். நாளை காலையே இராஜினாமா கடிதத்தை அனுப்புவதாகவும் அறிவித்துள்ளார்” என ஜனாதிபதி செயலாளர் சமன் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

“தேர்தல் ஆணைக்குழு பிளவுபட்டுள்ளது என்பதை நாம் கூறிய போது எதிர்க்கட்சியின் சிலர் சிரித்தார்கள். நாம் கூறியது உண்மை என்பது இப்போது தெளிவாகியுள்ளதே” என அருகிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கூறியதைக் கேட்ட ஜனாதிபதி தலையாட்டினாரே தவிர வேறு எதனையும் கூறவில்லை. உடனே ஜனாதிபதி தனது செயலாளர் சமனை நோக்கி “இதைப் பற்றி அரசியலமைப்புச் சபைக்கு அறிவியுங்கள்” என்றார்.

வியாழக்கிழமையும் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்த அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரின் இராஜினா பற்றியே பேசினார்கள். திருமதி சார்ள்ஸ் ஏன் பதவி விலகினார்? என்பதே அவர்களுள் பெரும்பாலானவர்களின் வினாவாக இருந்தது.

“தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பிளவு உள்ளது என்பதை இப்போது மக்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்தச் செயலாளர் அதிகம் குழம்பிப் போயிருப்பது எதிர்க்கட்சியாலேயேயாகும்” என்றார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

“பிளவு எதுவும் இல்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருப்பது பொய்"என்பது இப்போது தெளிவாகியுள்ளது. தேர்தல் ஆணைக்



குழு எதிர்க்கட்சியின் தேவைக்கு ஏற்ப செயற்பட்டுள்ளது என்பது இப்போது தெளிவாகியுள்ளது” எனக் கூறியவாறு அமைச்சர் பந்துலவும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

“நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருப்பதால் வேட்பாளர்கள் தற்போது போட்டிமனப்பான்மையுடன் இருக்கின்றார்கள். இப்படியே சென்றால் வேட்பாளர்களும் கூட பெரும் சிக்கலுக்குள்ளாவார்கள். தேர்தல் ஆணைக்குழுவும் சிக்கலில், வேட்பாளர்களும் சிக்கலில்” என்றார் அமைச்சர் பிரமித்த பண்டார.

"தேர்தல் ஆணைக்குழுவில் பிரச்சினைகள் இருக்குமாயின் அரசியலமைப்பின் 107ஆம் பிரிவுக்கு அமைவாக அவர்கள் அதுபற்றி பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு எதனையும் குழுவின் தலைவர் செய்யவில்லை. ஆணைக்குழுவினுள் பிரச்சினைகள் இல்லை என்று கூறினாலும் தற்பொழுது நாட்டுக்கே பிரச்சினை இருப்பது தெரிந்துள்ளது" என்றார் அமைச்சர் பிரசன்ன.

"தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆரம்பத்திலிருந்து தவறான வழியிலேயே சென்றார். சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுமாறு கூறினாலும் போராட்டக்கார சட்டத்தரணியான சாலிய பீரிஸை தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட நடவடிக்கைகளுக்காகத் தொடர்பு படுத்திக்கொண்டார். தனியார் துறையைச் சார்ந்த சட்டத்தரணி ஒருவரை எடுக்க வேண்டுமென்றால் ரொமேஷ் சில்வா போன்ற சட்டத்தரணிகளை ஏன் எடுக்க முடியாது? இவரைப் போன்ற இன்னும் சிறந்த சட்டத்தரணிகள் இருக்கிறார்கள் தானே?" என்றவாறு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தொலவத்தையும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

தேர்தல் ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் சம்பந்தமாக இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினர் ஏனைய கடமைகளுக்காக வெளியேறிச் சென்றார்கள். ஜனாதிபதி ரணில் அன்றைய தினம் மாலை கூட்டப்பட்டிருந்த சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றார். மக்கள் விடுதலை முன்னணி தவிர பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் அங்கு வருகை தந்திருந்தார்கள். தேசிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த சர்வ கட்சி கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இந்த கூட்டத்தின் பின்னர் அனேகமானவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பற்றி ஜனாதிபதியிடம் வினவினார்கள். இந்தத் தேர்தலில் தான் பங்களிக்கப் போவதில்லை என்பதே அவர்கள் அனைவருக்கும் ஜனாதிபதியின் பதிலாக இருந்தது. இன்னும் சிலர் இங்கு புதிய வருமான வரி விதிப்பு மற்றும் சர்வதேச நாணய நிதிய நடவடிக்கைகள் பற்றியும் ஜனாதிபதியிடம் விசாரித்தார்கள்.

அன்றைய தினம் காலை நிதி அமைச்சின் அதிகாரிகள் சிலர் ஜனாதிபதியைச் சந்தித்தார்கள். 75வது சுதந்திர தின நிகழ்வுகளை குறைந்த செலவுடன் செய்து முடிக்குமாறு இதன் போது ஜனாதிபதி அந்த அதிகாரிகள் அனைவருக்கும் ஆலோசனை வழங்கினார். நிதி நெருக்கடி காரணமாக செலவுகளைக் குறைத்து சுதந்திர தின விழாவை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதி ரணில் கடந்த வாரம் கொழும்பில் இருந்ததோடு, திங்கள் முதல் வெள்ளி வரை அவர் ஜனாதிபதி செயலகத்தில் இருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் இந்நாட்டு பிரதிநிதிகள் சிலரும் ஜனாதிபதியை திங்கட்கிழமை சந்தித்தார்கள். அன்றையதினம் மாலை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியாகத்தினால் திறைசேரிக்கு வழங்குவதற்காக சுமார் மூன்று பில்லியன் ரூபாய்க்கான காசோலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி வழக்கம் போன்று பாதுகாப்பு தரப்பின் பிரதானிகளை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார். நாட்டின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பில் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது. அன்றைய தினம் மாலை ஐக்கிய தேசிய கட்சியின் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்



தித்தனர். கட்சியின் பிரதித் தலைவர் ருவன், பொதுச் செயலாளர் ரங்கே பண்டார, தவிசாளர் வஜிர, தேசிய அமைப்பாளர் சாகல உள்ளிட்ட தரப்பினர் ஜனாதிபதி சந்திப்பதற்காக வருகை தந்திருந்தார்கள்.

முதலில் பொதுச் செயலாளரினால் நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை சம்பந்தமான விபரங்கள் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டதோடு, அதன் பின்னர் தொகுதி அமைப்பாளர்கள் நியமனம் தொடர்பிலும் பேசப்பட்டது. அனைத்து விடயங்களையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில், தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறு அத்தரப்பினர்களிடம் வேண்டிக் கொண்டார்.

“சேர், தேர்தல் பிற்போடப்படும் என்றே நாம் நினைத்தோம்” என ரங்கே பண்டார கூறியபோது “நான் ஒருபோதும் தேர்தலைப் பிற்போடுவதாகக் கூறவே இல்லை” என ஜனாதிபதி கூறினார்.

“சேர, எந்தத் தேர்தலுக்கு நாம் தயாராக வேண்டும்” என இதன்போது பிரதித் தலைவர் ருவன் ஜனாதிபதியிடம் வினவினார். “கட்சி என்றால் வரும் எந்தத் தேர்தலுக்கும் முகங்கொடுக்க வேண்டும்” என அவர்களை நோக்கி ஜனாதிபதி கூறினார்.

அதன் பின்னர் தேர்தலுக்கு முகங்கொடுக்கும் முறைகள் பற்றி ஐக்கிய தேசிய கட்சியின் முகாமைத்துவக் குழு கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த புதன்கிழமையும், வியாழக்கிழமையும் ஒன்று கூடி கலந்துரையாடியது. பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தனவின் தலைமையில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தின் போது அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் கிராமங்களுக்குச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கிராம மட்டத்தைப் போன்று தேசிய மட்டத்திலும் மேற்கொள்ளப்படவேண்டிய பிரசாரச் செயற்பாடுகள் பற்றியும், அதனை புதிய தேர்தல் சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இந்திய குடியரசு தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்குச் சென்றார். அங்கு இடம்பெற்ற நிகழ்வின் போது ஜனாதிபதி இரு நாடுகளுக்குமிடையிலான சகோதர உறவினை வரலாற்றினை நினைவுபடுத்தினார்.

இத்தாலி நாட்டின் தூதுவர் ஜனாதிபதியை கடந்த புதன்கிழமை சந்தித்தார். ஆட்கடத்தல் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காக இத்தாலி அரசு ஒத்துழைப்பை வழங்கும் என இத்தாலி தூதுவர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். அத்துடன் மனித கடத்தலைத் தடுப்பதற்காக இந்நாட்டின் கடலோரப் பாதுகாப்பு படையினருக்கு ஹெலிகொப்டரை வழங்குவதற்கும் இத்தாலி தூதுவர் வாக்குறுதியளித்தார்.

காலநிலை மாற்ற நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன ஜனாதிபதியைச் சந்தித்தார். காலநிலை மாற்றம் தொடர்பான கல்வியைப் பெறுவதற்குத் தேவையான சர்வதேச பல்கலைக்கழகம் தொடர்பில் ருவன் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

வளர்ந்து வரும் நாடுகளில் நிலையான அபிவிருத்திக்காகச் செயற்படும் சர்வதேச நிறுவனமான உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனம் எனப்படும் GGGI நிறுவனத்தை இந்நாட்டுடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் முறை பற்றி இதன் போது ஜனாதிபதி ருவனிடம் கேட்டார். இந்நாட்டில் காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அவர்களும் ஆர்வமாக உள்ளதால் அதைப் பற்றியும் விசாரிக்குமாறு ஜனாதிபதி ருவனுக்கு ஆலோசனை வழங்கினார்.

“சேரின் ஆலோசனையின் பிரகாரம் நாம் ஜீ.ஜீ.ஜீ.ஐ நிறுவனத்தின் தலைவர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் பேன் கீ மூனுக்கு அழைப்பு விடுத்தோம். அவர் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தருவார்” என்றார் ருவன்.

தென் கொரியா அரசுடன் தொடர்புடைய நிறுவனமான இந்த ஜீ.ஜீ.ஜீ.ஐ நிறுவனம் இந்நாட்டுடன் இணைந்து பணியாற்றுவதற்கான பல ஒப்பந்தங்கள் பேன் கீ மூன் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் கைச்சாத்திடப்படஉள்ளன. ஜனாதிபதி ரணிலின் அழைப்பின் பேரில் பேன் கீ மூன் இந்நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் சனிக்கிழமை அனுராதபுரத்திற்கு விஜயம் மேற்கொண்டதோடு, அங்கு எட்டுபீடங்களின் பீடாதிபதியாகப் புதிதாக நியமனம் பெற்ற பல்லேகல ஹேமரதன தேரருக்கு அந்த நியமனத்திற்கான ஆவணத்தைக் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எம்.எஸ். முஸப்பிர்

# இலவச மருத்துவ சேவையை முடக்கும் மருந்துத் தட்டுப்பாடு

### உள்நாட்டு மருந்து உற்பத்தியை ஐம்பது வீதமாக அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சர் தீர்மானம்

இலங்கை பரந்தளவிலான இலவச சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கும் ஒரு நாடாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆயுள் எதிர்பார்ப்பு, பிறப்பு, இறப்பு வீதங்கள் போன்ற சமூக அளவீடுகளில் இலங்கை உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

இலங்கையில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் சுகாதார நலக்கொள்கைகள் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டு நாற்பதாம் ஆண்டுகளில் நடுப்பகுதியில் அது விரிவுப்படுத்தப்பட்டது. இலங்கையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் இலவச சுகாதார முறைமையை ஏற்றுக்கொண்டு அதிகளவான நிதியை ஒவ்வொரு வருடமும் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கியதுடன் அதிக செலவில் புதிய அலகுகளையும் தொழில்நுட்பங்களையும் சுகாதாரத்துறையில் அறிமுகப்படுத்தின. இதன்மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களும் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான சமவாய்ப்பை இலவச சுகாதாரத்துறை வழங்குகின்றது. வெளிநோயாளர் பிரிவுகளை மாத்திரம் கொண்ட சிறிய ஆஸ்பத்திரிகள் முதல் ஆதார, போதனா வைத்தியசாலைகள் என இலவச சுகாதார கட்டமைப்பு இலங்கையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவைதவிர சில தீவிர நோய்களுக்கென தனியான வைத்தியசாலைகளும் இயங்கிவருகின்றன. வைத்தியர்கள், பொதுச் சுகாதார தாதியர்கள், சுகாதார கண்காணிப்பாளர்கள், அடிமட்ட வேலையாட்கள் என இலவச சுகாதார கட்டமைப்புக்குள் மக்களுக்கான சேவைகளை இவர்கள் வழங்குகின்றனர்.

இலங்கையின் சிறந்த சுகாதார சேவை காரணமாக மலேரியாவை முற்றாக ஒழித்த நாடுகளின் வரிசையில் இடம்பிடித்ததுடன் இன்புளுவன்சா, டெங்கு, காசநோய் போன்ற தொற்று நோய்களை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நாடாகவும் விளங்குகின்றது. அதேபோல் கொவிட் 19 தொற்று தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் சுகாதார துறையினரின் சேவைகள், தடுப்பும ருந்தேற்றும் வேலைத்திட்டம் என்பன பாராட்டத்தக்க வகையில் அமைந்தது. எனினும் இவையெல்லாம் ஒருபக்கமிருக்க துரதிர்ஷ்டவசமாக கொவிட் 19 தொற்றுக்கு பின்னர் நாட்டில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியினால் இலவச சுகாதாரத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டது.

கிட்டதட்ட 80 சதவீத மருந்துப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில் டொலர் பற்றாக்குறையால் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்களின் இறக்குமதி தடைப்பட்டு மருந்துத் தட்டுப்பாடு உக்கிரமடைய ஆரம்பித்தது.

இதனால் நோயாளர்கள் மட்டுமின்றி சுகாதார ஊழியர்களும் சேவையை வழங்குவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் பிரதேச வைத்தியசாலைகளில் நிலவிய மருந்து, மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு இலங்கையிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் தற்போது உக்கிரமடைந்துள்ளது.



மருத்துவர் வாசன் இரத்தினசிங்கம்

ஆபத்தான நோய்களுக்கு பயன்படுத்தும் மருந்துகள் சிறிய தொற்றுநோய்களுக்கு பயன்படுத்தும் மருந்துகள் உட்பட நோயாளிகளுக்கு வழங்கப்படும் 150க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேபோல் மருத்துவ உபகரணங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

3,500 நோயாளர் படுக்கைகளைக் கொண்ட கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வழக்கமாக 1,300 மருந்து வகைகள் கையிருப்பில் இருக்கும். எனினும் கடந்த ஆண்டின் தரவுகளின்படி 60 அத்தியாவசிய மருந்து வகைகள் மட்டுமே கையிருப்பில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



மயக்க மருந்து பற்றாக் குறையால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை உட்பட பெரும்பாலான பொது அறுவை சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புற்றுநோயாளர்கள் கொடிய நோயை எதிர்த்துப் போராடத் தேவையான மருந்துகளின்மையால் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர். நீரிழிவு நோயாளிகளுக்கான இன்சுலின் தட்டுப்பாடும் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு ஐந்து மருந்துகளை வைத்தியர்கள் பரிந்துரைக்கும் பட்சத்தில் இரண்டு மருந்துகளை மாத்திரமே வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள முடியும். எஞ்சிய மருந்துகளை வெளியில் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற நிலை காணப்படுவதாக மருத்துவ சங்கங்கள் தெரிவிக்கின்றன. எனினும் வெளி மருந்தகங்களிலும் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் அதிக விலை காரணமாக அவற்றை கொள்வனவு செய்ய முடியாது சிரமங்களை எதிர்கொள்வதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் வைத்தியசாலைக்கு வருகின்ற தாயொருவரிடம் வினவிய போது,

'எனது நான்கு வயது மகளுக்கு நாய்கடித்து காயமேற்பட்டிருந்தது. எங்களால் அவளுக்கு உடனடியாக நாய்க்கடிக்கான ரேபீஸ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. குழந்தையை அரச மருத்துவமனைக்கு கொண்டுச் சென்ற போதும் அங்கு நாய்க்கடிக்கான தடுப்பூசி இல்லையென்று சொல்லி காயத்துக்கு மட்டும் மருந்து போட்டுவிட்டனர். நாயை நல்லபடியாக பார்த்துகொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டனர். எனினும் எங்களால் அதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அன்று முழுநாளும் நாங்கள் கொழும்பிலுள்ள அரச, தனியார் வைத்தியசாலைகளுக்கு குழந்தையை தூக்கிக் கொண்டு தடுப்பூசிக்காக அலைந்து திரிந்தோம். எங்குமே நாய்க்கடிக்கான ரேபீஸ் தடுப்பூசி கிடைக்கவில்லை. இறுதியில் கம்பஹா வைத்தியசாலையில் இருப்பதாக தெரியவர அங்கு சென்றுதான் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள நேரிட்டது. அதுவும் ஒருவாரத்துக்கு பின்னர் தான் தடுப்பூசி கிடைத்தது என்றார்.

'தனது மனைவியை இழந்த ஒருவர் தெரிவிக்கையில், எனது மனைவி இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மருந்து தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கொண்டுவந்து சிகிச்சைகளை வழங்கினேன். எனினும் புற்றுநோய் வைத்தியசாலையிலும் அப்போது பெரும் மருந்து தட்டுப்பாடு நிலவியது. சில சிகிச்சைகளின் போது மருந்துகளை வெளியில் வாங்கிவருமாறு சிட்டு எழுதித் தருவார்கள். அந்த மருந்துகள் வெளி மருந்தகங்களில் அதிக விலைக்கு விற்கப்பட்டன. மருந்துகளை அலைந்து திரிந்து வாங்கி வந்து கொடுப்பேன். புற்றுநோய் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் போது எனது மனைவிக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டது. அதனால் அவருடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்தது. அவருக்கு அரச தொற்றுநோய் வைத்தியசாலைகளில் அவசரசிகிச்சைப் பிரிவுகளில் இடம் கிடைக்கவில்லை. இறுதியில் அவர் தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்' என்றார்.

'மயக்கமருந்து தட்டுப்பாடு காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் செய்யவிருந்த எனது சத்திரசிகிச்சை பல மாதங்களுக்கு தள்ளிப்போடப்பட்டது. பலமாதங்கள் காத்திருந்தே சத்திரசிகிச்சை செய்தார்கள். அதன்பின்னரும் சில மருத்துவ உபகரணங்களின்மையால் அங்கு பணிபுரிந்த தாதியர்கள், உதவியாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டதை நேரில் கண்டேன். பென்டேஜ், பஞ்சு போன்ற சிறிய பொருட்கள் கூட இல்லை. என்றார்.

சில கிராமிய மற்றும் தோட்டப்புற வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறையினால் மக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாட்டை நீக்கக் கோரி கையெழுத்து போராட்டங்களும் இடம்பெறுகின்றன.

இதுதொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடககுழு உறுப்பினர் வாசன் இரத்தினசிங்கம் தெரிவிக்கையில்



'ஆரம்பகாலங்களில் வாட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களே மருந்து, மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருந்தனர். எனினும் தற்போது வெளிநோயாளர்,மாதாந்த கிளினிக்குகள் என்று வரும் நோயாளர்களுக்கும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனினும் அதிகாரிகள் அலட்சியமாக செயற்படுகின்றனர். மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்தின் விலை அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் சுகாதார ஊழியர்களும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுகின்றனர். மருந்துத் தட்டுப்பாடு ஒருபக்கமிருக்க மருந்துகளின் விலை பலமடங்கு அதிகரித்துள்ளது. உதாரணத்துக்கு டொலரின் பெறுமதி ஒரு மடங்காக அதிகரித்தால் மருந்து பொருட்களின் விலை பத்துமடங்காக அதிகரிக்கின்றது. இதனால் அரச வைத்தியசாலைகளில் வெளி மருந்தகங்களில் வாங்குவதற்கு சீட்டு எழுதிகொடுத்தால் விலை அதிகரிப்பு காரணமாக சாதாரண மக்களால் அவற்றை வாங்க முடியாதுள்ளது. தனியார் வைத்தியசாலைகளிலும் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. வெளிநோயாளர் பிரிவுகளிலும் நீரிழிவு, சுவாச நோய்கள், இருதய நோய்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு அதிகளவில் நிலவுகின்றது. கிட்டதட்ட 150க்கும் மேற்பட்ட மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அரசாங்கத்துக்கு 10 யோசனைகளை முன்வைத்தோம். உலக சுகாதார தாபனம் தலையிட்டு உடனடியாக தீர்வை பெற்றுதர வேண்டுமென்று முறையிட்டுள்ளோம். அது தொடர்பில் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஊடாக கடிதமொன்றையும் கையளித்துள்ளோம். பல்வேறுபட்ட நிறுவனங்கள், தனிநபர்கள், புலம்பெயர் இலங்கையரிடமிருந்தும் உதவிகள் கிடைத்த வண்ணமுள்ளன. எனினும் அவை போதுமானதாகவில்லை. மோசடிகளும் இடம்பெறுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி, தமிழ்நாடு அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட உதவிகள் கிடைத்தன."என்றார்

அரசாங்கமும் மருந்துத் தட்டுப்பாடு, நெருக்கடிகளுக்கு விரைவாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

பல்வேறு சர்வதேச அமைப்புகள், நாடுகளிடமிருந்தும் உதவிகள் பெறப்பட்டுள்ளன.

இந்நிலையில் மருந்து பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக நாட்டின் மருந்து உற்பத்தியை எதிர்வரும் வருடங்களில் ஐம்பது வீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஜெர்மனிய தூதுவருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 15 முதல் 20 வீதமான அளவிலேயே மருந்து உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருந்துப் பொருட்களின் தேவையை கவனத்திற் கொண்டு மருந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு தேவையான மருந்துகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இத்தகைய திட்டங்களுக்காக உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.



வசந்தா அருள்ரட்ணம்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# சீரடைந்து வரும் பொருளாதாரத்தை சீர்குலைக்க அனுமதிக்க முடியாது!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் சந்திப்பு

**பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மை எக்காரணம் கொண்டும் சீர்குலைப்பதற்கு அனுமதிக்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அரசியல் கட்சிகளின் தேர்தல் தயார்படுத்தல்கள் மற்றும் தேர்தலை நடத்துவதில் காணப்படும் சவால்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயார் நிலையில் உள்ளதா? இத்தேர்தலில் கணிசமான வெற்றியைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் நீங்கள் எந்தளவு நம்பிக்கையுடன் இருக்கின்றீர்கள்?**

பதில்: பொதுஜன பெரமுன மட்டுமல்லாது அனைத்து அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆர்வமாக உள்ளன. எங்களுக்கு வேறு வழியில்லை என்று நினைக்கிறேன். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து எமது ஆதரவுடன் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்திருந்தால் நாம் ஏன் பிரிந்து செல்ல வேண்டும்? வெளிப்படையாக, நாங்கள் கைகோர்த்து எங்களுக்கு ஏற்ற வழியில் போட்டியிடுவோம். சில உள்ளூராட்சி மன்றங்களில் எங்கள் சின்னத்திலும், சில உள்ளூராட்சி மன்றங்களில் வேறு சின்னத்திலும் போட்டியிடுவோம். மூலோபாயரீதியாக, கிடைக்கக்கூடிய சிறந்த வழிமுறையை நாங்கள் பின்பற்றுவோம்.

**கே: பல்வேறு காரணங்களைக் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு யுத்திகளைக் கையாண்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் கையாண்ட ஒரு தந்திரத்தையாவது அவர்களால் குறிப்பிட முடியுமா? இப்போது நீதிமன்றத்திலும் சவால் விடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் முடிவு தேர்தல் ஆணைக்குழுவின் கையில் உள்ளது. அரசால் எதுவும் செய்ய முடியாது. அரசாங்கம் தேர்தலை எளிதாக்க முடியும். ஆனால் அரசாங்கம் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களையும் நாங்கள் விளக்கியுள்ளோம்.

நிலையான பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்களின் முக்கிய நோக்கம். இந்த ஸ்திரத்தன்மை தொடருவதை உறுதி செய்வது நமது பொறுப்பு. உண்மையில், இது நாம் விரும்பும் சிறந்த நிலைத்தன்மை அல்ல. இது அடிப்படைத் தேவைகள் மட்டுமே. எனவே, ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும், பின்னர் வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். யாரும் செயல்முறைக்கு தீங்கு செய்யக் கூடாது. இந்த செயல்முறை குழப்பப்பட்டால் நிலைமை மிகவும் மோசமாகி விடும். அப்படியானால், எட்டு மாதங்களுக்கு முன்பு இருந்ததை விட, தலைகீழாக மாற்ற முடியாத சூழ்நிலையில் நாம் இருப்போம்.

**கே: ஏறக்குறைய ரூ.10 கோடி செலவில் தேர்தலை நடத்துவது குறித்து உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன? பொருளாதாரம் கடுமையான சிக்கலில் இருக்கும்போது இந்தப் பணத்தை மற்றைய விஷயங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறீர்களா?**

பதில்: கடன்களை மீளச்செலுத்துவதில் நாம் பல சிக்கல்களை எதிர்கொண்டிருப்பதுடன், அன்றாட அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. எவ்வாறாயினும், உதவிக்கு கூடுதல் செலவு எதுவும் எடுக்கப்படாமல் நாங்கள் மிகவும் சிரமத்துடன் நிர்வகித்து வருகிறோம். அரசதுறையின் சம்பளத்துக்காக மாத்திரம் ஏறத்தாழ ஒரு ட்ரில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களின் நலனுக்காக மாதம் ஒன்றுக்கு 10 பில்லியன் ரூபா முதல் 12 பில்லியன் ரூபா வரை தேவைப்படுகிறது. இவை அனைத்தும் மாதாந்த நிதித் தேவைகளாகும். ஓய்வூதியக் கொடுப்பனவுக்கும் பணம் தேவைப்படுகிறது. இவை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும். இந்தக் கட்டாயக் கொடுப்பனவுகளில் உடல்நலத்திற்காகச் செய்யப்படும் கொடுப்பனவுகள் மற்றும் செலவுகள் சேர்க்கப்படவில்லை, ஆனால் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

திறைசேரியினால் வசூலிக்கப்படும் வருவாய் குறைவாக இருப்பதால், இருதரப்புக் கடன்களுக்கு நாங்கள் சேவை செய்வதில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். பொருளாதாரம் இப்போதுதான் ஸ்திரத்தன்மையைக் காட்டியுள்ளது. எனவே, அதன் ஸ்திரத்தன்மையை நாம் பாதிக்க விடக் கூடாது.

தற்போது, பணவீக்கம் ஓரளவுக்குக் குறைவடைந்துள்ளபோதும், நிலைமை முற்றாக சீரடைந்து விடவில்லை. வட்டிவீதம் 30 ஆகக் காணப்படுகிறது. எனவே, நாங்கள் கடந்து வந்த மிகவும் கடினங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் பேரில், திறைசேரி அதிகாரிகள் கடுமையாக உழைத்து வருகின்றனர். எவ்வாறாயினும், இந்த நேரத்தில் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மற்றைய எல்லா சிக்கல்களையும் அதன் பிறகு சரிசெய்ய முடியும்.

**கே: பெரும்பாலான எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளன. உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜனப் பெரமுன கட்சிக்கு இது உதவியாக இருக்குமா?**

பதில்: இப்போது மக்கள் அரசியல் கட்சிகள் அல்லது அரசியல்வாதிகள் மீது ஆர்வம் காட்டவில்லை என்று நினைக்கிறேன். பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியான தீர்வை யாரால் வழங்க முடியும் என்பதைத்தான் பார்க்கிறார்கள். வரிக் குறைப்பு நாங்கள் விரும்பிய வழியில் செயல்படவில்லை. அதை எதிர்த்தது யார்? நாங்கள் உட்பட யாரும் எதிர்க்கவில்லை. எடுக்கப்பட்ட மற்றைய முடிவுகளைப் பார்த்தால், பெரும்பாலான முடிவுகள் இந்தக் குழுக்கள் அமைச்சரவையில் இருந்தபோது எடுக்கப்பட்டவை. நமது நிதிக் கொள்கை, பணக் கொள்கை மற்றும் செலவினங்களை வருவாய்க்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்துவதற்கு இது ஒரு சிறந்த நேரம் என்று நான் நினைக்கிறேன்.

அரசியல்வாதிகளின் ஒழுக்கமும் முக்கியமானது. எங்கள் ஆட்சிக் காலத்தில் தவறுகள் நடந்தன என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இதனால் அரசும், நாடும் சரிந்தன. எனவே, அதைச் சரிசெய்வதற்கான சிறந்த வழி, பொறுப்பேற்று பாதிக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீட்டெடுப்பதாகும். வெளிநடப்பு செய்வது நல்லதா அல்லது பொறுப்பேற்பது நல்லதா என்பது அங்குதான் மக்களுக்குப் புரியும். இது போன்ற நேரத்தில் அரசாங்கமோ அல்லது பொறுப்பேற்றுள்ள மக்களோ மிகவும் பிரபலமாக இருக்க மாட்டார்கள், அதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால் நாடு இன்னும் உயிருடன் இருப்பதை உறுதி செய்ய யாராவது இந்த முடிவுகளை எடுக்க வேண்டும். எனவே, நாடு இல்லாமல் அரசியல் பேச முடியுமா?

**கே: 2023 ஆம் ஆண்டை பொருளாதார மீட்சிக்கான ஆண்டாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்த ஆண்டில் ஏதேனும் ஒருவிதமான பொருளாதார மீட்சியைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளதா?**

பதில்: உண்மையில், 2025 வளர்ச்சி ஆண்டாக இருக்கும். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை நீங்கள் உணரவில்லையா? நீங்கள் எட்டு அல்லது பத்து மாதங்களுக்கு திரும்பிச் சென்றால், நாங்கள் எதனை எதிர்கொண்டோம்? அத்தியாவசியத் தேவைகள், உணவுப் பொருட்கள், எரிபொருள், எரிவாயு மற்றும் 12 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை.


மேலும், உரம் இல்லை. மக்களுக்கு ஏற்பட்ட மூச்சுத் திணறலை எங்களால் பார்க்க முடிந்தது. இப்போதும் அதே நிலையா? இது முழுமையாக மீளமைக்கப்பட்டுள்ளது என்று அர்த்தமல்ல, அதனை நான் ஒப்புக் கொள்கிறேன். இருப்பினும், காணக்கூடிய மற்றும் உறுதியான நிலைப்படுத்தல் நடைபெறுகிறது. அது இப்போது நிலையாகிவிட்டதாக மக்கள் நினைப்பார்கள். ஆனால் அது சிறந்த அளவில் நிலைப்படுத்தப்படவில்லை. இது அடிப்படை நிலைக்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, நாம் அதை முதலில் செயற்படுத்த வேண்டும்.



**நிலையான பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்களின் முக்கிய நோக்கம். இன்றைய ஸ்திரத்தன்மை தொடருவதை உறுதி செய்ய வேண்டும்**

**'நாடு உயிருடன் இருப்பதை முதலில் உறுதி செய்ய வேண்டும். நாடு இல்லாமல் அரசியல் பேச முடியாது!'**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# நலிவடைந்த வறிய சமுதாயத்தினருக்கு இந்தியப் பிரதமர் அளித்த கௌரவம்!

இந்திய குடியரசு தினம் ஜனவரி 26 ஆம் திகதியாகும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விசேட மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டார். இவ்விழா புதுடில்லியின் நுழைவாயிலான கர்த்வயபாத்தில் வெகுவிமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குடியரசு தினத்தில் விசேட விருந்தினர்களுக்கான கூடம் சாதாரண மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

விசேட விழாக்களில் உயர்வகுப்பினர் அமரும் இடங்களில் அமர்ந்து குடியரசு தினத்தின் அழகைக் காண கிடைத்தமை அதில் கலந்து கொண்டவர்களின் வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாகும். இம்முறை குடியரசு தினத்தின் தொனிப்பொருள் 'சாதாரண மக்களுடன் குடியரசு தின கொண்டாட்டம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

குடியரசு தினம் நடைபெற்ற பிரதேசம் விசேட திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. அத்திட்டம் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அண்மைக்காலம் வரை 'ராஜ்பத்' என அழைக்கப்பட்ட நுழைவாயில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 'கர்த்வ்யபாத்' எனப் பெயரிடப்பட்டது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் நிர்வாக பிரதேசம் புதுடில்லி என்பதோடு அதன் கட்டமைப்பு அன்றைய தேவைகளுக்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு அரசாங்கங்கள் பலவிதமான மாற்றங்களை மேற்கொண்டிருந்தாலும், அடிப்படைக் கட்டமைப்பிலிருந்து விலகவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கே உரிய தனித்தன்மைக்கு அமைய நகரத் திட்டத்தை மாத்திரமல்ல இந்தியாவின் பயன்பாட்டையும் மாற்றி வருகின்றார். அதன் காரணமாக கர்த்வ்யபாத் அமைக்கப்படுவதோடு அதன் நகரத் திட்டம் இந்திய பூர்வீகத்தன்மைக்கு பொருத்தமான வகையில் மீளுருவாக்கம் செய்யப்படுகின்றது. இந்தப் பணியில் ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டார்கள். அவர்களின் அப்பணி இலகுவானதல்ல. புதுடில்லியின் காலநிலையானது வருட ஆரம்பத்தில் அதிக குளிராகவும், நடுப்பகுதியில் மிகவும் உஷ்ணமாகவும் காணப்படும். அதிக வெப்பத்தால் பாதிக்கப்படும் நாட்களில் நகரின் பல இடங்களில் நீர் மற்றும் குளிர்பானங்களை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஏழை மக்கள் தாகத்தினால் நோயாளிகளாவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு நகரில் உள்ள வர்த்தகர்கள் அதனை ஏற்பாடு செய்வார்கள். இவ்வாறான பல சிரமங்களை அனுபவித்து தூசு மற்றும் குப்பைகளுக்கு மத்தியில் நகரை உருவாக்க பங்களிப்பு செய்தவர்களை புறந்தள்ள முடியாது. அவர்களை தூரத்தே வைத்து பிரபு வாகனங்கள் சூழ வருகை தரும் விருந்தினர்களின் அரசதோரணை பிரதமரின் விருப்பமாக இருக்கவில்லை.

இந்தச் சம்பவம் சாதாரணமாக காணக்கிடைக்காத அபூர்வமான நிகழ்வாகும். பணிகள் நிறைவடைந்து வேதனம் வழங்கப்பட்டவுடன் அனைத்தும் மறந்துவிடும். வியர்வை சிந்திய மக்களுக்கு அரச மாளிகைக் கதவுகள் திறக்கப்படுவதில்லை. மோடி வித்தியாசமான தலைவர். இந்தியப் பிரதமர் உத்தரப்பிரதேசத்தில் மதத்தலம் ஒன்றை நவீனமயப்படுத்தி திறக்கும் விழாவில் கலந்து கொண்ட வேளையில், அங்கு பணிபுரிந்தவர்களை அழைத்து அவர்களுக்கு மலரிதழ்களை வழங்கி கௌரவமளித்தார். கடந்த வருடம் குடியரசு தினத்தன்று விருந்தினர்களின் பார்வைக்கூடங்களுக்கு வீதி துப்புரவு மற்றும் மலசலகூடப் பணியாளர்களை அழைத்திருந்தார். காய்கறிகள் மற்றும் பழங்களை விற்பவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கர்தவ்யபாத் பகுதியில் புதிதாக பாராளுமன்றம் அமைக்கப்படுவதோடு பிரதமர் கடந்த வருட நடுப்பகுதியில் அங்கு சென்று நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் நேரத்தை செலவிட்டதோடு அவர்கள் நாட்டுக்காக புரியும் அர்ப்பணிப்பை பாராட்டுவதாகவும் தெரிவித்திருந்ததை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். 2019 ஆம் ஆண்டு கும்பமேளா விழாவில் கலந்துகொண்டு பிரதமர் மோடி சுகாதாரத் துறையில் பணிபுரிபவர்களை அழைத்து அவர்களின் பாதங்களை நீரால் கழுவி மரியாதை செய்தார்.

கர்த்வயபாத் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் காரியாலயம், பாராளுமன்றத் தொகுதி மற்றும் அரச காரியாலயங்கள் அதிகளவில் அங்குள்ளன. ஜனாதிபதி மாளிகையான ராஷ்ட்ரபவனிலிருந்து இந்தியன் கேட் அதாவது யுத்த நினைவுத் தூபி வரையான மூன்று கிலோ மீட்டர் தூரம் இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தியன் கேட் யுத்த நினைவுத்தூபியும் அகற்றப்பட்டு அங்கு சுதந்திரப் போராட்ட வீரரான சுபாஷ் சந்திரபோஸின் சிலை வைக்கப்பட்டது. இந்தியாவின் அதிகாரம் மற்றும் புத்தெழுச்சியை அரசால் பறைசாற்றும் புதிய கொரிடோராக மாத்திரமல்ல மக்களை வெற்றி கொள்ளும் இருதயபூர்வமான முயற்சியாகவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாகத் தெரிகின்றது.

இந்தியப் பிரதமரின் செயலை எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும். அரசியலில் ஈடுபடும் அனைத்து நபர்களும் புதிதாக சிந்திக்க வேண்டிய காலமாகும். பண்டைய காலத்து பிரபு அரசியல் நிகழ்காலத்துக்குப் பொருந்தாது. வாக்குகளை கேட்கும் வேளையில் மக்களிடம் செல்லும் வேட்பாளர்கள், அதிகாரம் பெற்ற பின்னர் பிரபுக்களாக மாறுகிறார்கள். அரசின் திட்டங்கள், கொள்கைகளை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இடத்திற்கு இட்டுச் செல்வது பொறுப்பு வாய்ந்த பிரிவினரின் நோக்கமாக காணப்பட வேண்டும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

### இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்த

# இந்திய மீனவர்களின் 03 படகுகள் அரசுடமை

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு

யாழ். விசேட நிருபர்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்ட 03 இந்திய மீன்பிடிப் படகுகள் அரசுடமையாக்கப்பட்டன.

எஞ்சிய நான்கு படகுகள் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துமீறி இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்த குற்றச் சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் 17 படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

படகுகளுக்கு உரிமைகோரும் வழக்குக்காக இராமேஸ்வரத்தை சேர்ந்த 10 மீனவர்கள் கொண்ட குழு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தது. படகுகளுக்கான உரிமை கோரும் மூன்று வழக்குகளில் உரிமையாளர்கள் ஆஜராகாததால், மூன்று படகுகளும் அரசுடமையாக்கப்படுவதாக ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் அறிவித்தார். 2021 டிசம்பர் மாதம் கைப்பற்றப்பட்ட இப் படகுகள் தொடர்பில் இதற்கு முன்னர் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போதும், படகுகளின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

நான்கு படகுகளுக்கான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவற்றின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கின் சாட்சியாளர்களிடம் நீதிமன்றத்தில் சாட்சியம் பெறப்பட்டதைத் தொடர்ந்து, சாட்சியங்களை ஆராய்ந்த நீதவான் இவ் வழக்கின் தீர்ப்பை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நான்கு படகுகளின் உரிமையாளர்களின் வழக்கு ஜனவரி 31 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படமெனவும் அன்றைய தினம் படகின் உரிமையாளர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.





மட்டக்களப்பு ரோட்டரிக் கழகத் தலைவர் பு. ரமணன் மற்றும் மலேசியா கோலாலம்பூர் சென்றல் ரோட்டரிக் கழகத் தலைவர் அஞ்சலினா ஆரோக்கியசாமியுடன் சகோதர கழகமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் போது கல்வி, சுகாதாரம் வறுமை ஆகியவற்றுக்கு முதலிடம் கொடுப்பதாக உறுதி செய்யப்பட்டது, இதில் முன்னாள் மலேசியா ரோட்டரி மாவட்ட ஆளுநர் ராஜசேகரன் பிண்டி, கணகேஸ்வரி சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர். (மாவத்தகம தினகரன் நிருபர்)

## போதைப் பொருள் கடத்தலுக்கு...

போதைப்பொருள் வியாபாரத்தைக் கைவிடுமாறு போதைப் பொருள் கடத்தல்காரர்களிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார். போதைப்பொருள், கொலை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது கருத்து எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

## மின்வெட்டு ஏற்படின்...

ஒப்புதல் வழங்காதபோதும் மின்வெட்டுக்கு பாவனையாளர்கள் முகம் கொடுத்தால், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு எழுத்து மூலம் முறைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை வாட்ஸ் அப் – 0775687387 அல்லது மின்னஞ்சல் consumers@pucsl.gov.lk, அல்லது தொலைநகல் 0112392641 மூலமாக அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## குமார் நடேசனுக்கு இன்று...

பாராட்டி, கௌரவிக்கும் விழா தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு, வெள்ளவத்தை தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சிரேஷ்ட ஊடகவியலாளரும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினருமான பா. அனந்த் பாலகிட்ணர் தலைமையில் விழா இன்று நடைபெறவுள்ளது.

விழாவில் வரவேற்புரையை சுயாதீன ஊடகவியலாளர் ஏ.ஆர். வி. லோஷன் ஆற்றவுள்ளார். ஆசியுரையை நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரனும் தலைமையுரையை அனந்த் பாலகிட்ணரும் வாழ்த்துரைகளை கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் மா. செ. மூக்கையா, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர்ஆர். சுரேந்திரகுமார், பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ், கலாநிதி எஸ். சேந்தன் (பணிப்பாளர் ஊடகம், மனித உரிமைகள், மற்றும் சமாதானத்துக்கான நிலையம்,இங்கிலாந்து), கொழும்பு பல்கலைக்கழகம் சட்டபீடம் பேராசிரியர் அ. சர்வேஸ்வரன்,கொழும்பு,சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பாராட்டுரைகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன், தே.செந்தில்வேலவர் (பிரதம ஆசிரியர் தினகரன்,வாரமஞ்சரி) ஆர். சிவராஜா (பிரதம ஆசிரியர் தமிழன்), சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆர். பாரதி, சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்ஸன், சி. கேசவன் (விரிவுரையாளர் சியன தேசிய கல்விக் கல்லூரி) ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஏற்புரையை குமார் நடேசனும் நன்றியுரையை பரமேஸ்வரன் விக்கினேஸ்வரன் ( பிரதி செய்திப்பணிப்பாளர் சூரியன் எப்.எம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## எங்கள் கருத்து

### குமார் நடேசன் அவர்களுக்கான விருது தேசிய பத்திரிகைகளுக்கான கௌரவம்!

இலங்கையின் பாரம்பரியப் புகழ் மிகுந்த ஊடக நிறுவனமொன்றின் முகாமைத்துவப் பணிப்பாளரான குமார் நடேசன் அவர்களுக்கு இந்திய அரசு அளித்திருக்கின்ற இவ்விருதானது, இலங்கையின் ஒட்டுமொத்த ஊடகத் துறைக்கும் கிடைத்துள்ள பெரும் கௌரவமென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இலங்கை ஊடகத்துறையின் தரத்தை இந்திய தேசம் உச்சநிலையாக கருதுகின்றதென்பது நம் ஊடகவியலாளர்கள் அனைவருக்குமே பெருமை தருவதாகும்.

திரு. குமார் நடேசனுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இன்று நடத்துகின்ற பாராட்டு விழாவானது, இந்திய அரசாங்கத்துக்கு அளிக்கப்படுகின்ற நன்றி கலந்த கௌரவமென்று கொள்வதிலும் தவறில்லை. இலங்கையின் ஊடகத்துறை மீது இந்தியா கொண்டுள்ள கரிசனையையும் இந்த விருது எமக்கெல்லாம் வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் ஒன்பது தசாப்த காலம் வெற்றியுடன் ஊடகப்பயணம் புரிந்து வருகின்ற பாரம்பரிய புகழ் நிறைந்த தமிழ் தேசியப்பத்திரிகைகளாக தினகரன், வீரகேசரி ஆகிய இரு பத்திரிகைகளைத் தவிர வேறேந்தவொரு பத்திரிகையையும் குறிப்பிட முடியாது. இவ்விரு பத்திரிகைகளுக்கும் அவற்றின் தொடக்க காலத்தில் ஊடக ஒழுங்குநெறியை வகுத்துக் கொடுத்ததில் இந்திய தமிழ் பத்திரிகை ஜாம்பவான்களுக்கே முழுப்பங்கு உள்ளது. இவ்விரு பத்திரிகைகளுக்கும் இந்திய ஊடத்துறை விற்பன்னர்களே பிரதம ஆசிரியர்களாகவிருந்து அவற்றை வழிநடத்தியுள்ளனர்.

அந்த உறுதியான அடித்தளத்திலேயே தினகரன், வீரகேசரி ஆகிய இரு பத்திரிகைகளும் சற்றேனும் துவண்டு விடாமல் வெற்றியுடன் பயணித்து வருகின்றன. அவ்வாறான தேசியப் பத்திரிகையொன்றின் முகாமைத்துவப் பணிப்பாளரான குமார் நடேசன் அவர்களுக்கு இந்திய அரசு வழங்கியுள்ள கௌரவமும், அவருக்கு இன்று வழங்கப்படுகின்ற பாராட்டு விழாவும் உண்மையிலேயே மிகப் பொருத்தமானவையாகும். குமார் நடேசன் அவர்களுக்கான கௌரவத்தின் பூரிப்பில் தினகரனும் பங்கு கொள்கின்றது.

# தினேஷ் மர்ம மரணம்; இரு வாரங்களில் தகவல்

### அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மர்ம மரணம் தொடர்பான தகவல்கள் அடுத்த இரண்டு வாரங்களில் வெளியிடப்படுமென பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகள் ஏறக்குறைய முடிவடைந்துள்ளதாகவும், இது கொலையா அல்லது தற்கொலையா எனக் கூற முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். பொது பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கச்சதீவு புனித அந்தோனியார்...

அடியார்களின் பங்களிப்புடன் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 4,500 அடியார்களும் தமிழ் நாட்டிலிருந்து 3,500 அடியார்களும் 1,000 அரச உத்தியோகத்தர்கள் விருந்தினர்களின் பங்குபற்றுதலுதுடன் இவ்வருட கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்துவதற்கு இலங்கை மற்றும் இந்திய தரப்புகளின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பில் நடைபெற்ற முன்னாயத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் விசேட...

முதல் சுதந்திர தினம் வரையான காலப்பகுதியில், அதிகாலை 5:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை இந்த போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் மத்திய வீதி, காலி முகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து என். எஸ். ஏ. சுற்றுவட்டம் வரை மற்றும் சைத்திய வீதியின் கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் நோக்கிய வீதி மற்றும் கொள்ளுப்பிட்டி ரயில் நிலைய வீதியின் போக்குவரத்து இக் காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்படும்.

இதன் காரணமாக இத்திகதிகளில் ஒத்திகை மற்றும் சுதந்திர தின நிகழ்வுகளின் போது மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திடீரென நிலத்திலிருந்து...

இந்த அம்மனை வழிபட்டு வருகின்றனர். ஆலடி அம்மன் ஆலயம் எனவும் அழைக்கப்படுகிற இவ்வாலயம் ஆரம்பத்தில் சிறியளவில் அமைக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இன்று பெரிதாக புனரமைக்கப்பட்டுள்ளதுடன் சில தினங்களில் கும்பாபிஷேகமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கும்பாபிஷேக சிரமதான வேலைகளின் போதே முருகைக் கல்லால் செதுக்கப்பட்ட அம்மனின் திரு உருவச்சிலையொன்று நிலத்திலிருந்து மேற்கிளம்பி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐந்து தலை பாம்பின் கீழ் காட்சியளிக்கும் இந்த அம்மன் சிலையை உள்ளூர், வெளியூர் பக்தர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டு வழிபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசியல் கைதிகள் சிலரது...

இதன்போதே அமைச்சர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகத் தமிழ் பண்பாட்டியக்கம் சார்பிலும் உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் சார்பிலும் அமைச்சரிடம் சில கோரிக்கைகளையும் முன் வைத்தார். கடந்த பல வருடங்களாக சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான கோரிக்கை அவர் முன்வைத்த கோரிக்கைகளுள் முக்கியமானதாக அமைந்திருந்தது.

அவரது கோரிக்கைகளை செவிமடுத்த நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் தமிழ் அரசியல் கைதிகளை படிப்படியாக விடுவித்து வருவதாகவும் மிக விரைவில் சிறைகளில் இருக்கின்ற ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவரென்ற உறுதிமொழியையும் வழங்கினார்.

சில தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமெனில் அவர்களது நீதிமன்ற வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் அதற்கான விடுவிப்பு ஒப்புதல்களை சட்டப்படி தெரிவிக்க வேண்டும். ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு விருப்பம் தெரிவிக்க மறுத்து விடுகின்றனர். அதனாலேயே சில அரசியல் கைதிகளை இன்று வரையிலும் எங்களால் விடுவிக்க முடியாமலுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

இவ்வாறான தமிழ் அரசியல்வாதிகளை இந்த விடயத்தில் இணங்க வைப்பது உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் போன்ற உங்கள் அமைப்புகளின் கடமையெனவும் அமைச்சர், கணேசலிங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் விடயத்தில் அரசாங்கம் துரிதமாக செயல்பட வேண்டுமென கணேசலிங்கம் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அதனை துரித கதியில் செய்து முடிக்க முடியமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொண்டால் மட்டுமே நாடு பொருளாதார ரீதியில் மேலும் முன்னேற்றத்தை அடைய முடியுமெனவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கணேசலிங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த கணேசலிங்கம்,

இலங்கை அரசாங்கம் தொடர்பாக புலம்பெயர் தமிழர்களிடம் முன்னர் இருந்து வந்த சில மாறுபட்ட கருத்துக்கள் இப்போது இல்லையெனவும், அவர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளதாகவும், ஏற்கனவே பலர் அவ்வாறு தமது முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் அதிகமாக தமிழ் மக்கள் வாழும் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு விஜயம் செய்யுமாறும் கணேசலிங்கம்,அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது துரை கணேசலிங்கம், இலங்கையில் எதிர்வரும் 04 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள 75 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துக்கும் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

# இலங்கை மீனவர் ஐவர் மியன்மார் பொலிஸில்

### யாங்கூன் நிலையத்தில் தடுத்து வைப்பு



திருகோணமலை மீன்பிடி துறை முகத்திலிருந்து கடலுக்குச் சென்ற 05 மீனவர்கள் மியன்மாரின் யாங்கூன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி திருகோணமலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து இந்த மீனவர்கள் தொழிலுக்கு சென்றனர்.

திக்வெல்ல, வெலிகம மற்றும் திருகோணமலை பகுதிகளில் வசிப்பவர்களென விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மீனவர்களின் படகு வேறொரு படகு மூலம் இழுத்துச் செல்லப்பட்டதாக மீனவர்களின் உறவினர்களுக்கு தகவல் கிடைத்ததையடுத்து, அவர்கள் இது குறித்து கடற்றொழில் திணைக்களத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு

### விண்ணப்ப இறுதி திகதி பெப்.10 applications.doenets.lk/exams விண்ணப்பிக்கலாம்

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கான அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப் போட்டி பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்பதற்கான அறிவிப்பு கடந்த 27.01.2023 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 10.02.2023 என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் applications.doenets.lk/exams என்ற இணையத்தளத்துக்குச் சென்று பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தலைப்பில் மயக்கம் தவறுக்கு வருந்துகிறோம்

எஹெலியகொட தமிழ் வித்தியாலய பௌதிக வளப்பற்றாக் குறைக்கு வித்திட்ட காவேரிக் கலாமன்றம் என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில், 'எஹெலியகொட தமிழ் வித்தியாலய பௌதிக வளப்பற்றாக்குறையை நிவர்த்திக்க வித்திட்ட காவேரிக் கலாமன்றம்' என்று வந்திருக்க வேண்டும், ஆனால் கனணி எழுத்துக் கோர்வையும் பக்க வடிவமைப்பிலும் இறுதி அச்சிப் பதிப்பிலும் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆர்)

## தீர்வு காணும் விடயத்தில்...

தேக்கமடைந்திருக்கின்றன. ஜனாதிபதியின் தலைமையில் சர்வ கட்சிகள் இனப்பிரச்சினை தொடர்பாக பேசுவது இது இரண்டாவது தடவை.

முன்னர் பேசியபோது நான் கேட்டுக்கொண்ட விடயங்களை இங்கு நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

சமஷ்ட்டி, ஒற்றையாட்சி என்ற இந்த இரண்டு சொல்லாடல்களும் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவின்மை இருக்கிறது. முதலில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கருந்தரங்கை நடாத்தி இந்த விடயங்கள் தொடர்பாக ஒரு தெளிவை வழங்குங்கள்.

13ஆம் திருத்தம் என்பது என்ன? அதன்கீழ் வழங்கப்படுகின்ற பொலிஸ் அதிகாரம் என்ன? காணி அதிகாரம் என்ன? அவ்வாறு அதிகாரங்கள் பகிரப்படும் போது நாடு பிளவுறும் என்பதில் உண்மை இருக்கிறதா? சமஷ்டி ஆட்சியை ஒழுகும் நாடுகள் பிளவுபட்டிருக்கின்றனவா? அந்த நாட்டு மக்கள் தேசப்பற்றுடன் இருக்கிறார்களா? அல்லது பிளவுபட்டிருக்கிறார்களா? என்பவை பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். அப்போதுதான் இந்த நாட்டில் இனப்பிரச்சினையை தீர்வு நோக்கி கொண்டு செல்ல முடியும் என்றார்.

## செல்லப்பிராணிக்காக தன்..

ஊடகவியலாளர் ஒருவரின் மகனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஆழ்த்தியுள்ளது.

இச் சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உதயநகர் பகுதியில் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது,

செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட நாய் கிணற்றில் விழுந்துள்ளது. நாயை மீட்பதற்காக இளைஞன் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் தும்புக் கயிறை பயன்படுத்தி இறங்கியுள்ளார்.

கயிறு அறுந்து கிணற்றில் விழுந்த இளைஞன் மேலே ஏற முடியாமையினால் அவரது தந்தை அயலவரின் உதவியை தேடியுள்ளார்.

சேற்றில் புதைந்த இளைஞன் மாட்டிக் கொண்டமையால் உயிர் இழக்க நேரிட்டுள்ளது. அயலவர்களின் உதவியுடன் நீர் இறைக்கப்பட்டு இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் 24 வயதுடைய விவேகானந்தன் வேணிலவன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## இலவச மருத்துவ சேவையை... (04 ஆம் பக்கத் தொடர்)

மருந்துகளை உற்பத்தி செய்த பின்னர் அந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு மற்றும் ஒரு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது வரிச் சலுகைகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பெருமளவு சேலைன் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் மருந்து வகைகள் மற்றும் உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு மருந்துகளை விநியோகிக்கும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அந்நாடுகளுக்குள் ஜெர்மனியும் உள்ளடங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவிலேயே சிறந்த சுகாதார வசதிகளைக் கொண்ட நாடு தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியால் தனது சுகாதார சேவைகளை முன்னரைப் போன்று தரமானதாக வழங்க முடியாது தத்தளிக்கின்றது. அதேபோல் நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையில் நலன்விரும்பிகள் மருந்துவகைகளை கௌ்வனவு செய்து அன்பளிப்பாக வைத்தியசாலைகளுக்கு வழங்க முன்வருவதும் உசிதமானது.

வெறுமனே எல்லாவற்றுக்கும் அரசினைக் குற்றசாட்டுவதை விடுத்து தற்போதைய சூழலில் நாம் ஒவ்வொருவரும் இந்நிலைமையினை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியே சிந்திக்க வேண்டும்.

## எல்லையின்றித் தொடரும்... (13ஆம் பக்கத் தொடர்)

அத்தகைய வாய்ப்பைக் கொண்டு அமெரிக்காவும் நேட்டோவும் செயல்பட்டுவருவது ரஷ்யாவையும் ஐரோப்பாவையும் நிரந்தரமாக பகைவர்களாக வைத்துக் கொள்வதாகவே தெரிகிறது. அத்தகைய சூழல் தனித்து ரஷ்யாவுக்கு மட்டுமல்ல ஐரோப்பாவுக்கும் அபாயமானதாகவே தென்படுகிறது. அதே நேரம் ரஷ்யாவும் உக்ரைனுக்குள் அமெரிக்க மற்றும் மேற்கின் ஆயுதங்களையும் போர் மற்றும் பொருளாதார உத்திகளையும் கையாள முனைகிறது. உக்ரைன்ரஷ்யப் போர் முழு நீளப் போராக மாறவும் உலகளாவிய போராக மாறவும் வாய்புள்ளதாகவே தெரிகிறது.

ஆனால் ரஷ்யாவுக்கு எதிரான மேற்கு அணி பலமடைந்துள்ளது. ரஷ்யாவின் எரிசக்திக்கும் பெற்றோலியத்திற்கும் பதிலீட்டை உருவாக்குவதில் மேற்கு அதிக வேகத்தை காட்டுகிறது.

இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார சுமையும் இன்னோர் உலகளாவிய போருக்கு வழிவகுக்கும் என்ற விவாதம் நிலவுகிறது.

# Empowering Through Skills Development

# NEW INTAKE 2022

**Enroll Now**

# University Colleges

## University of Vocational Technology

Ministry of Education

## Diploma Courses and Entry Qualifications

**GCE (A/L) 3passes in relevant stream or NVQ Level 4 in relevant occupation as specified below.**

*Build up your future...*
*Limited opportunities available*

**University Colleges established under the University of Vocational Technology, offer NVQ Level 5 National Diploma & NVQ Level 6 Higher National Diploma in Technology**

**Course Duration (Full Time):**
Three (3) Years and four (4) months

**Foundation:** Four (4) Months
**NVQ 5** : 1 Year and 6 Months (Including On the Job Training)
**NVQ 6** : 1 Year and 6 Months (Including On the Job Training)

**University of Vocational Technology has been established under the parliamentary Act No. 31 of 2008 to provide progressive upward movement to the students in the field of Technical and Vocational Education and Training (TVET). The clause 5(e) of the act provides the legal provision to establish the University Colleges.**

## NVQ Level 5 National Diploma & NVQ Level 6 Higher National Diploma

**Professional Industrial qualification for employment in Junior Management and Supervisory Levels**

| | Course | Entry Qualifications | College (s) |
|---|---|---|---|
| 01 | **Aquaculture and Aquatic Resources Management** (This Course includes techniques related to cultivation of aquatic animals and plants in natural or controlled marine or freshwater environments and technological innovations that occurred in the management and production of aquatic resources.) | • GCE(A/L) Bio Science/ Agriculture (Bio, Bio Systems Technology), Arts with credit pass for Soft Technology (Bio-Resourse Technology)<br>• **OR**<br>NVQ Level 04 Certificate of Aquaculture Technician (B05S004) | Anuradhapura |
| 02 | **Automobile Technology** (This Course includes study on proper functioning and maintenance of automobile two stroke and four stroke engine operating systems and other sub systems related to them) | • G.C.E A/L Science (Maths, Engineering Technology), Arts with Credit Pass for Hard Technology (Mechanical Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Automobile Mechanic (G50S003)/ Three Wheeler Mechanic (G50S007) / Motorcycle Mechanic (G50S006)/ Automobile Air-Conditioning Mechanic (G50S001) Auto Mobile Electrician (G50S002)/ Automobile Tinker (G50S005)/ Automobile Painter (G50S004)/ Agricultural Equipment Mechanic (G50S008) | Kuliyapitiya, and Matara |
| 03 | **Building Services Technology** (This Course includes techniques applied for design, installation, operation and monitoring of modern buildings for safe, comfortable and environment friendly operations) | • G.C.E A/L Science (Maths, Engineering Technology), Arts with credit pass for Hard Technology (Civil Technology, Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Electrician (E40S001), Refrigeration and Air Conditioning Mechanic (D29S002), Construction Site Supervisor (F45S006), Building Services Technician (F45S015)/ Plumber (E41S001) Elevator Technician (F45S014) | Anuradhapura, Kuliyapitiya, Matara and Jaffna |
| 04 | **Construction Technology** (This Course includes the subjects related to planing of construction works, managing concrete works and organizing sites) | • G.C.E A/L Science (Maths, Engineering Technology), Arts with Credit Pass for Hard Technology (Civil Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Construction Craftsman (Masonry, F45S005), Plumber (E41S001), Draught Person (F45S009), Construction Site Supervisor (F45S006), Wood Craftsman (Building, F45S004), / Furniture (D36S001), Aluminum Fabricator (F45S003) | Kuliyapitiya, Jaffna and Batangala |
| 05 | **Cosmetology** (This Course includes the subjects related to cosmetics and their use) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Beautician (O93S001), Hair Dresser (O93S002) | Kuliyapitiya, Ratmalana, Matara and Jaffna |
| 06 | **Drafting Technology**✱ (This Course consists the areas of architectural drafting, civil drafting, mechanical and electrical drafting, structural drafting)<br>✱***Course duration 2 years (Full Time)*** | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Construction Site Supervisor (F45S006), Draught Person (F45S009) | Kuliyapitiya |
| 07 | **Electrical Technology** (This Course includes Electrical, Electronics, Industrial and Commercial installation Systems) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Electrician (E40S001)/ Household Electrical Appliance Repairer (E40S002)/ Industrial Electronic Craftsman (D32S002) | Anuradhapura and Ratmalana |
| 08 | **Electronic Technology** (This course includes the areas of Industrial Automation, Microprocessor & Microcontroller Systems, PLC, Electronic Power Control Systems, Data Communication & Computer Networking Systems, Analogue & Digital Broadcasting and Mobile Technology) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Electrician (E40S001)/ Industrial Electronic Craftsmen (D32S002)/ Radio/ TV & Allied Equipment Repairer (D32S001) | Anuradhapura |
| 09 | **Event Management** (This Course includes the subjects related to creation and development of large scale events such as festivals, conferences, ceremonies, formal parties, concerts or conventions) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Information and Communication Technology Technician (K72S004), Secretary (Secretary Practice, K74S001) | Ratmalana, Matara and Batangala |
| 10 | **Farm Machinery Technology** (This Course includes selection, operation, utilization, and maintenance of mechanical devices related to agricultural activities) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Bio System Technology, Arts with Credit Pass for Soft Technology (Agro Technology), Hard Technology (Mechanical Technology )<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Automobile Mechanic (G50S003)/ Three Wheeler Mechanic (G50S007) and Motor Cycle Mechanic (G50S006)/ Field Assistant (Agriculture (A)1S003)/ Agricultural Equipment Mechanic (G50S008) | Kuliyapitiya, Jaffna and Batangala |
| 11 | **Fashion Design Technology** (This Course includes the subjects related to Application of Design Trend Analysis, Concept Development, Design Development, Fashion Illustrations and Technical Drawings and Pattern Making) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Pattern Maker (D18S007), Tailor (D18S004) | Ratmalana |
| 12 | **Food Technology** (This Course includes the subjects of analytical chemistry, biotechnology, engineering, nutrition, quality control and food safety management for selection, preservation, processing, packaging, distribution and use of safe food) | • GCE (A/L) Science (Bio), Technology (Bio Systems or Agriculture), Arts with Credit Pass for Soft Technology (Food Technology, Agro Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Baker (D15S002)/ Cook (H55S003)/ Fruit and Vegetable Processor (D15S001) | Ratmalana, Matara and Jaffna |
| 13 | **Hospitality Management** (This Course includes the subjects related to Management, Cookery, Food & Beverages, House Keeping, Stores etc.) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Cook (H55S003), Room Attendant (H55S002), Waiter/ Steward (H55S001), Tour Guiding (I63S005) | Anuradhapura, Matara, Jaffna and Batangala |
| 14 | **Maritime and Logistics Management** (This Course includes the subjects related to supply chain process that plans, implements and controls the efficient, effective flow and storage of goods, Services and related information in order to meet customers' requirements in the maritime and business environments) | • GCE (A/L) Science, Arts, Commerce or Technology<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Wharf Clerk (I63S003), Information and Communication Technology Technician (K72S004) | Ratmalana |
| 15 | **Mechatronics Technology** (This Course includes the subject related to designing, operating, maintaining and repairing hydraulic, pneumatic electrical and electronic systems. Also includes Robotic, PLC and SCADA and systems) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Mechanical or Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Mechatronics Technician (D33S001)/ Electrician (E40S001)/ Pneumatic Technician (E40S004)/ Machinist (D29S001)/ Industrial Electronic Craftsman (D32S002)/ Tool & Die Maker (D28S003) | Jaffna |
| 16 | **Post-Harvest Technology** (This Course includes the subjects of preservation, conservation, quality control, processing, packaging, storage, distribution, marketing and utilization of agricultural commodities) | • GCE(A/L) Bio Science/ Agriculture, Bio Systems Technology, Arts with Credit Pass for Soft Technology (Agro Technology, Food Technology, Bio-Resource Technology)<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Fruit and Vegetable Processor (D15S001), Field Assistant (Agriculture A01S003) | Anuradhapura |
| 17 | **Production Technology (Mechanical & Manufacturing)** (This Course includes the Technology related to designing of machine components, manufacturing drawing, analysing of products quality, computer numerical control technology machines and engineering materials) | • GCE (A/L) Science (Maths) or Engineering Technology or Arts with Credit Pass for Hard Technology (Mechanical Technology)<br>OR<br>• NVQ Level 4 Certificate of Machinist (D29S001)/ Welder (D28S002)/ Tool and Die Maker (D28S003)/ Fabricator (Metal, D28S001) | Jaffna |
| 18 | **Quantity Surveying** (This Course includes mathematical processes used in estimating cost of a new building construction, improvement or reproduction) | • GCE (A/L) Science/ Maths or Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Civil Technology)<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Assistant Quantity Surveyor (F45S007)/Draught Person (F45S009), Construction Site Supervisor (F45S006) | Anuradhapura, Kuliyapitiya, Matara and Batangala |
| 19 | **Refrigeration and Air Conditioning Technology** (This Course includes techniques applied for developing more comfortable conditions to improve thermal comfort and indoor air quality) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Mechanical or Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Refrigeration & Air Conditioning Mechanic (D29S002)/ Automobile Air Conditioning Mechanic (G50S001)/ Electrician (E40S001) | Kuliyapitiya and Matara |
| 20 | **Telecommunication Technology** (This Course includes the use of telecommunication devices in exchange of information by electronic and electrical means over a significant distance) | • GCE (A/L) Science (Maths), Engineering Technology, Arts with Credit Pass for Hard Technology (Electrical, Electronic and Information Technology)<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Telecommunication Technician (I64S001), Industrial Electronic Craftsman (D32S002)/ Computer Hardware Technician (K72S001), Computer Network Technician (K72S002) | Ratmalana |
| 21 | **Travel and Tour Management** (This Course covers a whole range of visitor and travel related services in Tourism, E-business & E-marketing in Tourism and understanding markets and their complexity) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 04 Certificate of Tour Guiding (I63S005), Cook (H55S003), Room Attendant (H55S002) Waiter/ Steward (H55S001) | Anuradhapura, Kuliyapitiya, Ratmalana, Matara and Batangala |
| 22 | **Television Programme Production Technology** (This Course consists the subjects related to areas such as develop a concept and screenplay, organize film/ television production, organize post production stage to complete the production, knowledge on mass media industry, media law and ethics and intellectual property in the field of film and television) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Gaffer (Film and TV lighting person (O92S003), Telecommunication Technician (I64S001), Video Editor/ Assistant Editor (O92S004), Photographer (K74S005), Computer Graphics Designer (D22S002) | Ratmalana |
| 23 | **Television Post Production Technology** (This Course consists the subjects related to editing technology and techniques in video editing, online and offline editing, 3D, 2D animation for video editing in the field of film and television, 2D, 3D computer graphic designing for video editing in the field of film and television) | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 4 Certificate of Gaffer (Film and TV lighting person (O92S003), Telecommunication Technician (I64S001), Video Editor/ Assistant Editor (O92S004), Photographer (K74S005), Computer Graphics Designer (D22S002) | Ratmalana |
| 24 | **Information and Communication Technology** | • GCE (A/L) Science, Arts, Commerce, Technology<br>**OR**<br>• NVQ Level 4 certificate in ICT Technician, Network Technician , Hardware Technician, Graphic designer | Jaffna |

**Notes**

- Application Fee of Rs. 1000/= should be paid to the relevant University College Account Number and attach the bank receipt with the Application. (Account Numbers are available with contact details)
- Application form and course details are available at colleges and could be downloaded from relevant college website.
- Age should be below 29 years as at **28. 02. 2023**
- An Aptitude Test will be conducted in **April 2023**. Registration to study programs will be held in **May/ June 2023**. All details related to student enrollment can be obtained from the relevant college website.
- Lectures will be conducted either in physical or online mode.

**Duly completed application form could be submitted through post to reach following relevant address by registered post on or before 28th February 2023.**
**Please specify the name of the college and relevant course on the top left hand corner of the envelop.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Assistant Registrar**<br>**University College of Anuradhapura**<br>**Stage 1, 328, Vidyala Mawatha, Anuradhapura.**<br>**Tel: 025 2222010**<br><br>**www.uca.ac.lk**<br>**People's Bank: 008-1-001-6-0059167**<br>**University College of Anuradhapura** | **Assistant Registrar**<br>**University College of Batangala**<br>**Batangala, Panawala, Eheliyagoda.**<br>**Tel: 036 2235572**<br><br>**www.ucbatangala.lk**<br>**People's Bank: 029100140037975**<br>**University College of Batangala** | **Assistant Registrar**<br>**University College of Jaffna**<br>**No. 29, Brown Road, Kokuvil Jaffna.**<br>**Tel: 021 2217791**<br><br>**www.ucj.ac.lk**<br>**People's Bank: 162-100100045947**<br>**University College of Jaffna** | **Assistant Registrar**<br>**University College of Kuliyapitiya**<br>**Ashoka Mawatha, Pannala Road, Kuliyapitiya.**<br>**Tel: 037 2059576**<br><br>**www.uck.ac.lk**<br>**People's Bank: 028100130035492**<br>**University College of Kuliyapitiya** | **Assistant Registrar**<br>**University College of Matara**<br>**No. 690, Tangalle Road, Meddawaththa - Matara.**<br>**Tel: 041 2222962 / 7**<br><br>**www.ucm.ac.lk**<br>**People's Bank: 032100190039173**<br>**University College of Matara** | **Assistant Registrar**<br>**University College of Ratmalana**<br>**No. 01A, Station Road, Ratmalana.**<br>**Tel: 011 2626297**<br><br>**www.ucr.ac.lk**<br>**People's Bank: 080100-1800-15088**<br>**University College of Ratmalana** |

# தீர்வொன்றை எட்டுவதில் ஜனாதிபதி தீவிர முயற்சி!

**இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு வாரத்திற்கும் குறைவான நாட்களே எஞ்சியிருக்கும் இன்றைய நிலையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்ப–தற்கான முயற்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார்.**

சுதந்திர தினத்துக்கு முன்னர் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டப் போவதாகக் கூறியிருந்த ஜனாதிபதி, இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் சர்வகட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாக கடந்த வியாழக்கிழமை மற்றுமொரு கூட்டம் நடைபெற்றிருந்தது. இதில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசியலமைப்பின் கீழ் தான் கடமைப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் ஆரம்பம் முதலே 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகிறார்.

இவ்வாறான பின்னணியிலேயே கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி இதனை வெளிப்படையாக சர்வகட்சிகளின் தலைவர்கள் மத்தியிலும் வெளிப்படுத்தியிருந்தார்.

'நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற அடிப்படையில் தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த நான் கட்டுப்பட்டுள்ளேன். அந்த வகையில் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கடந்த 37 ஆண்டுகளாக எமது சட்டப் புத்தகத்திலும் அரசியலமைப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் யாராவது 22 ஆவது மறுசீரமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும். அப்படி இல்லையெனில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமலும், நீக்காமலும் எம்மால் இவற்றுக்கிடையே நிற்க முடியாது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு கோரி பாராளுமன்றத்தில் யார் வேண்டுமானாலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியும். அதற்குப் பெரும்பான்மையானவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தால் என்ன செய்வது? அப்படியானால் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நேரிடும்.

நான் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத்துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்பிற்கமையவே செயற்படுகிறேன். இதனை வரையறுத்துப் பார்த்தால், நாம் ஒற்றையாட்சியில் இருக்கின்றோம். நான் பெடரல் ஆட்சி முறையை எதிர்க்கின்றேன். ஆனால் அதிகாரங்களைப் பகிரத் தயாராக உள்ளேன்.

எமது மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட இல்லை. லண்டன் நகர சபைக்கு இதனை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூற முடியாது. இதனை பெடரல் இராச்சியமாவதைத் தவிர்க்க, ஜே.ஆர் ஜயவர்தன அவர்கள் சட்டத்தரணிகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதுவரை நாட்டில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஜனாதிபதிகளும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவே தீர்மானித்தனர். இதனை இனிமேலும் நடைமுறைப்படுத்தவில்லையெனில், நாம் அதனை அரசியலமைப்பில் இருந்து நீக்க வேண்டும்.

இந்த நாட்டைப் பிரிக்க நான் தயாராக இல்லை. நாம் எவரும் தயாரில்லை. இலங்கையில் உள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் உட்பட ஏனைய குழுக்களுடன் சிங்களவர்கள் இணைந்து வாழ வேண்டும். பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்பவற்றை நாம் அனைவரும் இணங்கும் வகையில் படிப்படியாக தீர்த்துக் கொள்ள முடியும். இந்தப் பிரச்சினைகளில் தங்கிவிடாது, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு முன்நோக்கிச் செல்வோம்' என ஜனாதிபதி இங்கு கூறியிருந்தார்.





## 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான கரிசனை!




இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபஷ, மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான விஜயதாச ராஜபஷ, பவித்ரா வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, குமார வெல்கம, ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்தன, துமிந்த திசாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.ஏ. சுமந்திரன், ரவூப் ஹக்கீம், சி.வி விக்னேஸ்வரன், சுரேன் ராகவன், சரத் வீரசேகர, சிவநேசத்துரை சந்திரகாந்தன், சாகர காரியவசம், டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம் அதாவுல்லா, ரிஷாட் பதியூதீன், இம்ரான் மஹருப், அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட பாராளுமன்ற கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், டெலோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி போன்ற கட்சிகள் இக்கூட்டத்தைப் புறக்கணித்திருந்தன.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இல்லாத புதியதொரு அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என்ற நிலைப்பாட்டுக்கே மக்கள் ஆணை காணப்படுவதாகவும், மக்களின் ஆணையால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆணை இல்லையென்று இங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க கூறியிருந்தார்.

இருந்தபோதும் இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தனக்குக் காணப்படும் நிறைவேற்று

## அனைத்துக் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள்!

அதிகாரத்துக்கு அமைய அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும் என்றும், அதனை சட்டமாக்க நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த முயற்சி பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்படுகிறது. இதுவரை பதவியில் இருந்த ஜனாதிபதிகள் முயற்சித்ததைவிட, தற்போதைய ஜனாதிபதியின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் ஒருபடி முன்னோக்கிச் சென்றுள்ளன என்றே கூற வேண்டும்.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதும் அவசியமானது என்பதைப் புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி, இம்முயற்சிகளை மேற்கொள்கின்றார். இருந்தபோதும் கடந்த காலங்களில் இனவாதத்தை மாத்திரமே தமது அரசியலாகக் கொண்டிருந்த சிலர் மீண்டும் இம்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையான கருத்துக்களை முன்வைத்து மக்களை மீண்டும் குழப்பும் முயற்சிகளை மேற்கொள்ளப் பார்க்கின்றனர். இதற்கு இடமளிக்க முடியாது.

அதேபோல, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் சமஷ்டி, ஒற்றையாட்சி என்ற பதங்களைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்காமல் நடைமுறைச் சாத்தியமான அதிகாரப் பகிர்வொன்றுக்குச் செல்வதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்பொழுது கிடைத்த சந்தர்ப்பம் இறுதிச் சந்தர்ப்பமாக அமையலாம் என்பதையும் அவர்கள் நினைவில் கொண்டு செயற்பட வேண்டும்.

பி.ஹர்ஷன்...

# அந்தமான், நிக்கோபார் பிராந்தியங்களிலுள்ள 21 தீவுகளுக்கு பெயர் சூட்டிய பிரதமர் மோடி



**இந்தியாவின் பராக்ரம தினமான கடந்த திங்கட்கிழமை பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் 21 பெரிய தீவுகளுக்குப் 'பரம் வீர் சக்ரா' விருது பெற்ற 21 வீரர்களின் பெயர்களைச் சூட்டும் விழாவில் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியின் போது, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவில் கட்டப்படவுள்ள நேதாஜிக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேசிய நினைவிடத்தி மாதிரியையும் பிரதமர் திறந்து வைத்தார்.**



அன்றைய கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, பராக்கிரம தினத்தில் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்ததோடு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு முழுவதும் இந்த உத்வேகம் அளிக்கும் நாள் கொண்டாடப்படுகிறது என்றார்.

"அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு இன்று ஒரு வரலாற்று நாள்" என்று குறிப்பிட்ட பிரதமர், "வரலாறு உருவாகும்போது, வருங்கால சந்ததியினர் அதை நினைவில் வைத்துக் கொள்வதும், மதிப்பிடுவதும் மட்டுமல்லாமல், அதிலிருந்து தொடர்ந்து உத்வேகமும் பெறுகிறார்கள்" என்றார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் வாழ்க்கையைப் போற்றும் வகையில், அவர் தங்கியிருந்த தீவில் புதிய நினைவிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு வருவதாகவும், இந்த நாளை வருங்கால சந்ததியினர் விடுதலையின் அமிர்தகாலத்தில் குறிப்பிடத்தக்க அத்தியாயமாக நினைவுகூருவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். நேதாஜி நினைவுச்சின்னம் மற்றும் புதிதாக பெயரிடப்பட்டுள்ள 21 தீவுகள் இளம் தலைமுறையினருக்கு நிலையான உத்வேகத்தை அளிக்கும் என்று பிரதமர் கூறினார்.

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் வரலாற்றை வெளிச்சம் போட்டுக் காட்டிய பிரதமர், இங்கு முதன்முறையாக மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டதாகவும், இந்தியாவின் முதல் சுதந்திர அரசு உருவாக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். பல மாவீரர்கள் இந்த மண்ணில் நாட்டுக்காக தவம் செய்து தியாகத்தின் உச்சத்தை தொட்டவர்கள் என்றும் அவர் கூறினார்.

"அந்த முன்னோடிகளின் வேதனை மற்றும் வலி மிகுந்த குரல்கள், இன்றும் செல்லுலார் சிறை அறைகளில் இருந்து கேட்கப்படுகின்றன" என்று அவர் கூறினார்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு போர்ட் பிளேயர் சென்று மூன்று முக்கிய தீவுகளி பெயரை மாற்றியதை நினைவுகூர்ந்த பிரதமர், "இன்று ராஸ் தீவு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவாகவும், ஹேவ்லாக் மற்றும் நீல் தீவுகள் ஸ்வராஜ் மற்றும் ஷஹீத் தீவுகளாகவும் மாறி விட்டது" என்று தெரிவித்தார்.

ஸ்வராஜ் மற்றும் ஷஹீத் ஆகிய பெயர்கள் நேதாஜியால் வழங்கப்பட்டவை என்றும், சுதந்திரத்திற்குப் பிறகும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கு பிறகு வரலாற்றின் பக்கங்களில் மறக்கப்பட்ட அதே நேதாஜி 21ம் நூற்றாண்டில் நினைவு கூறப்படுவதாக பிரதமர் குறிப்பிட்டார். அந்தமானில் முதன்முறையாக மூவர்ணக்கொடியை நேதாஜி ஏற்றிய அதே இடத்தில் இன்று, இந்தியக் கொடி வானுயரப் பறப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

"இது இந்த பகுதிக்கு வரும் அனைத்து மக்களின் இதயங்களிலும் தேசபக்தியை நிரப்பும். அவரது நினைவாக கட்டப்படும் புதிய அருங்காட்சியகம் மற்றும் நினைவகம் அந்தமானுக்கு சுற்றுலா செல்பவர்களுக்கு மேலும் நினைவில் அமையக் கூடியதாக இருக்கும். 2019 ஆம் ஆண்டில் டில்லி செங்கோட்டையில் நேதாஜி அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டு நாட்டின் இந்தப்பகுதியில் சுதந்திர இந்தியாவின் முதலாவது அரசு அமைக்கப்பட்டது. 21 தீவுகளுக்கு பெயரிடப்பட்டதற்கு பின்பு உள்ள ஒரே பாரதம் உன்னத பாரதம் ஆகும். இது இந்திய இராணுவத்தின் துணிச்சல் மற்றும் தியாகத்தை குறிப்பிடும் செய்தியாகும்.

## இந்திய இராணுவத்தினரின் அர்ப்பணிப்பான தியாகங்களுக்கு அளிக்கப்பட்ட பெரும் கௌரவம்



தாய்நாடான இந்தியாவைப் பாதுகாக்க பரம் வீர் சக்ரா விருது பெற்ற 21 பேர் அனைத்தையும் தியாகம் செய்தனர். இந்திய இராணுவத்தின் துணிச்சல் மிக்க வீரர்கள் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த, பல்வேறு மொழிகளை, பேச்சுகளைக் கொண்ட, பலதரப்பட்ட வாழ்க்கை முறையை கொண்டவர்கள். ஆனால் தாய்நாட்டிற்காக அவர்களை பாரதத்தாய் ஒன்றிணைத்தது" என்று பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார்.

அந்தமானில் உள்ள மலைக்கு கார்கில் போரில் பங்கேற்ற கேப்டன் விக்ரம் பத்ரா பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டை விட 2022 இல் அந்தமானுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக வேலைவாய்ப்பு அதிகரித்து சுற்றுலா தொடர்பான வருவாய் அதிகரித்துள்ளது. அந்தமானுக்கும் விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கும் இடையே உள்ள தொடர்பு அதிகமாகும்.

இதேவேளை மிகவேக இணையதள வசதியை அந்தமானில் ஏற்படுத்துவதற்காக நீர்மூழ்கி கண்ணாடி இழை பயன்படுத்தப்பட்டிருப்பதன் விளைவாக டிஜிட்டல் முறையிலான பணப் பரிவர்த்தனைகளும், பல்வேறு கடினமான சேவைகளும் எளிமையாக்கப்பட்டுள்ளன.

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

# மக்களின் கவனத்தை ஈர்க்காத உள்ளூராட்சி மன்றத் தேர்தல்!




**நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலை காரணமாகக் காணப்படும் சில நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பரபரப்பு நாடு முழுவதும் தொற்றியுள்ளது. மார்ச் மாதம் 09ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

நாடு கடுமையான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் அரசாங்கம் தேர்தலை நடத்துவதில் தீவிரமாக ஆர்வம் காட்டுவது சாத்தியம் இல்லையென அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

பெரும்பலானான பொருளாதார வல்லுநர்கள், சுயாதீன ஆய்வாளர்கள், பக்கச்சார்பற்ற அரசியல் ஆர்வலர்கள் மற்றும் சில பௌத்த மகாசங்க உறுப்பினர்கள் பொருளாதாரம் சீராகும்வரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சிறிது காலம் ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருந்தபோதிலும், இந்தக் கோரிக்கைகள் குறித்து சிறிதும் கவனத்தில் கொள்ளாமல் ஒரு சில அரசியல் கட்சிகள் மும்முரமாகத் தேர்தலை வலியுறுத்தி வருகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் என்ன முடிவுகள் கிடைக்கப் பெற்றாலும் அவை மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. மக்கள் எதிர் நோக்குகின்ற அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதில் அக்கறை காண்பிக்காமல் சில அரசியல் கட்சிகள் செயற்படுவது வருத்தமளிக்கிறது.

நாட்டில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கே நிதிப்பற்றாக்குறை நிலவுகின்ற இவ்வேளையில், தேர்தலுக்குச் செலவாகின்ற நிதியை மக்களிடமிருந்தா திரட்டுவது? என்றும் பலர் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரலாற்றை எடுத்து நோக்கினால் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து இது ஆரம்பமாகிறது. கிராம சபைகள், மற்றும் மாநகரசபைகள் என்பன ஆரம்பம் தொட்டு இயங்கி வந்தன. இவ்வாறான நிலையில், 1987ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மாகாண சபைகள் முறை நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் மீண்டும் பலப்படுத்தப்பட்டன எனலாம்.

சனத்தொகை, பொருளாதாரத்தின் பலம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நிர்வாகப் பகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டன. மேலும் ஒவ்வொரு பிரதேச சபையும் மேலதிக பிரதேச செயலாளரினால் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1987 இற்கு முன்னர், இந்த உள்ளாட்சி அமைப்புகளின் உருவாக்கம் முற்றிலும் வேறுபட்டது. அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் வட்டார அமைப்பு இருந்தது. மாநகரசபை முதல் முதல் கிராம சபைகள் வரை, அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளும் கட்சி உறுப்பினர்களால் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டாரங்களைக் கொண்டிருந்தன. கட்சியிலிருந்து பெரும்பான்மையான உறுப்பினர்களை வென்ற எந்த உள்ளாட்சி அமைப்பும் அதன் தலைவரைத் தேர்ந்தெடுத்து, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கவுன்சிலின் நிர்வாகத்தைக் கைப்பற்றுகிறது.

இவ்வாறான நிலையில், வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து இருவேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. நாட்டின் அடிப்படை மற்றும் தவிர்க்க முடியாத செலவினங்களை நிர்வகிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், பெருமளவிலான பொதுநிதியைச் செலவழித்து தேர்தலுக்குச் செல்வது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல என்பதே பொதுவான கருத்து.

அதேநேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி, புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டணிகள் என்பன பெரும்பான்மை மக்களின் ஆதரவை அரசாங்கத்தால் திரட்ட முடியாத நிலையில் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக கடுமையாக குற்றஞ்சாட்டு வருகின்றது.

எனினும், எதிர்க்கட்சியினரும், அவர்களுடன் இணைந்த தரப்பினரும் மட்டுமே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இருந்தபோதும், பெரும்பாலான மக்கள் தேர்தல் பிரசாரத்தில் நேரத்தை வீணடிப்பதில் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. எவ்வாறாயினும், சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது எந்தவொரு நாட்டிலும் ஜனநாயக அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாகும்.



**எதிர்க்கட்சியினரும், அவர்களுடன் இணைந்த தரப்பினரும் மட்டுமே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஆனால் தேர்தல் பிரசாரத்தில் அரசியல்வாதிகள் நேரத்தை வீணடிப்பதில் மக்கள் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை**

ஆனால் கடந்த காலங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் அமைதியான பொதுச்சூழலை சீர்குலைத்து, அனைத்துக் கட்சிகளின் அடிமட்ட உறுப்பினர்களிடையேயான மோதல்கள் காரணமாக சமூகத்தில் பேரழிவு ஏற்பட்டதை நமது வரலாறு வெளிப்படுத்துகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அனைத்துக் கட்சிகளின் கிராம அடிப்படையிலான அரசியல் ஆதரவாளர்கள் குறிப்பிடத்தக்க கவனச்சிதறல்களையும் சமூகப் பிளவுகளையும் தங்கள் பகுதிகளில் ஏற்படுத்தியிருந்தனர். குழப்பமான சூழ்நிலைகளுக்கு வழிவகுத்ததால், ஆட்சியில் உள்ள அரசாங்கம் அரசியல் குற்றங்களைத் தவிர்ப்பதற்காக சில இடங்களில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவைக் கூட விதிக்க வேண்டியிருந்தது.

கடந்த காலத்திற்கு முற்றிலும் மாறாக, இந்தப் பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு நாட்டுக்கு சமூக நல்லிணக்கமும் அமைதியும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. இந்நிலையில், உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மற்றும் ரிட் மனுவைத் தள்ளுபடி செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மூன்று தலையீட்டு மனுக்கள் மீதான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்தபோதும், 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைத் திட்டமிட்டபடி நடத்துவதற்கான அனைத்து வேலைகளையும் செய்து விட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு உச்சநீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக அரசாங்கம் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாவை செலவு செய்வதென்பது ஒருபுறமிருக்க, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் செலவிடப் போகின்ற செலவுகள் பற்றியும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.




## பொருளாதார வல்லுநர்கள், சுயாதீன ஆய்வாளர்கள், பக்கச்சார்பற்ற அரசியல் ஆர்வலர்கள் மற்றும் சில பௌத்த மகாசங்க உறுப்பினர்கள் நாட்டில் பொருளாதாரம் சீராகும்வரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சிறிது காலம் ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை!

தேர்தல் நெருங்குகின்ற வேளையில் எமது அரசியல் வாதிகளில் பலர் எவ்வாறு பணத்தை வாரியிறைப்பர் என்பது தெரியாத விடயமல்ல. அச்செலவுகள் வீண் விரயமாகும். தேர்தலுக்காக அரசாங்கம் செலவிடுகின்ற பணத்தைப் போலவே அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் செலவிடும் நிலைமை ஏற்படுகின்றது. அது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

இவ்வாறான பின்னணியிலேயே தேர்தல் பிரசார செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியுள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் இது தொடர்பாக கவனம் கொள்ளாமல் தேர்தலை நடத்துமாறு அரசை வலியுறுத்தி வருகின்றன.

தேர்தலால் அரசுக்கு மாத்திரம் ஏற்படப் போகின்ற செலவினங்களுக்கு மத்தியில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படப் போகின்ற செலவினங்களும் நாட்டின் பொருளாதாரத்தில் நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தத்தான் போகின்றன. தேர்தலைக் கோரும் எதிர்க்கட்சிகள் இவ்விடயத்தை ஏன் கவனத்தில் கொள்ளவில்லையென்பதே தற்பொழுதுள்ள பாரிய கேள்விக்குறியாக உள்ளது.

இதற்கும் அப்பால், உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் அவற்றுக்கான செலவினங்களுக்கு அரசாங்கம் எங்கு செல்வது என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

நாடு எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில் தேர்தலை நடத்தினால் அதன் சுமையை மக்களே சுமக்க வேண்டி ஏற்படும் என இராஜாங்க நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். 'நாடு எங்கிருக்கிறது?' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

எனவே, தேர்தலை நடத்துமாறு கோருபவர்கள் இதனால் மக்களுக்கு பொருளாதார ரீதியில் ஏற்படக் கூடிய பின்விளைவுகளுக்குப் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். அல்லது பொருளாதாரப் பாதிப்புகளுக்கு மாற்றுத் திட்டங்களைத் தம்வசம் கொண்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில் தேர்தல் என்பது வெறுமனே மக்களுக்கு சுமை மாத்திரமே.



**நாட்டில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கே நிதிப்பற்றாக்குறை நிலவுகின்ற இவ்வேளையில், தேர்தலுக்குச் செலவாகின்ற நிதியை மக்களிடமிருந்தா திரட்டுவது?**





**கடந்த காலங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் அமைதியான பொதுச்சூழலை சீர்குலைத்து, அனைத்துக் கட்சிகளின் அடிமட்ட உறுப்பினர்களிடையேயான மோதல்கள் காரணமாக சமூகத்தில் பேரழிவு ஏற்பட்டதை நமது வரலாறு வெளிப்படுத்துகிறது**





# கேகாலை அம்பன்பிட்டிய முதலாம் இலக்க தோட்டத்தின் அவலம்



## 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட லயன் காம்பராக்களில் இன்றும் வாழும் மக்கள்.....

## ஊற்று தண்ணீரையே குடிநீராக பாவிக்கின்றனர். கோடையில் தண்ணீர் பிரச்சினை....

## இந்த தோட்டம் தனியாருக்கு விற்கப்பட்ட நிலையில் தொழிலாளர் நிரந்தர தொழில் இன்றி அவதியுறுகின்றனர்.....





கேகாலை மாவட்டத்தில் அம்பன்பிட்டிய முதலாம் இலக்க பிரிவில் ஊரவல வசத்தில் வாழும் தோட்ட மக்கள் இன்னும் தொழில்வாய்ப்பின்மை, சுத்தமான குடிநீர் வசதி, சீரான போக்குவரத்து, வீடு வசதிகளின்றி மொத்தமாக சொல்லப் போனால் அவல வாழ்க்கை தான். காலனித்துவ ஆட்சியில் இருந்து இன்று வரை 200 வருடங்களாக பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தோட்ட மக்கள் சுட்டிக் காட்டுக்கின்றனர்

1930 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட லயன் காம்பராக்களில் வாழ்ந்த முதல் மூதாதையர்களைத் தொடர்ந்து மூன்று தசாப்பதங்களைக் கொண்ட தலைமுறையினர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த தோட்டம் அன்று தொட்டு இன்று வரையிலும் அப்படியே தான் இருக்கின்றது. 30 குடும்பங்கள் வாழ்கின்றனர். ஓரளவு முன்னேற்றம் இருந்தாலும் கூட இன்னும் பழைய 10 அடிக் காம்பராக்குள்ளேயே வாழுகின்ற சூழலையே காணக் கூடியதாக உள்ளது.சிலர் தனிப்பட்ட ரீதியில் வீடுகளை திருத்தியமைத்து கொண்டு வாழ்கின்றனர்.

குறிப்பாக பிரதான பாதைக்குச் செல்லுள்ளவுள்ள சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் போக்குவரத்துப் பாதை பயணம் செய்வதற்கு உகந்ததாக இல்லை.கண் துடைப்பாகவே சில தோட்டப் பாதைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்பாதையை மீளவும் வெட்டி புதிதாக நிர்மாணிக்க வேண்டி உள்ளது. மழை காலங்களில் இப்பாதையில் பயணம் ஆபத்தான நிலையாகும்.இப்பாதையால் நோயாளிகளை கொண்டு செல்ல முடியாது. இப்பகுதியில் உள்ள வாகனங்களுக்கு மட்டுமே இப்பாதையில் செல்ல முடியும் வெளி வாகனங்கள் வந்தால் இப்பாதையில் பயணிக்க முடியாமல் விபத்துகள் ஏற்படலாம்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் இதை விட மோசமான நிலையில் இந்தப் பாதை இருந்தது. ஊர் மக்கள் சேர்ந்து சிரமதானப் பணியில் முச்சக்கர வண்டிகள் செல்லும் அளவுக்கு செப்பனிடப்பட்டுள்ளது. வெயில் காலத்தில் பீலியில் இருந்து சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குடங்களையும் வாளிகளையும் வைத்துக் கொண்டு வரிசையில் காத்து நிற்க வேண்டிய நிலைமையில் மக்கள். ஊற்றுத் தண்ணீர் மட்டும் தான் உள்ளன. இம்மக்கள் அதில் இருந்துதான் தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றனர்.குளிப்பதற்கு மற்றும் இதர தேவைக்கான நீருக்கு பற்றாக்குறை குடி நீரைப் பெற்றுக் கொள்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தாங்கியில் தண்ணீர் இல்லாமல் காய்ந்த நிலையில் இருக்கின்றன.

### தோட்ட மக்களின் கருத்துகளிலிருந்து,...

நான் அம்பன்பிட்டிய தோட்டத்தில் 1983.121.3 ஆம் திகதி பிறந்தேன். இந்த தோட்டக் குடியிருப்பு நான் பிறந்த அன்றிலிருந்து அப்படியேதான் இருக்கிறது. அரசியல் வாதிகள் வருவார்கள் போவார்கள். அவர்களால் இந்த தோட்டத்திற்கு எதுவும் நல்லது நடக்கவில்லை. இந்த லயத்தில் எட்டுக் குடும்பங்கள் இருந்தன. அதில் இரண்டு குடும்பங்கள் லயன்களின் சுவர்கள் இடிந்து விழும் அச்சத்தில் இடம் பெயர்ந்து சென்று விட்டார்கள். இப்போது ஆறு குடும்பங்கள் தான் இருக்கின்றன. அதி கஷ்டத்தில் நாங்கள் வாழ்கின்றோம்.அன்றாடம் தொழிலும் இல்லை.தோட்டத்திலுள்ள இறப்பர் மரங்களை எல்லாம் பிடிங்கி விட்டார்கள். இந்த தோட்டத்தை வாங்கியவர்கள் தொழில் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை எந்த தொழிலும் தரவில்லை. நாங்கள் ரொம்பக் கஷ்டத்தில் தான் வாழ்கிறோம். அன்றாடம் ஏதோ ஒரு தொழிலைச் செய்து தான் வாழ்கிறோம். நிரந்தரமான தொழில் ஒன்று இல்லை.

### ஆர். குமாரன் 01 ஆம் இலக்கத் தோட்டம்

இப்பிரதேசத்திற்கு மிக முக்கிய தேவையான பாதை வசதி இல்லை. இந்த தோட்டத்திலுள்ள லயன்கள் இன்னும் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. மழை காலங்களில் வீட்டினுள் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இவற்றை சீரமைத்துக் கொடுத்து தோட்டத்தை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கு உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.









### எனது பெயர் மதீனா,...

நான் அம்பன்பிட்டிய முதலாம் பிரிவில் வசிக்கிறேன். 30 வருட காலமாக இந்தத் தோட்டம் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது. இந்த தோட்டத்தில் எந்தவிதமான தொழில் வாய்ப்பும் இல்லை. ஒழுங்கான பாதையில்லை. இங்கு வசிப்பவர்களுக்கு தொழில் செய்யக் கூடிய எந்த வசதியும் இல்லை. லயன்கள் எல்லாம் கூரைகள் மாற்றப்படாமல் கறல் பிடித்து மழை பெய்தால் யாரும் படுத்துறங்க கூட முடியாது. இங்கு வசிக்கின்ற அனைவருக்கும் ஒரு நிரந்தத் தொழில் இல்லை. எல்லோரும் வெளிப்பகுதிகளில் வேலை செய்து காலையில் சென்று மாலையில் வீடு திரும்புகின்ற வேலைகளைத் தான் செய்கிறார்கள்.கர்ப்பிணி தாய் ஒருவரைக் கொண்டு செல்வது கூட மிகக் கடினமாக இருக்கிறது. பிள்ளைகள் பாடசாலை செல்வதும் நடந்து தான்.சாதாரணமாக ஒரு கிலோ மீட்டர் தூரம் நாங்கள் நடந்து சென்றுதான் பிரதான பாதையை அடைய வேண்டும். இரவிலே திடீரென ஒருவருக்கு நோய் வாய்ப்பட்டால் தூக்கிச் செல்லக் கூடிய நிலையிலே தான் இந்தப் பாதை காணப்படுகிறது. இந்த தோட்டத்தை நிர்வகிக்கக் கூடிய ஒரு நிர்வாகம் இல்லை. தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நான் வேண்டிக் கொள்கின்றேன்.

### ரேணுகுமாரி அம்பன்பிட்டிய தோட்டம்......

மனிதன் சீராக வாழ்வதற்கான எந்த வசதிகளும் இல்லை. இங்குள்ள குறைபாடுகளை எவ்வாறு வார்த்தைகளால் சொல்வது என்று நானே குழம்பி போயிருகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அவலங்களை நேரில் பார்வையிட்டு தீர்வு தருமாறு கோருகிறேன்.

**இக்பால் அலி...**

## மலையக மக்களின் இரு நூற்றாண்டுகள் பூர்த்தி:

# ஆடம்பர விழாக்களை தவிர்த்து அபிலாஷை, உரிமைகளுக்காக பாடுபடுவோம்

வெறுமனே மலையக மக்கள் இலங்கைக்கு வந்ததை ஞாபகப் படுத்தும் வகையில் 200 வருடங்களைக் கொண்டாடுவது ஒரு முக்கியமல்ல.அதன் ஊடாக மக்களிடம் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை முன் வைக்கலாம் மற்றும் அவர்களின் அபிலாஷைகள், உரிமைகளைப் பாதுகாப்பது போன்றனவே முன்னெடுக்க வேண்டியுள்ளது.எனவே இத்தகைய 200 வருடக் கொண்டாட்டங்கள் எல்லாம் உயிரோட்டமுள்ளதாக அமைய வேண்டும் என்று மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,.....

இன்று மலையக மக்கள் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்து 200 வருடங்கள் பூர்த்தியை முக்கியத்துவப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து அது அமைச்சரவையில் அங்கீரிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு மலையக மக்கள் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவிக்கின்ற அதேநேரம் மலையக சமூகம் கடந்த இருநூறு வருடங்களாக இலங்கையிலே மிகவும் பின் தள்ளப்பட்ட வறுமைக்கு உட்படுத்தப்பட்ட ஓர் இனமாக இருந்து வருவதை அனைவரும் அறிவார்கள். வறுமை, வீட்டுப் பிரச்சினை, நிலப் பிரச்சினைகளோடு மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளான கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகளைத் தாங்கி நிற்கின்ற சமூகமாக இலங்கை பொருளாதாரத்திற்கு ஆணிவேராக தேயிலை இறப்பர் போன்ற துறைகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. வெறுமனே மலையக மக்களை ஞாபகப்படுத்தும் முகமாக 200 வருடங்களைக் கொண்டாடுவது ஒரு முக்கியமல்ல. அதன் ஊடாக மக்களுக்கு எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை முன் வைப்பதும் அவர்களுடைய மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பதுவே மிக முக்கியமானதாக இருக்கின்றது. அந்த வகையில் ஜனாதிபதிக்கு இது சம்பந்தமாக எழுத்து மூலமாக அறிவித்திருக்கின்றோம்.



மேலும் இது தொடர்பாக எம்மோடு ஜனாதிபதிக் காரியாலயத்தில் இருந்து தொடர்பு கொண்டார்கள். வெகு விரைவில் இவ்வாறான சுயாதீன குழுவை அமைப்பதற்கு நாங்கள் செயல்பட்டு வருகின்றோம் என்று தெரிவித்துள்ளார்கள்.அதேவேளையில் இந்த மக்களுடைய உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கு தனித்துவமான ஓர் அமைச்சு அமைக்கப்பட வேண்டும். இதன் மூலமே செயற்படுதல் வேண்டும். ஏற்கெனவே அமைக்கப்பட்ட துறைசார்ந்த ஓர் அதிகார சபை இருக்கின்றது. அந்த அதிகார சபையைவலுவூட்டி நிதி ஒதுக்கீடு செய்து அதனூடாக அபிவிருத்திக்களை மேற்கொள்ள வேண்டும். மலையக மக்களுக்கான அபிவிருத்தி அதிகார சபையே நிலைத்து நிற்கக் கூடியது. தொடர்ந்து அந்த அதிகார சபையின் ஊடாக செயற்படுவது சாலச் சிறந்தது. ஒரு நிலையான அபிவிருத்திக்கு இட்டும் செல்லும் என்றும் நாங்கள் கருகின்றோம்.

மலையக அபிவிருத்தி என்று நாங்கள் குறிப்பிடுவது வெறுமனே நுவரெலியா மாவட்டத்தை மாத்திரம் மையப்படுத்தி செயற்படாமல் மலையகப் பிரதேசங்கள் பல்வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றன. கண்டி, காலி, மாத்தறை. களுத்துறை, மாத்தளை, இரத்தினபுரி, குருநாகல், பதுளை, பண்டாரவளை போன்ற பல்வேறு பிரதேசங்களிலும் மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுடைய உரிமைகள் விசேடமாக அவர்களுடைய கலாசார விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த நாட்டிலேயே ஏனைய மக்களோடு சேர்ந்து ஒரு சமத்துவமான இனமாக வாழ முடியும் என்பது என்னுடைய அபிப்பிரயமாகும்.

## வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

# துல்லியமான மற்றும் நம்பகமான அளவீடுகள் மூலம் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்.

ஒரு உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் ஏதேனும் எடை மற்றும் அளவிடும் சாதனத்தை விற்பனை செய்வதற்கு முன் ஆரம்ப சரிபார்ப்பை மேற்கொண்டிருக்க வேண்டும். அந்த சாதனத்திற்கான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திலிருந்து மாதிரி ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் சந்தையில் இதற்காக இளஞ்சிவப்பு நிற அங்கீகார சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆரம்ப சரிபார்ப்புக்குப் பிறகு எடை மற்றும் அளவிடும் கருவிகளின் வருடாந்திர மறு சரிபார்ப்பு கட்டாயமாகும். முதல் தடவை முத்திரை பொறிக்கப்பட்ட நாளிலிருந்து 12 மாத காலத்திற்குள் இந்த நம்பகத்தன்மைச் சான்றிதழ்களை அவற்றின் செல்லுபடியாகும் காலத்தில் தொடர்புடைய உபகரணங்களுடன் வைத்திருப்பது கட்டாயமாகும்.

### விசேட அறிவித்தல் !

அனைத்து தராசு, அளவை, எடை மற்றும் நிறுவை கருவிகளை பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகளுக்கான தாழ்மையான அறிவிப்பு.

நீங்கள் பயன்படுத்தும் அனைத்து தராசுகள், மீட்டர் தடிகள், எடை மற்றும் நிறுவை கருவிகள் ஆண்டுதோறும் உரிய திகதியில் முத்திரையிடப்பட வேண்டும், இல்லையெனில் வணிக நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்துவது சட்ட எண் 1995 இலக்கம் 35 இன் கீழ் சட்டவிரோதமானது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விசாரணைகள் மற்றும் முறைபாடுகள் - 0112182250 / 51 நீட்டிப்பு- 2203 துரித இல- 0112182253

**மாதிரி ஒப்புதல்** — உற்பத்தி அல்லது இறக்குமதி அல்லது விற்பனை அல்லது ஏதேனும் எடை மற்றும் அளவீடு அல்லது நிறுவை உபகரணமொன்று உற்பத்தியாளரால் சந்தைக்கு அனுப்பப்படுகிறது அல்லது இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனைக்கு முன் இலங்கையில் நடைமுறையில் உள்ள அளவீடுகள் தொடர்பான விதிமுறைகளுக்கு இணங்குகிறதா என எமது திணைக்களம் சரிபார்த்து ஒப்புதல் பெற்றுக் கொள்வது மாதிரி ஒப்புதல் என அழைக்கப்படுகிறது.

**வருடாந்திர முத்திரையிடல்** — அவ்வப்போது முத்திரையிடும் நிலையங்களில் சரிபார்க்கப்படும் எந்த எடையுள்ள அளவை கருவிக்கும் மஞ்சள் நிறத்திலான சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட கால வெளிக்கள முத்திரைச் செய்யப்படும்போது எந்த ஒரு எடைக் கருவிக்கும் நீல நிறத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

**தராசு விற்பனை** — விற்பனைக்காக பதிவுச் சான்றிதழை வைத்திருக்கும் ஒரு நபர் அல்லது நிறுவனம், வர்த்தகத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு அளவு, எடை அல்லது அளவிடும் கருவி விற்கப்படும்போது, அவை முதன்மை முத்திரையுடன் இளஞ்சிவப்பு நிறத்திலான நம்பகத்தன்மை சான்றிதழுடன் வாங்குபவருக்கு வழங்கப்பட வேண்டும்.



## 1). நம்பகத்தன்மைக்கான சான்றிதழ்களை வழங்குவதில் திணைக்கள பரிசோதனையாளரால் பரிசோதனை செய்வதற்கான நடைமுறைகள்

- **சம்பந்தப்பட்ட சாதனத்திற்கு மாதிரி அனுமதி இருப்பதை உறுதி செய்தல்** - மாதிரி ஒப்புதல் இல்லாமல் எடை மற்றும் அளவிடும் கருவிகளை விற்கவோ அல்லது வர்த்தகத்திற்கு பயன்படுத்தவோ முடியாது.
- **பரிசோதனை மற்றும் சரிபார்ப்புக்கான கட்டணங்கள்** -இல 1921/54 மற்றும் 2015.07.02 ஆம் திகதி விசேட வர்த்தமானியின் படி
- **அந்த உபகரணத்தின் ஆரம்ப சரிபார்ப்பு அல்லது முந்தைய ஆண்டு சரிபார்ப்பை உறுதிப்படுத்தல்.**
- **நேரடியான பரிசோதனை - Visual Inspection மற்றும் அளவீட்டு விதிமுறைகளின்படி, அளவீட்டு விவரக்குறிப்புகளுக்கு உட்பட்ட எடை மற்றும் அளவிடும் கருவிகளின் அனைத்து கூறுகளின் செயல்திறனும் சரிபார்ப்பு செய்யப்படுகிறது.**
- **கருவியின் துல்லியத்தை உறுதிப்படுத்த மூன்றாம் நிலை தரநிலைகளுடன் ஒப்பீடு மற்றும் சரிபார்த்தல். அதன்படி,**
  1. மூன்றாம் நிலை நியமங்களின் மதிப்பு, குறிப்பிட்ட பிழை வரம்புகளுக்குள் கருவியால் துல்லியமாக சுட்டிக்காட்டப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல்.
  2. தேவைப்படின் தராசுகள் Eccentricity (corner test) பரிசோதனை செய்தல்
- **மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி, அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் சட்டப் பிரிவு 23 (1) இன் படி சரிபார்ப்பு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன அல்லது சட்டப் பிரிவு 23 (2) இன் படி சரிபார்ப்பு சான்றிதழ்கள் வழங்கப்படாது.**

## 2). பழுதுபார்ப்பவர்களின் பங்களிப்பு

பழுதுபார்ப்பவர் திணைக்களம் சார்ந்த ஒழுங்குமுறையின் கீழ் ஒரு தனியார் தொழில்முனைவோராவார். அவர் பின்வரும் செயல்பாடுகளை செய்கிறார்.

- பழுதடைந்த எடை கருவிகளை சரி செய்தல்.
- அவரால் சரி செய்யப்பட்ட தராசு, அளவு, எடை அல்லது அளவிடும் கருவி தகுந்தபடி பழுதுபார்த்த பின்னர் பரிசோதனையாளரால் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
- பழுதுபார்ப்பவரின் கட்டணம் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்படாது.

**ஒவ்வொரு எடை மற்றும் அளவிடும் கருவிகளின் சரிபார்ப்புக்கான கட்டணங்கள் பின்வருமாறு.**

| கருவிகள் | விலை ரூ.சதம் | வடிவம் |
|---|---|---|
| **1.) நீளம் மி.மீ** ஒவ்வொரு மீட்டர் தடிக்கு அல்லது பகுதிக்கான | 40.00 |  |
| **2.) கணளவு மி.லி** | | |
| **A. துணைப்பிரிவுகள் அல்லாத மி.லி** | | |
| ■ 100 லிட்டருக்கு கூடுதலான ஒவ்வொரு லிட்டர் அல்லது அதன் ஒரு பகுதிக்கான | 20.00 |  |
| ■ 100 லிட்டருக்கு கூடுதலான | | |
| (1) முதல் 100 லிட்டருக்கு கூடுதலான | 2000.00 | |
| (2) கூடுதலான 100 லிட்டர் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 150.00 | |
| **B. எரிபொருள் விநியோக உபகரணங்கள்** | |  |
| எரிபொருள் விநியோக இயந்திரங்கள் | | |
| (1) திரவ / வாயு எரிபொருள் (2) பௌசர் | 2500.00 | |
| ■ 3300 லிட்டர் வரை | 1000.00 | |
| ■ கூடுதலான 3300 லிட்டர் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 1000.00 | |
| **3.) சாதாரண வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்படும் எடை** | |  |
| ■ 2 கி.கிராம் அல்லது அதற்கும் குறைவான ஒவ்வொரு எடைக்கும் | 20.00 | |
| ■ 2 கி.கிராம் அதிகமான அனைத்து எடைக்கும் | 40.00 | |

குறிப்பு - விலைக் கணக்கீடு, அச்சிடுதல் போன்ற கூடுதல் உபகரணங்களைக் கொண்ட எடையிடும் இயந்திரங்களை முத்திரையிடும் போது மேலதிகச் கருவிக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்துடன் கூடுதலாக 10% மேலதிகக் கட்டணம் அறவிடப்படும்.

| கருவிகள் | விலை ரூ.சதம் | வடிவம் |
|---|---|---|
| **4.) எடை நிருவை உபகரணங்கள்** அளவீடு செய்யப்படாத எடை இயந்திரங்கள் | | |
| **1. தட்டு வடிவிலான தராசு** | |  |
| ■ 5 கிலோ கிராம் அல்லது அதன் ஒரு பகுதிக்கான | 40.00 | |
| ■ கூடுதலான 5 கிலோ கிராம் அல்லது அதன் ஒரு பகுதிக்கான | 40.00 | |
| **2. கவுன்டர் தராசு** | | |
| ■ 5 கிலோ கிராம் அல்லது அதன் ஒரு பகுதிக்கான | 80.00 | |
| ■ கூடுதலான 5 கிலோ கிராம் அல்லது அதன் ஒரு பகுதிக்கான | 80.00 |  |
| **அளவீட்டு உபகரணம் தராசு** | | |
| **3 ஆம் வகுப்பு இயந்திர தராசு** | | |
| ■ 100 கிலோ கிராம் கூடுதலான இருப்பினும் 500 கிலோ கிராமிற்கு அதிகமற்ற | 800.00 | |
| **3 ஆம் வகுப்பு மின் தராசு** | | |
| ■ 20 கிலோ கிராம் குறையாத | 1000.00 | |
| ■ 20 கிலோ கிராம் கூடுதலான இருப்பினும் 100 கிலோ கிராமிற்கு அதிகமற்ற | 1200.00 | |
| ■ 100 கிலோ கிராம் கூடுதலான இருப்பினும் 500 கிலோ கிராமிற்கு அதிகமற்ற | 1500.00 |  |
| ■ 500 கிலோ கிராம் கூடுதலான இருப்பினும் 1000 கிலோ கிராமிற்கு அதிகமற்ற | 1800.00 | |
| ■ 1000 கிலோ கிராம் கூடுதலான ஒவ்வொரு கிலோ கிராம் 1000 அல்லது அதன் ஒரு பகுதிக்காக | 900.00 | |
| **5.) 2 ஆம் வகுப்பு அளவை உபகரணம் மின் தராசு** | |  |
| ■ அளவீடு செய்யப்படாத ஒவ்வொரு கருவிக்கும் | 1000.00 | |
| ■ அளவீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கருவிக்கும் | 2500.00 | |
| **6.) 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு தரநிலைகள் மற்றும் சேவைகள் சட்டப் பிரிவு 30 இன் கீழ் சரிபார்ப்புகளுக்கான கட்டணம்** | |  |
| ■ வாகனங்களில் வெளியேறும் புகைப் பரிசோதனை செய்யும் கருவி | 5000.00 | |

**அளவீட்டுக்கான ஒரு தரநிலை – தரத்திற்கு ஒப்புதல் எம்மிடமிருந்து...**

**நாம், அளக்கும் அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

மஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம.
தொலைபேசி: 011-2182250/51 தொலைநகல் / மின்னஞ்சல்: 0112182254, dir@measurementsdept.gov.lk

# விமர்சன பார்வையில் பிக்பொஸ் 06

## எதைச் சுட்டிக்காட்டுகிறது விக்ரமனின் தோல்வி?







விஜய் டிவியில் கடந்த 15 வாரங்களாக அக்டோபர் 9ம் திகதி முதல் ஒளிபரப்பாகி வந்த பிக்பொஸ் சீசன் 06 ஜனவரி 22ம் திகதியுடன் முடிவுக்கு வந்திருக்கிறது. பிக்பொஸ் இந்தியாவில் இந்தி, தமிழ், தெலுங்கு, மராட்டி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வருகிறது. ஆனால் வங்களாத்தில் மட்டும் மக்கள் ஆதரவு போதுமானதாக இல்லாததால் இரண்டு நிகழ்ச்சிகளுடன் நிறுத்தப்பட்டு விட்டது.

பிக்பொஸ் முதலில் பிக்பிரதர் பெரியண்ணன் என்ற பெயரிலேயே ஒளிபரப்பானது. அதன் வெற்றிக்கான அடிப்படை எமது சமூக உளவியல்தான். நாம் அனைவருமே அடுத்தவன் என்ன செய்கிறான் என்பதை எட்டிப் பார்ப்பதையும் அவனைப் பற்றி மற்றொருவரிடம் கிசுகிசுப்பதையும் விரும்புகிறவர்கள். அடுத்தவன் வீட்டை எட்டிப் பார்க்கும் வசதியை பிக்பொஸ் செய்து கொடுக்கிறது. எமது இயல்பான ஆசைக்கு தீனிபோட்டு விடுவதால் எல்லா பிக்பொஸ் நிகழ்ச்சிகளிலும் வருமானம் கொட்டோ கொட்டென கொட்டுகிறது!

ஒரு பிக்பொஸ் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்வது மிகுந்த செலவு பிடித்த விஷயம். கோடி கோடியாக செலவு செய்துதான் கோடி கோடியாக சம்பாதிக்கிறார்கள்.

தமிழுக்கு 2017இல் பிக்பொஸ் அறிமுகமானது. முதல் தடவையாக பிக்பொஸ் நிகழ்ச்சியைப் பார்த்தவர்களுக்கு அது என்னவென்பது புரியவில்லை. இரண்டு வாரங்களின் பின்னரேயே நேயர்களுக்கு பிடிப்பு ஏற்பட்டு பின்னர் கிசுகிசுப்பில் ஊறிப் போனார்கள்!

காயத்ரி ரகுராம், சினேகன், ஓவியா, வையாபுரி, கஞ்சா கருப்பு, பரணி, சுஜா வருணி, ஜுலி, ஆரவ், ஹரிஷ் கல்யாண், கணேஷ், ரைஸா, ஆகியோர் முதல் நிகழ்ச்சியில் பங்குபற்றினார்கள். மன அழுத்தம் காரணமாக பரணி வீட்டை விட்டு வெளியேறினார். வீட்டில் இருந்த காயத்ரியும் ஜுலியும் ஓவியாவை வெறுக்கவே, வெளியே அவருக்கு ஆதரவு அதிகமாகியது. அவர் பாதியில் வெளியேறாமல் நீடித்திருந்தால் அவர்தான் வெற்றி பெற்றிருப்பார்!

அடிப்படையில் நாம் அனைவருமே நடிகர்கள். உள் ஒன்றை வைத்து புறம்வேறொன்றைப் பேசுகிறவர்கள். சமயத்துக்கு ஏற்றபடி நடந்து, சமாளிக்கத் தெரிந்தவர்கள். இன்னொருவரின் வீழ்ச்சியை படிக்கல்லாக்கிக் கொள்ளும் இயல்பு படைத்தவர்கள். இன்னொருவரை இகழ்ந்தும், பரிகசித்தும் இன்பம் காண்பவர்கள். அடிப்படையில் குரூர மனதும் வெளியே புன்சிரிப்புமாக அலைபவர்கள். அதே சமயம் குழுவாக இயங்கும், உதவும், அன்பும் நேசமும் காட்டும், கருத்தொற்றுமை அல்லது சந்தர்ப்ப அடிப்படையில் குழுக்கலாக செயற்படும் இயல்பும் கொண்டவர்கள்.

சிறந்த, பண்பான, உயர்வான ஒருவரைத் தனி அறையில் விட்டுவிட்டு இரகசியமாக அவரை அவதானித்தால் முகசேஷ்டைகளிலும், குரங்கு சேஷ்டைகளிலும், பல்வேறு முகபாவங்களிலும் ஈடுபடும் ஒருவராக அவரைப் பார்க்கலாம். பாத்ரூமில் நான் சுதந்திரமாக இருக்கிறேன், என்று சிலர் சொல்வார்கள். அதற்குக் காரணம், எந்த சேஷ்டை செய்தாலும், என்ன குரலில் பாடினாலும் கவனிக்க ஆள் இல்லை என்ற தைரியம் தான். இதில் குற்றம் எதுவும் இல்லை. மனித இயல்பு. முழுச் சுதந்திரத்தைத் தேடும் மனித இயல்பு.

பார்க்கக் கிடைக்காத, சுலபமாக வெளியே வராத குணங்களை, இயல்பான பழக்க வழக்கங்களை வெளியே கொண்டு வருவதன் மூலம் பெருவாரியான மக்களின் இச்சையைத் தீர்ப்பதன் மூலம் அவர்கள் விரும்பும் பொழுது போக்கை வழங்கி எக்கச்சக்கமான இலாபத்தை பார்ப்பதே பிக்பொஸ் நிகழ்ச்சி.

தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களை எடை போடுவோமானாலும், குடும்ப அமைப்பில் அதிக பற்றுக்கொண்ட தமிழர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் நாடகங்களே அவற்றில் அதிகம் என்பது புரியும். தமிழ்ச் சமூகம் இன்னமும் சாதி, சமய, கலாசார அமைப்புகளில் அதிக நம்பிக்கை கொண்டதாகவும் அவற்றின் பிடியில் இருந்து வெளிவர விரும்பாததாகவுமே இருந்து வருவதால் அவர்களுக்கான பொழுதுபோக்குகளும் பெரும்பாலும் அந்த வட்டத்துக்குள்ளேயே உருவாக்கப்படுகின்றன.

இந்தி பிக்பொஸ் சீசன் 15இல் நெறியாளராக விளங்குபவர் நடிகர் சல்மான் கான். சில சமயம் அவர் கடுமையாகவும் நடந்து கொள்வார். தமிழ் பிக்பொஸ்சை விட அது காரசாரமாக இருக்கும். விஷயம் அதுவல்ல; இம்முறை இந்தி பிக்பொஸ்சில் அவர் 350 கோடியை சம்பளமாகப் பெற்றதாக ஒரு தகவல் உண்டு. இருநூறு கோடி என வைத்துக் கொண்டாலும் அது எவ்வளவு பெரிய தொகை! திரைப்படமொன்றில் நடித்தாலும் அவருக்கு அவ்வளவு பெரிய தொகை கிடைக்காது!

சல்மான்கானுக்கு இவ்வளவு பெரிய தொகை என்றால் இந்தி பிக்பொஸ்சின் மொத்த பட்ஜட் எவ்வளவாக இருக்கும்; மொத்த இலாபம் எத்தனை கோடிகளாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது அல்லவா!

கமலின் நெறிப்படுத்தலில் நடந்து முடிந்த பிக்பொஸ் சீசன் 6 பற்றி இணைய தளங்களில் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. நடந்து முடிந்து ஆறு சீசன்களில் சுவாரசியம் குறைந்த சீசனாக பலர் கருதவும் செய்கிறார்கள். முதல் மூன்றில் இருந்த சுவாரசியமும் விறுவிறுப்பும் இதில் காணோம் என்பது உண்மைதான். ஒரு கட்டத்தில் பழுதாகி நின்றுபோன வாகனத்தை மீள இயக்கத்துக்கு கொண்டுவர சாரதி என்னபாடுபடுவாரோ அந்தப்பாட்டை கமல்ஹாசன் பட வேண்டியிருந்தது. பிக்பொஸ்சும் பல வேலைகளைச் செய்து வீட்டாரை இயக்கத்துக்கு கொண்டுவர வேண்டியிருந்தது.

இவர்கள் அனைவருமே ஐந்து சீசன்களை வெளியில் இருந்து பார்த்துவிட்டு, வீட்டில் நீடித்து நிற்பதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என முன் தயார் நிலையில் வீட்டுக்குள் வந்தவர்கள். சுவாரசியம் குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்பதோடு மேலும் சிறப்பான தேடுதலை மேற்கொண்டு அதிக தகுதி கொண்டவர்களை தேர்ந்தெடுத்திருக்கலாம் என்ற எண்ணத்தை எம்மில் ஏற்படுத்தியது. இலங்கையில் இருந்து ஒருவர் வேண்டும் என்பதற்காக ஜனனியைத் தேர்ந்தெடுத்தார்களோ என்று கருதும் அளவுக்கு ஜனனியின் பங்களிப்பு அமைந்திருந்தது. இலங்கையில் அதிக விலை கொண்ட அப்பிள், மாதுளை போன்றவற்றை ஒளித்து வைத்திருந்தது; பிரச்சினைகளின் போது சத்தம் போட வேண்டாமென வீறிட்டு அழுவது போன்ற செய்கைகள் இயல்பானவையாக இருந்தன. லொஸ்லியா அளவுக்கு இவர் சோபிக்கவில்லை என்பதே பலரின் அபிப்பிராயம்.

பாராட்டத்தக்க அம்சங்களாக சில அமைந்திருந்தன. கடந்த சீசனில் முழுமையாகக் கைகூடி வராமல் போன திருநங்கை ஒருவரின் பங்களிப்பை இம்முறை சாத்தியப்படுத்தியிருப்பதற்கு கமல்ஹாசனைப் பாராட்ட வேண்டும். ஷிவின் கணேசனும் திருநங்கை என்ற ரீதியாக மக்கள் அனுதாபத்தை பெற முயலாமல், சக போட்டியாளராகவே தன்னைக் கருதி அனைவருடனும் நேருக்கு நேர் நின்று களமாடினார். இந்நிகழ்ச்சியை இடையில் இருந்து பார்த்தவர்களுக்கு ஷிவின் ஒரு திருநங்கை என்பது தெரியாமல் போயிருக்கும். தன்னை அவர் ஒரு பெண்ணாகவே வெளிப்படுத்தினார் என்றால் ஏனைய போட்டியாளர்களும் அவரை திருநங்கை என்ற பார்வையை முன்வைக்காமல் தமது சகா என்றே கருதியதும், பெண் போட்டியாளர்கள் எந்த அசூசையையும் காட்டாததும், நெருங்கி அரவணைத்ததும், ரக்சிதா தன் நெருங்கிய தோழியாக அவரை வரித்துக் கொண்டதும், தமிழர்களின் படித்த வர்க்கம் எவ்வளவு தூரம் மாறி இருக்கிறது என்பதை எமக்குக் காட்டியது. இச் சந்தர்ப்பத்தில், திருநங்கையருக்கு சமூக வெளியில் சம வாய்ப்புகளை பெற்றுத்தரும் வகையில் பல வசதிகளைசெய்த மு. கருணாநிதியையும் நினைக்காமல் இருக்க முடியவில்லை. திருநங்கையர் தொடர்பில் ஒரு பெரிய விழிப்புணர்வை உலக அளவில் தமிழர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு பிக்பொஸ் நிச்சயம் உதவி இருக்கிறது.

மேலும் ஷிவினுக்கு தமிழகத்தில் ஒரு அலை ஏற்பட்டிருப்பதையும் அவர் மூன்றாம் இடத்துக்கு வந்ததும் பெரியதொரு சிந்தனை மாற்றம் தான்! வீட்டைவிட்டு வெளியே வந்து ஷிவினுக்கு வெளியே பெரிய வரவேற்பு காணப்படுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. அதே சமயம் இம் மக்கள் ஷிவின் மீதான தமது பிடிப்பை வாக்குகளாக மாற்றியிருந்தால் அது தமிழன் நிகழ்த்திய சிந்தனைப் புரட்சியாக மாறியிருந்திருக்குமே என்ற ஆதங்கம் நேர் சிந்தனை கொண்ட பலரிடம் இருந்தது. அடுத்த முறை இத்தவறை தமிழர்கள் திருத்திக் கொள்வார்கள் என நம்புவோம்!

தொடர் 17ஆம் பக்கம்...

அருள் சத்தியநாதன்...

இலங்கையில் முதல் தடவையாக

# இரட்டையர் அழகுராணி, ஆணழகன் போட்டிகள்







உலகம் பல விசித்திரங்களால் நிறைந்துள்ளது. அதில் ஒன்று தான் இரட்டையர்கள். அதில் சுவாரசியத்துக்கு குறைவிருக்காது. அந்தவகையில் இலங்கையிலும் உலகிலும் முதல் முறையாக இடம்பெறவுள்ள உலக இரட்டையர் அழகுராணி மற்றும் இரட்டையர் ஆணழகன் போட்டிகள் பலருடைய கவனத்தையும் தற்போது ஈர்த்துள்ள அதேநேரம் இக்கட்டான பொருளாதார நெருக்கடிக்கு ஒரளவேனும் கைகொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

டொலர் பற்றாக்குறையால் நாடு திண்டாடும் நிலையில் இலங்கை இரட்டையர்கள் அமைப்பினால் உலக இரட்டையர் அமைப்புக்கு இதுதொடர்பில் அறிவுறுத்தியதன் பலனாக இந்நிகழ்ச்சியை இலங்கையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இந்நிகழ்ச்சியின் மூலம் இலங்கையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இதை பயன்படுத்தி கொள்ள முடியும் என இலங்கை இரட்டையர் அமைப்பின் நிறுவுனர் உபிலி கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நிகழ்ச்சியை வருடாவருடம் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் உபிலி கமகே மேலும் தெரிவித்தார்.

உலக இரட்டையர் கலாசார விழா, இரட்டையர் அழகுராணி ஜோடி, உலக இரட்டையர் ஆணழகன் ஜோடி, உலக இரட்டையர் சம்மேளனம், உலக இரட்டையர் வர்த்தக மாநாடு போன்ற பல நிகழ்வுகள் உள்நாட்டு வெளிநாட்டு இரட்டையர்களின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் 30 நாடுகள் இதுவரை கலந்து கொள்வதாக உறுதியளித்துள்ளதாக இலங்கை இரட்டையர் அமைப்பின் நிறுவுனர் உபிலி கமகே தெரிவித்துள்ளார்.

மேலும், அநேக நாடுகள் பங்குபற்றும் வாய்ப்புகள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். எனவே வெளிநாடுகளிலிருந்து இரட்டையர்கள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் என 4000 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றனர். இதனால் எமது நாட்டுக்கு டொலர் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு, வெளிநாட்டு தூதரகங்கள் என்பன இந்நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. உலக இரட்டையர் அழகுராணி மற்றும் இரட்டையர் ஆணழகன் போட்டிக்காக இலங்கையிலிருந்து இரட்டையர் அழகுராணி மற்றும் இரட்டையர் ஆணழகன் 03 ஜோடிகளை தேர்ந்தெடுக்கும். இறுதிப் போட்டிகள் இலங்கையில் முதல் முதலாக பெப்ரவரி 28 ஆம் திகதி மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது. அதற்காக முதற் கட்டப் போட்டிகள் பெப்ரவரி 12ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் இரட்டையர்கள் தங்களது விண்ணப்பங்களை பின்வரும் வாட்சப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும் 070 4644640.

அ. வசந்தா...














கொழும்பு - 6, வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவிகளது கதம்ப விழா கலை நிகழ்ச்சிகள் இம்மாதம் 21ஆம் திகதியன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பரத சூடாமணி திருமதி வாசுகி முகுந்தன் கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வில் மாணவர்களின் திறன்கள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் பல்துறை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. ஆசிரியைகள், பெற்றோர்கள் மற்றும் மாணவிகள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர். படங்கள்: அஷ்ரப் ஏ சமத்




சர்வோதயத்தின் யாழ். மாவட்டக்கிளை சர்வமத பிரார்த்தனையொன்றை யாழ்.கொட்டடியில் ஏற்பாடு செய்திருந்தது. தலைவர் தேசமானிய நாகலிங்கம் தனேந்திரன் தலைமையில் யாழ். கொட்டடியிலுள்ள இந்து ஆலயத்தில் பொங்கல் விழவை நடத்தியதுடன் இந்து,கிறீஸ்தவ, முஸ்லிம், பௌத்த மதங்களை சேர்ந்தவர்களுடன் சர்வமத பிரார்த்தனையையும் நடத்தினர். இதன் போது கொழும்பு – யாழ்ப்பாணம் சர்வோதயத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். படம்: வேலணை குறூப் நிருபர்

# எல்லையின்றித் தொடரும் உக்ரைன்-ரஷ்யப் போர்?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உலக அரசியலில் நாடுகளுக்கிடையிலான மாற்றங்களும் போட்டிகளும் இயல்பானதாகவே வடிவமைக்கப்பட்டு வருகிறது. மேற்கு, கிழக்கு என்ற இருப்பின் அரசியல் பரிமாணம் தவிர்க்க முடியாது நகர்ந்து வருகிறது. அதற்கான இராணுவ நிகழ்ச்சியாக ரஷ்ய–உக்ரைன் போர் காணப்படுகிறது. ரஷ்யாவின் மீதான உலக நாடுகளின் தடைகளும் உக்ரைனுக்கான இராணுவ உதவிகளும் பிராந்திய மட்டத்திலான போரை சர்வதேச மட்டத்திலானதாக மாற்றும் நிலையை நோக்கி உலக அரசியல் வேகமாக நகர்ந்து செல்கிறது. ஆனாலும் ஐரோப்பாவுக்குள் எழுந்துள்ள பொருளாதாரப் போட்டியும் அரசியல் இழுபறியும் உலகத்தை மீளவும் பங்கு போடுவதில் ஈடுபடுத்துவதாக தெரிகிறது. ரஷ்யாவுக்கான ஆதரவை ஏற்படுத்தும் அரசுகளுக்கும் உக்ரைன் ஆதரவு சக்திகளுக்கும் ஓர் இழுபறி தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் அத்தகைய அரசியல் போக்கினைத் தேடுவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.**

முதலாவது, ரஷ்ய உக்ரைன் போரினால் துருக்கிக்கும் சுவீடனுக்கும் இடையில் எழுந்துள்ள முறுகலானது அதிக இஸ்லாமிய சுவீடன் மோதலாக மாறிவருவதைக் காணக் கூடியதாக தெரிகிறது. குறிப்பாக சுவீடனில் நடைபெற்ற போராட்டத்தில் இஸ்லாமியரது புனித நூலான குர் ஆன் எரியூட்டப்பட்டமை துருக்கியை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. சுவீடனில் நிகழும் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவருமாறு துருக்கி சுவீடனை கோரியிருப்பதுடன் அவமானகரமான செயல் என குர் ஆன் எரியூட்டப்பட்டதை கண்டித்துமுள்ளது. அது மட்டுமன்றி சுவீடன் பாதுகாப்பு அமைச்சரான பால்ஜான்சன் துருக்கிக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை துருக்கி ரத்து செய்துள்ளது. அதேநேரம் சுவீடனின் பாதுகாப்பு அமைச்சர் துருக்கியுடனான சுவீடனின் உறவு மிகவும் முக்கியமானது எனவும் பாதுகாப்புத் தொடர்பான பொதுவான பிரச்சினைகளை பற்றி மீண்டும் போசுவதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் நம்புவதாக தனது டுவிட்டில் பதிவு செய்துள்ளார். இத்தகைய நிலை சுவீடனது நேட்டோவுடனான அங்கத்துவத்தை துருக்கி நிராகரித்ததன் விளைவாக ஏற்பட்டதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. சுவீடனும் பின்லாந்தும் கடந்த ஆண்டு நேட்டோவில் இணைவதற்கான விண்ணப்பத்தை துருக்கி நிராகரித்திருந்தது. அதற்கு துருக்கி கூறிய வலுவான காரணமாக குர்திஸ்தான் ஆயதப் போராட்ட அமைப்பான குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி மற்றும் பல ஆயுதமேந்திய குழுக்களை சுவீடனும் பின்லாந்தும் ஆதரிப்பதாகவும் அவற்றுக்கு ஆயுதங்களை வழங்குவதாகவும் குற்றம்சாட்டி வருகிறது. அத்தோடு குர்த்திஸ்தான் ஆயுதப்பிரிவுக்கு சுவீடன் தமது நாட்டில் பயிற்சியையும் தங்கியிருப்பதற்கான வாய்ப்பினையும் வழங்கிவருவதாக குறிப்பிடுகிறது.

சுவீடனில் நிகழ்ந்தவை இஸ்லாமியருக்கு எதிரான இனவெறியை தூண்டுவதுடன் இஸ்லாமியருக்கு எதிரான இனவெறியை ஐரோப்பாவில் தூண்டுவதாகவும் அதற்கான எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டுள்ளதாகவும் துருக்கிய அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் சுவீடன் வெளியுறவு அமைச்சர் டொபையாஸ் பில்ஸ்ட்ரோம் குர் ஆன் எரியூட்டப்பட்டதை திகிலூட்டக்கூடியதெனவும் கருத்துச் சுதந்திரம் உள்ளது என்பதற்காக ஆர்ப்பாட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட உணர்வை ஆதரிக்கிறோம் என்று அர்த்தமில்லை என்கிறார். இஸ்லாமிய கூட்டுறவு அமைப்பும் சுவீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நிகழ்ந்தவற்றை கண்டித்ததுடன் அதற்கு பின்னால் சுவீடன் அதிகாரிகள் இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். பெரும்பாலான இஸ்லாமிய நாடுகள் குர் ஆன் எரியூட்டப்பட்டதை கண்டித்து வருகின்றன. இது முழு உலகிலுமுள்ள இஸ்லாமியரது உணர்வுகளைத் தூண்டுகின்ற தீவிரச் செயல் எனவும் இஸ்லாமியர்களது மத உணர்வை புண்படுத்துவதாகவும் பாகிஸ்தான், சவுதி அரேபியா, கட்டார் போன்ற நாடுகள் சுவீடன் மீது குற்றம்சாட்டியுள்ளன. இஸ்லாம் என்பதன் அர்த்தமே அமைதியின் வடிவமாகும். இஸ்லாமியர்கள் அனைத்து மதங்களையும் மதிப்பவர்கள். இந்தக் கொள்கையை அனைவரும் மதிக்க வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிக்கையிட்டுள்ளது. ஆனால் சுவீடனில் போராட்டம் தொடர்கிறது. வலதுசாரிகளது செயலுக்கு எதிராகவும் ஆதரவாகவும் போராட்டம் நீடிகிறது. அத்தகைய போராட்டங்களில் துருக்கிய ஜனாதிபதியின் உருவப் பொம்மை தலைகீழாக தொங்கவிடப்பட்டது.



இதனால் இரு நாட்டுக்குமான இராஜாங்க உறவு பாதிப்படைந்ததுடன் ஐரோப்பாவுக்குள் இஸ்லாமியர் மீதான இனவெறித்தூண்டல்கள் ஆரம்பித்துள்ளது. ரஷ்யாவுக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும் இடையிலான நெருக்கம் மேற்குலகத்தை பாதித்துள்ளதாக தெரிகிறது. அத்தகைய நெருக்கடியை எதிர்கொள்ள முடியாத ஐரோப்பா இஸ்லாமிய நாடுகளது புனிதத்தை அவமதிப்பதன் மூலம் எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றது. மேற்குலக ஜனநாயகத்தின் சிறப்பும் தனித்துவமும் இதுவாகவே உள்ளது. மக்களது கருத்துச் சுதந்திரத்தின் வாயிலாக நாடுகளது நலன்களை சாத்தியப்படுத்திவிடுவதாகும். அது நியாயமானதோ இல்லையோ என்பதல்ல முக்கியம். மாறாக அதன் வாயிலாக நாட்டின் நலன் அடையப்படுவதே பிரதான இலக்காகும். இத்தகைய விவாத ஜனநாயகத்தின் புள்ளிக்குள்ளேயே மேற்குலக ஜனநாயகத்தின் வடிவங்கள் காணப்படுகின்றன.

இரண்டாவது, உக்ரைனுக்கான ஆயுத தளபாடங்களை வழங்குவதில் நீடித்த இழுபறிக்கு ஜேர்மனி காரணமாக அமைந்தாலும், தாக்குதலுக்கு பயன்படக் கூடிய டாங்கிகளை வழங்க மேற்கு நாடுகள் முன்வந்துள்ளன. ஆரம்பத்தில் ஜேர்மனி டாங்கிகளை வழங்க மறுப்புத் தெரிவித்த போது அமெரிக்காவும் ஏனைய நேட்டோ அணியினரும் அதிக முரண்பாடுகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக போலந்து ஜேர்மனிக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தியது. ஜேர்மனி உக்ரைனுக்கு ஆயுத தளபாடங்களை வழங்க மறுத்தாலும் உக்ரைன் போரில் வெற்றி பெறும் என போலந்துப் பிரதமர் மாடேயஸ் மோராவெய்க்கி தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது ஜேர்மனி தனது தயாரிப்பான லெப்பாட் 2 டாங்கிகளில் 14 ஐ உக்ரைனுக்கு வழங்க முன்வந்துள்ளது. அவ்வாறே அமெரிக்கா தனது தயாரிப்பான எம்1 அப்ராம்ஸ் டாங்கிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. உக்ரைன் ஜனாதிபதியின் நீண்டகால வேண்டுகோளை மேற்குலகம் நிறைவேற்றும் சூழல் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. ஆனால் நேட்டோ அணியினர் திறன்குறைந்த ஆயுதங்களையே உக்ரைனுக்கு வழங்குவதாகவும் முழுமையான பயிற்சியின்றி அத்தகைய ஆயுதங்கள் பாவனைக்கு வருவதாகவும் விமர்சனங்கள் காணப்படுகின்றன.

இத்தகைய மேற்குலகத்தின் நகர்வுக்கு பதிலளிக்கும் ரஷ்யா தனது நட்புச் சக்திகளுடன் இணைந்து கூட்டு கடற்படைப் பயிற்சியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 17 முதல் 26 வரை (2023) தென்னாபிரிக்காவின் துறைமுக நகரங்களான டர்பன் மற்றும் ரிச்சர்ட்ஸ் விரிகுடாவுக்கு அண்மிய பகுதியில் நடைபெறவுள்ளது. இதில் ரஷ்யா சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளது கடற்படைகளுடன் ஹைப்பர்சோனிக் போர்க் கப்பல் கடற்படைப் பயிற்சிக்காக சிரியாவின் டார்டஸ் துறைமுகத்திலிருந்து ரஷ்ய போர்க்கப்பல் இணைந்து கொள்ளும் என ரஷ்ய செய்தி ஊடகங்கள் அறிவித்துள்ளன. இக் கடற்படை பயிற்சிக்கு ரஷ்யாவின் அட்மிரல் கோர்க்கோவ் தலைமை தாங்குவார் எனவும் அவ்வறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது. இந்தப் போர்க்கப்பலானது ஒலியைவிட ஒன்பது மடங்கு வேகமுடைய சிர்ஹான் தாக்குதல் ஏவுகணையைக் கொண்டுள்ளதுடன், அதன் தாக்குதல் தூரமானது 1000 கி.மீ. அதிகமானது என்பதும் கவனத்திற்குரியதாகும். இந்த ஏவுகணை ரஷ்யாவின் ஹைப்பர்சோனிக் ஆயுத தளபாடங்களின் உயிர்நாடி என்றும் 2019 முதல் போரில் இணைக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

இது சீனா, தென்னாபிரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான உறவை பலப்படுத்துவதுடன் ஏற்கனவே வளர்ந்துவரும் உறவினை எதிர்காலத்தில் பலமாக மாற்றுவதற்கு உதவும் எனவும் தென்னாபிரிக்க தேசிய பாதுகாப்பு படைப்பிரிவு அறிவித்துள்ளது. ஏற்கனவே இத்தகைய போர்ப்பயிற்சிகளில் தென்னாபிரிக்கா இணைந்து கொண்டுள்ளது எனவும் இது மூன்றாவது போர்ப்பயிற்சி எனவும் 2019 ஆண்டு முதல் இந்நாடுகளுக்கிடையிலான கடற்படைப்பயிற்சிகள் நிகழ்வதாகவும் தென்னாபிக்க தேசிய படைப்பிரிவு அறிவித்துள்ளது. ரஷ்ய தயாரிப்பான சிர்ஹான் ஏவுகணைக்கு மாற்று ஏவுகணை உலக நாடுகளிடம் இல்லை என்ற கருத்தினை ரஷ்யா கொண்டுள்ளது இதுபற்றிய மதிப்பீடும் போரியல் ஆய்வுகளில் அவ்வாறானதாகவே உள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

எனவே இரு தரப்புக்குமான போர் வலுவானதாக மாறிவருகிறது. ரஷ்யாவின் உக்ரைன் மீதான போரை வெற்றிகரமானதாக மேற்குலகம் கையாண்டுவருகிறது. அதற்குள் ரஷ்யாவை முடக்கிவிடலாம் என்ற எண்ணத்துடன் தொடங்கப்பட்ட உக்ரைனுக்கான உதவியானது மேற்குக்கு மீளமைக்கும் காலமாக அமைந்துவருகிறது. அமெரிக்கா உலகளாவிய ஆதிக்கத்திலிருந்து பின்வாங்குமா என்ற குழப்பம் நிலவிய போது உக்ரைன் போர் அதனை மீளமைப்பதற்கான களமாக மாறியுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

**ஏற்றுமதி செய்வதற்காக மரவள்ளி கொள்வனவு செய்யப்படும்**

விசாரணைகள்
சீ.ஆர்.எக்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி, கம்பஹா
ரொஹான் - 0333135662
(காலை 08 முதல் மாலை 05 வரை அழைக்கவும்)

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

## நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்/ உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்
- பங்குத் தரகுக் கம்பனிகள்
- பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் (உதாரணம்: மோபைல் பணத் தொழிற்படுத்துநர்கள், பணம் அனுப்புபவர்கள்)

உங்களது வாடிக்கையாளர்களை அறிந்துகொள்ளுங்கள் (KYC) என பொதுவாக அறியப்படுகின்ற வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் என்பது வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்கு அல்லது ஏதேனும் வேறு நிதியியல் நிறுவனத்திற்கு அவர்களைப் பற்றிய அத்துடன் அவர்களது கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய தகவல்களை வழங்குகின்ற செயன்முறையொன்றாகும். குற்றவாளிகள்/ பயங்கரவாத நிதியளிப்பவர்கள் மூலம் நிதியியல் முறைமை தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு தமது வாடிக்கையாளர்களுடன் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் அதேபோன்று பெற்றுக்கொண்ட தகவல்களை காலமுறைப்படி மீளாய்வுசெய்து இற்றைப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினை மேற்கொள்ளுமாறு பணம் தூயதாக்கல் அத்துடன் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை முறியடிப்பதற்கான இலங்கையின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்* நிதியியல் நிறுவனங்களை வேண்டுகின்றன.

குறைந்தபட்சம் பின்வரும் தகவல்கள் வாடிக்கையாளரினால் வழங்கப்படவேண்டும்.

| | |
|---|---|
| • முழுப்பெயர் | • வியாபாரம் அல்லது தொழில்தொடர் தொடர்புபட்ட விபரங்கள் |
| • பிறந்த திகதி, தேசியம் | • எதிர்பார்க்கப்படும் மாதாந்த வருமானம் |
| • வாடிக்கையாளரின் அல்லது பயன்பெறு சொந்தக்காரரின் புகைப்படத்தினைக் கொண்டுள்ள உத்தியோகபூர்வ தனிப்பட்ட ஆவண இலக்கம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணம் (உதாரணம்: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது சாரதி உரிமம்) | • எதிர்பார்க்கப்படும் கொடுக்கல்வாங்கல்கள் முறை (உதாரணம்: காசு, காசோலை போன்றன) |
| • முகவரி | • வருமான மூலங்கள் |
| • கணக்கை ஆரம்பிக்கும் நோக்கம் | • அவசியமானவிடத்து பயன்பெறு சொந்தக்காரர்களின் அத்துடன் அரசியல் ரீதியாக முக்கியத்துவமிக்க ஆட்களின் அந்தஸ்து பற்றிய விபரங்கள் |
| • முன்னெடுக்கின்ற உரிய விழிப்புக்கவனத்தினை நடாத்துவதற்கும் அவசியப்படின் அதிகரித்த உரிய விழிப்புக்கவனத்தினை நடாத்துவதற்குமான மேலதிகத் தகவல்கள் | |

வழங்கப்படவுள்ள குறைந்தபட்சத் தகவல்கள், வாடிக்கையாளரின் வகையினைச் சார்ந்திருக்கும் (தனிப்பட்டவர், கம்பனி, பங்குடமை, அறக்கட்டளை நிறுவனங்கள்)

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கான சர்வதேச கொள்கை வகுப்பாளரான நிதியியல் நடவடிக்கைச் செயலணி, உரிய விழிப்புக்கவனத் தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய 40 பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதற்கமைய, இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தலுக்கான குவிமையமாக விளங்குகின்ற நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் மீதான விதிகளையும் வழங்குகின்றது.**

நிதியியல் நிறுவனத்தின் வாடிக்கையாளர் பற்றிய அடையாளம் மற்றும் வேறு அடிப்படை விபரங்களைச் சேகரித்தலானது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். எனவே, அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் வாடிக்கையாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.

*2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள்.

மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும்:
பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
011-2477509 011-2477692 @dfiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

## இலங்கைச் சுங்கம்

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின்போது நிகழும் சுங்க மோசடி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்**

உங்களால் வழங்கப்படும் சரியான தகவல்களுக்கு பணப் பரிசுகள் வழங்கப்படும்



- தடை மற்றும் வரையறுக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதி
- சுங்க வரி செலுத்தாத பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதி
- சட்டவிரோத போதைப்பொருள் ஏற்றுமதி / இறக்குமதி
- தொல்லியல் பெறுமதியைக் கொண்ட பொருளின் ஏற்றுமதி
- அரியவகை தாவரம் மற்றும் விலங்குப் பகுதியின் ஏற்றுமதி / இறக்குமதி



மேற்கூறப்பட்ட வகையிலான கடத்தல் மற்றும் தொடர்புடைய தகவல்கள் உள்ளதாயின் இலங்கைச் சுங்கத்தின் 24 மணி நேரமும் செயற்படும்
**011 2471471**
எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக எமக்கு அறிவித்து பெறுமதி வாய்ந்த தேசிய செயற்பாட்டின் பங்குதாரராகுங்கள்.

**தகவல் வழங்குபவர்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்**

மத்திய நுண்ணறிவுப் பிரிவு, இலங்கைச் சுங்கம், சுங்க இல்லம், இல. 10, பிரதான வீதி, கொழும்பு-11. மின்னஞ்சல்: ciu@customs.gov.lk

## உயிர்

துளியில் உயிராகி,
முளைத்திருந்தது அப்போது தான்
வண்ணத்தி சிறகாகி
சின்னதான வலியின் சுகம்

உடலை இழுத்து அணைத்துக்கொண்டு,
உதிரத்தால் பகிர்ந்த
பாசப் பின்னல்
பாதியே உயிரென பிணைந்துவிட்டு

இதயத்தின் துடிப்புகள்,
உதிரத்தின் துளிக்கைகள்,
முதலாக எல்லாம் பகிர்ந்து
உயிரென்று இன்னொன்றாகி

ஒரு மொட்டு ஒட்டிக்கொள்ள
மடி பெற்று பசுமை கொள்ள,
கருவென்று உயிரில் மெல்ல
தொடுக்கத் தொடு உருவம் கொள்ள

உருவாகி உலகைப் பார்க்கும்
அந்நாளைக் காத்திருந்தோம்!
கருவாகி இருட்டில் இருந்த
கண்ணோடே இருட்டில் கிடந்து...

இனியும் உலகைப் பாராமல்,
இருகப் பொத்திய பிஞ்சின் கண்!
தனியாய் பிரிந்த என் உயிர்,
தனித்தனியாய்ப் பிரிந்த உயிர்ப் பின்னல்!!

-[illegible]

## பொய்கள் பற்றிய உண்மைகள்

முடிவைத்துக் கழுத்தறுக்கும்
மிகச் சிறந்த ஆயுதம்
பொய்

பொய்களைப் புழுவாய் மாட்டிய
நாக்குத் தூண்டிலை
வசீகரமாய் வீசுகையில்
மாட்டிக்கொள்கின்றது
மீன்களாய் உண்மை

காற்றைப்போல எங்கும்
வியாபித்திருக்கும்
பொய்களை சுமந்த வண்ணமே
விடிகிறது பொழுது

சூழ்நிலை சந்தையில்
தகுந்தவற்றை தேர்ந்தெடுத்து
உபயோகப்படுத்தும்
வாடிக்கையாளர் போலத்தான்
இருக்கின்றோம் எல்லோரும்

மேகங்களின் கூடல்களால்
மழைதருவதாய் சமிஞ்ஞை செய்து
கலைந்து போகையில்
வாக்குறுதிகள் தந்து ஏமாற்றும்
எங்கள் தலைவர்கள் போலவே
வானமும் சிலநேரம்
வெயில் பதாகையில் தனது
பொய்யை அறிவித்து விடுகிறது

பொய்கள்
ஆயுட்கால அருஞ்சொத்தாய்
வியாபாரிகளிடம் இருந்தாலும்
மொத்தமாய் குத்தகைக்கு
வாங்கிக் கொண்டவர்களை
சிம்மாசனத்தில் உட்காரவைத்து
அழகு பார்கின்ற காரணத்தால்
தலைகீழாகி விடுகிறது
வாழ்க்கை

பொய்களின் அலங்காரங்களுடன்
வாழ்க்கையை அனுபவிக்கும்
மனிதர்களின் எண்ணங்களை
மரணம் வந்து பொய்ப்பிக்கும்வரை
பொய்கள் உண்மைகளை
முடிவைக்கப் பயன்படுத்தும்
கண்ணாடி முடி என்பதனை
எவரும் புரிவதில்லை

மெய்யன் நடராஜ்

## மாற்றத்தை நோக்கி



கடந்த காலத்தை மறந்து விடு!
கற்றுத்தந்த பாடங்களையும்
கடந்து வந்த பாதைகளையும்
ஒருபோதும் மறவாதே!

நீ பெற்ற அனுபவங்களை
இலட்சியத்தை அடையப்பயன்படுத்து
எதிர்கால வெற்றிக்கு தோல்விகளை
வழியாக்கி உன்னை நீ பண்படுத்து!

கடந்தகால நினைவுகளுடன் ஒப்பிட்டு
புதுப்புதுத் திட்டங்களை உருவாக்கு!
முயற்சியை வெற்றியின் உரமாக்கு!
எதிர்ப்புக்களை கடக்க கற்றுக்கொள்

உன் இலக்கிற்கான பயணம்
சற்றுத்தொலைவில் முற்றுப்பெறலாம்
சவால்களை எதிர்க்க துணிவு கொள்!
பொறுமையுடன் சகித்து பணிவும் கொள்!

எதையும் எதிர்கொள்ளும் மனம்
கொண்ட மாந்தனாய் உருமாறு!
தடுமாற்றம் தடைகள் தாண்டியும்
மகிழ்வூட்ட ஒரு வாழ்வுண்டு !

நீ நட்ட முன்னேற்ற வித்துக்கள்
துளிர்விட்டு மலரவிருக்கலாம்!
ஆதலால் தான் கடந்த காலத்தை
மறந்து மாற்றம் நோக்கி புறப்படு!

நுஸ்ஹா நவாஸ்
ஏறாவூர்

## அளவீடுகள் அற்ற பால்வீதி...



தேவ இறகுகளில்
நெய்யப்பட்ட
சுடர்
அவள்

சொற்கள் அல்லா
தேசத்தில்
மௌன
மோகனமே
அவள்
வதனம்


கனவுகளைப்
பட்டாம்பூச்சியாக்கி
கண்களில்
பறக்க விட்டவள்
எல்லோரும்
என்னில்
இருளைத்
தேடிய போது
என் வெளிச்சத்தை
எனக்குக்
காண்பித்தவள்

காலத்துளிகளின்
பெறுமதியை
சுவாசமாக எண்ணி
மதிப்பவள்

கரிய இருளில்
நட்சத்திரங்களை
ரசிக்கக்
கற்றுத்தந்தவள்
அளவீடுகள்
அற்ற
பால்வீதியாய்
அவளுடன்
என் நேசம்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

## புதியதோர் உலகு செய்வோம்



புதியதோர் உலகு செய்வோம்
புதுமைகள் படைத்தே நாமும்
புதுத் தெம்போடே நாளும்
புத்தி புகட்டுவோம் வாரும்

பாரில் நாமும் பயன்பட வேணும்
பண்பட்ட வாழ்விற்குத் தானும்
புண்ணுடையார் நெஞ்சில்
பன்நூல் விதைப்போம்

வீரியம் விட்டகழ்வோம்
காரியம் தொட்டெடுக்க
சாதுரியமாய் சகலதிலும்
மாதுரியம் மல்கும்

புலமை யறியார்
மடமையில் மாசு துடைப்போம்
பழமை தூற்றும் புதுமையில்
கடமை போற்றும் கருத்து விதைப்போம்

சூது மது சதி சூழ்ந்திட்ட
சூழலிலே மதி கொண்டு
மாண்பு படைப்போம்
வாழ்தலினால் புது வழி சமைப்போம்

ஏரூர் நிலாத்தோழி
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## நேசத்தை தந்திட வா

வெண்பனி சூழ்ந்திட்ட
வெண்ணிலவாய் நீயிங்கே
மண்ணில் பிறந்திட்டாய்
மனசுள் நிறைந்திட்டாய்

உள்ளுக்குள் நீயிருந்து
உயிர் தனை வதைக்கின்றாய்
அள்ளி அணைத்திடவே
ஆசையும் பெருகுதடி

உணர்வுள் நிறைந்திட்ட
உந்தன் வதனம் தான்
காண துடிக்குதடி
கான் மயிலே நீயெங்கே

நாளெலாம் உன்நினைவில்
நலிவுற்றுப் போனாலும்
ஆளும் இறைவனிடம்
அருள் வேண்டி நிற்கின்றேன்

நின்வரவால் மலர்ந்திடுவேன்
நினைவினிலே மிதந்திடுவேன்
அன்புக் கடலே நீ
அருகே வந்திடுவாய்

விழிதேடும் சாகரமே
வியனுலகம் நீயன்றோ
மொழியில்லை சொல்லிவிட
உன்னன்புக் கீடேது

இமைகளின் அசைவுகளால்
இதயத்தை தொட்டவளே
இமயம் போல் உயர்வாக
நேசத்தை தந்திட வா!...

கௌ. மோகனா...

## விளையும் பயிர்



மண்ணிற்கு உயிராய்
மானிடத்தின் உறுதியாய்
நீ மட்டுமே விண்ணில்
தடம் பதித்த முதற் பொக்கிஷமே....

உன் உயரிய பணியில்
வையகத்தில் வாடாத
உயிரே இல்லை
உன்னைத் தியாகம் செய்து
உலகில் யாவருக்கும்
தந்த அற்புதப் பிறப்பு....

என்றாலும் உன்னைச் சிதைந்து
வாடித்துடிக்கும் மனிதர்களிடையே
சாதனை படைத்து
வருங்கால சந்ததியின் பயனுக்காய்
தவமாக காத்திருக்கிறாய்.....

ஹஸ்னா மஹ்ரீர்
இறம்பக்கனை

## எப்போது முடியுமோ போதையின் மயக்கம்???...

பாதைகள் தோறும்
போதையின் முடக்கம்
எதிர்கால இலட்சியங்களை
அலட்சியமாக்கும் சதித் திட்டம்...

இளமையை இரட்டிப்பாக்கும்
சுதந்திரத்தின் சுபீட்சம்
இன்று இரு நொடியும்
இளையோரை பிரிந்திட
ஈரல் நடுங்கும் பதற்றம்...

வளங்களும் வாய்ப்புக்களும்
வழிந்து கிடக்கும் உலகம்
அள்ளிக்கொள்ள....
போதையின் வஞ்சத்தால்
உள்ளத்தில்
அச்சமும் பதற்றமும் மிச்சம்...

கைக்குள்ளே அடக்கி வைத்தால்
குஞ்சுதான்
சிறகடித்துப் பழக இயலுமோ?...

காலத்தின் கோலமது
இடையிடையே
சோதனைகள் உருப்பெறுவது
வழக்கம்...
வழிகாட்டுவோரும்
விழிப்புடனே இருந்திட்டு
நல்வழிகாட்டுவதில்
பொறுப்புடனே செயற்பட்டால்
வையமும் சீர்பெற்று
சிறந்து விளங்குவதில்
ஏற்படுமோ மிகச் சுணக்கம் ???.....

எப்.அலி
தர்கா நகர்

## ஒளிர்ந்திடு சுடரும்.....

தேற்றுவார் இன்றித் தேடிச் சிறக்கும்
நற்றவர் வெல்வார் காண்

ஆற்றலார் தன்னை அழிக்க வெண்ணும்
தூற்றலார் மடிவார் காண்

போற்றுவார் பொய்யதைப் போலது வகையில்
உற்றுத் தெளிவார் காண்

சிறகுகள் உடைத்து சிலுவைகள் செய்யும்
உறவுகள் உதிரும் காண்

மாற்றுமோர் விதியைப் புரட்டும் நாளில்
மற்றுமோர் வேட்கை காண்

முகையது விலக்கி பகையது போற்றும்
முறையது முடங்கும் காண்

வகையது ஓதும் வாழ்க்கைப் பாதை
மிகையது துரத்தும் காண்

பேதமை கொய்து பேதமை ஊக்கும்
போதையும் பொசுங்கும் காண்

நல்லதை நாடி நானிலம் செதுக்கி
அல்லலை அழித்திட நான்

காற்றிடை விலக்கி அக்கினிக் குஞ்சினை
காட்டிடை வைத்தேன் காண்

கனகசபாபதி செல்வநேசன்
அல்வாய்

## வறுமையின் தாண்டவம்...!



பாலின்றிய மார்பகங்களில்
பசியாறிடத் துடிக்கும்
பச்சிளம் பாலகன்...
அவள் பசியாறினால் தானே
அவள் பாலூட்ட
அவள் மார்பில்
பால் சுரக்கும்....

உமிழ் நீரை உணவாய் உண்டு
நிரம்பாத வயிற்றோடு
எத்தனை இரவுகள் தான் தூங்குவது....
பாவம்....

இன்றைய நாளின் தோல்வியினால்
நாளைய நாளின்
எதிர்பார்ப்பும் இல்லையே.....

நீளும் இரவுகளில்
நிம்மதியாய் தூங்கிட
தலையணையும் இல்லை...
தலைவாசலில்
தாழ்பாளும் இல்லை....

மூவேளை உணவை
முழுதுமாய் கண்டதும் இல்லை..
ஒரு நேர உணவை
முழுதுமாய் உண்டதுமில்லை...

உலகப் பொருளாதாரமும்
பங்குச்சந்தை நிலவரங்களும்
அந்தக் குடிசை ஜீவன்களுக்கு
தேவையே இல்லை...
அவைகளுக்கு தேவை
ஒரு பிடி பழைய சோறு தான்...

குடிசை வீட்டிற்குள்
கொண்டாடித் தீர்க்க
என்னதான் இருக்கின்றது....

நுஸ்ரத் மஹ்ரூப்
பாலமுனை

# வர்த்தகங்களுக்கு நிலைபேறாண்மையை எய்த உதவிகளை வழங்கிய SLT டிஜிட்டல் சேர்விசஸ்




SLT டிஜிட்டல் சேர்விசஸ் தனது வருட இறுதி வாடிக்கையாளர் அமர்வான 'Connecting Businesses to Grow' என்பதை ஏற்பாடு செய்து டிஜிட்டல் நாழிகைகளினூடாக வர்த்தகங்களுக்கு நிலைபேறாண்மையை எய்த உதவிகளை வழங்கியது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL இன் முழு உரிமையாண்மையில் இயங்கும் SLT Digital Services (Pvt) Limited (SLTDIGITAL), வருட இறுதி வாடிக்கையாளர் அமர்வை 'Connecting Businesses to Grow' எனும் தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தது. டிஜிட்டல் நாளிகைகளினூடாக வியாபாரங்களுக்கு நிலைபேறாண்மையை எய்தக் கூடிய வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த அமர்வு அமைந்திருந்தது.

இலங்கையின் பெருமளவான வியாபார தொழில்முயற்சியாளர்கள் மற்றும் நிபுணர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர். நாட்டின் வளர்ச்சியில் பங்களிப்புச் செலுத்தும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் முக்கியத்துவத்தைக் கவனத்தில் கொண்டு, அந்த வியாபாரங்களுக்கு தமது தினசரி செயற்பாடுகளை அதிகளவு வினைத்திறனான வகையில் முன்னெடுப்பதற்கு உதவக்கூடிய தீர்வுகளை SLTDIGITAL காட்சிப்படுத்தியிருந்தது.

SLTDIGITAL இனால் வியாபாரங்களுக்கு தமது டிஜிட்டல் பிரசன்னத்தை வலிமைப்படுத்தி, டிஜிட்டல் சந்தையில் மாற்றியமைப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன. அதனூடாக, உயர்தர ஒன்லைன் ஊக்குவிப்புப் பிரசாரத்திட்டங்களை முன்னெடுப்பது,

செயன்முறைகளை தன்னியக்கமயப்படுத்தும் ஆற்றல், உறுதியான வாடிக்கையாளர் உறவுகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பல் மற்றும் உயர்தரமான இணைப்புத்திறன் தீர்வுகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பெறுமதி சேர்ப்பு செயன்முறையின் அங்கமாக, டிஜிட்டல் விபரக்கோவைகள், இணையத்தள வடிவமைப்புகள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், ஆக்கபூர்வ பொருளடக்கங்கள், Automobile.LK டிஜிட்டல் விபரக்கோவை உள்ளம்சங்கள் மற்றும் FortArc கேமிங் கட்டமைப்பு போன்றன பற்றியும் வாடிக்கையாளர்களுக்கு விளக்கப்பட்டிருந்தன.

# Spectrum திறனை வழங்க அதன் 3G வலையமைப்பை நிறுத்தவுள்ள டயலொக்

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இந்த 2023 ஆம் ஆண்டில் அதன் 4G Broadband வலையமைப்பின் திறனை அதிகரிக்கும் நோக்கில் தனது 3G டேட்டா வலையமைப்பை துண்டிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. டயலொக் ஆசிஆட்டா தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மொபைல் அனுபவத்தை வழங்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை பாவனையாளர்களுக்கு சிறந்த தரத்தில் அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகவும் இது அமைந்துள்ளது.

டயலொக்கின் 3G வலையமைப்பின் டேட்டா நெரிசல் 1%க்கும் குறைவாகவே காணப்படுகின்றது மற்றும் 4G Broadband ஐ மேம்படுத்த 3G அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்வதன் மூலம், Dialog 4G Broadband வாடிக்கையாளர்களுக்கு அதிக திறனுடன் கூடிய சேவையை வழங்கக்கூடியதாக இருக்கும். 3G வலையமைப்பின் நிறுத்தத்தை மேற்கொள்ளும் முன்னோடி முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம், புதிய 3G இணைப்புகளை வழங்குவதை நிறுத்துவதற்கு நிறுவனம் எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொபைல் Broadband சேவைகளை அணுகுவதற்கு ஏற்கனவே உள்ள 4G சாதனங்களில் 4G டேட்டா சேவைகளை செயல்படுத்துவதுடன் 3G வலையமைப்பு வாடிக்கையாளர்களை 4G வலையமைப்பிற்கு மாறும்படி டயலொக் கேட்டுக் கொள்கின்றது.

தற்போதைய 3G வலையமைப்பு வாடிக்கையாளர்கள் 4G க்கு மாறுவதை ஆதரிக்கும் நோக்கில் டயலொக் அதன் சேவை வலையமைப்பின் மூலம் பெறக்கூடிய சிறந்த மதிப்புள்ள 4G ஸ்மார்ட் போன்களை, Dialog Lesi Pay தவணைத் திட்டங்களின் மூலம் கொள்வனவு செய்யும் வாய்ப்பினையும் மற்றும் இலவச 4G சிம் மேம்படுத்தல்களையும் அவர்களுக்கு வழங்குகிறது.



## மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

இலங்கையின் முன்னணி தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் ஒன்றான மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் பட்டமளிப்பு விழா கல்லூரியின் தலைவர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் கொழும்பு 7 இல் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தாமரைத்தடாக அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொண்டதோடு சிறப்பு அதிதிகளாக அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் பைசல் காசிம் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களும் அதே போன்று இலங்கைக்கான வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் ராஜதந்திரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் 350 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் நிகழ்வில் பிரதம அதிதியான நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சிறப்பு திதிகள் மற்றும் கல்லூரியின் தலைவர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் ஆகியோர் சிறப்புரையாற்றியதுடன் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நவநாகரிக ஆடை விற்பனையில் தடம் பதிக்கும் ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட்



கண்டி மாநகரில் "The Khayal Collection" நவநாகரீக ஆடைகள், நகைகள், அணிகலன்கள், ஒப்பனைப் பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழும் ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட், இலங்கையின் மாபெரும் தைத்த ஆடைகள் விற்பனையாளர்களுள் ஒன்றாக மிளிர்கின்றது. 1993ஆம் ஆண்டு கேகாலை நகரில் நான்கு பணியாளர்களுடன் மட்டும் எளிமையாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட் தற்போது எட்டு காட்சியறைகள், பிரமாண்டமான களஞ்சியச்சாலை மட்டுமன்றி 2,000 பணியாளர்களுடன் மிகவும் கம்பீரமாக கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றது.

ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட நிறுவனமானது சகல பணியாளர்களையும் பாரபட்சமின்றி ஒரே குடும்பத்தவர்கள் போல அரவணைத்து வருகின்றது. இதன் நிறுவுனர் மாரியாபிள்ளை செல்வராஜ் அவர்கள் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவருடன் இயக்குனர்களாக மதுஷிகா செல்வராஜ், தினுஷிகா செல்வராஜ், சப்ரஜித் செல்வராஜ் ஆகியோர் நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் கவனித்து வருகின்றனர்.

மேலும் இந் நிறுவனத்தினை எதிர்வரும் தசாப்தங்களில் தனித்துவமான, பன்முகப்படுத்திய நிறுவனமாக முன்னிலைப்படுத்தி தம்மை முதன்மை விற்பனையாளராக நிலைநாட்ட அயராது செயற்படுகின்றனர். தன் புதிய வர்த்தகநாமமான Khayal இன் வெளியீடு மூலம் ஸ்ரீயாணி டிரெஸ் பொயின்ட் தன் மகுடத்தில் மற்றுமோர் மாணிக்கத்தை பதிக்கிறது. கொழும்பு தாஜ் சமுத்திராவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இயக்குனர் தினுஷிகா கூறியதாவது

"காயல் Khayal எனும் பதம் கற்பனைமயமான கொண்டாட்டங்களைக் குறிக்கின்றது. மயக்கும் இந்திய திருமணங்களை முன்னுதாரணமாகக் கொண்டு நாம் ஒரு தனித்துவமான வைபவ ஆடைகளின் தொகுப்பை வெளியிடுகிறோம். இதன் அதி அற்புத கலைநயமும் தரமும் நிகரற்றதாகும்".

காயலின் முதற்தொகுப்பின் கண்காட்சி எதிர்வரும் பெப்ரவரி 2023, கண்டியில் அமைந்துள்ள ஏர்ல்ஸ் ரீஜன்சி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

# ஊழியர்களைச் சிறப்பாக வழிநடத்தும் EL TORO




இலங்கையின் மிகவும் புதுமையான மற்றும் முன்னணி நிலைபேற்றியலுடனான சீமெந்து நார்த் தகடு வழங்குநரான EL TORO, நிலைபேற்றியல் கொண்ட வாழ்வை நோக்கி மற்றொரு அடியை எடுத்து வைத்துள்ளது.

சமீபத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான Great Place to Work பட்டியலில் இடம்பிடித்ததில் இருந்து புத்தெழுச்சியாக, EL TOROவின் நடைமுறைவாதமும் நேர்மறைவாதமும் அவர்களது ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அற்புதமான நிலைபேற்றியல் நடைமுறையை நோக்கி அவர்களை சிறப்பாக வழிநடத்தியுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடி நம் அனைவரையும் மோசமாகப் பாதித்துள்ளது. ஒரு பொறுப்பான நிறுவனம் என்ற வகையில் EL TORO தனது ஊழியர் சமூகத்திற்கு நிலைபேற்றியல் சார்ந்த சேவையாற்ற முடிவு செய்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் மென்மேலும் அதிகரித்து வருவதால், எம்மிடம் உள்ள ஒரேயொரு தெரிவு நமக்குச் சொந்தமாக பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும் என்பதாகும். இது ஒரு நிலைபேற்றியல் நடைமுறை என்பதுடன், அதிகப்படியான பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பகிர்வதன் மூலம் சமூக வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

தனது ஊழியர்களிடையே பழங்கள் மற்றும் காய்கறி விதைகளைப் பகிர்வதன் மூலம், தன்னிறைவுக்கு வழிகோலும் வீட்டுத்தோட்ட நடவடிக்கைக்காக தனது ஊழியர்களை நிலைபேறாண்மையின் பாதையில் இட்டுச் செல்வதற்கும், தாராளமான மற்றும் சுதந்திரமான எதிர்காலத்தை தோற்றுவிப்பதற்கான அறிவைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடனும் இச்செயற்திட்டத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ளது. அனைத்து ஊழியர்களும் தமது தோட்டங்களில் வளர்ப்பதற்கான பல்வேறு விதைகளைப் பெற்றுக்கொள்வார்கள். இது ஊழியர்களின் தோட்டங்களிலுள்ள மண்ணின் கலவையை விளங்கிக் கொள்வதன்மூலமும், பயிர்வளரும் காலத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றது.

# 4ஆவது வருடமாகவும் 1ஆம் ஸ்தானத்தை தன்வசப்படுத்திய செலான் வங்கி




இலங்கையில் வங்கியியல் மற்றும் நிதிச் சேவைகளில், சேவைத் தரத்தில் சிறந்த ஸ்தானத்தைக் கொண்டிருக்கும் அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, தனது நிலையை மேலும் உறுதி செய்யும் வகையில், LMD இன் வாடிக்கையாளர் சிறப்பு கருத்துக் கணிப்பில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் முதல் நிலையில் தரப்படுத்தப்பட்டிருந்தது.

வங்கியின் 34 வருட கால செயற்பாடுகளில் வாடிக்கையாளர் சேவையில் காண்பிக்கப்பட்டு வரும் கரிசனைக்கு எடுத்துக் காட்டாக இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த காலங்களில், அன்புடன் அரவணைக்கும் வங்கி எனும் தனது தொனிப்பொருளுக்கமைவாக, வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொண்டு, அவர்களுக்கு பொருத்தமான நிதித் தீர்வுகளை வழங்கிய வண்ணமுள்ளது.

செலான் வங்கி வாடிக்கையாளர் சேவைத் தரம் என்பதை மாத்திரம் கொண்டிருக்காமல், பல்வேறு செயற்பாடுகளினூடாக, வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவத்தையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு படியிலும் வாடிக்கையாளர் அனுபவப் பயணத்தை நிர்வகித்து கட்டமைப்பதனூடாக, நீண்ட கால அடிப்படையில் வாடிக்கையாளர்கள் மத்தியில் நன்மதிப்பை ஏற்படுத்திக் கொள்வதை உறுதி செய்கின்றது.

அர்ப்பணிப்பான வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவ அணியினால், வாடிக்கையாளர் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்கு வங்கியின் 360 பாகை அணுகுமுறையை வினைத்திறனான வகையில் மேற்கொள்வதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

கருத்தாய்வுகளிலிருந்து, போட்டியாளர்களை அடையாளப்படுத்துவது மற்றும் உள்ளக மீளாய்வுகள் போன்றவற்றினூடாக, வாடிக்கையாளர் அனுபவங்களில் உயர்ந்த நியமங்களைப் பேணுவதற்கான சகல முயற்சிகளையும் செலான் வங்கி தொடர்ந்து முன்னெடுத்த வண்ணமுள்ளது.

நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தில் செலான் வங்கி கவனம் செலுத்தும் நிலையில், சிறந்த சேவையை வழங்குவது மாத்திரமன்றி, தீர்வுகளை விற்பனை செய்வதற்கு மாறாக, பொருத்தமான தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்தும்.

# சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஊடாக 87,000 பயனாளிகளை பலப்படுத்தும் Outreach Projects



Outreach Projects (Guarantee) Limited, சமூகப் பராமரிப்பு முயற்சிகள் மூலம் உள்ளூர் சமூகங்களை பலப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற சுயாதீன அமைப்பாகும், இந்த அமைப்பின் ஊடாக 2022ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 87,000 க்கும் அதிகமான பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

Outreach Projects அதன் கார்ப்பரேட் சோஷியல் இன்வெஸ்ட்மென்ட் (CSI) திட்டங்களுக்கு இணையாக ஒரு வருடத்தில் 170 திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. நிறுவனத்தின் முதன்மையான CSI திட்டமான, நிலையான வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (SADP), தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் வீட்டுத் தோட்டம் மற்றும் கால்நடை வளர்ப்பு மூலம் தன்னிறைவு அடைய உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் 2022 வரை 33,000க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்துள்ளனர். கம்பளை, வலஸ்முல்ல, வெலிகேபொல, பிலான, பிபிலே, வெலிகம, தலாவ, அகுனுகொலபலஸ்ஸ, தம்புள்ளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குண்டசாலை ஆகிய பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், இது இப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்க உதவுகிறது.

'சுவ ஜீவன்' திட்டத்தின் மூலம் தொலைதூர பகுதிகளில் வசிக்கும் சமூகங்களுக்கு 9 Reverse Osmosis (RO) நீர் சுத்திகரிப்பு அலகுகளை நிறுவுவதன் மூலம் நாட்டில் நீண்டகால சிறுநீரக நோய்க்கு (CKD) எதிரான போராட்டத்திற்கு Outreach Projects தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

இதன் மூலம் தியவின்ன, வெலிபத்தயாய, அவுகன, அத்தனகத்வெல, நிகபதிய, பக்கமூன, கொட்டபிட்டிய, பதுலுஓயா மற்றும் மெகல்லேவ ஆகிய பகுதிகளில் உள்ள 6,750 குடும்பங்களில் வசிக்கும் 27,000 பேருக்கு வருடம் முழுவதும் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

மஞ்சரி சிறுகதை

# சுதனின் பரிதாபம்



## அன்று

அப்போது தான் மழை கொட்டித் தீர்த்திருந்தது. சுதன் மெல்ல எழுந்து நடக்கத் தொடங்கினான். ஒரு பாட்டுக் கேட்டுக் கொண்டு நடந்து போகும் தூரம் நடந்து மீண்டும் திரும்பி வருவதாக எண்ணிக் கொண்டு. இது அவன் நித்தம் பழக்கிக் கொண்ட நல்ல பழக்கங்களில் ஒன்று.

உடல் நலம் பேணுவதில் கூடிய கவனம் எடுப்பான். ஒரு நாளில் இருபது மணி நேரம் வேலை செய்யும் வழக்கம் கொண்டவன். உந்துருளிப் பயணம். கதிரையில் இருந்தவாறு வேலை செய்வது. உடல் அசைத்து வேலை செய்யும் தேவை இல்லை. இதனால் உடல் வியர்ப்பது மிகக் குறைவு.

உணவுப் பழக்கத்திலிருந்து தன் எல்லா அன்றாட செயற்பாடுகளிலும் கூடிய கவனம் எடுத்துக் கொள்வான். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பார்களே! உடல் நலம் இருந்தால் தான் உழைப்பை தொடரலாம். சேமிப்பை பெருக்கலாம். நினைத்தபடி வாழலாம். இப்படித்தான் சுதன் எண்ணியிருப்பான் போல.

மெல்ல நடந்து போனவனுக்கு தலை சுற்றத் தொடங்கியது.கொஞ்சமாக உண்ணும் பழக்கமுடையவன். இரண்டு நாளாக நல்ல சாப்பாடு இல்லை. இரவில் மரக்கறிச் சாப்பாடு மட்டும் உண்பான். அதுவும் மாச் சாப்பாடு.

இந்த இரண்டு நாளும் அவன் வீட்டில் அவியாத பூட்டும் வேகாத பருப்புக்கறியும்.இதைச் சாப்பிட்டால் உடல் நிலை மோசமாகும். அதனால் அவன் அதை தவிர்த்து பட்டினி கிடந்திருந்தான்.

காலையில் தேனீரோடு சாப்பாட்டை முடித்துக் கொள்வான். மதியம் தான் பிறகு சாப்பிடுவான்.

அப்படியானால் இரண்டு நாளாக சுதனுக்கு ஒரு வேளை சாப்பாடு. இருபது மணி நேர வேலை.

இப்போது அதன் விளைவை அவன் உணர்ந்தான். அவனுக்கும் அது புரியும். சோர்ந்து விழும் வரை வேலை செய்ய வேண்டும் என சொல்வான். உணவில்லை எனச் சலித்துக் கொள்வதில்லை. தொடர்ந்து வேலையில் கவனமெடுத்திருந்ததால் உடல் சோர்ந்து போனது.

வீதியின் அருகில் இருந்த மதகின் ஓரமாய் அமர்ந்து கொண்டான். மெல்லத் தன் கண்களை மூடிக்கொண்டான்.நேரம் அதிகாலை நாலு மணி. மழையினால் காற்றில் கலந்திருந்த சிறு நீர்த் துளிகள் கூட பனி போல அவனில் மோதி உடலை குளிரச் செய்தன. உணர்வற்ற நிலைக்கு கொண்டு போவது போல அவன் கண்கள் இமை மூடிக் கொண்டன.

காலை இருள். மழை முகில் வேறு. வெளிச்சம் மிகக்குறைவு.

சுதன் இளமை ததும்பும் முதுமையறிவு பெற்ற ஒரு இளைஞன். வாழ்க்கையின் ஆரம்பம் நன்றாகத் தான் இருந்தது. கூட்டுக் குடும்ப வாழ்வு. இன்னமும் முப்பது தாண்டாத இருபது கடந்த தனி மனிதன்.

அம்மா தம்பி என ஒரு சிறிய குடும்பம். அன்பு மேலொங்க எண்ணம் சுமந்து வாழ்ந்தான். அப்பா இல்லாத போதும் அப்பா என்ற பாத்திரத்தில் அளவற்ற அன்பு கொண்டவன். அவன் அம்மா மீதும் தம்பி மீதும் அதுபோல பாசத்தை அள்ளி நிறைத்துக் கொண்டவன்.

நன்றாகப் போன அவனது வாழ்க்கையை அவன் பாடசாலையில் பெற்றுக் கொண்ட சாதாரணதர பெறுபேறுகள் புரட்டிப் போட்டது.

நல்ல கல்வி எதிர்காலத்தை தந்து என்றாலும் அவனது அம்மா, தம்பியை அது பிரித்து வைத்து விட்டது. சுதனின் அதீத திறமையின் மீது அவனது அம்மா பொறாமை கொண்டிருந்தாள்.

அதுவரையும் சொந்தம் என்றிருந்தவர்கள் உண்மையை போட்டுடைத்து விட்டார்கள்.

ஆம். சுதன் வளர்ப்புப் பிள்ளை. அதுவரை இது தெரியாது பார்த்த அவன் அம்மா இப்போது ஏன் இதைச் சொன்னார்.

சுதன் மிகுந்த கெட்டிக்காரன். அதனால் அவனை அவன் வீட்டில் ஒன்பதாம் வகுப்பு படித்து முடித்ததோடு பாடசாலையை இடை நிறுத்தி விட்டனர். தொடர்ந்து படிக்கத் தொடர் இடையூறுகளை ஏற்படுத்தினார்கள். அவனும் அதனை பொருட்படுத்தாது தான் தன்பாட்டில் தொடர்ந்து படித்தான்.இருந்தும் நெருக்கடி அதிகரித்துச் செல்ல படிப்பு முயற்சியை கைவிட்டு விட்டான்.

அவர்களது நெருக்கடிகளில் இப்படியும் ஒன்று இருந்தது. படிக்கும் புத்தகங்கள் இருந்த மேசையை புத்தகங்களோடு தூக்கிப் போய் எரித்து விட அவையும் எரிந்து சாம்பலாகிப்போயின. எரிந்து மீதியாக கிடந்த மேசையின் காலை கண்டுபிடித்த சுதன், காணாமல் போன மேசை எரிந்து கிடக்கிறது என தன் தாயிடம் போய்ச் சொன்னான். அவன் தன் கண் கலங்க.

அவன் அம்மா கலாவோ எந்த எதிர்வினையும் இன்றி தன் பாட்டில் போனார். சுதன் ஏமாற்றமடைந்தான்.

தேடிய சுதனுக்கு மேசையை அம்மாவின் தங்கையின் கணவனும் அம்மாவின் தம்பியும் தான் எடுத்து எரித்தார்கள் என்ற உண்மை தெரியவந்தது.

மாமாவுக்கும் சித்தப்பாவுக்கும் அதை எரிக்கப் சொன்னது அவன் அம்மா. சுதன் இனி அந்த மேசையில் இருந்து படிக்கக் கூடாது.வாயடைத்துப் போனான். இதற்குப் பிறகு அவன் எதையுமே பேச விரும்பவில்லை. இருந்தும் கோபப்படவில்லை.

சுதன் வளர்ப்பு பிள்ளை என்ற உண்மையை சித்தியும் அவனைப் பேசும் போது ஒரு நாள் சொல்லிப் பேசிவிட்டார். தொடர்ந்து நடந்தவற்றை யோசித்துக் கொண்ட சுதனுக்கு கவலை மனதை அடைத்தது. தன் தாயிடமே எல்லாவற்றையும் கேட்டு விட எண்ணினான். இருந்தும் இறுதியாக அறிந்து கொண்ட, தான் மாற்றான் தாய்ப் பிள்ளை என்பதை மட்டுமேனும் கேட்டு விட எண்ணினான். தாயிடம் போய் அதைக் கேட்டான்.

" அம்மா என்னை உங்கள் பிள்ளை இல்லை என்று சொல்கிறார்களே!" ஏனம்மா?"

" யார் உனக்கு அப்படி சொன்னது?"

" உங்களுடைய கடைசி தங்கை தான். அவதான் சொல்லி பேசினா."

" அவள் அப்பிடித் தான் சொல்வாள்.நீ சும்மாயிரு."

" இல்லை அம்மா. அவ மோசமாக பேசினவா. நான் உங்கட பிள்ளை தான் என வந்து சொல்லுங்கோ? அவ விட்ட கேளுங்கோ அவ ஏன் இப்படி சொன்னவ என்று?"

" உனக்கு சொன்னால் விளங்காதோ? அவள் உண்மையைத்தானே சொன்னவள்."

" என்னம்மா நீங்களுமா? அப்போ நான் உங்கள் பிள்ளை இல்லையா?"

" ஓமடா நீ என்ற பிள்ளை இல்லை. உனக்கும் இந்த வீட்டுக்கும் தொடர்பில்லை. இனி நீ இந்த வீட்டுக்கு வரக்கூடாது."

சுதனின் அம்மா சுதன் மீதிருந்த ஒட்டுமொத்த கோபத்தையும் கொட்டித் தீர்த்து விட்டார். அதனால் பெரும் ஆறுதல் பெற்றவர் போல பெரு மூச்செறிந்தார். சுதனின் உடுப்புப் பையொன்றை எடுத்து வந்து தூக்கி எறிந்தார். வீட்டு முற்றத்தில்.

" இனி நீ இஞ்ச வரக்கூடாது."

இது போல் பல தடவை நடந்திருக்கிறது. அப்போது எல்லாம் பேச்சோடு முடிந்து விடும்.இன்று வழமைக்கு மாறாக கொஞ்சம் கூடுதலாக உடுப்பு பையும் வெளியேறி விட்டது. கூடவே இனி வரக்கூடாது என்ற கட்டளையும்.

இதற்கு முன்னெல்லாம் தம்பியான கமலுடன் சுதனுக்கு சின்னச் சின்ன சண்டைகள் போடும் நிலைமை வரும். அப்போதும் நல்ல முறையான அடி வாங்கியது என்னவோ சுதன் தான். தவறு தம்பியிடம் தான் இருக்கும். தண்டனை என்னவோ சுதனுக்குத் தான்.

இப்படித் தான் ஒருமுறை காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரை மணல் முற்றத்தில் கட்டையொன்றில் கட்டிப் போடப்பட்டிருக்கிறான் சுதன்.

மணல் பரவிய தரை. நிலையாக இறுக ஆழமாக புதைக்கப்பட்ட கட்டை அது. சுதனின் கைகள் பின்பக்கமாக கட்டப்பட்டு கட்டையுடனும் பிணைக்கப்பட்டான். அசைந்து கொள்ள முடியாது.மேல்ச்சட்டைகழற்றப்பட்டு வெறுங் காலுடன் விடப்பட்டான். கட்டிப் போட்டது அவனது அம்மா. காரணம் தான் ஆச்சரியம். தம்பியாருடன் அடிபட்டது.

இது சுதன் ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது நடந்தது.

இதை விட சுதன் சின்ன வயதில் அவனுடைய அம்மா கிணற்றில் அவனை தூக்கிப் போட்டிருந்தாராம். நல்ல வேளையாக அயல் வீட்டார் கண்டு கொண்டதால் விரைவாக செயற்பட்டு காப்பாற்றப் பட்டான்.

ஏன் தான் இப்படி சுதனோடு அவனது அம்மா நடந்து கொள்கிறார்?

சுதன் உண்மையில் அவரது மகன் இல்லை. சுதனது அம்மா கலாவுக்கு பெண் பிள்ளைகள் என்றால் பிடிக்காது. ஆனால் அவரது மூத்த பிள்ளை பெண்ணாக பிறந்து விட்டாள். அவரது அப்பா ஊரில் பெரிய பணக்காரர். அவரது செல்வாக்கால் வைத்தியசாலையில் சுதனோடு சம நேரத்தில் பிறந்த கலாவின் மகளை மாற்றிக் கொண்டு விட்டார்கள். இதனால் சுதன் இவர்கள் பிள்ளையாக வளர வேண்டியதாயிற்று.

அந்த பெண் பிள்ளை புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

கலாவுக்கு அடுத்த வருடம் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது தான் கமல். இப்போது நமக்கொரு ஆண் குழந்தை இருக்கிறது. அடுத்தவன் குழந்தை எதற்கு? என்ற உள்ளுணர்வு கலாவின் மனதில் தோன்றியது போலும்.

பொழுது மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது. சுதன் சாய்ந்து படுத்திருந்ததை கவனித்து அவசர மருத்துவ ஊர்திக்கு யாரோ தகவல் கொடுத்திருக்க வேண்டும். வந்து அவனை ஏற்றிக்கொண்டு விரைந்தது வைத்தியசாலைக்கு.

நதுநசி ...

# கவிஞர் கலைக்கொழுந்தன் கல்முனையில் காலமானார்



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் கவிஞருமான கலாபூஷணம் கலைக் கொழுந்தன் கடந்த வியாழனன்று காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 73 ஆகும்.

கல்முனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த இவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையாராவார். திடீர் சுகவீன முற்ற நிலையில் இவர் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, அவரது இல்லத்தில் நடைபெற்று, கல்முனை இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. எழுத்தாளன், கவிஞன், பகுத்தறிவு பாசறையின் பண்பாளன், பேரிலக்கிய ஆளுமை, சிறந்த அரசியல் பேச்சாளர்.... என பன்முக ஆளுமை கொண்ட கலைக்கொழுந்தன், அடக்கத்தின் அடையாளமாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட பெருமைக்குரிய சிந்தனையாளன்.

வறுமை வாட்டிய பொழுதிலும், எழுத்தையும் வாசிப்பையும் இலக்கியத்தையும் உயிர் மூச்சாக நேசித்த ஒரு கனவான். தந்தை செல்வா, அமரர் அமிர்தலிங்கம், அமரர் வேல்முருகு மாஸ்டர்... ஆகியோர் வழியில் தன் கொள்கையை வகுத்து செயல்பட்ட கலைக் கொழுந்தன், இறுதி மூச்சு வரை சோரம் போகாத கொள்கை வாதியாகவே திகழ்ந்தார். 1974ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து தமிழரசு கட்சியின் தீவிர செயல்பாட்டாளராக இருந்த கலைக் கொழுந்தன், தமிழ் தேசியத்திற்காக என்றும் தன் குரலை உயர்த்திப் பேசியவர்.

இவருடைய கலை இலக்கிய பணிகளை பாராட்டி, அரசாங்கம் 2013 ஆம் ஆண்டு இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கி கௌரவித்தது.

மூத்த எழுத்தாளரான கலைக் கொழுந்தன், கவிஞர் மு. சடாச்சரனின் சகலனும், கவிஞர் அமரர் கல்முனை பூபாலின் ( நீலா பாலன் ) அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகளில் பெருந்திரளானோர் கலந்து கொண்டார்கள்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 55

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | ■ | 04 | 05 | |
| 06 | | | ■ | 07 | | | ■ |
| | ■ | 08 | | | ■ | | ■ |
| ■ | 09 | | ■ | | ■ | 10 | 11 |
| 12 | | ■ | 13 | | | ■ | |
| | ■ | 14 | | | ■ | ■ | ■ |
| 15 | | | | ■ | 16 | | 17 |
| | ■ | | ■ | 18 | | ■ | |

திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................
.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 54
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 55

**இடமிருந்து வலம்**

1. இலங்கையிலுள்ள ஒரு ஆறு
4. உறவின் பிணைப்பு, பற்று
6. ஆடை (குழம்பியுள்ளது)
7. தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ளாத அடக்கத் தன்மை
8. இனிப்பான தின் பண்டம்
9, நீரில் மட்டுமல்ல நிலத்திலும் வாழும் உயிரினம்
10. மழைக்கு மட்டுமல்ல வெயிலுக்கும் இது தேவை
12. வீடு அல்லது கட்டடத்தின் மேல்தளம்
13. முழுமையின் ஒரு பிரிவு
14. சாப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும் பாத்திரவகை
15. கடல்பயணத்துக்குத் தேவையானது
16. உலகம் போற்றும் தமிழ்க் கவிஞர்
18. இடுப்புடன் இணைந்த உடற்பகுதி

**மேலிருந்து கீழ்**

1. சக்திவாய்ந்த தன்மை
2. உடல் உறுப்புக்களில் ஒன்று
3. ஒன்றை நிறைவேற்றக்கூடிய ஆற்றல்
4. இறுக்கமான திரவப் பதார்த்தம்
5. அடிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது
7. பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து வாழும் சமூக அமைப்பு (குழம்பியுள்ளது)
9. ஒரு தமிழ் மாதம்
11. வெப்பம் மிகுந்த காலம் (தலைகீழ்)
12. பாடசாலையில் கல்வி கற்பவன்
13. சக்தி, வலிமை
14. திருட்டு
16. இவர் மன்னனாக இருந்தாலும் கொடை வள்ளல்
17. மனிதர்களையும் மிருகங்களையும் பிரிக்கும் பகுப்பு முறை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 54

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அவமானம் 4. அவா 6. பூமாலை
7.பானம் 8. நிச்சயம் 9. வதந்தி
12. பாரம் 13. சமம் 15. மதியம்
18. மீன் 19. கூறை 20. சிசு
22. சரிவு

**மேலிருந்து கீழ்**

1. அபூர்வம் 2. வலை 3. மாமா
4, அபாயம் 5. வானம்பாடி 7. சரம்
8. நிதி 10. தமயன் 11. சந்தி
14. கூச்சம் 16. மறைவு 17. நிசி
18. மீதி 21. சுறா

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல் பரிசு (ரூ 500/) | இரண்டாம் பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| 1. எம்.ஏ.எப் அக்ஸா<br>இல 38/1 வெலகெதர வீதி,<br>பதுளை | 2. ஏ.சி. ஸ்ரீதரன்<br>அறை இல 45, லில்லி கெயார் ஹோம், 152, பருத்தித்துறை வீதி,<br>கோப்பாய் | 3. எப். நஸ்ரிபா<br>48/1 ஜீலானி வீதி,<br>தர்கா நகர் |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 54

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ. நஜிமுத்தீன்**
அக்கறைப்பற்று
**2. பி. பேரின்பராஜா,**
மட்டக்களப்பு
**3. எஸ் . தவநாயகி,**
மட்டக்களப்பு
**4. ரி. தக்கியா நூரி**
அக்கறைப்பற்று
**5. ஏ.டபிள்யூ.எம்.நியாஸ்**
மாவனல்ல
**6. ரஜினி சிவநாயகம்**
மட்டக்களப்பு
**7.சி. லவநாதன்**
பதுளை
**8. அனுராதா பாக்கியராஜா**
வெள்ளவத்தை
**9. எஸ்.எச்.எம். ஜிப்ரி,**
கொழும்பு 10
**10. எம். சித்ரவேல்,**
கொழும்பு 04

## விமர்சன பார்வையில் பிக்பொஸ்... 12ஆம் பக்க தொடர்...

இம்முறை சாமானியர்கள் இருவர் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். ஒருவர் ஷிவின், மற்றவர் தனலக்ஷ்மி. இருவருமே ஏனைய டி.வி மற்றும் சினமா பிரபலங்களுக்கு ஈடுகொடுத்து நின்றனர். சாதாரண மக்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கும் முறைக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. தனலக்ஷ்மி பாராட்டத்தக்க வகையில் தன்னை வெளிப்படுத்தினார். 'டாஸ்கு'களில் பெருமுனைப்பு எடுத்துக் கொண்டது சுவாரசியத்தை ஏற்படுத்தியது.

இந்நிகழ்ச்சியின் குறிப்பிடத்தக்க விஷயம், விக்ரமனின் பங்கு பற்றல், நலிந்தவர்களின் சார்பான வெற்றிகரமான பங்களிப்பாக அமைந்து நிகழ்ச்சியை மற்றொரு தளத்துக்கு அது எடுத்துச் சென்றது.

விக்ரமன் ஒரு பண்பட்ட மனிதர். நடிக்காமல் தானாகவே வாழ்ந்தார். எப்போதுமே சரியான பக்கத்தில் நின்று குரல் கொடுத்தார். அறம் பற்றி பேசினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர், அரசியலில் உள்ளவர், சாமானியருக்காக பேசக் கூடியவர் என ஒரு கொள்கை பற்றாளராக தன்னை வெளிப்படுத்தினார். விருப்பமானவருக்கு கடிதம் எழுதுங்கள் எனச் சொல்லப்பட்டபோது வீட்டார் தத்தமது குடும்பத்தவருக்கு கடிதங்களை எழுதியபோது விக்ரமன் மட்டுமே அம்பேத்கருக்கு கடிதம் எழுதினார். உணர்ச்சிவசப்பட்ட கமல்ஹாசன் கண் கலங்கி தான் மகாத்மா காந்திக்கு எழுதிய கடிதத்தை கொண்டு வந்து படித்துக் காட்டியது நெகிழ்ச்சியான தருணம்.

விக்ரமனின் நடவடிக்கைகளைப் பார்த்தவர்கள், பிக்பொஸ் விருதைத் தட்டிச் செல்பவர் விக்ரமனாகத்தான் இருப்பார் என்றும் பரிசுப் பணம் பயன்தரும் வகையில் பயன்படுத்தப்படும் என்றும் நம்பினார்கள். அவர் வெற்றிபெற வேண்டும் என்றே கமல்ஹாசன் விரும்பியிருக்கக் கூடும் என்பதையும் ஓரளவுக்கு அனுமானிக்க முடிந்தது. மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியை கூட்டணியில் கொண்ட தி.மு.க தனது ஆட்சியை 'திராவிட மொடல் ஆட்சி' என அழைத்துக் கொள்கிறது. திராவிடர் கழகம், வைகோவின் மறுமலர்ச்சி தி.மு.க மனிதநேய மக்கள் கட்சி மற்றும் பல திராவிட அமைப்புகள் தி.மு.க ஆட்சிக்குப் பின்னால் உள்ளன. எனவே இச்சக்திகள் அனைத்தும் சீமான் உட்பட கூட்டாக ஏற்படுத்தக் கூடிய ஒரு சிந்தனைச் சூழல் விக்ரமனுக்கு சாதகமான நிலையை உருவாக்கும் என்ற நினைப்பே, விக்ரமனே வெற்றியாளர் என்ற வெகுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அபிப்பிராயம் வேறு, வாக்களிப்பது வேறு என்பதை முடிவில் நாம் அறிந்து கொண்டோம். நியாயமான செயற்பாடுகளுக்கு தமிழர் மத்தியில் ஈர்ப்பு குறைவுதான் என்பதை விக்கிரமனின் தோல்வி நிரூபித்திருக்கும் அதே சமயம், சிறுமைப்படுத்தல், வெற்றுக் கூச்சல், கத்திப் பேசுதலுக்குதான் மக்கள் ஆதரவு என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

வெற்றி பெற்றவர் அஸீம், அவர் வெற்றி பெறுவதற்கான விசேட தகுதிகள் எவை என்றால் எதுவும் இல்லை. உள்ளே இருந்த நூறு நாட்களும் அவர் தனக்கான வசதிகளை எல்லாம் ஒழுங்காகக் கிடைப்பதை உறுதி செய்து கொண்டார். நன்றாக சாப்பிட்டார். வசதியாக அமர்ந்து கொண்டார். கடினமான 'டாஸ்கு' களில் அதிக முனைப்பு காட்டவும் இல்லை; வெற்றி அடையவும் இல்லை. நூறு நாட்களில் அவர் செய்தது எல்லாம் கோபம் மேலிட கத்திக் கத்தி சண்டை போட்டதும், பெண்களை கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களால் திட்டியதும் பின்னர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதும்தான். தன் பெருந்தொடைகளை காட்டிக் கொண்டு திரிந்ததற்கு தண்டனையாக தொடர்ந்து சாரி அணியும் படி யஷீகா ஆனந்துக்கு பிக்பொஸ் தண்டனை விதித்ததைப் போலத்தான் சதா தன்னை அலங்கரித்துக் கொண்டு டிப்டொப்பாக காட்சியளித்த அஸீமுக்கு சாரமும் பனியனும் அணியச் செய்தார் பிக்பொஸ்!

அஸீமைப் போலவே வாயாடியாகத் திரிந்த மற்றவர் மணிகண்டன். மறுபடி வீட்டுக்குள் வந்த மகேஸ்வரியுடன் மிக அசிங்கமாகக் கத்தி சண்டையிட்ட மணிகண்டன் பலரின் வெறுப்புக்குள்ளானார். இவரை எல்லாம் ஏன் பிக்பொஸ் சேர்த்துக் கொண்டனர் என பலர் சலித்துக் கொண்டனர். இந்த பிக்பொஸில் மணிகண்டன் ஒரு "வேஸ்ட்" என்பதோடு தன் தங்கை ஐஸ்வர்யா ராஜேசுக்கு அவர் பெயர் சேர்க்கவும் இல்லை. எனினும் அவராலும் 83 நாட்கள் தாக்கு பிடிக்க முனைந்ததும் குறிப்பிடத்தக்கது.

'பொம்பள சிரிச்சாப் போச்சு, புகையிலை விரிச்சாப் போச்சு' என்று சொல்வார்கள். இது பெண்கள் குறித்த மட்டமான விமர்சனங்களில் ஒன்று. பெண்கள் குறித்த அஸீமின் பார்வையும் இப்படித்தான் இருந்தது. அவரது வாய் நீளத்தால் கோபமடைந்த கமல், என்னால் 'ரெட் கார்ட்'' கொடுத்து வெளியேற்றவும் முடியும் என்றும் அஸீமை மிரட்டிப் பார்த்தார். கமலைக் கண்டதும் ஒடுங்குவதும், அவரது புத்திமதிகளை ஏற்பதாக பாவனை காட்டி சமாளிப்பதும் வழமை. திங்கட் கிழமையானதும் அறிவுரைகளை காற்றில் பறக்க விட்டு முருங்கை மரத்தில் ஏறி விடுவார். வீட்டில் இருந்தவர்கள் அஸீம் எப்போ வெளியேறுவார் என்ற எதிர்பார்ப்பில் இருக்க, அவரோ வெற்றிக் கனியை தட்டிப் பறித்துச் சென்றிருக்கிறார்.

யாருக்கு உங்கள் வாக்கு எனக் கருத்துக் கணிப்புக்காகக் கேட்டபோது பலபெண்கள் அஸீமுக்குத்தான் என்றார்கள். நெற்றியில் நாமம் அணிந்த ஒரு வயதான பெண்மணியும் அஸீமுக்குத்தான் என்றார்! மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

பிக்பொஸ்சில் எவ்வாறு விளையாட வேண்டும் என்று நன்றாக ஹோம்வேர்க் செய்து விட்டுத்தான் அஸீம் வந்திருக்கிறார் என்பதைத்தான் இது காட்டுகின்றது. கடந்த ஐந்து வருடங்களாக அவர் இதற்காகவே தன்னை அர்ப்பணித்தார் என்றும் ஊடகங்கள் சொல்கின்றன. எவ்வளவுதான் பணத்தைக்கொட்டிக் கொடுத்தாலும் புகழ் கிடைத்தாலும் எதிர்மறையான குணம் கொண்டவனாக தன்னை பதிவுசெய்வதென்பது சாமான்யமானதல்லவே. அஸீம் ஒரு கேம் ஷோவாக அதில் நன்றாக விளையாடியிருக்கிறார்.

## அந்தமான், நிக்கோபார்...

*(08ஆம் பக்கத் தொடர்)*

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளி லெப்டினன்ட் கவர்னர் அட்மிரல் டி கே ஜோஷி, பாதுகாப்புத்துறையின் தலைமைத் தளபதி அனில் சவுஹான் உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவில் அமைய உள்ள அவரது நினைவகத்தின் மாதிரியை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "அந்தமான் நிகோபாரில் உள்ள பெயரிடப்படாத 21 பெரிய தீவுகளுக்கு தனது முன்முயற்சியின் மூலம் பிரதமர் மோடி பெயர்களை வைத்துள்ளார். இந்தத் தீவுகளுக்கு இராணுவத்தின் மிக உயரிய விருதான பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களின் பெயர்களை வைத்திருப்பதன் மூலம், அவர்களின் தியாகம் பூமி உள்ளளவும் நீடித்து நிலைக்கும். அதோடு, இதன் மூலம் நமது இராணுவத்தின் உற்சாகம் மேலும் அதிகரிக்கும்" எனத் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வியாழக்கிழமை 2023.01.26 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5012 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,637,494.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 9 6 3 7 0 6

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1042 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,441,525.60
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 09 21 30 80

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1467 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,759,866.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 9 4 8 6 4 1

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 321 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,579,809.40
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 06 21 43 55 — விசேட இலக்கினம் கும்பம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1360 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 295,383,238.00
ஆங்கில எழுத்து B — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 04 25 53 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3254 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,946,520.40
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 06 53 56 65

## கேள்வி விலைகூறலுக்கான அழைப்பு

எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனிக்கு உரித்தான கீழ் நாடு (காலி மாவட்டம்) மற்றும் மேல் நாடு (கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டம்) தோட்டங்களின் இயந்திர உபகரணங்களின் பகுதிகள்/ இரும்பு மற்றும் சிதைவடைந்த பதார்த்தங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட கேள்வி விலைகள் கோரப்படுகின்றன.

குறித்த சிதைவடைந்த பதார்த்தங்கள், திவிதுர பெருந்தோட்டம் - எத்கந்துர (091-4943036)/ ஃபர்ன்லன்ட்ஸ் பெருந்தோட்டம் (051-4925011) சீன் பெருந்தோட்டம் (051-4925006) டன்ஸினன் பெருந்தோட்டம் (051-4925001) பூண்டுலோயா/ மெதகும்புர பெருந்தோட்டம் (051-4925019) வட்டகொட/ நியூ பீக்கொக் பெருந்தோட்டம் (081-4945056) நயாபான பெருந்தோட்டம் (081-4945061) - புசல்லாவ என்ற முகவரிகளில் அமைந்துள்ளதுடன், 2023 பெப்ரவரி 17 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை வார வேலை நாட்களில் கேள்விக்கான விண்ணப்பப்படிவம் பிணை வைப்புத் தொகை மற்றும் இதற்கான நிபந்தனைகள் தொடர்பான விபரங்களை எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் அல்லது குறித்த தோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2023 பெப்ரவரி 17 அன்று மாலை 4.00 இற்கு முன்னர் கேள்விக்கான விண்ணப்பங்கள் பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனிக்கு உரித்தாகும்.

**பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**எல்பிட்டிய பெருந்தோட்டக் கம்பனி,**
**09ஆம் மாடி,**
**எயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம்**
**இல. 01, 305, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**
**011-4693000**

## பெறுகை அறிவித்தல்

SPC

### இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் பொருட்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. அதேபோல் கேள்வி ஆவணங்களை ‘‘மெஹெவர பியச’’, 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வரவேற்பு கருமபீடத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி இலக்கம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| 01 | Tender for supply & Delivery of Printer Toners | AD/1/PT/09/2023 | 2023-02-15 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 2023-01-30 முதல் 2023-02-14 வரை |
| 02 | Tender for Computer Items | AD/1/CI/CB/ OSU/10/2023 | 2023-02-16 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 2023-01-30 முதல் 2023-02-15 வரை |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், ‘‘மெஹெவர பியச’’, 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி எனும் முகவரிக்கு மேற்கூறப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிடில் இந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி கோரல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**‘‘மெஹெவர பியஸ’’ 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 2320356-9**




1990 சுகப்படுத்தும் சேவை, ஆம்புலன்ஸ் சேவையானது மாநில சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாகும். தற்போது, நாடளாவிய ரீதியில் 297 ஆம்புலன்ஸ்களுடன், உயிர் காக்கும் பணியில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

இவ் உயிர் காக்கும் பணியில் ஈடுபட நீங்களும் தயாரா? அவ்வாறாயின் எம்மோடு இணையுங்கள்

### வரவேற்பாளர் மற்றும் நிர்வாக நிர்வாகி (Receptionist & Admin ExecutiveMT)

- PABX தொலைபேசிகளைக் கையாளும் மற்றும் தேவைக்கேற்ப சரியாக பரிந்துரைக்கும் திறன்.
- ஏனைய நிர்வாக மற்றும் செயலகப் பணிகளைப் புரிதல்.
- நிறுவன பிற சேவை நடவடிக்கைகளில் உதவுதல்.

தகுதிகள்

- க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன் (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்).
- அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
- 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

### IT நிர்வாகி (தரவு சேமிப்பு) - IT Executive (Database Executive)

- தரவு சேமிப்பு, நிர்வாகம், மேம்பாடு மற்றும் பராமரிப்பு
- மென்பொருள் மேம்பாட்டிற்கு தேவையான தரவுகளை வழங்குதல்
- மேலாண்மை முடிவுகளுக்குத் தேவையான நிலையான, நம்பகமான மற்றும் பயனுள்ள தரவுத்தளங்களைத் தயாரித்தல்
- தரவு பகுப்பாய்வு

தகுதிகள்

- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் அல்லது அதற்கு சமமான தகைமையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 03 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன் (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்).
- தரவு பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்தி திறன்.
- 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

### செயல்பாட்டு ஒருங்கிணைப்பு நிர்வாகி - Operations Coordinator

- செயல்பாட்டு மேலாளர் மற்றும் பிராந்திய மேலாளர்களுக்கு தேவையான ஆதரவை வழங்குதல்.
- அதிகபட்ச இரகசியத்தன்மையை உறுதி செய்து மிகவும் துல்லியதும் விரிவானதுமான அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் அக் கோப்புகளை முறையாகப் பராமரித்தல்.
- செயல்பாடுகள் தொடர்பான பிற சேவைகளுக்கு தேவையான ஆதரவை வழங்குதல்.
- அவசர சேவை செயல்பாட்டிற்குத் தேவையான பதிவுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பராமரித்தல்.

தகுதிகள்

- விரிவான அறிக்கைகளைத் தயாரிக்கும் திறன்.
- பகுப்பாய்வு திறன்.
- Microsoft Office தொகுப்பு தொடர்பான அறிவு (Word, Excel & PowerPoint).
- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்.ீ.நிறுவனம் ஒன்றில் நிறுவன நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன். (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்)
- அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
- 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

### தர பரிசோதனை நிர்வாகி - Quality Executive

- தரவு சேகரித்தல், பகுத்தாய்தல் மற்றும் அறிக்கைகள் தயாரித்தல்.
- கள மதிப்பீட்டு அறிக்கைகளை கண்காணித்தல்.
- கொள்வனவு செய்யப்படும் அனைத்து பொருட்களினதும் தரத்தை சரிபார்த்தல்.
- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆதரவினை வழங்குதல்.

தகுதிகள்

- சரியாகத் தரவுகளை பேணும் மற்றும் அறிக்கைகளைத் தயாரிக்கும் திறன்.
- க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 01 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன் (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்).
- அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
- 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

### விநியோக சங்கிலி மேலாண்மை நிர்வாகி - SCM Executive

- விநியோக அட்டவணைகளை ஏற்பாடு செய்தல்.
- களஞ்சியத்தில் போதுமான இருப்பு இருப்பதை உறுதி செய்தல்.
- சரியான நேரத்தில் பொருட்களை ஒழுங்கு செய்தல் மற்றும் பேக்கேஜிங் செயல்முறைக்கு தேவையான பொருட்களை பெற்றுத் தருதல்.

தகுதிகள்

- க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 03 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன் (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்).
- அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன்.
- 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

### நிதி நிர்வாகி - Finance Executive

- நிதி பதிவுகளை பேணுதல்.
- நிறுவன வரவு செலவு பட்டியல் தயாரிப்பில் உதவுதல்.
- வருடாந்த கணக்குகள் தயாரிப்புகளில் உதவுதல்.
- வாடிக்கையாளர்களை கையாளுதல்
- நிதி கையாளுதல் தொடர்பில் ஏனைய துறையினருடன் ஒத்துழைப்புடன் செயல்படுதல்.

தகுதிகள்

- ICASL, CIMA அல்லது அதற்கு சமமான தொழில்முறை தகுதியின் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்திருத்தல்.
- நிதி அல்லது கணக்கியல் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
- மேற்படி பதவியுடன் தொடர்புடைய, குறைந்தபட்சம் 03 வருட பணி அனுபவம்.
- வலுவான வாய்மொழி மற்றும் எழுத்துதொடர்பு திறன் (தமிழ் மொழி அறிவு மேலதிக நன்மையாக கருதப்படும்).
- அழுத்தத்தின் கீழ் வேலை செய்யும் திறன். 35 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்வீர்களாயின், உங்கள் சுயவிபரப்படிவத்தை 2023.02.12ஆம் திகதிக்கு முன்பாக careers@1990.lk என்ற மின் அஞ்சல் முகவரிக்கோ அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவன முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் போது, மின்னஞ்சலின் தலைப்பு வரியிலும், தபால் மூலம் அனுப்பும் போது கடித உறையின் மேல் இடது மூலையிலும் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

பிரிவுத் தலைவர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், 1990 சுகப்படுத்தும் சேவை அறக்கட்டளை,
இல. 415, கோட்டே வீதி, ராஜகிரிய.




## மேஷம்

ராசிநாதன் செவ்வாய் தனஸ்தானத்தில் வலிமையோடு அமர்ந்திருக்கின்றார். தொட்ட காரியங்கள் “பட் பட்” என்று முடியும். விரோதம் பாராட்டியவர்கள் கூட ஒரு கணம் யோசிப்பார்கள். 3, 6 க்கு உடைய புதன் 9ல் அமர்ந்து, 3ஆம் இடம் பார்க்கிறார். பத்திரிகை தொழில்நுட்பம் முதலிய துறைகளில் உள்ளவர்கள் நல்ல நிலையை அடைவார்கள். தனாதிபதி சுக்கிரன் தொழில் லாபஸ்தானத்தில் பிரவேசிப்பதால் வருமானத்தில் குறைவு இருக்காது. கணவன், மனைவி உறவுகளும் சிறப்பாகவே இருக்கும். மனதில் என்ன நினைக்கிறீர்களோ, அத்தனையும் வெளியில் கொட்டி விடவேண்டாம்.

## ரிஷபம்

வாரத்தின் பிற்பகுதியில் ராசிநாதன் சுக்கிரன் தொழில் ஸ்தானமாகிய கும்பத்திற்கு மாறுவது ஒரு சிறப்பான அமைப்புதான். சில காரியங்கள் மிக விரைவாக நடைபெறும். குடும்பத்தில் மங்கல காரியங்கள் நடைபெற வாய்ப்புண்டு. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு கிடைக்கக்கூடிய வாய்ப்புண்டு. அஷ்டமத்தில் மறைந்த புதன் தனது ராசியை பார்ப்பதால் குடும்பத்தில் சில எதிர்பாராத வாய்ப்புகள் மூலம் சந்தோஷம் பெருகும். 9ல் பகை வீட்டில் சூரியன் சனியோடு இணைந்து இருக்கின்றார். விரயாதிபதி செவ்வாய் ராசியில் அமர்ந்து இருப்பதால் தேவையற்ற விஷயங்களில் பணம் செலவாகும். பேச்சில் கவனமாக இருக்கவும். வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட வேண்டாம். பிரதோஷ வழிபாடு பலனளிக்கும்.

## மிதுனம்

சப்தம ஸ்தானத்தில் புதன். அவர் ராசியைப் பார்க்கிறார். தொழில் ஸ்தானத்தில் குரு ஆட்சியில் இருக்கிறார். இவைகளெல்லாம் மிக நல்ல அமைப்புகள். வருமானம் அதிகரிக்கும். தொழில் நன்றாக இருக்கும். குரு 5 ஆம் பார்வையாக குடும்பத்தைப் பார்க்கிறார். புதிய வாகனங்கள், ஆடை அணிகலன்கள் வாங்கும் யோகமும் உண்டு. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். லாபாதிபதி செவ்வாய், விரயம் ஏறியதால் ஒரு செயலை முடிப்பதற்கு நீங்கள் எதிர்பார்த்த தொகையைவிட கூடுதலாக செலவாகும். ராசிநாதன் பாதக ஸ்தானத்தில் இருப்பதால் எந்தச் செயலையும் தடை விதித்துத்தான் வாய்ப்பு தருவார். 10ஆம் இடத்தில் குரு இருப்பதால் தவிர்க்கமுடியாத இடமாற்றங்கள் ஏற்படும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் கோயிலுக்கு தவறாமல் செல்லுங்கள்.

## கடகம்

ராசிநாதன் சந்திரனின் நிலையைப் பார்க்கும் பொழுது, வாரத்தின் இரு நாட்கள் தவிர, மற்ற நாட்களில் நல்ல விஷயங்கள் நடக்கும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அது சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நல்ல லாபம் கிடைக்கும். 7ஆம் இடத்தில் இருந்து 8ஆம் இடத்திற்கு சுக்கிரன் வந்தாலும் கூட எந்த பாதகத்தையும் செய்யாது. தனாதிபதி சூரியன் ராசியைப் பார்ப்பதால் மனதில் சின்னச்சின்ன கவலைகள் அவ்வப்பொழுது வரும். எதையும் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தி சந்நிதிக்குச் சென்று அவரை வணங்குங்கள்.

## சிம்மம்

சுகாதிபதி செவ்வாய் 10ஆம் இடத்தில் இருந்து ராசியைப் பார்க்கிறார். உங்களுக்கு உதவவும் செய்வார். 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராசிநாதன் சில நல்ல நன்மைகளை உங்களுக்குச் செய்வார். தனாதிபதி பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் இருப்பதால் பணவரவுகளில் சிக்கல் இருக்காது. செயல்கள் சுறுசுறுப்பாக நடக்கும். காரணம் பாக்கியாதிபதி செவ்வாய், உங்கள் தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார். வாரத்தின் பிற்பகுதியில் சுக்கிர பகவான் கும்ப ராசிக்கு வந்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். 5க்குரிய குரு, 8ல் இருப்பதால் குழந்தைகள் விஷயத்தில் மனசஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

## கன்னி

தனாதிபதி சுக்கிரன் வாரத்தின் பிற்பகுதியில் கும்ப ராசியில் நுழைகிறார். ராசிநாதன் புதன் நான்கில் பலமாகி 10ஆம் இடத்தைப் பார்ப்பது சிறப்பான அமைப்புகள். சகோதரகாரகனான செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால் காரியங்கள் வெற்றி அடையும். பொருளாதார உயர்வு உண்டு. உத்தியோகத்தில் சுபமான திருப்பங்கள், பதவி உயர்வுகள் கிடைக்கும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு நீங்கும். உங்களிடம் மாறுபட்ட கருத்து உடையவர்கள் உங்களோடு இணைவார்கள். வெளிநாடு சென்று பொருள் சம்பாதிக்க வேண்டும் மற்றும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைவேறும். அஷ்டமாதிபதியான செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால் சில எதிர்பாராத விரயங்கள், சிறு இழப்புக்கள் ஏற்படும்.

## துலாம்

வார முற்பகுதியில் 4ஆம் இடத்தில் இருந்த ராசிநாதன் வாரத்தின் பிற்பகுதியில் 5ஆம் இடமான கும்ப ராசிக்குள் நுழைகிறார். உடல் நலம் நன்றாகவே இருக்கும். வீடு கட்டும் முயற்சி பலிக்கும். மற்றவர்கள் நன்கு ஒத்துழைப்பார்கள். கூட்டு முயற்சியால் சில வெற்றிகள் கிடைக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. அவர் உங்களுடைய தனஸ்தானத்தை பார்ப்பதால் ஓரளவு வருமானம் தொல்லை இல்லாமல் வரும். எது எப்படி இருந்தாலும் அஷ்டமத்தில் செவ்வாய் இருப்பதால் எதிலும் பேச்சு கொடுத்து மாட்டிக் கொள்ளக் கூடாது. விரயாதிபதி புதன் 3ல் இருப்பதால் விரயங்கள் கூடும். வீடு மாற்றம் உத்தியோக மாற்றம் முதலியவை நடைபெறலாம்.

## விருச்சிகம்

சப்தமாதிபதி சுக்கிரன் மகர ராசியிலும், கும்ப ராசியிலும் இவ்வாரம் இருக்கின்றார். லாபாதிபதி புதன் இரண்டில் இருக்கின்றார். இவை நல்ல அமைப்புக்கள். புதிய வேலைகளுக்கு முயற்சி செய்பவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். பாதியில் நின்ற காரியங்கள் மறுபடியும் தொடங்கும். நண்பர்கள் மகிழ்ச்சியான செய்திகளைச் சொல்லுவார்கள். தொழில் லாபம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை மிக விரைவாகச் செய்து முடித்து விடலாம். உத்தியோகத்தில் புதிய மாற்றங்களும் பதவி உயர்வும் கிடைக்கும். 12ல் கேது இருக்கின்றார். ஆறுக்குரிய செவ்வாய் 7ல் இருந்து ராசியைப் பார்க்கின்றார். கணவன் அல்லது மனைவி இவர்களுக்கு சிறு ஆரோக்கிய குறைவு ஏற்படலாம்.

## தனுசு

6,11க்குரிய சுக்கிரன் மூன்றாம் இடத்துக்குச் செல்லுகின்றார். ஏழுக்குரிய புதன் ராசியில் இருந்து 7ஆம் இடத்தைப் பார்க்கின்றார். அவர் தொழில்காரகரும்கூட. வெளிநாட்டு உத்தியோகம் தேடுபவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். ஏழு பத்துக்குரிய புதனால் உத்தியோக உயர்வு தானாக வரும். கணவன் மனைவி பரஸ்பர அந்நியோன்யம் அதிகரிக்கும். வீட்டில் சுபகாரியங்கள் நிச்சயமாகும். உறவுகள் வந்து சேரும். செவ்வாய் அமைப்பினால் சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். நல்ல கௌரவம் கிடைக்கும். புதிய பொறுப்புக்கள் வந்து சேரும். 5ஆம் இடத்தில் ராகு இருக்கின்றார். ராசிநாதன் குரு 4ஆம் இடத்தில் இருக்கின்றார். குருவுக்கும் புதனுக்கும் கேந்திர ஆதிபத்திய தோஷம் உண்டு.

## மகரம்

அஷ்டமாதிபதி சூரியன் மகர ராசியில் ராசி அதிபனோடு இருக்கின்றார். அவரோடு இணைந்த சுக்கிரன் வாரத்தின் பிற்பகுதியில் கும்பத்துக்கு பெயருகிறார். 4,11 க்குரிய செவ்வாய் பலமாக இருப்பது யோகம். நீங்கள் எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். திருமணம் போன்ற சுபகாரியங்களில் முனைப்பு காட்டினால் நிறைவேறும். உங்களை விட்டுச் சென்ற வாய்ப்புகள் தேடி வரும். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். சில இடமாற்றங்கள் உங்களுக்கு நன்மையே செய்யும். கணவன் மனைவி உறவில் பாதிப்பு இல்லை என்றாலும்கூட அது நீங்கள் விட்டுத் தந்து செல்வதால் மட்டுமே சாத்தியம். 6க்குரிய புதன் 12ஆம் இடத்தில் இருப்பது ஒரு விதத்தில் யோகம் என்றாலும்கூட, ஒரு விதத்தில் அது சில உடல் உபாதைகளைத் தரவே செய்யும்.

## கும்பம்

ராசிநாதன் விரயத்தில் இருப்பதும், சுக பாக்கிய அதிபதி சுக்கிரன் மிக விரைவில் ராசியில் நுழைவதும், ராசிக்கு 2ல் குரு இருப்பதும், நல்ல அமைப்புக்கள். புதிய முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் குடும்பத்தில் சந்தோஷமான சில சம்பவங்கள் நடைபெறும். எதிரிகள் விலகுவார்கள். தொழில் வளம் நன்றாக இருக்கும். பயணங்கள் பலன் தரும். பஞ்சமாதிபதி புதன் 11ல் பலம் பெறுவதால், உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகும். உங்களுக்கு உதவி செய்பவர்கள் அதிகரிப்பார்கள். நண்பர்களும் உதவுவார்கள் கலைத்தொழில் மற்றும் பத்திரிகை தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

## மீனம்

மூன்றுக்குரிய சுக்கிரன், வார இறுதியில் விரயத்துக்கு வருகின்றார். சுக்கிரன் விரயத்துக்கு வருவது நல்ல அமைப்புதான். எதிர்பாராத லாபத்தையும் நல்ல வாய்ப்புகளையும் மறைமுகமான சில வெற்றிகளையும் தரும். குரு பலம் பெற்று, ஏழைப் பார்ப்பதால் கணவன், மனைவி உறவுகள் நன்றாகவே இருக்கும். பொருளாதார நிலை ஏற்றம் தரும். வாரத்தின் முற்பகுதியில் உள்ளம் மகிழும் நல்ல செய்திகள் வரும். வாங்கிய கடன்களை அடைத்துவிடலாம். செவ்வாய் பலமுடன் இருப்பதால் எதையும் தைரியத்துடன் எதிர்கொள்வீர்கள். உடல் நலம் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். குடும்பத்தாரிடம் பாசம் அதிகரிக்கும்.

---

# மாத்தளை வடிவேலன்: மலையக இலக்கியத்தின் எரிநட்சத்திரம்

**'மாத்தளை எங்கள் மலையகத்தின் தலைவாயில். தமிழகக் கரையிலிருந்து பயங்கரப் படகுகள் மூலம் கடலைக் கடந்து, கொடிய கானகங்களுக்கிடையே கால்நடையாய் உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம் எங்கள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன். மலையக மக்களின் வரலாறு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலாற்றுடன் ஆரம்பமாகிறது” என்கிறார் மலையகத்தின் கல்விமான் அமரர் இர.சிவலிங்கம்**

இந்த மாத்தளை மண்ணை தன் சுவாசத்தில், மூச்சில், ரத்தநாளங்களில், சிந்தனையில் ஏற்றிப் பெருமிதம் கொள்பவர் மாத்தளை வடிவேலன். மாத்தளைப் பிராந்தியத்தில் அவர் காலடிகள் படாத இடமேயில்லை. அங்குலம் அங்குலமாக அந்தப்பிரதேசத்தை அளந்து வைத்திருப்பவர் அவர்; தெரிந்து வைத்திருப்பவர்; வடிவேலன் கிட்டத்தட்ட எழுபத்தைந்து ஆண்டுகளாக அந்த மண்ணோடு போராடி வந்திருக்கிறார். அந்த மண்ணில் நடந்து முடிந்த அரசியல் மாற்றங்கள், எழுச்சிகள், புரட்சிகர இயக்கங்கள், அடுத்தடுத்து தொடர்ந்து இடம்பெற்ற இன வன்முறைகள், அவற்றிற்கு எந்த நேரத்திலும் பலியாகும் மக்களாக குறிவைக்கப்பட்ட மலையக மக்கள், உண்ண உணவின்றி தமிழ்த் தொழிலாளர்கள் அந்த மண்ணை விட்டே வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட அவலம், தோட்டங்கள் அரச உடைமை ஆக்கப்பட்டபின், மாத்தளையின் பெருந்தோட்டங்களின் பொலிவே சிதைந்து போன கோலம், இன சௌஜன்யம் குலைந்து போன கொடுமை இத்தனையையும் அவர் கண்கூடாகக் கண்டிருக்கிறார். தன் நெஞ்சிலே தணல் கொண்டு திரிந்திருக்கிறார். தோல்வியையும் துயரத்தையும் சுமந்து கொண்டிருக்கிறார். மாத்தளை வீதிகளிலே அணிவகுத்துச் சென்ற ஊர்வலங்களில் அவர் முன்னணியில் நின்றிருக்கிறார். அரசியல் மேடைகளில் அவர் துணிவோடு முழங்கியிருக்கிறார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார். தோல்விகளைக் கண்டிருக்கிறார், துவண்டு போனதில்லை.

மாத்தளையில் உயிரோட்டம் மிக்க இலக்கியப் பாதையைச் செப்பனிடுவதில் அவர் மூலகாரணராயிருந்திருக்கிறார்.

மாத்தளையில் கே.முருகேசப் பிள்ளையும் ஷெய்கு கலைமானுல் காதிரியும் ஏற்றிவைத்த உன்னத இலக்கியச்சுடரை முன்னேந்திச் சென்ற பெருமகனாக மாத்தளை வடிவேலன் திகழ்கிறார். இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், பாரதியின் பேத்தி விஜயபாரதி, அவரது கணவர் சுந்தரராஜன், கு.அழகிரிசாமி ஆகிய இலக்கிய ஆளுமைகளுக்கு மாத்தளையில் செங்கம்பளம் விரித்து சிறப்புச் செய்த நிகழ்வுகளில் ஆர்வத்தோடு கலந்து கொண்ட இளைஞராக வடிவேலன் திகழ்ந்திருக்கிறார். மாத்தளை கார்த்திகேசு, மலரன்பன், அல் அஸூமத், கதிர்வேல், பூபாலன்,சி.கா.முத்து, ஆ.ராஜலிங்கம்,


மாத்தளை வடிவேலன்

பழனிவேல், கே.கோவிந்தராஜ், எச்.எச்.விக்ரமசிங்க, மாத்தளை சோமு என்று பேரணியுடன் செயற்பட்டவர் வடிவேலன். மாத்தளையின் இலக்கியப்பாரம்பரியத்தை முன்னெடுத்த முக்கிய ஒரு கண்ணியாக வடிவேலன் இலக்கிய வரலாற்றுக்குரியவராகிறார்.

மாத்தளையின் ஆன்மிகச் செழுமையின் போஷிப்பிலே ஊட்டம் பெற்று, நிறைவு காணும் பக்குவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. மாத்தளையின் புனிதத் திருத்தலமாகக் கருதப்படும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரகார வெளியில் ஆத்ம லயிப்பில் சுகிப்பவர் அவர். மாத்தளையின் வால்ராசா கோயில், வெட்டரி வால்சாமி, எழு கன்னியம்மன் கோயில், முனியாண்டி, வேட்டைக்கறுப்பன்,இடும்பன், வைரவர் கோயில், தொட்டிச்சியம்மன் கோயில், ஊமையன் கோயில் என்று மாத்தளையில் குடிகொண்டிருக்கும் தெய்வங்கள் எல்லாம் அவர் நெஞ்சிலும் குடிகொண்டுள்ளன.

மலையக நாட்டுப்புறவியலில் முதன்மை ஆய்வாளராக மாத்தளை வடிவேலன் சிறப்புப் பெறுவதற்கு அவரது 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' (1997), 'மலையக நாட்டுப்புறவியலில் மாரியம்மன்'(2007), 'மலையக பாரம்பரியக் கலைகள்' (1992) ஆகிய நூல்கல் சாட்சி சொல்லவல்லன. 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' என்ற மாத்தளை வடிவேலனின் நூல் 'ஒரு அசாத்திய தீமிதிப்பு' என்று எழுதினார் இர.சிவலிங்கம். இந்துசமய இராஜாங்க அமைச்சு நடத்திய நாட்டுப்புறவியல் கருத்தரங்கில் 'காமன் கூத்தும் மலையக மக்களின் சமூக வாழ்வில் அதன் பங்களிப்பும்' என்ற பொருண்மையில் மாத்தளை வடிவேலன் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரை அறிஞர்களின் பாராட்டைப்பெற்ற கட்டுரையாகும். தனது ஆய்வுப்பொருளின் மீது ஆழ்ந்த ஈடுபாடும், தோட்ட மக்களுடன் அவர் கொண்டுள்ள இடையறாத தொடர்ந்த நெருக்கமும் கள ஆய்வுகளில் அவருக்குப் பெருந்துணையாய் அமைந்துள்ளன.




பதினைந்து ஆண்டு காலம் இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சில் கலாசார உத்தியோகஸ்தராகப் பணியாற்றிய காலப்பகுதியில் மலையகத்தின் ஆலயங்கள் பற்றிய மிகத் துல்லியமான தவல்களை அவர் சேகரித்துக்கொண்டிருந்தார். தோட்டங்கள், ஆலயங்கள் என்று தொடர்ந்த களப்பணியில் ஈடுபட்டிருந்ததால் மலையகத்தின் தொன்மங்கள், ஐதீகங்கள், தெய்வ வழிபாட்டு முறைகள், மக்கள் நம்பிக்கைகள் போன்ற அனைத்து வாழ்வியல் கோலங்களோடும் வடிவேலன் பின்னிப்பிணைந்தவராக மிளிர்ந்தார்.



இளமையில் சகல அமைப்புகளையும் கண்டனத்தோடு நோக்கிய வடிவேலன், பின்னால் அவை அனைத்தோடும் இணைந்து செயற்படுவதன் மூலமே மலையக மக்களுக்குக் காரிய சாத்தியமான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று நம்பிச் செயற்பட்டார்.

தீவிர சமூகச் செயற்பாட்டாளரான வடிவேலன் 1974இல் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ், நோர்த் மாத்தளையில் தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர்கள் வீதிகளுக்கு வந்த நிலையில் அவர்களின் ஜீவமரணப் போராட்டத்தை கண்கூடாகக் கண்டார். நாடு என்றும் காணாத உணவு நெருக்கடியில் சிக்கியிருந்தது. ஒரு கட்டத்தில் அரசாங்கத்திடம் இலங்கை மக்களுக்கான உணவுப்பொருட்களின் கையிருப்பு வெறும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. உணவு விநியோகம் ஒவ்வொரு கிழமையையும் எவ்வாறு தாக்குப்பிடிப்பது என்ற அளவிலேயே நடந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் மாத்தளையில் மகாவெலகந்த, மடவெளை 1ஆம், 2ஆம் தோட்டங்களைச் சேர்ந்த 210 குடும்பங்கள் வேலை இழந்து, காசும் இல்லாமல், ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும் வழியின்றி அல்லலுற்ற நேரத்தில்,அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் உடனடி நடவடிக்கையில் எச்.எச்.விக்ரமசிங்க, மாத்தளை வடிவேலன்,பாக்கியம் செல்லப்பா, கதிர்வேல், மலரன்பன், கே.வேலாயுதம், சந்தனம் கிருஷ்ணன் ஆகியோர் இணைந்து துரித கதியில் செயற்பட்டதை நோர்த் மாத்தளை மக்கள் இன்றும் நினைவு கூர்வர்.

அப்போது உணவு விநியோக ஆணையாளராக இருந்த எஸ்.பத்மநாதனை எச்.எச்.விக்ரமசிங்க சந்தித்து, நிலைமையை விளக்கி, அவர் உடனடியாகவே இந்த மக்களுக்கு உதவிட முன்வந்தார். அப்போது பிரதி ஆணையாளராக இருந்த எம்.எல்.எம்.மரைக்கார் பெருங்கருணையுடன் இந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். இந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக 2 கொத்து அரிசியும் சீனியும் இலவசமாக விநியோகிக்குமாறு மரைக்கார் மாத்தளை அரசாங்க அதிபர் சிறில் கமகே அவர்களுக்கு ஆணை பிறப்பித்தார். கடந்து போன ஒரு மாதத்திற்குமான உணவும் அவர்களுக்கு சேர்த்து வழங்கப்பட்டது. இந்தத் தோட்டங்களிலிருந்த தொழிற்சங்கங்கள் இந்தப் பிரச்சினையைக் கண்டு கொள்ளவேயில்லை. தனி மனிதர்களாக அத்தருணத்தில் இவர்கள் செய்த சமூகப்பணி போற்றத்தக்கது என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமல்ல அரசு மகாவெலகந்த, மடவளை தோட்டங்களை சுவீகரித்த கையோடு, அத்தோட்டங்களில் இயங்கிக்கொண்டிருந்த தோட்டப் பாடசாலைகளை மூடிவிட்டன.

இந்தத் தோட்டப்பாடசாலைகளில் பயின்று கொண்டிருந்த மாணவர்களின் கல்வி இடைநிறுத்தப்பட்டது. இப்பாடசாலைகளை மீண்டும் தொடங்கிட அப்போது தம்புள்ள பாராளுமன்றத் தொகுதியின் பிரதிநிதியாகவும் கலாசார அமைச்சராகவும் இருந்த டி.பி.தென்னக்கோனிடம் மனுவைச் சமர்ப்பித்து, அவர் கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்த ரிச்சர்ட் உடுகமவுக்கு உத்தரவு பிறப்பித்து, மீண்டும் தோட்டப் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. இவற்றிற்கு ஆதாரமாக இருந்து செயற்பட்டவர்கள் எச்.எச்.விக்ரமசிங்கவும் மாத்தளை வடிவேலனுமே ஆவர். அமைச்சர்களாக, அமைச்சின் உயர் பதவியில் அமர்ந்திருப்பவர்களாக ஆற்றப்பட்ட பணிகள் அல்ல இவை.

வெறுஞ் சாமானியர்களாக, எந்த விசிட்டிங் கார்டும் இல்லாதவர்களாக அதிகார பீடங்களை நாடி, ஏழை எளியவர்களுக்காகப் போராடியவர்கள் இவர்கள் இரண்டு கொத்து அரிசி வாங்கிக் கொடுத்ததாக இருக்கட்டும், பதவி உயர்வுக்காக அமைச்சரிடம் மனு கொண்டு போவதாக இருக்கட்டும், இம்மாதிரிச் சின்னச்சின்ன வேலைகளை எல்லாம் எடுத்துப்போட்டுக் கொண்டு வேலை செய்யும் மனம் பெரிது.

மிகுதி அடுத்தவாரம்.



மு.நித்தியானந்தன்
லண்டன்

# டெங்கு நுளம்பும் - ஒமிக்ரோன் வைரஸ் தாக்கமும்

நாம் தற்காலத்தில் பல சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருக்கிறோம். ஒன்றன் பின் ஒன்றாக காலத்துக்கு காலம் வரும் நோய்களும் வைரஸ் தாக்கங்களும் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சிகைகளுமென மக்கள் ஆடிப் போயுள்ளனர். எதற்கு முகம் கொடுப்பது என்றொரு மயக்க நிலையில் வாழ்க்கை இழுபட்டுப் போய்க் கொண்டிருக்கிறது.

நாம் இங்கே ஒமிக்ரோன் வைரஸுக்கும் டெங்கு வைரஸுக்கும் என்ன வித்தியாசம் என்று கண்டறியலாம்.

மேலும் எமது நாட்டை பொறுத்தவரையில் இவை சம்பந்தமான விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே காணப்படுவதையிட்டு நாம் மிகவும் கவலைப்பட வேண்டியுள்ளது. ஏனென்றால் சுகாதார துறையின் அறிவுரைகளை பூரணமாக பின்பற்றாமையே இதற்கு காரணமாகும். சரியான முறையில் சுகாதார துறையின் அறிவுரைகளை ஏற்று நாம் பின்பற்றுவோமானால் இந்த இரு வைரஸ் நோய்களையும் விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

ஒமிக்ரோன் டெங்கு போன்ற வைரஸ் நோய்களை பல வழிகளை கொண்டு பிரித்தறியலாம். கொவிட்டை பொறுத்தவரை காலத்திற்கும் அதன் வைரஸ் தாக்கத்திற்கும் ஏற்ப பெயரிடப்படுகிறது. உலக நாடுகளில் கொவிட் 19 வைரஸானது மிகவும் வேகமாக பரவி பல லட்சக்கணக்கான உயிர்களை காவு கொண்டதை எம்மால் மறக்க முடியாது. இதன் தாக்கம் பல கோணங்களில் உயர்வடைந்து காணப்பட்ட நிலையில் W H O கூட கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதை நாம் அறிவோம். என்றாலும் இதனை கட்டுப்படுத்துவதற்கு W H O கையாண்ட சுகாதார வழிமுறைகள் மிகையாகாது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவ உயர் அதிகாரிகளின் பங்களிப்பும் மிகையாகாது.

மேலும் டெங்கு வைரஸ் இக் காலகட்டத்தில் மிகவும் வேகமாக பரவியதால் இரண்டுக்கும் வித்தியாசம் காண்பது மிகவும் சிக்கலான விடயமாக காணப்பட்டது. ஒமிக்ரோன் வைரஸானது தீவிர காய்ச்சல். தடிமல், மூச்சு திணறல் உடலில் தாங்க முடியாத வலி, உடல் சோர்வு என இன்னும் பல காரணிகளை உள்ளடக்கியது.

அத்தோடு நாட் செல்ல பசியின்மை, தாங்க முடியாத இருமல், அதாவது சளித்தன்மை அதிகரித்து நியூமோனியா என்ற நோயுடன் கலந்து பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும். இதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்காவிட்டால் இறுதியில் மரணம் நேரலாம்.

டெங்கு வைரஸை பொறுத்தவரை தொடர்ந்து 3 நாளைக்கு மேல் காய்ச்சல் காணப்படும். அத்துடன் உடம்புவலி தலைவலி குமட்டல் என்ற பொதுவான காரணிகள் இருக்கும். டெங்குவில் தடிமன் மூச்சுத்திணறல் குறைவாக இருக்கும். ஆனால் மூன்று நாட்களின் பின்பும் காய்ச்சல் குறையாவிட்டால் இரத்தப் பரிசோதனை அவசியமாகும். இதனை கட்டுப்படுத்துவதற்கு டெங்கு ஒழிப்பு செயலணி உருவாக்கப்பட்டாலும் ஒழுங்கான சுகாதார வழிமுறைகளை பேணாமல் இருப்பதனால் டெங்கு தன்மை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மேற்குறிப்பிட்ட வைரஸை கண்டறிவதற்கு ஆய்வு கூட பரிசோதனை அதாவது இரத்தப் பரிசோதனை அவசியமாகும்.



இரத்தப் பரிசோதனை றிப் போட்டை பொறுத்தவரை கொவிட் 19 வைரஸில் WBC, CRP எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படும். டெங்கு காய்ச்சலை பொறுத்தவரையில் WBC/DC மற்றும் பிளட் கவுண்ட் மிகவும் குறைவாக காணப்படும். அத்துடன் ஈமோகுளோபின் அதிகரித்தும் காணப்படும். இதனை மேலும் உறுதிபடுத்திக் கொள்வதற்கு DENGUE ANTIGEN TEST மிகவும் பயனுள்ளதாக அமையும்.

டெங்கு காய்ச்சலை பொறுத்தவரை மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை ஒழுங்காக பேணுவதில்லை. அதாவது உரிய முறையில் கழிவுகளை அகற்றுவதிலும் வீதியோரங்களில் கழிவுகளை போடுவதிலும் மழைக்காலங்களில் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதிலும் அசமந்த போக்கை கடைபிடித்ததனால் டெங்கு தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தங்களது வீட்டுச் சூழலை மட்டும் சுத்தமாக வைத்திருப்பதனால் டெங்கின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது.

அவ்வூர் பிரதேசவாசிகள் ஒன்று சேர்ந்து டெங்கு நோயை உருவாக்கும் காரணிகளை கண்டறிந்து அவற்றை சிரமதான முறையில் ஒழுங்காக அகற்றுவதன் மூலம் நுளம்பின் தாக்கத்தை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். அத்தோடு பெரும்பாலான மக்கள் ஆஸ்பத்திரியை நாடினாலும் பலர் வீட்டிலேயே இருந்து இதன் தாக்கத்தை கட்டுப்படுத்த நினைத்து இறுதியில் மரணம் வரை செல்கின்றனர். இது மிகவும் தவறான முடிவாகும்.

கொவிட் 19 வைரஸை பொறுத்தவரை தற்போது ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும் பலர் இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கான காரணம் தடுப்பூசி சம்பந்தமான ஒரு மாயத் தோற்றப்பாடாகும். இது தவறான அபிப்பிராயமாகும். இது சம்பந்தமான சரியான விழிப்புணர்வை வழங்க வேண்டியது சுகாதார துறையின் கடமையாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தின் காரணமாக மக்கள் மத்தியில் இதன் தாக்கம் பெரிதாக எடுபடவில்லை. சுகாதார துறையின் அறிவுறுத்தல்களை ஒருசிலர் கூட பின்பற்றுவதில்லை. தற்போதைய தகவலின்படி சீனாவில் மறுபடியும் கொவிட்டின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக ஊடகங்கள், முகநூல் வாயிலாக அறியக் கிடைக்கிறது. எமது நாட்டை பொறுத்தளவில் கடந்த காலங்களில் 17 ஆயிரம் பேர் மரணமடைந்ததையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஆபத்தான அனைத்து தொற்றுநோய்கள் மற்றும் வைரஸ் தாக்கங்களிலிருந்தும் எம்மை பாதுகாத்து கொள்ள வேண்டும். நம்மையும் சூழலையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வைத்தியதுறையின் ஆலோசனைகளை சரியான முறையில் பின்பற்றி நடக்க வேண்டும். அனைவரும் ஆரோக்கியமான முறையில் நல்ல சுகதேகிகளாக வாழவேண்டும்.

**டொக்டர் எஸ்ஏ.சீ.எம் அனஸ்**
**தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை**
**பொரளை**


## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

# வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். காப்புறுதித் துறையில் தனியார் காப்புறுதியாளர்களின் மீள்நிதியளிப்பு அமர்வு, 16 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமைமிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் (HM 1-3)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம் அல்லது வேறு ஏதாவது அது சார்ந்த பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **அத்துடன்**

   முகாமைத்துவத் துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத் தகைமை

   **அல்லது**

   பதவிக்குரித்தான பாடப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் இணை அங்கத்துவம்.

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவம்

2. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம்

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

**மேற்கூறப்பட்ட தகைமைகள்**

**அல்லது**

பதவிக்குரித்தான விடயப்பரப்பில் முகாமைத்துவ வகுதி 1ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவம்

**சம்பள அளவு** : HM 1-3 -2016: ரூபா 86,865 - 15 x 2,270 – 120,915

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 2. முகாமையாளர் - மீள்காப்புறுதி மற்றும் SRCC (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் / நிர்வாகம் / விஞ்ஞானம் / எண்கணிதம் / பொருளாதாரம் அல்லது அதுசார்ந்த துறையில் ஒரு இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

பட்டப் பின்படிப்புத் (Masters) தகைமை

**அல்லது**

தொழில்சார் காப்புறுதி அமைப்பொன்றின் இணை அங்கத்துவம்

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [80,295 - 15 x 2,270 – 114,345]

**வயது** : 30 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 3. முகாமையாளர் - எழுத்துறுதி (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் / நிர்வாகம் / விஞ்ஞானம் / எண்கணிதம் / பொருளாதாரம் அல்லது அதுசார்ந்த துறையில் ஒரு இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

பட்டப் பின்படிப்புத் (Masters) தகைமை

**அல்லது**

தொழில்சார் காப்புறுதி அமைப்பொன்றின் இணை அங்கத்துவம்

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [80,295 - 15 x 2,270 – 114,345]

**வயது** : 30 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 4. முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு இளமாணிப் பட்டம்.

**அத்துடன்**

பட்டப் பின்படிப்புத் (Masters) தகைமை

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [80,295 - 15 x 2,270 – 114,345]

**வயது** : 30 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 5. உண்மை முகாமையாளர் (Actuarial Manager) (HM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உண்மை விஞ்ஞானம் / எண் கணிதம் / புள்ளிவிபரவியலில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது அதுசார்ந்த வேறு ஏதாவது பட்டம்

**அத்துடன்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

**சம்பள அளவு :**

MM 1-2 - 2016: ரூபா [54,550 - 10 x 1,375 - 15 x 1,910 - 96,950]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 6. உதவி முகாமையாளர் - சட்டம் மற்றும் பணிப்பாளர் சபையின் செயலாளர் (MM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

அரசாங்க சேவையில், ஒரு கூட்டுத்தாபனத்தில், நியதிகள் சபை / நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுனத்தில் ஒரு வருட காலம் தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் (JM) பதவியில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 7. உள்ளகக் கணக்காய்வாளர் (MM 1-2)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், வர்த்தகம், நிதி, நிதி முகாமைத்துவம், வியாபார நிர்வாகம் அல்லது வியாபார முகாமைத்துவத்தில் ஒரு இளமாணிப் பட்டம்

   **அத்துடன்**

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்குரித்தான தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

2. பதவிக்குரித்தான பாடப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

   **அத்துடன்**

   பதவிக்குரித்தான தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் (JM) பதவியில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 8. பெறுகை அதிகாரி (JM 1-1)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வியாபார நிர்வாகம், வர்த்தகம், நிதி, சந்தைப்படுத்தல், கணக்கியல், போக்குவரத்து மற்றும் வழங்கல் முகாமைத்துவம், வழங்கல் வலையமைப்பு முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவ துறை தொடர்பான இளமாணிப் பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA1), II தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : JM 1-1 – 2016: ரூபா [42,600- 10 x 755 - 18 x 1,135 – 70,580]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### 9. இணக்க அதிகாரி (JM 1-1)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், வியாபார நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், முகாமைத்துவக் கல்வி அல்லது சட்டம் தொடர்பான இளமாணிப் பட்டம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA1), II தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : JM 1-1 – 2016: ரூபா [42,600- 10 x 755 - 18 x 1,135 – 70,580]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

இந்த நியமனம் நிரந்தர நியமனமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

சகல விண்ணப்பதாரர்களும்

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிக் சட்டச்சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களையும் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2023.02.13ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02.**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

Suzuki Hustler 2017, உடனடி விற்பனைக்கு உண்டு CBF-XXXX, 2வது உரிமையாளர் மிக சிறந்த நிலையில் 81, 000km - 0777853469 005977

### 117 வேன்கள் விற்பனைக்கு

டொயோட்டா LH 113 Long Dolphin 1991/1994, 4 கதவுகள் அலோய்வீல் A/C ரூ.46/50 0779477407, 071 5555 915. 005668

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

பொலன்னறுவ கதுருவெல நகருக்கு மிகவும் அருகாமையில் அரிசி ஆலையொன்றாக பாவிப்பதற்கு, பொருத்தமான பாரிய கட்டிடமும் 1.5 வியாபாரம் செய்வதற்கான காணியும் விற்பனைக்கு. எடைபாலம் மற்றும் KV 250 டிரான்ஸ்போமர் ஆகியனவும் உண்டு. நீடித்த கால உறுதி, குத்தகை உரிமம், விசாரணை செய்ய வும். கமிலஸ் 07778 49847 003958

### 226 அலுவலக உபகரணங்கள் விற்பனைக்கு

வங்கிக்கு சொந்தமான பயன்படுத்திய அலுவலக/வீட்டுத் தளபாடங்கள், கணினி மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் குளிரூட்டிகள் மருதானை மற்றும் கொழும்பு கோட்டையில் விற்பனைக்கு உள்ளன. ஆய்வுக்கு அழைக்கவும் 0766622833. 005807

## வேலைவாய்ப்பு

### 310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

Clerical Clerk வத்தளையில் அமைந்துள்ள எமது நிறுவனத்தின் அலுவலகத்தில் பணியாற்ற க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த ஆங்கிலம் மற்றும் சிங்களம் அறிந்த கணனி அறிவுடையவர்கள் தேவை. வயதெல்லை 30க்கு குறைந்தவர்கள். நேர்முகப் பரீட்சைக்கு திங்கள் முதல் வெள்ளி வரை நேரில் வரவும். இல. 18, வெளி அமுன வீதி, ஹேகித்த, வத்தளை. மின் னஞ்சல் hr@cliftextiles.com தொலைபேசி 076 6200300 006006



### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

அனுபவமுள்ள பெண் தையலாளர்கள் அல்லது ஒரு தையலாளர் உடன் தேவை. வெள்ளவத்தை மற்றும் அருகில் இருப்போர் அழையுங்கள். CV ஐ வட்ஸ்அப் செய்யுங்கள்/ அழையுங்கள் 0726 929447. 005070

ஆண்/ பெண் ஆடை தைப்பவர்கள் ஹர்ஷ டெய்லர் நிறுவனத்திற்குத் தேவை. தங்குமிடம் இலவசம். 0767083083, 0777363361. 005722

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதிகள் (Heavy Vehicle Drivers) வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கனரக வாகன சாரதிகள் (பவுசர், கன்டெய்னர், லொறி, டிப்பர் ஓட்டக்கூடியவர்கள்) தேவை. 03 வருட அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. உணவு மற்றும் இலவச தங்குமிட வசதி வழங்கப்படும் மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். இல. 18, வெளி அமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொலைபேசி 076 6200300 006007

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தோட்டத் தொழிலாளர் தேயிலைக் கொழுந்து பறிப்பதற்கு தேயிலைக் கொழுந்து பறித்தல், மீள கன்று நடுதல், நாற்றுமேடை தோட்டகல் மதில் கட்டுதல் தெரிந்தவர் தேவை. கண்டிரங்கல தங்குமிட வசதியுண்டு. 0718920272, 0720622555. 005386

### 325 தொழில்துறை பொது

ஊழியர்கள் (Workers) வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பொதியிடல் பிரிவில் வேலை செய்யக்கூடிய (Packing Section) பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் (Workers) தேவை. இலவச தங்குமிட, வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்று கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளி அமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 076 6200300 006008

கொழும்பு பங்களாக்களுக்கு காவலாளிகள், தோட்ட வேலையாள் தேவை. தமிழ், முஸ்லிம் வயது 5065 சம்பளம் 25,000/, 03 நேர உணவு+ தேநீர்+ சிறந்த தங்குமிட வசதிகள் + போனஸ் 0773 4 8 0490. 005676

கொழும்பு05, திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள Nakheel பாமஸிக்கு Pharmacy வேலை அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். குறைந்த பட்சம் 2 வருடங்கள் அனுபவம் தேவை. Nakheel Pharmacy இல. 144/ 1, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 0776510014. 005425

நாவல, நுகேகொடையில் டயர் கடைக்கு டயர் மாற்றுவோர் வீல் பெலன்சிங் அறிவுடன் தேவை. 0776994215. 004970

நாவல, நுகேகொட சேவை நிலையத்திற்கு கார் கழுவுவோர் உள்ளக சுத்திகரிப்பாளர் அனுபவத்துடன் மற்றும் உதவியாளர் தேவை. 0776994215. 004974

பாதணிகள் தயாரிப்பவர்கள் தேவை. ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கான Filats, Heels, Sandles, Sh oe பாதணிகளை தயாரித்து இலங்கை பூராகவும் விநியோகம் செய்யும் RGF நிறுவனத்தில் பாதணிகளை தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர், தங்குமிடம்வழங்கப்படும். RGF - Rifka Grade Fashion, 38, Karbala Road, Kattankudy. Tel : 0652053949, Mobil : 0778778182. 005786

071865 377 8 பாதுகாப்பு வெற்றிடங்கள், கோணபொல, இங்கிரிய, ஹொரண, பண்டாரகம, பிலியந்தல, ஹோமாகம, வதுராமுல்ல, களுத்துறை, பாணந்துறை, மட்டக்குளி, வத்தளை, சீதுவை, நிட்டம்புவ, ஹொரணை. 071 837 9 981, ராஜகிரிய, 07 1 2125238, வத்தளை 0718653779, களுத்துறை 07 0 454 50 51, அலுவலகம் 07 040 4 0899, 0768171053, 07 186 5 3781. 005562

07 186 5 3781, 0718653778 நட்சத்திர வகுப்பு ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக சேர்த்துக்கொள்ளல், உணவு இலவசம். (12 மணி நேரம்) இற்கு 1750/ 1450/ கொழும்பு 071865 3 780 அலுவலகம் 070665 5331. 005531

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

சவர்க்கார உற்பத்தியாளர்களே சதுர மற்றும் வட்ட வடிவ பிளாஸ்டிக் அச்சு மொத்த விலையில். 0703711211. 005560

## சொந்த விடயம்

### 518 ஆடை தயாரிப்பு/ டெயிலரிங்

ஹெந்தல வத்தளையில் பெண்களுக்கான ஆடைகள் மற்றும் சிறுமியருக்கான உடைகள் நேர்த்தியான முறையில் நியாயமான கட்டணத்தில் தைத்துத் தரப்படும். The Stitchery 0778142903. 004745

## காணி/தோட்டம்

### 602 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் வாடகைக்கு/ குத்தகை

நுகேகொடையில் புத்தம் புதிய ஆடம்பர அப்பாட்மெண்ட் வாடகைக்கு மாதாந்தம் ரூ. 90,000/ விலை பேசித் தீர்க்கலாம். முகவரி 22/9, ஜம்புகஸ்முல்ல மாவத்த, நுகேகொடை 2 படுக்கையறை 2 குளியலறை, 900 சதுர அடி, A/C, சுடு நீர், CCTV பாதுகாப்பு, பார்க், ஓய்வறை, லொன்டரி அறை பென்றியுடன் சமையலறை, தொடர்பு 070 6 2 8 38 7 0/ 0714468482 / 077 8 1 2 02 1 3 தம்பதி அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. செல்லப் பிராணிகள் அனுமதிக்கப்படமாட்டாது. 005549

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை சென்ரீட்டா வீதியில் மூன்று அறைகளுடன் வீடு உடன் 12 பேர்ச் காணி 20 அடி இரு பாதைகளுக்கு முகப்பாக காலி வீதி மற்றும் கல்கிசை ரயில் நிலையத்திற்கு அருகில் நவீன வீடமைப்பு தொகுதிக்கு அருகில் அதி கூடிய கோரிக்கைக்கு விற்பனைக்கு. 0777772482 005641

கல்கிசை, சென்ரீட்டா வீதியில் மூன்று அறை வீட்டுடன் 12 பேர்ச் காணி. 20 அடி இரு வீதிகளுக்கு முகப்பாக காலி வீதி மற்றும் கல்கிசை இரயில் நிலையத்திற்கு அருகில், ஆடம்பர வீடமைப்புத் திட்டத்திற்கு அருகில் கூடிய விலைக் கோரிக்கைக்கு விற்பனை. 0777772482. 005714

மொறட்டுவையில் 10 பேர்ச் 5 படுக்கையறை 3 குளியலறை 2 parking வசதியுடன் வீடு விற்பனைக்கு. காலி வீதி 1km விலை 26 மில்லியன் தொடர்பு 0773956001 005604

தெஹிவளை காலி வீதி + நிவ் மெரைன் டிரைவ் இற்கு நடை தூரத்தில் நகரின் மத்தியில் 13 பேர்ச் காணி. 0775595566 005799

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த, கிரில்லவல, ஹெட்டிகந்த வீதி (பிரி வெனா வீதியில்) 19. 2 பேர்ச், ராகம வீதியில் ஆயுர்வேத சந்தியின் ரணவிரு தேவானந்த மாவத்தையில் 15.5 பேர்ச் 2 காணித்துண்டுகள் கனேமுல்ல வீதியில் வெலிபில்லேவவில் 10 பேர்ச், வேபட 12.5 பேர்ச் வீதமான 3 காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு. அழையுங்கள் 0773951560, 071 8184096 005907

கம்பஹா பெலும்மஹர நகருக்கருகில் புதிய கண்டி வீதிக்கு முகப்பாகவுள்ள 20 பேர்ச் காணி மற்றும் இரு மாடி வீடு உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடன் விற்பனைக்கு. வியாபாரத்திற்கு உகந்தது. 0726776322, 0752596622. 005477

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

ஹந்தான மற்றும் ஹுன்னஸ்கிரிய மலைத் தொடர்களால் சூழப்பட்ட கண்டி, அம்பிட்டியில் 20 பேர்ச் வீதம் காணித்துண்டுகள் விற்பனைக்கு அழையுங்கள். 0773951560, 070 7184100 005909

0777282147 கண்டியில் வீடு, ஹோட்டல், தோட்டம், வெற்றுக் காணித்துண்டுகள், வியாபாரஸ்தலம், கொள்வனவு செய்வதற்கு அழையுங்கள். 0777438169. 005002

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

நுவரெலிய, வெலிமட வீதி, கட்டுமன வில் வீடு விற்பனைக்கு. 27 பேர்ச் வெற்று நிலத்தில் 5 படுக்கையறைகள் உள்ளடக்கம் பரிசீலனைக்கு. 0773951560, 071 8184096 005908

## திருமண சேவைகள்

### மணமகள்

முஸ்லிம் பெற்றோர் தமது 25 வயது 5'3" பாடசாலை ஆசிரியையான மகளுக்கு மார்க்கப்பற்றுள்ள, படித்த துணைவரை தேடுகின்றனர். 100y2023new@gmail.com B193618



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

Visit - www.adz.lk
SUNDAY OBSERVER adz it's what you want

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

---

# பெறுகை அறிவித்தல்

**வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனம் – இலங்கை**
**(கைத்தொழில் அமைச்சு)**

## ஆனையிறவு உப்பளத்திற்கு மணித்தியாலத்திற்கு 5 மெ.தொ. - புத்தம் புதிய மேசை உப்பு பொறித்தொகுதியை (செறிவு மற்றும் சுத்திகரிப்பு) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகை

**இல. SL/NSL/TSP/2023/01**

1. இலங்கை, கிளிநொச்சி, ஆனையிறவு உப்பளத்திற்கு மணித்தியாலத்திற்கு 5 மெ.தொ. - புத்தம் புதிய மேசை உப்பு பொறித்தொகுதியை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை ஊடாக இடம்பெறும். சர்வதேச உற்பத்தியின் உள்நாட்டு முகவர்கள் உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதத்தை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. மீளளிக்கப்படாத கட்டணமான இருபத்தியிரண்டாயிரம் ரூபாவை (ரூபா 22,000.00) அல்லது US $ 85 தொகையை செலுத்துவதன் பேரில் 2023 மார்ச் 14ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை, கொழும்பு-05, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

   வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனத்தின் பெயரில் 4,000.00 இல. ரூபா (உள்நாட்டு விநியோகம்) அல்லது US $ 60 (வெளிநாட்டு விநியோகம்) தொகையுடன் மேற்கூறப்பட்ட முகவரிக்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்கள் விண்ணப்பதாரரினால் குறிப்பிடப்படும் முகவரிக்கு கூரியர் சேவை மூலம் அனுப்பி வைக்கப்படும். காணாமல் போதல் மற்றும் பிந்திய ஒப்படைத்தலுக்கு பொறுப்புகூறப்பட மாட்டாது.

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 மார்ச் 15ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கூரியர் சேவையில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 மார்ச் 15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரிக்கு சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனத்தின் பெயரிலான வங்கி வரைவு வழியில் பதினெட்டு இலட்சம் இல. ரூபாவுக்கான (1,800,000.00 இல. ரூபா) அல்லது ஐயாயிரத்து நூற்றைம்பது USD (US $ 5150) விலைக்கோரல் தரவுத் தாளில் (BDS) தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு நிறுவனம்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05, இலங்கை.**
**தொலைபேசி: +94-112368964/+94-112368998/+94-112368974**
**தொலைநகல்: +94-112368974 மின்னஞ்சல்: nslhoc@gmail.com**

---

# இழப்பீடுகளுக்கான அலுவலகம்

## அறிவித்தல்

### 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதிக்குப் பங்களிப்பு நல்குமாறு உதவி நல்குவோர் மற்றும் நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்தல்

உயர் நீதிமன்றத்தின் SCFR இலக்கங்கள் 163/2019, 165/2019, 166/2019, 184/2019, 188/2019, 191/2019, 193/2019, 195/2019, 196/2019, 197/2019, 198/2019, 293/2019 எனும் தீர்ப்பினூடாக இவ் அலுவலகத்திற்கு உத்தரவிடப்பட்டதற்கமைய

அ. ஏப்ரல் 21, 2019 அன்று நிகழ்ந்த குண்டுத் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளானவர்கள் மற்றும் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு நட்டஈட்டினை வழங்க பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியினை நிறுவுதல்; மற்றும்

ஆ. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான மற்றும் சமமான முறையில் நட்டஈட்டினை வழங்குவதற்கான திட்டத்தினை உருவாக்குதல்; மற்றும்

இ. இந்த நிதிக்குத் தாராள சிந்தையுடன் உதவி நல்கக் கூடியவர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்தல்.

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது ஒரு நிதியினை நிறுவி, குறித்த நிதியின் மூலம் பெறப்பட்ட பணத்திலிருந்து நட்டஈட்டினை வழங்குவதற்கான திட்டத்தை உருவாக்கியுள்ளது. குறித்த திட்டம் இவ் அலுவலகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.reparations.gov.lk

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது இந்த நிதியில் பங்களிக்க விரும்புவோரைப் பின்வரும் கணக்கில் தங்களது பங்களிப்பினைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறது.

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் 2019 - பாதிப்பிற்குள்ளானோருக்கான நிதி**

நடைமுறைக் கணக்கு. 0090167960
இலங்கை வங்கி, இராஜகிரிய கிளை
608/1, நாவலை வீதி, இராஜகிரிய.

**தலைவர்,**
**இழப்பீடுகளுக்கான அலுவலகம்**
**இல. 40, புத்கமுவ வீதி,**
**இராஜகிரிய.**
**2023.01.29**



# தமிழக தகவல்கள்
## சின்னச் சின்னதாய்...
தமிழ்மணி மானா மக்கீன்

### எங்கள் நாடு தமிழ்நாடு பெயரை அழிக்க விட மாட்டோம்!

"தமிழ் நாடு" "தமிழகம்" இந்த இரண்டு பெயர்களிலும் ஒரு குழுவினருக்கு ஒவ்வாமை இருப்பதை டிசம்பர் பொழுதுகளில் சென்னையில் அவதானிக்க முடிந்தது.



அவர்களைச் சங்கிகள் என்றார்கள் சிலர். மற்றவர்களோ ஆர்.எஸ்.எஸ் என்றார்கள். தமிழக ஆளுனர் ரவியார் பெயரும் அடிபட்டது.

இந்தப் புத்தாண்டு ஜனவரி பிறப்பில் இலங்கையிருந்த படியே பார்க்கையில், அங்கே தமிழ்ப் புத்தகத் திருவிழா நடக்கிற சமயத்தில், அது வெற்றிகரமாக நடக்கக் கோடிக் கோடியாய் தமிழக அரசு செலவழிக்கிற நேரத்தில் நடந்திருக்கிற சம்பவம் ரொம்பவும் கவலையைத் தருகிறது.

கடந்த திங்கட்கிழமை, 2023 புத்தாண்டு, தமிழ் நாடு சட்டமன்ற முதலாவது அமர்வின் ஆரம்பவைபவத்திற்கு ஆளுனர் வருகை தந்து சிறப்புரை ஆற்றவிழைந்து சில நிமிடங்களிலேயே அமளிதுமளி!

"எங்கள் நாடு தமிழ்நாடு. அந்தப் பெயரை அழிக்க அனுமதிக்க மாட்டோம்" என ஆக்ரோசமாக உரிமைக் குரல் எழுப்பினர் கூட்டணிக் கட்சியினர். இவர்கள் ஆளும் திமுக அரசுடன் இணைந்திருப்போர்.

ஆளுனரும் தன் பங்குக்கு ஒரு "தணிக்கை வேலையைச் செய்தார்.

தமிழ் நாடு அரசு தயாரித்தளிக்கும் உரையையே ஆளுனர் தனது சிறப்புரையாக வாசித்தளிப்பது மரபு. ஆனால் பிரதியிலிருந்த அதிமுக்கியமான வார்த்தைகளையும் அம்பேத்கர் அறிஞர் அண்ணா, பெரியார், பெயர்களையும் சொல்லாமல் விட்டார். முதல்வர் ஸ்டாலின் மௌனம் கலைந்தார்.

"நாங்கள் தயாரித்துக் கொடுத்த உரையே தணிக்கை இன்றி சட்டமன்றப் பதிவேட்டில் இடம் பெறவைப்போம் என்று குரல் கொடுத்தார். "இல்லையேல் நீக்குவோம்" என்றும் எச்சரித்தார்.

அவ்வளவுதான். முதல்வர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை அலட்சியம் செய்து விட்டு ஆளுனர் அலட்சியம் செய்துவிட்டு ஆளுனர் வெளிநடப்புச் செய்ய அவருக்கு ஆதரவாக அதிமுகவினரும் பின் தொடர்ந்து நடையைக் கட்ட, மறு புறத்தில் தமிழ்நாடு பெயர் அழிப்புக்கு உரிமைக்குரல் எழுப்பியவர்களும் வெளியேற சட்டமன்ற ஆசனங்களில் திமுகவினர் மட்டுமே!

ஆக, மக்களின் துணையுடன் போராடி பெயர் சூட்டப் பெற்ற "தமிழ் நாடு" எதிர்காலத்தில் இயங்குமா, இயங்காது போகுமா என்ற பெரிய கேள்விக் குறி இப்பொழுது.

ஆளுனர் அகற்றப்பட்டாலொழிய இதற்கு இறுதி முடிவு ஏற்படாது என்பது என் பேனையின் கணிப்பு.

இன்னொரு முக்கியத் தகவலையும் தெரிவித்தாக வேண்டும்.

இந்தத் தமிழ்நாடு என்ற பெயரை அடைய பற்பல ஆண்டுகளுக்கு முன்பு சுந்தரலிங்கம் என்றொரு பெரியவர் உயிர் துறந்த சங்கதியும் பசுமரத் தாணியாக வரலாற்றில் பதிவு பெற்றுள்ளது.

அந்த மாமனிதர் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அவர் தியாகத்தில் தமிழ்நாடு பெயர் துலங்க ஆரம்பித்தது. இன்று ஆளுநர் ரவி என்கிறவர் பெயரை நீக்குவேன் என்றால் நம் தலைகளை எங்கே கொண்டு போய் முட்டிக் கொள்வது?

இங்கு பிரசுரமாகியுள்ள நிழற்படம், சுந்தரலிங்கம் உயர் துறக்கப் போகும் நேரத்தில் பிடிக்கப்பட்ட ஒன்று. மற்றுமொரு முக்கியத் தகவல் இந்தப் பத்தி எழுத்தை எழுதிக் கொண்டிருக்கும் புதன் கிழமை (11/01) தமிழ்நாட்டின் பல நகரங்களில் ஆளுனருக்கு எதிராகப் போராட்டங்கள் நடக்க ஆரம்பித்தன.

### 'ஜெய்பீம்' படத்தின் வழி 'சந்துரு' அய்யாவை அறிந்தேன்

ஜெய்பீம்

கடந்தாண்டில் வந்த நெஞ்சை விட்டகலாத ஒரு திரைப்படப் பெயர்.

இதில் 'சந்துரு' என்ற பெயரில் வழக்குரைஞராக ஒரு கற்பனைக் கதாபாத்திரம், நடிகர் சூர்யா படம் முழுக்க வியாபித்து, ஒரு பழங்குடியினத்தைச் சார்ந்த பாவப்பட்ட கணவன், மனைவிக்



காக வாதாடி நீதிகோருவார். நீதிபதியும் அவர்கள் பக்கமுள்ள நியாயங்களுக்காக அதிரடி தீர்ப்பை வழங்குவார்.

பல உண்மை நிகழ்வுகளைக் கொண்ட படம் நீதிபதி பாத்திரம் கற்பனையன்று சந்துரு என்ற பெயரிலேயே ஒருவர் தமிழ்நாட்டு நீதிமன்றுகளில் கடமையாற்றியவர், ஆரம்பகாலத்தில் சட்டத்தரணியாகவே புகழடைந்தவர்.

படம் வெளியாக பரபரப்பை உண்டு பண்ணியபிறகு பலரும் சந்துரு பற்றியே பேசத் தொடங்க

ஓய்வு நிலையில் ஒதுங்கியிருந்த அந்த மாமனிதரைப் பற்றி அறிய அனைவரும் ஆர்வப் பட,

என் மூத்தபேனையும் துருவித்துருவி பலரிடம் தகவல்கள் சேகரிக்க கிடைத்தன மூட்டை மூட்டையாகப் பல ஆபூர்வத் தகவல்கள்!

மிக முக்கியமாகக் கிடைத்த ஒன்று.

அவர் வசிக்கும் வீடு வீடே அல்லவாம்! ஒரு பெரிய நூலகமாம்! நூலகம் ஒன்றின் மத்தியிலேயே அன்றாட வாழ்க்கையாம்!

ஓய்வு பெற்ற நாளன்று வீடு திரும்ப உத்தியோகபூர்வ வாகனத்தை ஏறிட்டும் பார்க்காமல், ஏறாமல், மின் தொடரியில் (மின்சார ரயில்) வீடு போய்ச் சேர்ந்தாராம்!

இன்னுமின்னும் தருகிறேன் தகவல்கள்,

★ நீதியரசர் நியமனத்திற்கு முன்பு, ஒரு வழக்குரைஞராகப் பலருக்கும் வாதாடிய பொழுது, இலங்கை அகதிகளுக்குக் குரல் கொடுத்த மாமனிதர்.

★ 'தனிச் சுடுகாடு' என்று வழக்குப் போட்ட உயர்வர்க்கத்தினேருக்குப் பொதுமயானமே வழங்கத் தீர்ப்பளித்தார்!

பெண்களைக் கடவுளாகக் கொண்டாடும் சமூகத்தவர்கள் 'ஒரு பெண் பூசாரியைக்கோயில்களில் கடமையாற்ற அனுமதிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார். அதற்கு ஆகம ஆதாரங்களைக் காட்டினார்.

★ தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் சமைக்கும் உணவை சாப்பிடக்கூடாது என ஒரு பள்ளி நிர்வாகம் சண்டித்தனம் செய்த பொழுது சட்ட உதாரணங்களைப் பிட்டுப் பிட்டு வைத்து தீர்ப்பு வழங்கினார். இன்று 22ஆயிரம் தலித் பெண்மணிகளின் சமையல்களை பலதரப்பட்ட கல்விக் கூடங்களில் உள்ளோர் 'ஒருகை' பார்க்கின்றனர்!

★ ஓய்வு பெற முன்பேயே தன் சொத்து விவரங்களை தலைமை நீதிபதியிடம் ஒப்படைத்தவர்.

இத்தகைய ஒப்பற்ற மனிதரை நேர்காண வேண்டும் என்ற ஆசை நிறைவேறவில்லை. சென்னையிலிருந்து தொலைவில் நூல்களின் மத்தியில் அமைதி, நிம்மதி வாழ்க்கை.

ஜெய்பீம்! நீடுவாழ்க.

### நவீன 'மெட்ரோ மின் தொடரிகள்

கலக்கல்!

ஒரு காலத்தில் போக்குவரத்து வசதிகளுக்கு சென்னை வாசிகள் பேருந்துகளையும் மின்சாரத் தொடரிகளையும் (ரயில்) நம்பியிருந்தனர்.

இப்பொழுது மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்று நவீன மெட்ரோ மின் தொடரிகள்.

இது, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் சிறிய அளவில் அறிமுகமான பொழுது பயணிக்க சென்னை வாழ் மக்கள் அக்கறை காட்டவில்லை. இன்று கடந்த டிசம்பரில் ஜேஜே கூட்டம்!

மீனம்பாக்கம் விமான இறங்கு தளம் வரையில் நகர்ப்புறங்களிலிருந்து அதிவிரைவாக சென்றடையலாம்.

இலங்கைக்காரர் நமக்கு இன்றுவரை எட்டாக்கனி. இங்கும் நடைமுறைப்படுத்த முற்பட்டபொழுது சில அறிவுஜீவிகள் அதிகமாக ஆலோசிக்கக்கிடப்பில் போடப்பட்டது. இப்போது தூசி தட்டி திட்டத்தை எடுத்தாலும் கையில் காசு வேண்டுமே...

ஏழை நாடாக இருந்தும் நமக்குக் கடன் கொடுத்து உதவிய பங்களாதேஷிலும் கடந்த மாதத்திலிருந்து மெட்ரோ!

ஹூம்....




வாரமஞ்சரி BUDGET ADZ
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

BENTLEY
FOOD SERVICE EQUIPMENTS
made from British European main components
We Design, Display Kitchen Layouts
Manufacture of Hot, Cold, Electric/Gas Hotel Equipment
BENTLEY PRODUCTS CO.
Mirigama, Sri Lanka Hotline : 077 304 55 68
Tel : +94 33 2273230, 2273795

1 YEAR WARRANTY
20W SOLAR INDOOR BULB WITH TORCH
Rs. 13,500
0777 806 542
SOLAR X

For Sale or Lease
Moratuwa
40 perch Land & Building (5,000 Sq. Ft.)
Facing Galle Road.
077 7 448 628 / 011 2 64 64 10 / 076 780 92 91

போட்டோ குறும் விளம்பரம்

Brandnew, multifunction Benz E 200 car - 2003 with Power Curtain, Telephone, Cool Box, accessories
076 0 812 496

சிரிபெல LANDS
ஹட்டனில் இனிமையான காற்றை சுவாசியுங்கள்
1 பர்ச் ரூ.245,000/-
ROZELLA HEIGHTS HATTON
0702 48 48 48

வேலைவாய்ப்பு
அலுவலக உதவியாளர் (பெண்கள் மட்டும்)
• வயது 20 - 32
• கணக்கியல் மற்றும் Computer தொடர்பான அறிவுடையவர்கள்
• 03 மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் 40,000/- முதல் 75,000/- வரை வழங்கப்படும்
radomanpower2266@gmail.com
Rado Manpower Service (Pvt) Ltd
No 10/21, Saunders Place, Colombo -12.
0777 32 54 54 | 0772 42 42 66

කොළඹ - 13 මහා විද්‍යාල මාවතේ
අගනා ඉඩමක් විකිණීමට ඇත.
පර්චස් 63 කින් සමන්විතයි සහ
කිංස්ලි රඟහල ලෙස ප්‍රසිද්ධය.
මෙම ඉඩම නගර මධ්‍යයේ පිහිටා ඇති අතර, වරාය නගරයේ සිට මිනිත්තු 10ක් දුරින්, උස සීමාවන් නොමැත. එබැවින් අසීමිත මහල් සඳහා අවසර ඇත. දේපල ව්‍යාපාරිකයෙකු සඳහා වඩාත් සුදුසුය. වැඩි විස්තර සඳහා
අමතන්න 0743004866, 0765308200

LANDS FOR SALE
10p Colombo 4 - Rs.14mn per perch
30 Acres Ja-ela, Ekala - Rs.6 lakhs per perch
41p Rajagiriya - Rs. 40 lakhs per perch
22p Battaramulla - Rs. 35 lakhs per perch
Call : 0777 258 280
Find Lands Lanka (Pvt) Ltd
donandsato@gmail.com

FULLY AUTOMATIC BLOCK MACHINE
full set available
pan mixer, conveyor belt, Block Machine, Tracker matchine
Rs. 3,650,000/=
Phone : 0761 448 531

Advertise Here
வாரமஞ்சரி BUDGET ADZ
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

SINGAPORE WELCOMES YOU
WORK + STUDY WITH Rs.350,000 MONTHLY ALLOWANCE
• WSQ Diploma in Hotel Management
• WSQ Diploma in Pastry and baking
• WSQ Diploma in Culinary Arts
20% SCHOLARSHIP
GUARANTEED INTERNSHIP - NO IELTS - NO BANK BALANCE
MAY 2023 INTAKE
ASPIRE COLLEGE OF HIGHER EDUCATION
0773 40 50 60 | 0777 825 899

WATER METERS ජල මීටර්
World's biggest Selling Water Meter!
elster Honeywell
Manufactured In the UK
Genuine KENT meters
Assembly & Testing for ASIA in Malaysia
3 YEARS WARRANTY
READY STOCK
½" to 1½" (15mm to 40mm)
www.allied.lk
alliedint@eureka.lk
011- 739 7777
Rs. 12900/= Upwards
ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
# 301 OLD MOOR STREET, COLOMBO 12

நீகல் லேக்சைட் பங்களாக்கள்
பொரலஸ்கமுவ
7 ஆடம்பர பங்களாக்கள் குளத்தைச் சூழவுள்ளன.
கொழும்பு புறநகர்ப் பகுதிகளிலிருந்து வெறும் 6 கி.மீ. தொலைவில்

இலங்கை ரூபாவில் 65 மில்லியன் முதல்.
3 மாதிரிகளில் தெரிவுகள் :
• 8 பேர்ச் / 3 படுக்கை அறைகள்
• 8 பேர்ச் / நீச்சல் தடாகத்துடன் 3 படுக்கை அறைகள்.
• 12 பேர்ச் / 4 படுக்கை அறைகள்
குடியேற தயாரான நிலையில்
0772 277 755
0773 738 943

# படித்ததும் பகர்வதும் 129



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்



### 75வது சுதந்திர தினம்

இலங்கையின் 75வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்று, நம்மை நாமே ஆளுகின்ற அதிகாரம் தரப்பட்டு 75 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், 'நாம் பெற்ற சுதந்திரத்தால் எந்த அளவு நன்மை பெற்றுள்ளோம்' என்பது இன்னும் விமர்சனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

அரசியல், பொருளாதார, சமூக, கலை, கலாசார, மத விடயங்களில் சுதந்திரம் நாட்டின் எல்லா இனத்தவர், மதத்தவர், மொழி பேசுவோரிடையேயும் சமமாக, திருப்தியளிக்கும் விதத்தில் உள்ளதா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. இக்கேள்விக்கான பதில் எதிர்மறையாக இருக்குமாயின் அதற்கு பொறுப்புக்கூறக் கூடியவர்கள், அன்றிலிருந்து இன்றுவரை ஆட்சி செய்த அரசியல் தலைவர்களே என்றால் மறுக்க முடியாது.

'மக்கள் சுதந்திரத்தை பூரணமாக அனுபவிக்கும் போதுதான் நாட்டுப்பற்று வலுப்பெறும்' என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். ஒவ்வொருவரும் தாம் விரும்பும் மதத்தை பின்பற்றவும், தாம் விரும்பும் மொழியில் பேசி செயல்படவும், தாம் விரும்பும் கலை கலாசார நடவடிக்கைகளை அனுபவிக்கவும் வாய்ப்பும் வசதியும் பூரணமாக இருக்க வேண்டியது சுதந்திரத்தின் அடிப்படையாகும். இவற்றிற்கு தடை ஏற்படும் போது, இடையூறுகள் செய்யப்படும்போது பிரச்சினைகள் உருவாகுவதுடன் நாட்டுப் பற்றிலும் தளர்வு ஏற்படுகிறது. இவ்வாறான நிலை தோன்றாமல் இருக்க வழி செய்வது அரசியல் தலைவர்களினதும், அதிகாரத்தில் உள்ளவர்களினதும் பொறுப்பாகும், கடமையாகவும் உள்ளது.

ஆட்சிக்கு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சுயநலமிக்களாக செயற்படுவதும், அதற்கேற்ப அவர்களது கட்சிகளின் கொள்கைகளை செயற்படுகளும் அமைவதுமே பிரிவினைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் அடிப்படை காரணங்களாக இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நம் நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட இனப்பிரச்சினைகளுக்கும், உள்நாட்டு போராட்டங்களுக்கும் இவையே காரணமாக இருந்துள்ளதை மறுதலிக்க முடியாதுள்ளது. இவற்றை எல்லா கட்சிகளும் நன்கு புரிந்து கொண்டு, அரசியல் தலைவர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும் நாட்டின் நலனுக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுத்து செயற்பட்டால் இத்தகைய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகான வழி பிறக்கும்.

அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், மதச் சுதந்திரம், மொழிச் சுதந்திரம் போன்ற பல்வேறு சுதந்திரங்கள் நம் நாட்டின் அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அவை எந்த அளவில் அமுலாகிறது என்பதிலேயே நாட்டின் எதிர்கால சுபீட்சம் அமைந்துள்ளது. ஒவ்வொரு உரிமை மீறலுக்கும் மனித உரிமை ஆணைக்குழுவையோ, உயர் நீதிமன்றத்தையோ நாடும் நிலை இருக்கக் கூடாது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, நாட்டு நலனை முதன்மையாகக் கருதி செயல்பட அரசியல் தலைவர்களும், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும் உறுதி கொள்வதே வருகின்ற 75வது சுதந்திர தினத்தை அர்த்தமுள்ளதாக்கும்.

## நெஞ்சுக்கு நீதி

அன்றாடம் மக்கள் தம் துயர்களைப் போக்கிட
அங்குமிங்கும் தான் அலைகிறார் உழைத்திட
திண்டாடும் அவர்தம் துன்பங்கள் துடைத்திட
துணையிரு இறையருள் நிறையவே பெற்றிட

## அந்த நாள் ஞாபகம்!



### 'கியூ'வில் ஒரு பெரியவர்!

1989ஆம் ஆண்டு. நான் சட்டக்கல்லூரியில் கல்வியை தொடர்ந்து கொண்டிருந்த காலம். எனது நண்பர் எம்.டி.ஏ.எம். ரஸீனுடன் கொழும்பு 2ம் குறுக்குத் தெருவில் மௌலானா ஹோட்டலில் இருந்த அவரது அறையில், அவரோடு தங்கியிருந்தேன். அப்போதெல்லாம் காய்ச்சல், தடுமல், வயிற்றுவலி போன்ற சிறு நோய்கள் வரும் போது, எமது நண்பர், டாக்டர் ஏ.ஆர்.எம். ஹபீபிடம் சிகிச்சை பெறுவது வழக்கம். (இவர் சிறந்த இலக்கியவாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாவார்) அவரது மருத்துவ நிலையம் கொழும்பு 10, மொஹிதீன் மஸ்ஜித் வீதியில் அமைந்திருந்தது.

எப்போதெல்லாம் தேவைப்படுமோ அப்போதெல்லாம் அவரது மருத்துவ நிலையத்துக்கு சிகிச்சைக்காகச் செல்வோம். சிகிச்சை பெற வருபவர்கள் பெருமளவில் வரிசையில் காத்திருப்பார்கள். ஆனால் டாக்டர் எமக்கு தெரிந்தவர், நண்பர் என்பதால், அந்த வரிசையை பொருட்படுத்தாது நேரடியாக அவரது அறைக்குள் சென்று சிகிச்சை பெற்று திரும்பிடுவோம்.

அன்றொரு நாள், நான் எனது நண்பர் ரஸீன் உடன் சிகிச்சை ஒன்றுக்காக டாக்டர் ஹபீபின் மருத்துவ நிலையம் சென்றேன். வழமை போல் ஒரு பெரிய 'கியூ' வரிசை இருந்தது. வரிசையில் இருந்த முக்கியஸ்தர் ஒருவர் எமது கவனத்தை ஈர்த்தார். அவர் வேறு யாருமல்ல. நண்பர் ரஸீனின் மாமனாரும், 1958, 1959ம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாமின் தலைவராக இருந்தவருமான செய்யத் முஹம்மத் அவர்களாவார். அவர் எம்மைவிட டாக்டர் ஹபீபோடு மிகவும் நெருக்கமானவர். கௌரவமான தலைவர். சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற பெரியவர்.


நான் அவரிடம் சென்று 'ஏன் கியூவில் காத்திருக்கிறீர்கள். உள்ளே சென்று டாக்டரைப் பார்க்கலாமே' என்றேன். அதற்கு அவர், "இல்லை மகன். அப்படி செய்வது சரியில்லையே. டாக்டர் எனக்கு தெரிந்தவர்தான். ஆனாலும் எனக்கு முன்னாள் வந்து, எவ்வளவோ நேரம் காத்திருக்கின்ற இவர்களை தாண்டிச் செல்வது முறையல்லவே. அதுவும் ஒரு வகையில் அவர்களுக்கு செய்யும் அநீதிதானே?" என்று கூறி, அவரது சுபாவமான அமைதியான தொனியில் நீண்டதொரு விளக்கத்தைத் தந்தார். அத்துடன் வரிசையில் தனது நேரம் வரும்வரைக் காத்திருந்தார்.

அதனை கேட்ட பின் எம்மால் வரிசையை தாண்டி, டாக்டரின் அறைக்குள் சென்று சிகிச்சை பெற முடியவில்லை. காத்திருந்து வரிசைப்படி, எமக்குரிய நேரம் வந்த பின்னர் தான் உள்ளே சென்று சிகிச்சை பெற்றோம்.

தனது வயது மூப்பையும், இயலாமையையும் பொருட்படுத்தாது, முறை தவறி நடக்கக் கூடாது என்பதற்காக பொறுமையாய் காத்திருந்த அந்தப் பெரியவர் செய்யத் முஹம்மத்தின் நற்செயல், சிறந்த முன்மாதிரி என் மனதில் ஆழப் பதிந்தது. அன்றிலிருந்து இன்றுவரை எந்தவொரு வரிசையில் நின்றாலும் இந்தச் சம்பவமே என் நினைவில் முன் வந்து என்னை நெறிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

## புது வரவு

### 'சிறுகதை மஞ்சரி'



சிறுகதைகளுக்கென இன்றைய காலத்தில் இலங்கையில் வெளிவருகின்ற மாத இதழ் 'சிறுகதை மஞ்சரி'. இதன் 27ஆவது இதழ் கிடைக்கப் பெற்றுள்ளது. சிறுகதைகளுக்கு மட்டுமே முக்கியமளித்து இந்த சஞ்சிகை வெளிவருவது விசேடமானது.

ஏனைய மாதாந்த இலக்கிய இதழ்களுக்கு வித்தியாசமாக, 'சிறுகதை மஞ்சரி'யில் பிரசுரமாகும் சிறுகதையை எழுதும் இலங்கை எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பு தொகையாக ரூபா 1000/= வழங்கப்படுவது இதன் தனித்துவமாகும். இத்தொகை சிறியதாக தோன்றினாலும், ஊக்குவிப்பு தொகையாக இது வழங்கப்படுவது நல்லதொரு முயற்சிதான் என்பதை மறுக்க முடியாது.

இந்த 27வது இதழில், ஆறுவது சினம் (சியாமளா யோகேஸ்வரன்), செல்வாக்கு (சண் வேல்), வயோதிபர் சங்கம் (சூசை எட்வேட்), கெற்றப்போர் (சி. சிறீரங்கன்), பங்கர் (நிலவந்தன்), கோடை மழை (அ. முத்துலிங்கம்), தொலைந்து போன மனிதன் (அகரா) எனும் ஏழு சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. இவற்றோடு ஷெல்லிதாசன் எழுதியுள்ள, 'அதே வெள்ளைக் கொக்குகள் ஒற்றைக் காலில்' எனும் கவிதைக் குறுங்கதையும், மு. தயாளன் எழுதும் கரும்பலகை என்ற தொடர்கதையும் இடம்பிடித்துள்ளன.

செ. யோகராசாவின் 'மஞ்சரி சிறுகதைகள் ஒரு பார்வை' என்ற பகுதியும், 'சிறுகதை எழுதுவது எப்படி?' என்ற மு. தயாளன் எழுதும் தொடர் கட்டுரையும் மஞ்சரிக்கு மேலும் அழகூட்டுகின்றன.

முதன்மை ஆசிரியராக மு. தயாளன், உதவி ஆசிரியர்களாக வி. மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன், ஒப்பு நோக்காளர்களாக திருமதி ஆர்த்தி துவாரகன், திருமதி சாரு தயாளன், ஆலோசகர்காளாக டாக்டர் பி. இராசையா, பேராசிரியர் செ. யோகராஜா ஆகியோரின் கூட்டு முயற்சியில் வெளிவரும் 'சிறுகதை மஞ்சரி', ஐரோப்பிய நாடுகள் உட்பட பல வெளிநாடுகளுக்கும் பரவலாக விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பேசும் கவிதை

*தத்தளிக்கும் இலங்கை!*
*சுகமான சுதந்திரம் சுமைகளகற்றும்*
*சுமையான சுதந்திரம் சுகங்களகற்றும்*
*இலங்கையில் சுதந்திர அந்நாள்*
*சுமையென்பதா சுகமென்பதா?*
*தினந்தினம் நாம் காணும்*
*மதவாதிகளின் வெறுப்புணர்வில்*
*சுட்டெரிக்கும் சுடு சொற்களால்*
*சுதந்திர இலங்கை எரிகிறது*
*அத்துமீறும் அராஜக ஆக்கிரமிப்பில்*
*அவதியுறும் இலங்கைப் பிரஜையின்*
*மறுக்கப்படும் உரிமைகண்டு*
*சுதந்திர இலங்கை அவதியுறுகிறது*
*சுயநலக்காரர்களின் சூழ்ச்சிகளும்*
*அக்கறையற்ற ஆட்சியாளர்களுமென*
*மோதல்களின் விழைவுகளால்*
*சுதந்திர இலங்கை தத்தளிக்கிறது*

நேசமுடன் ஹாசிம்

## தகவல் களஞ்சியம்

### இலங்கையில் ஞாபக மறதி நோயாளர்கள்

இலங்கையிலும் ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து வருவதாக இலங்கை அல்சைமர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தநிலை இப்படியே அதிகரிக்கும் பட்சத்தில் எதிர்வரும் 2050ஆம் ஆண்டளவில் இலங்கையில் அரை மில்லியனுக்கும் அதிகமான ஞாபகமறதி நோயாளர்கள் காணப்படக் கூடும் எனவும் அச்சங்கம் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த காலங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கிப் போட்ட கொரோனா தொற்று காரணமாகவும், ஞாபக மறதி நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8 பில்லியனை கடந்த உலக சனத் தொகை**

உலக சனத் தொகை 8 பில்லியனை கடந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 7 பில்லியனை கடந்து 11 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறு உலக சனத் தொகை 8 பில்லியனை கடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் அதி கூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இந்தியா முன்னிலை பெறும் எனவும், இதுவரை காலமும் சீனா வகித்து வந்த இடத்தை இந்தியா பிடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

1950ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக கடந்த 2020 ஆம் ஆண்டில் உலக மொத்த சனத்தொகை வளர்ச்சி வீதம் ஒரு வீதத்திலும் குறைவாக காணப்பட்டுள்ளது. எதிர்வரும் 2030ஆம் ஆண்டளவில் உலகின் மொத்த சனத்தொகை 8.5 பில்லியன்களாக உயர்வடையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

**பாலுறவு ஊக்க மருந்து பாவனை**

பாலுறவு ஊக்க மருந்து பாவனையினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், இப்போது மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று சம்பவங்கள் பதிவாகின்றமை உண்மையில் அதிக எண்ணிக்கை எனவும், எனவே நாங்கள் இது குறித்து விசேடமாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

தரமற்ற மருந்துகளின் பயன்பாடு, தவறான அளவில் பாவித்தல், மருத்துவ ஆலோசனையின்றி இத்தகைய மருந்துகளைப் பயன்படுத்துதல் என்பனவே இந்த இறப்புகளுக்கு முக்கிய காரணமெனக் கூறப்படுகிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# 'கொழும்பின் பல்லினக் குழுமங்கள்'

52 கொழும்பின் கதை



என். சரவணன்

"புலம்பெயர்தலுக்கு தெளிவான வரம்புகளை நடைமுறைப்படுத்தாதவர்கள்; விரைவில் தங்கள் சொந்த நிலத்தில் அந்நியர்களாக உணரத் தொடங்குவார்கள்."

**செபாஸ்டியன் குர்ஸ்**

குடியேற்றவாசிகள் மீது உள்ள பொதுப்பீதி இப்படித்தான் உலகமெங்கும் காணப்படுகிறது. ஆனால் அதையும் மீறி தலைநகரங்கள் குடியேற்றங்களால் பெருகுவதை எவராலும் தடுத்துவிட முடிந்ததில்லை.

நகரங்கள் ஜனத்தொகையாலும், இடப்பெயர்வுகளாலும் பெருகுவதென்பது உலகளாவிய யதார்த்தம். குறிப்பாக பல்லினங்கள் பெருகி காலப்போக்கில் அந்நகரங்களில் தம் இனக்குழுமம் செறிவாக ஓரிடத்தில் குவிவதும் நிகழ்வதைக் காண முடியும். அதற்கு கொழும்பும் விதிவிலக்கல்ல.

கொழும்பில் மாத்திரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு 19 விதமான இனக்குழுமங்கள் வாழ்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய பெரும்பான்மை சமூகங்களைத் தவிர்ந்த ஏனைய அனைவரும் காலனித்துவ காலத்தில் வந்தேறியவர்கள்.

கொழும்பைப் பொறுத்தளவில் இவர்கள் சிறுபான்மையோர் தான். இந்நாட்டில் இந்த நான்கு இனங்களைச் சேர்ந்தவர்களே வாழ்கின்றனர் என்பது பலருக்கும் தெரியும். இவ் இனங்களைத் தவிர வேறு பல சிறு இனத்தவர்களும் கொழும்பில் வாழ்கின்றனர் என தேசிய ஒருமைப்பாடு, உரையாடல் மற்றும் அரச கரும மொழி அமைச்சினால் சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட 'People of Sri Lanka' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூலின் படி, சிங்களவர்கள், இலங்கைத் தமிழ், முஸ்லிம் சோனகர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழர், கொழும்பு செட்டி, மலையாளிகள், மலாய், டச்சு பறங்கியர், போர்த்துகீச பறங்கியர், சீனர், மேமன், கடல் வேடர், பரதவர், காஃபிர் அல்லது காபிரி, தாவுதி போரா, ஆதிவாசிகள், சிந்தி, அபிகுண்டகர், பார்சி ஆகிய 19 மக்கள் குழுக்கள் இலங்கையில் பரந்து வாழும் அதேவேளை இக்குழுமங்கள் அனைத்தையும் தலைநகரில் காணலாம்.

2012 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மொத்த மக்கள் தொகை 20,359,439 ஆகும். (2017 ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்த எண்ணிக்கை 21,016,431 ஆக உயர்ந்துள்ளது.) இன அடிப்படையில் 15,250,081 சிங்களவர்கள் 74.90% வீதமும், 2,269,266 இலங்கைத் தமிழர்கள் 11.15% வீதமாகவும், 1,892,633 முஸ்லிம்கள் 9.3% வீதமும், இந்தியத் தமிழர்கள் 839,504 அதாவது 4.12% வீதமும் ஏனையோர் எஞ்சிய மக்களாகவும் வாழ்கின்றனர்.

**இந்தியத் தமிழர்**

1940 களில் இலங்கையின் இரண்டாவது பெரிய இனமாக, அதாவது 13 வீதமாக இருந்த இந்திய வம்சாவழியினர் 1981 இல் 5.5 வீதமாகச் சுருக்கப்பட்டு தற்போதைய நிலையில் 5 வீதத்துக்கும் குறைவாக ஆகியுள்ளனர். இந்தியத் தமிழர்கள் 1817ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களால் இந்நாட்டுக்கு பாதைகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக கொண்டு வரப்பட்டு நாட்டின் பல்வேறு இடங்களில் குடியேறிய போதும் பெருமளவு மக்கள் மத்திய மலைநாட்டுப் பகுதிகளுக்கு 1823இல் வர ஆரம்பித்ததன் பின்னர் அவர்களின் குடித்தொகை பெருகியது. மலையகத்தில் தேயிலை ரப்பர் மற்றும் கொக்கோ பயிரிடுவதற்காக தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்ட மக்களின் வழித்தோன்றல்களாகவும், ஏனைய பகுதிகளுக்கு இவர்கள் கருதப்படுகின்றனர். மலையகத்துக்கு அடுத்ததாக அதிகளவு இந்திய வம்சாவளியினர் வாழுமிடமாக இருப்பது கொழும்பு தான். 1918ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்குவதற்காக சேர் பொன் அருணாச்சலத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தமானது இந்த மேல்மாகாண மக்களுக்கான ஒரு பிரதிநிதித்துத்துவத்தை உருவாக்குவதற்காகத்தான். ஆனால் பின்னர் அவர் ஏமாற்றப்பட்டது சிங்களத் தலைவர்களால். தமிழர்கள் ஏமாற்றப்பட்ட முதல் ஒப்பந்தமாக இது கொள்ளப்படுகிறது. கொழும்பு வாழ் இந்திய வம்சாவளியினரில் பெருமளவானோர் தம்மை இலங்கைத் தமிழர்களாக பதிவு செய்து வந்துவிட்டதால் கணக்கெடுப்புகளில் இந்திய வம்சாவளியினரின் தொகைக்குள் அடங்காமல் போய்விட்டனர்.



பறங்கியர்

**கொழும்புச் செட்டி**

கொழும்புச் செட்டி என்போர் நால்வருணத்தின் பிரகாரம் மூன்றாம் நிலைக்கான வைசிய சாதிக்குள் அடங்குவர். அதாவது வணிகர்களாக கொள்ளப்படுபவர்கள்.

செட்டியார் / செட்டியார்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்வர்கள். ஒரு முக்கிய வணிக சமூகத்தினர். அவர்கள் தொழில் முனைவோர் திறன்களுக்கு பெயர் பெற்றவர்கள். மேலும் வர்த்தகம், வங்கி, வட்டிக் கடன், வட்டித் தரகு உள்ளிட்ட பல்வேறு வகையான வணிகங்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் கொழும்பில் மட்டுமன்றி சென்னை, கொல்கத்தா நகரங்களில் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ளனர். அதுபோல அவர்கள் பரோபகாரத்திற்காகவும் அறியப்பட்டவர்கள். இந்தியா இலங்கையில் உள்ள பல தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புடையவர்கள். கொழும்பின் மையத்தில் அவர்களின் இருப்பு ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது. செட்டியார் தெரு, புதிய செட்டித் தெரு போன்ற கொழும்பு வீதிகளின் பெயர்கள் அவர்களின் இருப்படையாளத்துக்கு எடுத்துக்காட்டு. அவர்களில் பலர் இன்று சிங்கள சமூகத்துடன் கலந்துவிட்டனர். புதிய தலைமுறையிடம் தமிழர் அடையாளத்தைக் காண்பதரிது.



மலே

**மலையாளிகள்**

தென்னிந்திய கேரள மாநிலத்தைச் சேர்ந்த மலையாளிகளின் குடியேற்றமானது 14ஆம் நூற்றாண்டிலிருந்தே அறியப்படுகிறது. சேர, சோழ, பாண்டிய ஆக்கிரமிப்புகளின் போது அவர்களுடன் பணியாளர்களாக இலங்கை வந்தடைந்த சமூகமாவும் அறியப்படுகிறார்கள். ஆனால் ஆங்கிலேய காலனித்துவத்தின் போது தான் பெருமளவு மலையாளிகள் இந்தியக் கூலித் தொழிலாளர்களாக இலங்கை வந்தடைந்தார்கள். கொழும்புக்கு வெளியில் உள்ள பிற இடங்களிலும் இவர்களின் வியாபகம் இருந்தாலும் கொழும்பில் தான் குறிப்பிடத்தக்க அளவுக்கு அவர்களின் சனத்தொகை காணப்படுகிறது.

தமிழ் பேசுபவர்களாகவும் தமிழ் பண்பாட்டோடு இணைந்த சமூகமாகவும் இருந்தபோதும் தமிழ் அடையாளத்தின் கீழ் அவர்களுக்கு இருக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. எனவே கணிசமானோர் சிங்கள மொழி கற்று, அம்மொழி பேசி அப்பண்பாட்டோடு இணைத்துக் கொள்வதில் தார்மீக இடையூறுகள் இருக்கவில்லை. பெயர்களைக் கூட சிங்களப் பெயர்களாக மாற்றிக் கொண்டவர்களின் தொகையும் அதிகம் எனலாம்.

**மலே**

மதத்தால் இஸ்லாமியவர்களான மலே இனத்தவர்கள் மலேசிய பூர்வீகத்தைக் கொண்டவர்கள். அதேவேளை 17ஆம் நூற்றாண்டில் டச்சு கிழக்கிந்தியக் கம்பனியின் கட்டுபாட்டின் கீழ் இருந்த கிழக்கிந்திய நாடுகளான இன்றைய மலேசியா, சிங்கப்பூர், புருணை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் விரவி வாழ்ந்தவர்கள். டச்சுக் காலத்தில் அங்கிருந்து பல்வேறு பணிகளுக்காகக் கொண்டு வரப்பட்டவர்கள் அவர்கள். குறிப்பாக படைவீரர்களாகவும், சமையல்காரர்களாகவும், வேறு பல பணியாளர்களாகவும் கொண்டு வரப்பட்டவர்கள். அன்றைய ஸ்லேவ் ஐலன்ட் (இன்றைய கொம்பனி வீதி பகுதி) பிரதேசத்தில் அதிகமாக குடியிருந்தார்கள். இன்றும் மலே வீதி அதற்கு ஒரு சாட்சியாகக் கூறலாம். இவர்களும் தனித்துவமான முஸ்லிம் சமூகமாக வாழ்ந்து வருகிறார்கள். தொதல், பிபிக்கம், தோசி, பாசிப்பயறு பணியாரம் போன்ற அவர்களின் பண்பாட்டு உணவுகள் இலங்கையின் உணவுப் பண்பாட்டில் இரண்டறக் கலந்து விட்டதையும் நாம் கவனிக்கலாம்.

**போர்த்துகேய பறங்கியர்**

இலங்கையில் இரண்டு விதமான பறங்கியர்கள் உள்ளனர். 500ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் போர்த்துக்கேயர் ஆட்சி காலத்தில் வந்த பறங்கியர்களும், அதன் பின்னர் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் வந்த பறங்கியரையும் இவ்வாறு குறிப்பிடலாம். பிற்காலத்தில் இலங்கையில் தங்கி இலங்கையர்களைத் திருமணம் முடித்துக் கொண்டு நிரந்தரக் குடியிருப்பாளர்களாக ஆனவர்களைத் தான் நாம் பறங்கியர்களாக அடையாளம் காண்கிறோம். இலங்கையின் சனத்தொகை கணக்கெடுப்பில் நீண்ட காலம் கணிசமான கவனிப்புக்கு உள்ளாக்கப்பட்டவர்களாக இவர்கள் இருந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வாழ்கின்றனர். அதேவேளை கொழும்பு போர்த்துகேயரினதும், ஒல்லாந்தர்களினதும் தலைநகராக இருந்ததால் கொழும்பு குடியிருப்பாளர்களில் கவனிக்கத்தக்கவர்களாக இருந்தார்கள். அவர்களின் அடையாளங்களாக அவர்களின் மொழி இலங்கையில் இன்றும் எத்தகைய செல்வாக்கு செலுத்தி வருகிறது என்பதை வைத்து அறிந்துகொள்ள முடியும். உதாரணத்துக்கு அலமாரி, கந்தோர், பைலா, அன்னாசி, பால்தி, வாங்கு, போனிக்கா, பொத்தான், கோவா, கபொக், களிசான் போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.



கொழும்புச் செட்டி

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய வேளை எஞ்சியிருந்த பறங்கியர்களை நீதிமன்றங்களிலும், அரச உத்தியோகங்களிலும் பயன்படுத்திக் கொண்டார்கள். 1956ஆம் ஆண்டின் ஆட்சியின் போது சிங்களம் மட்டும் சட்டத்துக்கு பலியாக்கப்பட்டவர்கள் இவர்களும் தான். பல பாரபட்சங்களுக்கு உள்ளான நிலையில் பெருமளவானோர் இலங்கையை விட்டு வெளியேறினார்கள். அவர்களில் பெரும்பாலானோர் அவுஸ்திரேலியாவில் குடியேறினார்கள்.

**சீனர்கள்**

பழங்காலத்திலிருந்தே இந்நாட்டில் வாழும் மற்றொரு சிறுபான்மையினர் சீனர்கள். முற்காலத்தில் இவர்கள் இலங்கைக்கு வர்த்தகத்திற்காகவும், பட்டுப்பாதையில் பயணிக்கவும் வந்தனர். இந்த நாட்டிற்கு வந்த சீனர்களில் ஃபாஹியன் துறவி மற்றும் ஹியுயன் சாங் துறவி பற்றிய பல விவரங்கள் இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. டச்சுக் காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சியிலும், சீனர்கள் கறுவாப்பட்டை தோட்டங்களில் வேலை செய்ய கூலிகளாக இந்த நாட்டிற்கு வந்தனர். காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் மற்றும் ஹாமில்டன் கால்வாய் புனரமைப்புக்கு சீனர்களின் உழைப்பு பயன்படுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பெருந்தோட்டத்துறைக்கு சீனர்களைத் தான் கொண்டுவருவதாக இருந்தது. பல்வேறு விவாதங்களின் இறுதியில் தான் தென்னிந்தியத் தமிழர்களை இறக்குமதி செய்வதாக தீர்மானமானது. அன்று சீனர்களைக் கொண்டு வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால் சில வேளை இன்றைய இரண்டாம் பெரும்பான்மை இனமாக சீனர்கள் இருந்திருப்பார்கள். 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் சீன முதலீட்டோடு தொடங்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனர்கள் பெருமளவு பயன்படுத்தப்பட்டதால் இன்று இலங்கையில் பறங்கியர்களை பின் தள்ளிவிட்டு சனத்தொகையில் 120,000 க்கும் மேற்பட்ட சீனர்கள் இலங்கையில் வாழ்கிறார்கள். கொழும்பின் துறைமுக நகரம் திறக்கப்பட்டதன் பின்னர் இவ்வெண்ணிக்கை பல மடங்காகப் பெருகும் என்று கணிக்கப்படுகிறது.

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 48

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 |
| 06 | ■ | 07 | 08 | ■ | 09 |
| 10 | 11 | 12 | 13 | ■ | 14 |
| ■ | ■ | 15 | ■ | 16 | ■ |
| 17 | 18 | ■ | 19 | 20 | 21 |
| ■ | 22 | 23 | 24 | ■ | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
............................... ...............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

1. பல்வேறு வண்ணங்களினாலான தோகை கொண்ட அழகிய பறவை. எமது நாட்டின் காடுகளிலும் வாழ்கின்றது.
4. பூவில் இருந்து பிஞ்சு உருவாகி, பிஞ்சு காயாகி முற்றியதும் அதன் அடுத்த பருவம் இது... கனிந்து விட்டதால் தித்திக்கும் சுவை கொண்டது.
7. யாரேனும் ஒருவருக்கு எதிராகவோ, அல்லது உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கிலோ தீட்டப்படுகின்ற கபடம் கொண்ட இரகசியத் திட்டத்தை இப்பெயரில் குறிப்பிடலாம்.
10. நிறம் ஒன்றின் பெயர் இது. அதேசமயம் நாம் அன்றாடம் உணவுக்கு (கறி) சுவையூட்டப் பயன்படுத்துகின்ற தாவரத்தின் பகுதியையும் (வேர்த்தண்டு) இச்சொல் குறிக்கின்றது. (தலைகீழான சொல்)
17. நாட்டில் வரட்சி நீங்குவதற்கு அவசியமானது. இது இல்லாவிடின் நாடு செழிக்காது. ஆனால் அதிகமாகி விட்டால் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு விடும்.
19. நாம் அன்றாடம் எங்கும் காணக்கூடிய கருமை நிறப் பறவை.
22. நீரின் மேற்பரப்பில் இலகுவாக நீந்திச் சென்று, சிறுமீன்களையும் பூச்சிபுழுக்களையும் பிடிப்பதற்கான இசைவாக்கங்கள் கொண்ட பறவையினம். நீந்துவதற்கும் சேற்றுநிலங்களில் நடப்பதற்கும் ஏற்றதாக கால் விரல்களுக்கிடையில் மென்சவ்வுகள் கொண்ட பறவை.

**மேலிருந்து கீழ்**

1. பெற்றோருக்கு இவள் அன்பான வாரிசு.
3. மரத்தின் உயரக்கிளையில் கயிறுகட்டி, சிறுவர்கள் ஆடி மகிழ்வது (தலைகீழான சொல்)
5. நாம் வாழும் பூமியை புவி, அகிலம், தரணி, ஞாலம், வையகம், வையம் என்றெல்லாம் கூறலாம். அவ்வாறான மற்றொரு ஒத்த பொருள் சொல் இது. (தலைகீழான சொல்)
8. சந்திரனின் மறுபெயர் (தலைகீழான சொல்)
16. அக்காலத்தில் குற்றவாளிகளுக்கும் எதிரிகளுக்கும் தண்டனை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதனம் இது. வளைந்து கொடுக்கக் கூடியது. கயிறு போன்றது. சவுக்கு என்பது மற்றொரு பெயர். (தலைகீழான சொல்)
18. முக்கனியில் ஒன்று (தலைகீழான சொல்)
19. ஒலியைக் கேட்டு உணர்வதற்கான புலனங்கம்
21. தன்மை, பன்மை பெயர்ச்சொல் (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 47

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தொலைக்காட்சி 10. மகுடி 13. உமி 16. தவிடு
19. பாம்பு 23. ஆவி 25. மனை

**மேலிருந்து கீழ்**

01. தொட்டில் 04. காலி 06. சிறுமி 12. மதம்
17. பாவி 19. புவி 22. யானை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 46

### பாராட்டு பெறுவோர்

**1. அய்னா ரலீம்**
தரம் 05, அல் முனவ்வறா ஆண்கள் பாடசாலை,
இல. 25/B, பங்களாகெதர, மடவள.

**2. எம்.ஐ. ஹம்றா**
தரம் 03, பரகஹதெனிய தேசிய பாடசாலை,
இல. 186, கண்டி வீதி, பரகஹதெனிய.

**3. எம்.ஆர்.எப். அய்ஸா**
தரம் 02, அல் ஹிஜ்ரா மு.வித்தியாலயம்,
ஒபேசேகரபுர, தம்பதெனிய.

**4. சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் அமான் மு.ம.வி,
கல்லொழுவ, மினுவாங்கொடை.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி

**6. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, மேமா/மது/ ரஹ்மானிய்யா ம.வி.தே.பா,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை

**7. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய

**8. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 48
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**பழைமை எனப்படுவது யாதெனின் யாதும் கிழமை
யைக் கீழ்ந்திடா நட்பு**

**தெளிவுரை :**

பழைமை என்று சொல்லப்படுவது எது என்று வினாவினால் அது பழகியவர் உரிமைப் பற்றிச் செய்யும் செயலைக் கீழ்ப்படுத்தாமல் ஏற்கும் நட்பாகும்.

# இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினம்

கி.பி 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இலங்கையின் கரையோர பிரதேசம் கைப்பற்றப்பட்டது இதனைத் தொடர்ந்து கி.பி 1602 இல் ஒல்லாந்தர், கி.பி 1766 இல் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

1815 ஆம் ஆண்டளவில் உடரட்ட என்ற மலையகப் பிரதேசத்தையும் எந்தவித சிரமமுமின்றி பிரிட்டன் தமது நிருவாகத்திற்கு உட்படுத்தியது. இதன் பின்னர் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் நிருவாகத்திற்குள் கொண்டுவரப்பட்டது.


இலங்கையர்களின் சுதந்திரப் போராட்டம் இங்கிருந்தே ஆரம்பமாகின்றது என்று கூறலாம். 1818ஆம் ஆண்டு உடரட்ட என்ற மலையக பெருங்கலகம், 1823 ஆம் ஆண்டு கொஸ்வத்தை கிளர்ச்சி, 1826ஆம் ஆண்டு பிம்தென்னே கிளர்ச்சி, 1835 ஆம் ஆண்டு மல்வத்து விகாரையின் கிளர்ச்சி, 1848ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி முதலான கிளர்ச்சிகள் ஆரம்பமானது, நாட்டு மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயாகும்.

1831ஆம் ஆண்டில் அரசாங்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கோல்புறுக் ஆணைக்குழுவினர், முதல் முறையாக அவர்களது ஆட்சி முறையில் மறுசீரமைப்பு ஆலோசனையை சமர்ப்பித்தனர். பிரித்தானியர்களின் இந்த முயற்சி பெருமளவில் வெற்றியடையவில்லை.

1848 ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி ஆரம்பமானதுடன் அது இலங்கை சுதந்திர போராட்டத்தின் இறுதி கிளர்ச்சியாக அமைந்தது. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு பகுதி மாத்திரம் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பின்னர் 1815 ஆம் ஆண்டில் முழு நாடும் பிரிட்டனின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்தயுகம் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி முடிவிற்கு வந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து தாய்நாட்டின் இறைமைக்காக இரத்தம் சிந்தியமை மற்றும் உயிரை தியாகம் செய்தவர்களின் எண்ணிக்கை அளப்பரியதாகும்.

இம்முறை "ஒன்றாய் எழுவோம்" என்ற தொனிப்பொருளில் 75 ஆவது சுதந்திர தினம் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இவ்வார மழலை



மிச்சேல் இவானா
பிரதீப் / டல்ஸி,
கொழும்பு - 15




ஆர். அஷ்வினி ரொமேஷா
தரம் 10, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.



மரியா ஷாலினி பெர்னான்டோ
தரம் 10, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.





கிறிஸ்டினா தோமஸ்
தரம் 10, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.

## சுதந்திரத் திருநாள்!



நமது சுதந்திரத் திருநாள் இது
நவிலரும் இன்பப் பெருநாள்
அனுமதி வழியிலே சுதந்திரம் நாம்
அடைந்த தெனும் பெரும் ஒளிநாள்!

அடிமைத் தளையைப் போக்கி ஆண்ட
அந்நிய ஆட்சியை நீக்கி
குடிமை சமைத்த நிலையில் இன்று
கூடி உழைத்தே உயர்வோம்!

அடைந்த சுதந்திரம் அதனை நாம்
ஆருயிர் போன்றே காப்போம்
இடைவெளி என்பதை அகற்றி நாம்
இணைந்தே புகழைச் சேர்ப்போம்!

அஸ்மா பாரிஸ்
மள்வானை...

## தெரிந்து கொள்வோம்!

**"அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்"**

இன்றைய தலைமுறையினரிடத்தில் இந்த பழமொழி இவ்வாறு கூறுவதை நாம் கேட்டிருப்போம். ஆனால், வயதானவர்கள் இந்த பழமொழியை அவ்வாறு கூறவில்லை. "அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த ராத்திரியிலும் கூட, கொடை அதாவது 'மற்றவர்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்' நேரம் காலம் பார்க்காமல் எந்த நேரத்திலும் மற்றவர்களுக்கு உதவும் வள்ளல்" களை குறித்து நம்முடைய முன்னோர்கள் சொல்லி வைத்த பழமொழி. காலப்போக்கில் இவ்வாறு மறுவி விட்டது. ஆகையால் இந்த பழமொழி **"அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான்"** என்று கூற வேண்டும் என்று பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள்.

# வாரம் ஒரு பெரியார்

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்



அறிஞராக, பேராசிரியராக, கலைஞராக, ஆராய்ச்சியாளராக, பல்கலைக்கழகத் துணை வேந்தராக சிறந்து விளங்கியவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

யாழ்ப்பாணம் வீமன்காமத்து கிராமத்தில் சுப்பிரமணியன் முத்தம்மா வாழ்விணையருக்கு 08.05.1924 அன்று மகனாகப் பிறந்தார். தமது தந்தை நிர்வகித்த வீமன்காமம் தமிழ்ப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர் தெல்லிப்பழை ஆங்கிலக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை முடித்தார். உயர் கல்வியை யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியிலும் இந்துக் கல்லூரியிலும் பயின்று முடித்தார். கொழும்புப் பல்கலைக்கழக மாணவராக 1941 ஆம் ஆண்டு தேர்ச்சியடைந்தார். தமிழ், ஆங்கிலம், லத்தீன், வரலாறு ஆகியப் பாடங்களைக் கற்று, இலண்டன் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். தமிழைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்து, வரலாற்றைத் துணைப்பாடமாகக் கொண்டு இளங்கலை பட்டப்படிப்பை 1944 ஆம் ஆண்டு முடித்தார். தொடர்ந்து பயின்று தமிழில் 1946 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியேற்றார்.

வித்தியானந்தன் 1948 ஆம் ஆண்டு இலண்டன் சென்று கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் (School of Briental studies) தமிழறிஞர் அல்பிரட் மாஸ்டர் (Alfred Master) வழிகாட்டுதலில் 'பத்துப்பாட்டு' வரலாற்று, சமூக, மொழியியல் நோக்கு' என்னும் தலைப்பில் தமது முனைவர் பட்ட ஆய்வினை முடித்தார். இலங்கைத் திரும்பிய பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியராகவும், பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக 1979 ஆம் ஆண்டு பதவியேற்று 1989 வரை பணிபுரிந்தார்.

தமிழியல் ஆய்வில் ஈடுபட்டும், தமிழ் ஆய்வாளர் பலரை உருவாக்கியும் ஈழத்து தமிழ் ஆய்வு வரலாற்றில் சிறந்த இடத்தை வகித்தார் பேராசிரியர் வித்தியானந்தன். அவர் இலக்கியம் பற்றி எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 1953 ஆம் ஆண்டு 'இலக்கியத் தென்றல்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. அந்நூல் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு பயனுடையதாக அமைந்தது.

'தமிழர் சால்பு' என்னும் நூல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் இவர் மேற்கொண்ட ஆய்வின் பயனாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வேடு "A Historical Social and Linguistic Study of Pattuppattu" என்பதாகும். இந்நூலை அடிப்படையாகக் கொண்டது 'இலக்கியத் தென்றல்' என்னும் நூல் ஆகும்.

பேராசிரியர் வித்தியானந்தன் 1960 ஆம் ஆண்டு இங்கிலாந்து, யூகோசிலாவியா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், மலேசியா முதலிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களில் இவர் ஆய்வுரை நிகழ்த்தினார். இச்சுற்றுப் பயணம் 'வெளிநாட்டுக் கலைத்தூது' என தமிழ் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலேசியா, சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவராக இருந்து 1974 ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கிடையே உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடத்தினார்.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை சார்பாக மட்டக்களப்பில் மாவட்ட மாநாட்டை ஒரு வார காலம் நடத்தப்பட்டது. அம்மாநாட்டிற்கு வித்தியானந்தன் தலைமை வகுத்தார். அம் மாநாட்டில் 'மாநாட்டு மலர்' வெளியிடப்பட்டது, மட்டக்களப்பு பகுதியின் வரலாறு, சமூகம், அரசியல், பொருளியல், மொழி, கலை, சமயம் முதலியவைகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டு முல்லைத் தீவில் மாவட்ட உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் சிறப்புற நடத்தினார்.

இறுதிக்காலத்தில் கொழும்பிலே தங்கிய அவர், ஜனவரி 21, 1989 இல் மறைந்தார்.

# விளையாட்டு







# தடையும் தீர்வும்

சர்வதேச கால்பந்து சம்மேளனம் இலங்கை மீது தடை விதித்தது யாருக்கும் பெரிய அதிர்ச்சி செய்தியாக இருக்கவில்லை. செய்தி வெளியானபோது, "அப்படியா?" என்று கேட்கும் அளவுக்குத் தான் அதன் தாக்கம் இருந்தது.

இலங்கை கால்பந்து நிர்வாகத்தில் தொடர்ச்சியாக இருந்து வந்த பிரச்சினையின் நீட்சியாகவே இந்தத் தடையை பார்க்க வேண்டும். எனவே தடை வரப்போகிறது என்பதை முன்கூட்டியே புரிந்துகொள்ளக் கூடியதாகவே இருந்தது.

ஆனால் தடையை தவிர்ப்பதற்கு யாரும் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு தரப்பும் தன் பக்க நியாயங்களை கூறிக் கூறி காலத்தை போக்கியபோது, பிஃபா கடந்த ஜனவரி 21 ஆம் திகதி உடன் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அங்கத்துவத்தை இடைநிறுத்துவதாக அறிவித்துவிட்டது.

இது தெருவோர சங்கத்திற்கு விதிக்கும் தடை அல்ல, ஒட்டுமொத்த இலங்கை கால்பந்துக்கும் விதிக்கும் தடை. இலங்கையில் இருக்கும் கடைக்கோடி கால்பந்து வீரர், பயிற்சியாளர், நடுவர்கள் எல்லோருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

## பிஃபா என்ன சொல்கிறது?

சர்வதேச கால்பந்து சம்மேளன பொதுச் செயலாளர் பட்மா சுமரா அனைத்து அங்கத்துவ நாடுகளுக்கும் அனுப்பி இருக்கும் கடிதத்தில், "2023 ஜனவரி 21 ஆம் திகதி சர்வதேச கால்பந்து சம்மேளன பணியகம் மூலம் எடுக்கப்பட்ட முடிவின்படி, சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் 16ஆவது உறுப்புரைக்கு அமைய மறு அறிவித்தல் வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அங்கத்துவத்தை இடைநிறுத்துவதாக இங்கு அறியத்தருகிறோம்" என்று கூறப்பட்டிருக்கிறது.

அதாவது மறு அறிவித்தல் வரை பிஃபா சட்டத்தின் 13ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து அங்கத்துவ உரிமைகளையும் இலங்கை கால்பந்து சம்மேளனம் இழக்கிறது.

தடை விலக்கப்படும் வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் அல்லது விளையாட்டுக் கழக அணிகளுக்கு தொடர்ந்து சர்வதேச போட்டிகளில் ஆடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

"இதன்படி, இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் எந்த ஒரு அங்கத்தவருக்கும் அல்லது அதிகாரிக்கு பிஃபா அல்லது ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு அபிவிருத்தித் திட்டங்கள், கற்கைகள் அல்லது பயிற்சிகளின் பலனை பெற முடியாது. அது மாத்திரமல்ல, இலங்கை கால்பந்து சம்மேளனம் இடைநிறுத்தப்பட்டிருப்பதோடு, இலங்கை கால்பந்து சம்மேளனத்துடன் அல்லது அதன் அணியுடன் எந்த ஒரு விளையாட்டுத் தொடர்பையும் ஏற்படுத்த வேண்டாம் என்று உங்களுக்கும் உங்களது இணை நிறுவனங்களுக்கும் அறியத்தருகிறோம்" என்று பிஃபாவின் கடிதத்தில் கண்டிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

"என்றாலும் பிஃபா பணியகம் அல்லது பிஃபா மாநாடு நடப்பதற்கு முதலில் எந்த ஒரு நேரத்திலும் இந்தத் தடையை நீக்க முடியும். அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டால் நாம் உங்களுக்கு அறியத்தருவோம்" என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பது ஒரு ஆறுதல் செய்தி.

என்றாலும் தடையை சும்மா நீக்காது. அதற்கு சில மாற்றங்கள் நிகழ வேண்டும். அது பற்றியும் பிஃபா தெளிவாகக் கூறி இருக்கிறது.

## பிரச்சினையின் அடிப்படை

கால்பந்து நிர்வாகத்தில் மூன்றாவது தரப்பின் தலையீடு என்பது பிஃபாவுக்கு பிடிக்காத பிரதான விவகாரம். கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் விசேட பொதுக் குழு கூட்டத்தில் வைத்து புதிய யாப்பு மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்வுக்கு பிஃபா மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்று ஒப்புதல் அளித்தனர்.



இந்த நிகழ்வே பிரச்சினையின் ஆரம்பப் புள்ளியாக இருந்தது. விளையாட்டு அமைச்சு தேசிய விளையாட்டு நிர்வாகங்களுக்கு வெளியிட்ட புதிய ஒழுங்கு விதிகள் இந்த யாப்புக்கு முரணாக இருந்தது. இதற்கு எதிராக பிஃபா டிசம்பர் மாதத்தில் எச்சரிக்கை கடிதம் ஒன்றையும் விடுத்திருந்தது.

அடிப்படையில் கால்பந்து சம்மேளத்தின் யாப்பை மாற்றினாலும் அது தேசிய விளையாட்டு சட்டத்திற்கு ஒத்துப்போக வேண்டும். இரண்டு சட்டங்களும் முரண்படும்போது சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம். இதனை எல்லா தரப்பும் ஒன்றுபட்டே செய்ய வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி 14 ஆம் திகதி இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தல் நடத்தப்பட்டது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீ ரங்கா வெற்றிபெற்றார். ஆனால் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமருக்கு கடைசி நேரத்தில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது. அதற்கு எதிராக அவர் மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்ல, அந்த வழக்கு அடுத்த மாதம் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரவிருக்கிறது.

இலங்கை கால்பந்து சம்மேளத்தின் ஊழல் விவகாரம் மற்ற பெரிய பிரச்சினை, அத்தோடு அது முடியாத ஒரு பிரச்சினை. பதவிக்கு வரும் நிர்வாகம் கண்டபடி பணத்தை செலவிடுவதான குற்றச்சாட்டு காலம் காலமாக இருக்கும் ஒன்று. இதனை கட்டுப்படுத்துவது பற்றி எல்லோரும் பேசுகிறார்கள், எந்தப் புள்ளியில் ஆரம்பிப்பது என்பது தான் புரியவில்லை.

ஜஸ்வர் உமருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளும் இந்த வகையராவை சேர்ந்தது. ஆனால் அதனை கையாண்ட விதம் இன்று சர்வதேச தடை அளவுக்கு சென்றிருக்கிறது.

> பி.ஃபா தடை என்பது சாதாரணப்பட்டது அல்ல. அதுவும் இலங்கை போன்ற நாட்டின் கால்பந்து விளையாட்டு என்பது முழுக்க முழுக்க பி.ஃபாவில் தங்கியிருக்கும் ஒன்று. பி.ஃபா இல்லை என்றால் காலில்லாமல் கால்பந்து ஆடும் கதையாகிவிடும்.

## என்ன இழப்போம்?

பிஃபா தடை என்பது சாதாரணப்பட்டது அல்ல. அதுவும் இலங்கை போன்ற நாட்டின் கால்பந்து விளையாட்டு என்பது முழுக்க முழுக்க பிஃபாவில் தங்கியிருக்கும் ஒன்று. பிஃபா இல்லை என்றால் காலில்லாமல் கால்பந்து ஆடும் கதையாகிவிடும்.

இலங்கை கிரிக்கெட் போன்று கால்பந்துக்கு சொந்த சம்பாத்தியம் குறைவு. அனுசரணை மற்றும் ஏனைய நிதிகள் என்று பார்த்தாலும் சொற்ப தொகையே தேறும். மற்றபடி சர்வதேச கால்பந்து சம்மேளனத்திடம் இருந்து இலங்கைக்கு வருடத்திற்கு கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் டொலர் கிடைக்கும். இது தான் இலங்கை கால்பந்தின் நிதி ஆதாரம். பிஃபா தடையால் இந்தப் பணம் தடைப்பட்டுவிட்டது.

மற்றது சர்வதேச கால்பந்து போட்டிகளில் இலங்கையால் இனி ஆட முடியாது. இலங்கை தேசிய அணி வரும் மார்ச், ஜூன் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சர்வதேச போட்டிகளில் ஆடவிருக்கிறது. தடை நீடித்தால் இந்த அனைத்துப் போட்டிகளையும் இழந்து விடுவோம்.

ஆசிய கால்பந்து சம்மேளன போட்டிகளில் நடுவராக செயற்படும் இலங்கை நடுவர்களின் எதிர்காலமும் இதனால் கேள்விக்குள்ளாகி இருக்கிறது. சர்வதேச கால்பந்து சம்மேளனம் அங்கீகரித்த 12 நாடுவர்களும் உடன் இடைநிறுத்தப்படுகிறார்கள். இந்தத் தடை நீக்கப்படும் வரையில் அவர்களுக்கு சர்வதேச போட்டிகளில் நடுவராக செயற்பட முடியாது.

அதுமட்டுமல்ல வெளிநாடுகளில் உள்ள கழகங்களில் ஆடும் இலங்கை வீரர்கள் தொடர்ந்து அங்கு ஆட முடியாமல் போகும். குறிப்பாக மாலைதீவில் பல இலங்கை வீரர்கள் கழக மட்டப் போட்டிகளில் ஆடுகிறார்கள். அவர்கள் இனி நாடு திரும்ப வேண்டி இருக்கும்.

இலங்கை அணிக்கு கட்டார் இரு கால்பந்து பயிற்சியாளர்களை வழங்கி இருக்கிறது. இந்தத் தடையால் கட்டார் அவர்களை திரும்ப அழைத்துக் கொள்ளும் நிலை இருக்கிறது. தேசிய அணிக்கு கிடைக்கும் சர்வதேச பயிற்சிகளும் இனிக் கிடைக்காது.

பிஃபா ஒட்டுறவை அறுத்ததால் பிஃபாவின் அங்கத்துவம் பெற்றிருக்கும் 208 நாடுகளுக்கு இலங்கைக்கு நல்லது கெட்டதற்கும் போக முடியாது. உள்நாட்டில் இடம்பெறும் கால்பந்து அபிவிருத்தி செயற்பாடுகள் கூட இதனால் நின்றுவிடும்.

## மூன்று நிபந்தனைகள்

இலங்கை கால்பந்துக்கு தடை வரப்போகிறது என்பது முன்னரே தெரிந்தது போலவே இப்போது தடையை நீக்குவதற்கான வழியும் தெளிவாகத் தெரிந்தது. தடையை விதித்த பிஃபாவே அதனை நீக்குவதற்கான வழியையும் செல்லியிருக்கிறது. பிஃபா விதித்திருப்பது மூன்றே மூன்று நிபந்தனைகள். அதனை பின்பற்றினால் அடுத்த நொடியே தடை நீக்கப்படும் என்ற உத்தரவாதமும் அளித்திருக்கிறது.

முதலில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளன பிரதிநிதிகளின் மேற்பார்வையில் கொழும்பில் கடந்த ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி இடம்பெற்ற வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய யாப்பை செயல்படுத்த வேண்டும் என்று பிஃபா கண்டிப்பாகக் கூறுகிறது.

அடுத்தது ஜனவரி 14ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலை சர்வதேச கால்பந்து சம்மேளனம் அல்லது ஆசிய கால்பந்து சம்மேளனம் ஏற்பதில்லை என்பதால், அந்தத் தேர்தலுக்கு முன்னர் செயற்பட்ட நிர்வாகக் குழுவிடம் இலங்கை கால்பந்து சம்மேளன நிர்வாகத்தை கையளிக்க வேண்டும்.

கடைசி நிபந்தனையாக கடந்த செப்டெம்பர் 22இல் நிறைவேற்றப்பட்ட புதிய யாப்புக்கு அமைய ஜனநாயக முறையில் மற்றும் சுயாதீனமான புதிய தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த நிபந்தனைகள் மேம்போக்காகப் பார்த்தால் சாதாரணமாக தெரிந்தாலும், இலங்கை சூழலில் இதனை நிறைவேற்றுவதில் ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. முதல் சிக்கல் இலங்கை கால்பந்து என்பது ஒரு சராசரியான நிர்வாகக் குழுவுக்கு அப்பால் ஏகப்பட்ட அரசியல் இருக்கிறது.

மற்றது, நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய யாப்புக்கும், இலங்கை விளையாட்டு சட்டத்திற்கும் இடையே ஒத்துப்போகாத முரண்பாடுகளும் இருக்கின்றன. எனவே, முதலில் அவைகளை கலைவதும் முக்கியம்.

மற்ற முக்கிய பிரச்சினை, ஆளுக்காள் கயிறிழுப்பதால் ஒரு தரப்பு மற்றத் தரப்பை காலை வார காலம் பார்த்திருக்கும். எனவே, அத்தனை தரப்புகளுக்கும் இடையே ஏதோ ஒரு புள்ளியில் புரிந்துணர்வு ஏற்படுவது பிஃபாவை சமாளிப்பதற்கு அவசியமாகும்.



## மீள்வது எப்படி?

சர்வதேச கால்பந்து சம்மேளத்தின் தடை என்பது ஒன்றும் புதியதல்ல. தனது அங்கத்துவ நாடுகள் கட்டுப்பாட்டை மீறி செயற்படுவதாக உணரும் சிறிய சமிக்ஞை கூட தடை விதிக்கப் போதுமானது. எமது அண்டை நாடு இந்தியாவே இதற்கு அண்மைய உதாரணம்.

கடந்த ஆண்டு ஒகஸ்டில் மூன்றாம் தரப்பின் தலையீடு இருப்பதாகக் கூறிய அகில இந்திய கால்பந்து சம்மேளனத்திற்கு பிஃபா தடை விதித்தது. இந்திய கால்பந்து சம்மேளன தலைவராக நீண்டகாலம் இருந்த பிரபுல் படேலை பதவி நீக்கம் செய்த உச்ச நீதிமன்றம், சம்மேளனத்தை நிர்வகிக்க குழு ஒன்றை அமைத்தது, அந்தக் குழுவின் வழிகாட்டுதலில் சம்மேளன தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்ட பின்னணியில் பிஃபா இந்தத் தடையை விதித்தது.


கடைசியில் பிஃபாவின் நிபந்தனைக்கு அடிபணிந்ததை அடுத்தே 11 நாட்கள் கழித்து தடை நீக்கப்பட்டது.

2021இல் சாட்டிலும், 2017இல் பாகிஸ்தானிலும், 2015இல் இந்தோனேசியாவிலும் என்று வரலாறு நெடுகிலும் இந்தக் கதை தான் நடந்திருக்கிறது.

எனவே விரைவாக அல்லது தாமதித்தேனும் பிஃபாவுடன் ஒத்துப் போவதுதான் பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இல்லாவிட்டால் ஏற்கனே பலவீனப்பட்டிருக்கும் இலங்கைக் கால்பந்து இன்னும் மோசமடைவதைத் தவிர இந்தத் தடையால் எதனையும் சாதிக்க முடியாது.

**எஸ்.பிர்தௌஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஜனவரி 29 ஞாயிற்றுக்கிழமை
Janany K.J
Model, T.V.Anchor

# 16 ஆண்டுகள் ஒரே வகுப்பில் கற்கும் மாணவன்





பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

ஆரம்ப பாடசாலையில் கற்கும் ஜோசப் நாள் தவறாமல் பாடசாலைக்குப் போவார். ஆனால், பாடசாலையில் இருக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோருக்குமே ஜோசப்பை பார்த்தால் கேலியாக இருக்கும். 'தலைக்குள் ஒன்றும் இல்லாதவன்' என்று சக மாணவர்கள் கிண்டல் செய்வார்கள்.

ஆனால், ஜோசப்புக்கு இது பழகிப்போன ஒன்று. ஒரு வருடம். இரண்டு வருடம் அல்ல, 16 வருடங்கள் ஒரே வகுப்பில் கற்பது தான் ஜோசப்பின் பெரிய பிரச்சினை. ருவாண்டாவின் உமிஜ்யி வா கிகாலி நகரில் இருந்து கசன்செ ஆரம்ப பாடசாலையில் 2006 ஆம் ஆண்டு சேர்ந்த ஜோசப், ஒவ்வொரு ஆண்டும் பரீட்சையில் தோற்று அதே வகுப்பில் இருக்கிறார்.

வகுப்பில் கடைசி இடத்திற்கு ஜோசப்பை யாராலும் முந்த முடியாது.

ஜோசப்புடன் கற்றவர்கள் இப்போது மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக சமூகத்தில் பெரிய இடத்திற்கு வந்துவிட்டார்கள். ஆனால் ஜோசப் இன்னும் அதே இடத்தில். ஏன், இப்போது அவரது வகுப்பாசிரியராக இருப்பவரும், அவருடன் கற்றவர்தான்.

ஜோசப்புக்கு இப்போது 22 வயதாகிறது. ஆனால் அவரது உடல் தோற்றத்தில் மாற்றமில்லை. இன்னும் ஆரம்ப பாடசாலையில் கற்பவர் போன்று தான் இருப்பார். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இன்னும் சிறுபிள்ளை போல் தான் தெரிவார். தலை பெருத்து உடல் சிறிதாக இருக்கும் ஜோசப் உண்மையில் ஒரு விசேட தேவையுடையவர். அவருக்கு கற்றது சில நிமிடங்களில் மறந்துவிடும்.

அவருக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் கூறும் போது,

"நான் ஜோசப்பின் வகுப்பாசிரியர். அவர் இந்தப் பாடசாலையில் நீண்ட காலமாக கற்கிறார். 2018இல் இருந்து நான் அவருக்கு கற்பிக்க ஆரம்பித்தேன். கற்பிக்கும்போது அவர் கவமாக கேட்டிருப்பார். ஆனால் புதிய பாடம் ஒன்றை கற்பித்தால் மறந்து விடுகிறார் என்பது தான் பெரிய பிரச்சினை.

வகுப்பில் இருக்கும் புத்திசாலி பிள்ளைகள் புதிய பாடங்களை புரிய வைப்பதற்கு அவருக்கு உதவுவார் என்று நான் நாம்புகிறேன். ஆனால் சில நிமிடங்களிலேயே அவர் கற்றதை மறந்து விடுகிறார்."



வீட்டிலும் இதே பிரச்சினை தான். ஏதாவது பொருளை வாங்கக் கடைக்கு அனுப்பினால் மறந்து வேறு எதையாவது வாங்கி வருகிறான் என்று அவரது தாய் கவலைப்படுகிறார். ஆனால் வீட்டு வேலைகளை கச்சிதமாக செய்கிறார். காலை பாடசாலை செல்வதற்கு முன் வீட்டுக்கு நீர் இறைத்து விட்டுத் தான் செல்வார். வீட்டை சுத்தம் செய்வது, சமயலுக்கு உதவுவது என்று எல்லா வேலையையும் பார்ப்பார்.

"அவன் எனது இரண்டாவது பிள்ளை. ஆரம்பப் பாடசாலையில் 15 ஆண்டுகளாக (2021) கற்கிறான். அவனுடன் கற்றவர்கள் இப்போது பட்டப்படிப்பை முடித்து மருத்துவர்களாகக் கூட இருக்கிறார்கள்" என்கிறார் ஜோசப்பின் தாய்.

படிப்பு வரவில்லை என்றால் அதனை நிறுத்திவிட்டு வேறு வேலையைப் பார் என்று ஆசிரியர்கள் கூட ஜோசப்புக்கு அறிவுரை கூறுகிறார்கள். யார் என்ன சொன்னாலும் ஜோசப் தனது கல்வியை விடுவதாக இல்லை. ஜோசப்பின் கனவு பெரியது. எப்படியாவது நாட்டின் ஜனாதிபதியாகப்போவதாகக் கூறுகிறார்.

"பட்டப்படிப்பை முடித்த பின் நான் ஜனாதிபதியாக விரும்புகிறேன். ஒருநாள் நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாவேன் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். வகுப்பில் நான் கடுமையாகப் படிக்கிறேன். அரசியல் பற்றியும் படிக்கிறேன். அது தலைவராவதற்கு நல்லது. எனது ஊர் மக்கள் உதவாவிட்டாலும் கடவுள் எனக்கு உதவுவான் என்பது எனக்குத் தெரியும்" என்கிறார் ஜோசப்.

என்ன தான் சொன்னாலும் ஜோசப்புக்கு கல்வி என்பது சுட்டுப்போட்டாலும் வரவில்லை. "ஆசிரியர் சொல்லித்தரும் போது பகல் கனவு காண்பது போல் இருக்கும். அவர் கூறுவதை புரிந்துகொள்ள கடினமாக இருக்கிறது. எதைப் பற்றியாவது யோசிக்கும்போது ஏதோ மாயை போல இருக்கும். எல்லாமே மறந்துவிடும்."

உண்மையில் ஜோசப்புக்கான கல்வி வேறு. அவரால் சாதாரண பாடசாலையில் சாதாரண மாணவர்களின் கற்றலுடன் ஈடு கொடுக்க முடியாது. விசேட தேவையுடைய மாணவனாக யாரும் அவரை பார்ப்பதாக தெரியவில்லை.





# இசைத்துறைக்கு அஸ்திவாரமிட்டது அப்பாவின் ஐஸ்கிரீம் வியாபாரம்

## Sirasaவின் The Voice Sri lanka வில் கலக்கும் கிளிநொச்சி கிருஷிகா



Sirasa தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பாகும் The Voice Sri lanka என்ற போட்டி நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்கும் ஒரு இளம்



பாடகி கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஷிகா. கிருஷிகாவின் உள்ளக் குமுறல் இதோ..... #

அனைவரும் வாழ்க்கையில் நிறைய இன்னல்களுக்கு மத்தியில்தான் அவர்களுடைய பயணங்களை ஆரம்பித்து இருப்பார்கள். SirasaTV க்கு எனது மனமார்ந்த நன்றிகள். என்னுடைய தாய் தந்தைக்கு மிக்க நன்றி இவ்வளவு தூரம் நான் வெளியில் தெரிவதற்கும் இசைத் துறையில் பயணிப்பதற்கும் என் தாய் தந்தை கடினமாக உழைத்துள்ளனர். வாழ்க்கையில் பல பேருக்கு பல கனவுகள். ஆனால் அதை நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்புகளும் வசதிகளும் முக்கியமாக ஒத்துழைப்பும் கிடைப்பது என்பது கடினம். நான் இசைத் துறையை ஆரம்பிப்பதற்கு என் தந்தை தான் அஸ்திவாரம். அவர் இல்லையென்றால் எனக்குள் இருக்கும் திறமை மறைந்து போயிருக்கும். நான் எனது இசைத் துறையை ஆரம்பிப்பதற்கு என் தந்தையின் ஐஸ்கிரீம் வியாபாரமே ஆரம்பமாக இருந்தது. என் தாய் தந்தைக்கு மிக்க நன்றிகள். எனது குடும்பத்திற்கு மிக்க நன்றிகள். "தோற்றலும் பரவாயில்லை. முயற்சி செய் பலன் கிடைக்கும்" என்று சொல்லியே என்னை ஒவ்வொரு நிகழ்விற்கும் அழைத்துச் செல்வார்கள். இவ்வாறான தாய் தந்தை கிடைக்க கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். வாழ்க்கைக்கையில் எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள், சந்தோசங்கள் வந்தாலும் ஆரம்ப படியை ஒரு போதும் மறக்க முடியாது. அதே போல் இசைத் துறையில் எனக்கு வாய்ப்புகளை தந்து என்னை வளர்த்தவர்களுக்கு மிக்க நன்றி. அவர்களை ஒரு போதும் மறக்க முடியாது. வாய்ப்பு என்பது அனைவருக்கும் கிடைக்காது. கிடைக்கும் போது அதை நேர்மையாகவும் உண்மையாகவும் பயன்படுத்த வேண்டும். அனைத்தையும் தாண்டி எனக்காக ஆதரவு தரும் உள்ளங்களுக்கும் அன்பான உறவுகளுக்கும் மிக்க நன்றிகள். என்னால முடிந்த வரை என் வளர்ச்சிக்கு அப்பால் என்னை போல் உள்ள கலைஞர்களுக்கு உதவ வேண்டும் என்பதே எனது குறிக்கோள்.

ஏதும் குறிப்பிட தவறியிந்தால் பெரிய மனதுடன் மன்னித்து விடுங்கள் நண்பர்களே!

## கலை நிகழ்வுகள்

★ புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடாத்தும் கலை, கலாசார போட்டிகளுக்கான பரிசளிப்பும் கலாமித்ரா விருது வழங்கும் விழாவும் இன்று 29ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு 10, தாமரை கோபுரத்திற்கு அருகில் இருக்கும் தபால் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெறும்.

★ தினகரன் வார மஞ்சரி ஊடக அனுசரணையுடன் IDM NATIONS CAMPUS INTERNATIONAL பிரதான அனுசரணையில் கவிக்கமல் பாசில் ரஜனி இணைந்து வழங்கும் "வீனஸ் அக் ஷரா குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து கலக்கும் தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் எதிர்வரும் 12.02.2023 அன்று கொழும்பு PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம் பெற உள்ளது.

★ தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் ஸ்ரீ சங்கர் நற்பணி மன்றம் வருடாந்தம் நடத்தும் சங்கர் நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 2023.02.12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை பழைய நகர சபை மண்டபத்தில் கலைஞர் சண்முகராஜா தலைமையில் இடம்பெறும்.



# அஸ்மினின் புதிய பாடல் போட்டி

"ஐயோசாமி'" பாடல் புகழ் பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மினின் புதிய பாடல் பற்றிய அறிவிப்பும் ஐம்பதாயிரம் பணப்பரிசு பெற்றுதரும் போட்டியும்.

"ஐயோசாமி நீ எனக்கு வேணாம்" பாடல் மூலம் உலகத்தமிழர்களின் கவனத்தை ஈர்த்த பிரபல தமிழ் திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய புதிய பாடல் UK MALA KUMAR CREATION தயாரிப்பில் விரைவில் வெளிவரவுள்ளது.

இவ்வேளையில் பாடலாசிரியர் அஸ்மின் தனது முகநூலின் ஊடாக சர்வதேச ரீதியாக ஒரு போட்டியொன்றை அறிவித்துள்ளார். அதில் குறிப்பிடப்படுவதானது,

பெரும் பொருட் செலவில் உருவாக்கப்பட்டு வரும் இந்த சுயாதீன பாடலுக்கு பிரபல தமிழ் சினிமா இசையமைப்பாளர் இசையமைத்துள்ளார். இவர் தளபதி விஜய் படங்களுக்கும் இசையமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடலை தமிழ் சினிமாவின் புகழ்பெற்ற பாடகர், இசையமைப்பாளர் பாடியுள்ளார்.

இப்பாடலின் முதல்வரி அண்மையில் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படத்தில் இடம்பெற்ற வசனத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடலுக்கு இசையமைக்கும் பிரபல தமிழ் சினிமா இசையமைப்பாளர் யார்? பாடலை பாடுகின்ற பிரபல தமிழ்சினிமா பாடகர் இசையமைப்பாளரின் பெயர் என்ன? பாடலின் ஆரம்ப வார்த்தை என்ன?

மேலே உள்ள மூன்று கேள்விகளுக்கும் சரியான பதில் தரும் 10 அதிர்ஷ்டசாலி ரசிகர்களுக்கு UK மாலாகுமார் படைப்பகத்தின் தலைவர், தொழிலதிபர்,சமூக சேவகர் திருமதி. மாலாகுமார் வழங்கும் ரூபாய் 50,000/ பெறுமதியான பணப்பரிசு காத்திருக்கிறது.

ஒருவருக்கு தலா 5,000/ படி பத்து (10) பேருக்கும் பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவித்துள்ளனர்.

போட்டியில் வயது, நாடு, மொழி வேறுபாடின்றி எல்லோரும் பங்குபற்றலாம்.

முகநூலில் விடையினை அளிப்பதோடு malakumarcreation@gmail.com. விரும்பியவர்கள் மின்னஞ்சலுக்கும் அனுப்பலாம்.

**போட்டி முடிவுத்திகதி 07/02/23.**






# தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்

## 12. 02. 2023
## PUBLIC LIBRARY AUDITORIUM
## பி.ப. 5.00



தினகரன் THINAKARAN
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
ஊடக அனுசரணை

IDM NATIONS CAMPUS INTERNATIONAL பிரதான அனுசரணையில் கவிக்கமல் பாசில் ரஜினி இணைந்து வழங்கும் "வீனஸ் அக் ஷரா குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து கலக்கும் தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் எதிர்வரும் 12. 02. 2023 அன்று கொழும்பு PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம்பெற உள்ளது.

தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்கும் இந்நிகழ்வுக்கு கலாநிதி வினாயக மூர்த்தி ஜனகன் தலைமை வகிக்கின்றார்.

இலங்கையின் முன்னணி பாடகர்கள் கலந்து கலக்கும் தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் எதிர்வரும் 12. 02.



2023 அன்று கொழும்பு PUBLIC LIBRARY AUDITORIUM பி.ப. 5.00 மணிக்கு மிகக் கோலாகலமாக இடம் பெற உள்ளது.

### தலைமை

கலாநிதி வினாயகமூர்த்தி ஜனகன்.

### பிரதம அதிதி

கலாபூஷணம், கவியமுதன் இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ் தாஜ்மஹான்

### முன்னிலை

டாக்டர் எம்.ஏ.சி. மௌசூம்

### விஷேட அதிதி

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர்.

கௌரவ விருந்தினர்கள்

கலாநிதி அதிவணபிதா எஸ்.சந்ரு பர்ணான்டோ,

### சிறப்பதிதிகள்

முனைவர் சதீஸ்குமார் சிவலிங்கம்,
சிரேஷ்ட ஊடகவியலாளர்
ஜோசப் பர்ணான்டோ,
சமூக சேவையாளர் உசைன் போல்ட்,
Touch Touch உரிமையாளர் நவராஜா,
தொழிலதிபர் ரபீக்,
சமூக செயற்பாட்டாளர் ஏ.டீ முரளீஸ்வரன்,
தேச அபிமானி அப்துல் ரசாக்,
சமூகசேவையாளர் சாஜஹான்,
மனித நேயன் இர்சாத் ஏ காதர்,
சமூக சேவையாளர் அஸீஸ் லக்கானா,
கலைஞர் ஏ.ரவீந்திரன்,
கலைஞர் ஷண்மு,
தொழிலதிபர் ஓவியநாதன்,
குருசாமி புவனேஸ்வரன்,
குருசாமி பிச்சைக்கிருஷ்ணா,
கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம்.பீ.சுதர்சன்,
சமூக சேவையாளர் சிராஜ் யூனுஸ்,
இம்தியாஸ் காரியப்பர்,
கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் ஜே.எம்.ரிஸ்வான்,
கவிஞர் ஈஸ்வரலிங்கம்,
சமூக சேவையாளர் ஆனந்தகுமார்,
கந்தசாமி கருணாகரன் (தேசிய ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கான செயலகம்)
தொழிலதிபர் டாக்டர் பஹார்தீன்,
தொழிலதிபர் டாக்டர் ரமிஸ் மொஹம்மட்,
தேசமான்ய இஸ்மாயில்,
தேசமான்ய மௌசும் ஜிப்ரி,
தொழிலதிபர் மொஹம்மட் சிராஜ்,
டாக்டர் கௌசல்யா தேவி கோவிந்தப் பிள்ளை,
நகரசபை உறுப்பினர் ஜே.வீரமூர்த்தி குருசாமி,
நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஸரீனா,
அஸீஸ் பவுண்டேசன் அதிபர் அஷ்ரப் அஸீஸ்,
தொழிலதிபர் மொஹம்மட் நிதார்,
கலைஞர் பொன் பத்மநாதன்,
கலைஞர் ராதா மேத்தா,
கவிஞர் தனபாலன்,
சமூக சேவையாளர் அஹம்மட் ரியஸ்,
இசையமைப்பாளர் பஸால் ஜின்னா,
கலாபூஷணம் மொஹம்மட் அலி ஜே.பி. மற்றும் கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தக பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இலவசமான இந்த மாபெரும் இசை நிகழ்வில் ரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டு குழுவினர் அன்போடு அழைக்கின்றனர்.



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"டாக்டர்! என் மகன், சாமி டாலரை முழுங்கிட் டான். எப்படியாச்சும் எடுத்து விடுங்களேன்"!
இப்போ டாலருக்கு மதிப்பு ரொம்ப கொறஞ்சிடுச்சி எங்க இருந்து எடுத்தாலும் நஷ்டம்தான்.



வரலாறு ஏன்டா உனக்கு பிடிக்காதுன்னு சொல்ற?
சார் நான் "விஜய்"யோட ரசிகன்!



50 ரூபா கடன் கிடைக்குமா?
சுத்தமா பணம் இல்லைங்க!
"அழுக்கா" இருந்தாலும் பரவாயில்லைங்க!



திருவள்ளுவர் ஒரு மிமிக்கிரி ஆர் டிஸ்ட்னு எப்படி சொல்ற?
1330 குரளு(ல்)க்கு சொந்தக்கார ர் ஆச்சே!



அதான் குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் கேட்டிருக்கிங்களா?
நாம கேட்டா கொடுப்பாரா?



தம்பி தீக்குச்சியை பத்த வெச்சு ஏன் இட்லி மேல வைச்சு பார்க்கிற?
நீங்க தானே இட்லி "பஞ்சு" மாதிரி இருக்குன்னு சொன் னீங்க! அதான் தீப்பிடிக்குதானு பார்த்தேன்!

'பாடத்தைக் கவனிக் காமல் இருந்ததால உன்ன டீச்சர் அடிச் சாங்களே, அதை ஞாபகம் வச்சிருக் கியா?
நான் அதை "அடி" யோடு மறந்துட் டேன்.





பாட்டி! நான் ஓட்டப் பந்தயத்திற்கு போறேன். ஆசிர்வாதம் பண்ணுங்க!
நல்லா "மெதுவா" பார்த்து ஓடிட்டு வா கண்ணு!



டாக்டரிடம், நான் டெய்லர் வேலை பார்க்கிறதா சொல்லி இருக்கக் கூடாது!
ஏன்? என்னாச்சு?
என்னோட பையனுக்கு ஆப்பரேஷன் முடிஞ்சதும், நீங்க ளே "தையல்"' போட்டுக்கோங்கனு சொல்லிட்டாரு.



நெஞ்சைத் தொடும் ஒரு வார்த்தை சொல்லு
"பனியன்"



கணக்குப் பரீட் சையில, கணக் குப் போடாமல் எதுக்குடா டான்ஸ் ஆடிக் கிட்டு இருக்க?
நீங்கதான் சார் சொன் னீங்க "ஸ்டெப்ஸ்" க்கு மார்க் உண்டுன்னு.

# அமுத விழா பாடகன் கலாபூசணம்
# ஏ. முத்தழகு சூரியகுமார்

வானொலி, தொலைக் காட்சி, திரைப் படம் என சகல இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும் தமிழ், சிங்கள மொழிகள் மட்டுமன்றி இந்தி, என பல்வேறு மொழிகளில் தனது மென்மையான குரலால் பாடல்கள் பாடி பிரபல்யமானவர் கலாபூசணம் ஏ. முத்தழகு சூரியகுமார்.

ஆரம்பத்தில் தேசியப் பாடகராகவும் திரைப்பட பின்னணிப் பாடகராகவும் விளங்கிய இவர், உலகப் புகழ்பெற்ற சர்வதேசப் பாடகராவும் திகழ்கிறார்.

1943,01,18ஆம் திகதி கண்டி,பேராதனையில் கந்தசாமி வெள்ளசாமிக்கும் சரஸ்வதிக்கும் புதல்வனாகப் பிறந்தவர் இவர். இவருக்கு சிவலிங்கம், நவராஜா என்ற இரு சகோதரர்கள் உள்ளார்கள். கொழும்பு பம்பலப்பிட்டி சென் மேரிஸ் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை தொடங்கியவர், மேற் கல்வியையும் இங்கேயே பயின்றார்.

இவருக்கு இலங்கை வானொலிச் சேவையில் 1957ல் தொழிலாளர் வேளை எனும் நிகழ்ச்சி வாயிலாக பாடும் வாய்ப்பு கிடைத்தது. மர்ஹூம் மு.ஆ. சவாஹீர் மாஸ்டர் இசையமைப்பில் இவருக்கு இந்த பாடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இவருக்கு இருபது வயது இருக்கும் போது 1963 இல் சாரணர் இயக்கத்தின் மூலம் பாகிஸ்தானில் நடைபெற்ற ஜம்போரியில் கலந்து கொண்டதுடன் அங்கு உருதுப் பாடல் பாடி பரிசும் பெற்றார்.

இவ்வாறு அவ்வப்போது பாடி வந்தவர், 1968ல் இலங்கை வானொலி சிங்கள சேவையில் பாடகராக தெரிவு செய்யப்பட்டதுடன் இவருக்கு சிங்கள மொழியில் பாடுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. 1971ல் நடத்தப்பட்ட மெல்லிசை பாடல் தேர்வில் இவர் கலந்து கொண்டதுடன் மெல்லிசை பாடகராகவும் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு இசையமைப்பாளர் ஆர். முத்துசாமி இசையமைப்பில் 1972 ஆம் ஆண்டு முதன் முதலாக மெல்லிசை பாடல் பாடுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இலங்கையில் முதன் முதலாக மெல்லிசைப் பாடலை அறிமுகப்படுத்தியவர்கள் மர்ஹூம் எச். எம்.பி. மொகிதீனும், விவியன் நமசிவாயமும் ஆவார்கள். இது மறக்க முடியாதொன்று என பாடகர் முத்தழகு அடிக்கடி நினைவு கூருவதுண்டு. 1964 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சிங்கள பாடல் பாடும் போட்டியில் கலந்து கொண்ட இவர் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தெளிவத்தை ஜோசப்பின் கதையமைப்பில் 1974ஆம் ஆண்டு மறைந்த வி.பி. கணேசன் தயாரித்து நடித்த தமிழ்த் திரைப்படமான 'புதிய காற்று' படத்தில் பின்னணிப் பாடகராக இவர் அறிமுகமானார். இதன் தொடர்ச்சியாக இலங்கையில் தயாரிக்கப்பட்ட நான் உங்கள் தோழன், நாடு போற்ற வாழ்க, கோமாளிகள், அனுராகம், ஏமாளிகள், தென்றலும் புயலும், நான்கு லட்சம், அஜாசத்த, பனிமலர்கள், அவள் ஒரு ஜீவநதி ஆகிய தமிழ் கறுப்பு வெள்ளைத் திரைப்படங்களுக்கு பாடல்கள் பாடியதுடன் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வண்ணத் திரைப்படமான ஷர்மிளாவின் இதயராகம், எங்களில் ஒருவன் ஆகிய திரைப்படங்களிலும் இவர் பாடல்கள் பாடியுள்ளார். இது போன்று இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட 28 தமிழ்த் திரைப்படங்களிலும் 5 சிங்களப் படங்களிலும் பின்னணிப் பாடியுள்ளார்.

1978ஆம் ஆண்டு இவருக்கு தமிழகத்துக்கு சுற்றுலா செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. அப்போது இசையமைப்பாளர் இளையராஜாவை ஏ.வி.எம். ஸ்டூடியோவில் சந்தித்தார்.

1977ஆம் ஆண்டு இவர் முதன் முதலாக 'ஸப்தஸ்வரம்' என்ற பெயரில் தனிநபர் இசை நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்து நடத்தினார். இந்த மேடையில் இவர், சிங்கள மொழி பாடல்ளையும் பாடினார். அதனைத் தொடர்ந்து 'பெம் கெக்குல பிப்பீ' ' சூரிய கீ முத்தழகுப் பாடல்கள்' எனும் தலைப்பில் 27 இசை நிகழ்ச்சிகளை செய்தார்.

இவர் பாடிய டூயட் பாடல்களில் இவருடன் அதிகமான ஜோடிப் பாடல்களைப் பாடிய பெருமை கலாபூசணம் எஸ். கலாவதியையே சாரும். புகழ் பெற்ற தென்னிந்தியப் பின்னணிப் பாடகிகளான ஸ்ரீமதி கே. ஜமுனாராணி, ஜிக்கி, எஸ்.ஜானகி, பி.சுசிலா ஆகியோருடனும் இவர், தென்னிந்திய திரைப்பட பாடல்ளைப் பாடியுள்ளார்.

இலஙகையின் பிரபல சிங்களப் பாடகிகளான கலாபூஷனம் சுஜாத்தா அத்தநாயக்க, கலாசூரி லதா வல்பொல ஆகியோருடனும் ஜோடி சேர்ந்து டூயட் பாடல்கள் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகத் திகழ்ந்த எஸ். டி.சிவநாயகத்தினாலும் பிரபல பேச்சாளரான ஏ. இளஞ்செழியனாலும் இவருக்கு 'மெல்லிசை மன்னன்' என்னும் பட்டம் வழங்கப்பட்டதுடன் கௌரவமும் அளிக்கப்பட்டது. இந்து கலாசார அமைச்சராக இருந்த இராஜதுரை 'மெல்லிசைச் செல்வன்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

1988ஆம் ஆண்டு சைப்பிரஸ், லெபனான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி இலங்கையின் பெயரையும் புகழையும் உலகறியச் செய்தார். இதேபோல், 1994ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று சகோதர மொழியான சிங்கள மொழிப் பாடல்களையும் பாடினார். 1995 ஆம் ஆண்டு சிறந்த பாடகருக்கான ஜனாதிபதி விருது இவருக்கு வழங்கப்பட்டது. இந்த ஜனாதிபதி விருது கிடைத்த அதே ஆண்டு மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று சகோதர மொழியிலான சிங்கள மொழிப் பாடல்களைப் பாடினார்.

(07 ஆம் பக்கம் பார்க்க)







**1968ல் வானொலி சிங்கள சேவையில் பாடகராக தெரிவு செய்யப்பட்டதுடன் இவருக்கு சிங்கள மொழியில் பாடுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. 1971ல் நடத்தப்பட்ட மெல்லிசை பாடல் தேர்வில் இவர் கலந்து கொண்டதுடன் மெல்லிசை பாடகராகவும் தெரிவு செய்யப்பட்டார்.**












2003ல் துபாய் வொண்டர்லேண்டில் சன்பிளவர் கலைஞர்களுடன் இசை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பாடினார்.

பிரபல தென்னிந்திய பின்னணிப் பாடகி கே.ஜமுனாராணியை இங்கு வரவழைத்து 'சூரிய கீ முத்தழகுப் பாடல்கள்' என்ற இசை நிகழ்ச்சியை 2003ஆம் ஆண்டு நடாத்தி இவர் மென்மேலும் புகழ் பெற்றார். தமிழகத்தின் சென்னை துணைத் தூதுவர் இல்லத்தில் 2008 ஆம் ஆண்டு சிங்கள – தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சியில் பாடும் சந்தர்ப்பம் இவருக்கு கிடைத்தது. அங்கு தன் குரலால் இனிமையாக பாடியதால் இவருக்கு 3 அடி உயரமான நடராஜர் சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இவ்வாறு பாடி மணம் பரப்பி வந்த இவருக்கு தமிழகத்தில் உள்ள பிரபல்யமான கலைஞர் தொலைக்காட்சி மற்றும் ராஜ் தொலைக்காட்சியிலும் பாடுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. இவருக்கு சுருதி ஜீவராஜனின் இசையமைப்பில் இவ்வாறு பாடல்கள் பாடுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன.

இவருக்கு இவ்வாறு கலைத் துறையில் முன்னேறுவதற்கும் இவருக்கு உதவி, ஒத்தாசைகளை வழங்கி வந்தவர், வழங்கி வருபவர் இவரது மனைவி மேரி மொனிக்காவும் அவரது மகனான உதயன் கிருபைராஜாவும் என்று இவர் நன்றி உணரவோடு நினைவு கூர்ந்தார்.

இசையமைப்பாளர்களாகிய ஆர்.முத்துசாமி, எம். எஸ்.செல்வராஜா, எம்.கே. ரொக்சாமி, டி. பத்மநாதன், டி.எவ். லத்தீப், கண்ணன் நேசம், சரத் தசநாயக்கா, ஸ்டேன்லீ பீரிஸ், மொகமட் சாலி, சரத் விக்ரம, ஏ. மகேந்திரன், எம். மோகன்ராஜ் ஆகியோரை மறக்க முடியாது என இவர் அடிக்கடி கூறுவதுண்டு.

இவ்வாறு கடந்த 66 ஆண்டுகளாக பாடி வரும் கலாபூசணம் ஏ. முத்தழகு சூரியகுமார் அடுத்த சில மாதங்களில் கலைத் துறைக்கு பிரவேசித்த தனது 66வது வருட நிறைவையொட்டி தனிநபர் இசை நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இவருடன் இவரது புதல்வரும் இந்த இசை நிகழ்ச்சியை நடத்துவதற்கு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543





# 'விஜய் 67' இல் Big Boss புகழ் ஜனனி



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'விஜய் 67' படத்தில் *Big Boss* புகழ் ஜனனி நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

'வாரிசு' படத்தைத்தொடர்ந்து விஜய் நடிக்கும் புதிய படத்தை இயக்குகிறார் லோகேஷ் கனகராஜ். 'மாஸ்டர்' பட கூட்டணி மீண்டும் இணைந்திருக்கிறது. அதேபோல 'திருப்பாச்சி', 'கில்லி', 'ஆதி', 'குருவி' படத்திற்கு பிறகு விஜய்யுடன் இணைந்து இப்படத்தில் நாயகியாக நடிக்கிறார் த்ரிஷா. இப்படத்தில் இயக்குநர் கௌதம் மேனன் நடிப்பதை அண்மையில் உறுதி செய்தார்.

இந்தப் படத்தில் பொலிவுட் நடிகர் சஞ்சய் தத், பிரித்விராஜ் சுகுமாரன், மன்சூர் அலிகான், மிஷ்கின் ஆகியோரும் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார்.

இந்நிலையில், இப்படத்தில் *Big Boss* நிகழ்ச்சியின் மூலம் பிரபலமடைந்த ஜனனி நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி உள்ளதாகக் கூறப்படுகிறது.

இவர் ஐபிசி தமிழ் சேனலில் தொகுப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 23வயதாகும் ஜனனி மொடலாகவும், தொலைக்காட்சி தொகுப்பாளினியாகவும் பணியாற்றி வருகிறார். பிரபல யூடியூப் சேனலில் இவரது நிகழ்ச்சிகள் நல்ல வரவேற்பை பெற்றன. ஜனனி யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றார். இலங்கையில் ஐபிசி தமிழ் தொலைக்காட்சியில், ஒளிபரப்பாகும் உணவு மற்றும் உடல் நலம் சார்ந்த நிகழ்ச்சிகளை ஜனனி தொகுத்து வழங்கி வந்தார். ஜனனியும் பிரபல தொகுப்பாளினி லக்சனாவும் இணைந்து டக் டிக் டோக் என்ற கொமெடி நிகழ்ச்சியையும் வழங்கி வந்தனர். இந்த நிகழ்ச்சி ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சியாகும். ஜனனியின் முழுப்பெயர் ஜனனி குணசீலன் என்பதாகும்.

Senthooram செந்தூரம்



# சினி பஜார்



# கேள்வி பதில்

மொழிவாணன்

எம்.மாகிரட். எலபடகம.

**கேள்வி:** இளய தளபதி விஜய்யின் 67வது படத்தில் இலங்கையைச் சேர்ந்த 'பிக்பொஸ்' பிரபம் ஜனனி விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறாராமே....உண்மையா...?



**பதில்:** லோகேஸ் கனகராஜ் இயக்கத்தில் தயாராகும் விஜய்யின் 67வது படத்லதில் பிக்பொஸ் பிரபலம் ஜனனி நடிப்பதாக தகவல் வெளியாகியிருக்கிக்கிறது. ஆனால் விஜயின் ஜோடியாகத்தான் நடிக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றிய உத்தியோகப்பூர்வ தகவல்கள் எதுவும் இன்னும் வெளியாகவில்லை.

ஆர்.எம்.புஹாரி.வத்தளை.

**கேள்வி:** மக்கள்திலகம் எம்.ஜி.ஆர்.,ஜெமினி கணேசன் சாவித்திரி ஆகியோர் ஒரு படத்தில் நடித்ததாகவும் ஆனாலும் அந்தப் படம் பாதியில் நின்று போனதாகவும் அந்த படத்தின் பெயர் என்னவென்று நீங்கள் வதனப் புத்தகத்தில். கேட்டிருந்தீர் கள் .ஆனால் எவருமே அதற்கான பதிலைச் சொல்லவில்லை.உண்மையில் அந்த படத்தின் பெயர் என்ன சேர்?.



**பதில்:** மிகவும் பிரச்சினைகளுக்கு மத்தியில் உருவான படமது. இதனால் எம்.ஜி.ஆருக்கு கெட்டப் பெயரைக்கூட உருவாக்கிக் கொடுத்த ஒரு படம்தான். ஆமாம்...எம்.ஜி.ஆர்.அவர்கள் ஒழுங்காக சூட்டிங் வராமல் காலதாமதமாக்கியதால் தயாரிப்பாளர் நஷ்டப் பட்டுப் போனார் என்று கதையை பரப்பி விட்டார்கள். ஆனால் அதில் உண்மை இல்லை என்றும் தாயாரிப்பாளர் நடிகர் சந்திர பாபுவின் தேவையற்ற செலவுகள்தான் அதற்குக் காரணம் என்றும் பின்னாளில் தெரிய வந்தது. பிரச்சினைகளை சுமந்து நின்ற அந்த படத்தின் பெயர்தான் "மாடி வீட்டு ஏழை!"

ஆர்.குமார்.வவுனியா.

**கேள்வி:** பொங்கலுக்கு வெளியான இளைய தளபதி விஜய்யின்' வாரிசு', தல அஜித்தின் 'துணிவு' ஆகிய படங்களில் அதிக வசூலை ஈட்டிய படமெது?

**பதில்:** பொங்கல் ரேசில் விஜய்யின் 'வாரிசு' திரைப்படமும் அஜித்தின் 'துணிவு'திரைப்படமும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட நிலையில் அதில் அதிக வசூலை வாரிக்குவித்தது யார் என்பது குறித்து பல்வேறு தகவல்கள் உலாவுகின்றன. விஜய் நடித்துள்ள 'வாரிசு'திரைப்படமும் அஜித் நடித்துள்ள 'துணிவு' திரைப்படமும் ஒன்பது ஆண்டுகளுக்கு பின் ஒன்றாக ரிலீசாகி உள்ளன. இதில் இரண்டு படங்களுக்குமே நேர்மையான விமர்சனங்களே கிடைத்து வருவதால் இரு தரப்பு ரசிகர்களும் உற்சாக மடைத்துள்ளனர். வசூலில் இரண்டு படங்களுக்கு போட்டி நிலவி வருகிறது. அதன் படி பொங்கல் ரேசில் அதிக வசூலை அள்ளியது யார் என்பதே அவர்களது ரசிகர்கள் மத்தியில் இருக்கும் பெரிய கேள்வியாகும். அஜித் விஜய் படங்களுக்கு எப்போதுமே முதல் நாள் வசூல் என்பது மிகவும் முக்கிய யானது. அந்த வகையில் வாரிசு திரைப்படம் முதல் நாளில் உலக அளவில் 26.5 கோடி வசூலித்து முதல் இடம் பிடித்துள்ளது. இதற்கு போட்டியாக ரிலீசான அஜித்தின் துணிவு படமும் உலக அளவில் 26 கோடி வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது சென்னையை பொறுத்தவரை 'துணிவு' திரைப் படம் முதல் நாளில் 3.75 கோடியும் வாரிசி திரைப்படம் 3.95 கோடியும் வசூலித்துள்ளது. ஆனால் தமிழ்நாடு முழுவதலும் துணிவு படம்தான் அதிகளவு வசூல் ஈட்டியுள்ளது. அப்படம் முதல் நாளில் 19 கோடிக்கு மேல் வசூலைக் குவித்துள்ளது. ஆனால் வாரிசு படத்திற்கு தமிழ் நாட்டில் 17 கோடிகள் மட்டுமே வசூலாகியுள்ளது.

**கேள்வி:** பரபரப்பாக பேசப்பட்ட நடிகர் இயக்குநர் ஹிப்ஹொப் ஆதியைப்.பற்றி தகவல் எதுவும் இல்லையே.. ஏதும் படங்களில் அவர் நடிக்கி றாரா?

**பதில்:** இயக்குநர் வேணுகோபாலன் இயக்கத்தில் ஹிப்ஹொப் ஆதிபுதிய படமொன்றில் நடிக்கிறார்.இந்த படத்தில் நடிகை காஷ்மிரா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இசையமைப்பாளர், ராப் பாடகர், நடிகர், இயக்குநர் என பன்முகத் தன்மை கொண்டவர் ஹிப்ஹொப் ஆதி. இவர் நடித்துள்ள 'வீரன்' திரைப்படத்தின் இறுதி கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கே.ஆர்.மாலா,யாழ்ப்பாணம்.

**கேள்வி:** பழ மொழிப் பட்களில் நடித்து வந்தால் நீங்கள் மூழ்கி விடுவீர்கள்"என்று ரசிகர்கள் துல்கர் சல்மானை மிரட்டியுள்ளார்களாமே...இதற்கு அவர் என்ன பதில் சொல்லியிருக்கிறார்?

**பதில்:** குறுகிய காலத்திலேயே திரை உலகில் தனக்கான இடத்தைப் பிடித்தவர் இளம் நடிகர் துல்கர் சல்மான்.கடந்தவருடம் இவர் நடிப்பில் தமிழில் 'ஹேசினாமிகா' மலையாளத்தில் 'சல்யூட்'இந்தியில் 'சப் ரிவஞ்ச் ஒஃப் தி ஆர்டிஸ்ட்,தெலுங்கில் 'சீதாராமன்'என நான்கு மொழிகளிலும் திரைப்படங்கள் வெளியாகி இருந்தன.அதில் சீதாராமன் திரைப்படம் இந்திய அளவில் கவனம் ஈர்த்திருந்தது. இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட துல்கர் சல்மான், பல மொழி திரைப்படங்களில்நடிப்பதால் அவர் விமர்சிக்கப் படுவதாக தெரிவித்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி போன்ற நான்கு திரைத் துறையிலும் நான் படங்கள் பண்ணக் கூடாது என்றும் அப்படி பல மொழித் திரைத்துறையில் நான் நடித்தால் மூழ்கிடுவேன் என்றும் பலரும் நினைக்கின்றார்கள். எனக்கு சினிமா மீது ஆர்வமும் காதலும் இருக்கிறது அனுபவங்களைத் தேடிச் செல்லும் தலமுறையைச் சேர்ந்தவன் நான். வேவ்வேறு திரைத்துறைகளில் பணிபுரியும் போது பல்வேறு வகையான கலாசார அனுபவங்களை பெறுகிறேன் எங்கு சென்றாலும் என்னால் முடிந்த சிறந்த வேலையை செய்ய முயற்சிக்கின்றேன். அதுசரியோ தவறோ நான் அதை உலகத்திற்காக மாற்ற மாட்டேன் என்ற தெரிவித்திருக்கின்றரார்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# ஐஸ்வர்யா ராய்க்கு மாறிய மஞ்சுவாரியர் வாய்ப்பு

எனக்கு வந்த தமிழ் பட வாய்ப்பு ஐஸ்வர்யா ராய்க்கு மாறியது என்று மஞ்சுவாரியர் கூறியுள்ளார். மலையாளத்தில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் மஞ்சுவாரியர் தமிழில் 'அசுரன்' படம் மூலம் அறிமுகமானார். அஜித்குமாருடன் நடித்த 'துணிவு' படம் திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் அஜித்குமார், மம்முட்டி, ஐஸ்வர்யா ராய், தபு ஆகியோர் நடித்து 2000ல் வெளியான கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன் படத்தில் ஐஸ்வர்யா ராய் நடித்த கதாபாத்திரத்தில் நடிக்க முதலில் என்னைத்தான் அணுகினர் என்று மஞ்சுவாரியர் கூறியுள்ளார். இதுகுறித்து மஞ்சுவாரியர் அளித்துள்ள பேட்டியில், ''நான் அசுரன் படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானேன். ஆனால் அசுரன் படத்துக்கு முன்பே தமிழ் படங்களில் நடிக்க நிறைய அழைப்புகள் வந்தன. அப்போது மலையாளத்தில் அதிக படங்களில் பிசியாக நடித்து கொண்டு இருந்ததாலும் வேறு சில காரணங்களாலும் தமிழ் படங்களில் நடிக்க தேதி ஒதுக்க முடியவில்லை. இப்படி நான் நடிக்காமல் தவற விட்ட படங்களில் ஒன்று 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'. அந்த படத்தில் ஐஸ்வர்யா ராய் நடித்து இருந்த கதாபாத்திரத்தில் நடிக்க முதலில் என்னைத்தான் இயக்குனர் ராஜீவ் மேனன் அணுகி அழைத்தார். அந்த படத்தில் நான் நடிக்க இயலாமல் போனதால் ஐஸ்வர்யா ராய் நடித்தார்'' என்றார்.



# ராஷ்மிகாவுக்கு மனகவலை

தென்னிந்திய சினிமாவில் குறுகிய காலத்தில் பெரும் உச்சம் தொட்டவர்களில் நடிகை ராஷ்மிகா மந்தனாவும் ஒருவர் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. சென்னை தென்னிந்திய சினிமாவின் பிரபலமான நடிகையாக இருப்பவர் ராஷ்மிகா மந்தனா, பல முன்னணி நடிகர்களுடன் ஜோடியாக பல வெற்றி படங்களில் நடித்திருக்கிறார். சினிமாவின் பிரபலமான நடிகராக இருக்கும் விஜய்க்கு ஜோடியாக வாரிசு படத்தில் நடித்திருந்தார். வாரிசு படத்தில் பெரியளவில் ராஷ்மிகாவிற்கு நடிப்பு இல்லை என்றாலும், விஜய் தனக்கு பிடித்த நடிகர் என்பதாலேயே அவர் இந்த படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதாக கூறி இருந்தார். தென்னிந்திய சினிமாவில் குறுகிய காலத்தில் பெரும் உச்சம் தொட்டவர்களில் நடிகை ராஷ்மிகா மந்தனாவும் ஒருவர் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

இருந்தாலும் அவருக்கு எதிரான விமர்சனங்களும் சர்ச்சைகளும் அதிகரித்து கொண்டேதான் இருக்கிறது. ராஷ்மிகாவின் சிரிப்பு, வொர்க்அவுட், பேச்சு, முகபாவனை என அனைத்தையும் சமீப காலமாக பலரும் டிரோல் செய்து வருகின்றனர். தனக்கு வரும் மோசமான கமெண்டுகளால் மனமுடைந்து இருக்கும் ராஷ்மிகா தற்போது தனது மனக்குமுறலை சமீபத்திய பேட்டியொன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

மக்கள் தன்னை பற்றி கூறும் கருத்துக்கள் சரியானதாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் இதுபோன்று தவறாக கூறுவது என் மனதை பாதிக்கிறது. என்னுடன் உங்களுக்கு பிரச்சனை என்றால், உங்களுக்கு என்ன பிரச்சனை என்று சொல்லுங்கள். துஷ்பிரயோகம் செய்யாதீர்கள், அவர்கள் பயன்படுத்தும் சில வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் நம்மில் சிலரை மனதளவில் பாதிக்கிறது என கூறி உள்ளார்.

# 'ரன் பேபி ரன்'

நடிகர் ஆர்.ஜே. பாலாஜி தற்போது இயக்குனர் ஜியென் கிருஷ்ணகுமார் இயக்கத்தில் திரில்லர் படமொன்றில் நடித்து வருகிறார். இந்த படத்தில் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைக்க, எஸ் யுவா ஒளிப்பதிவு செய்கிறார். 'ரன் பேபி ரன்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் டிரைலர் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியீட்டு விழாவில் நடிகர் ஆர்.ஜே. பாலாஜி கூறியதாவது, "இப்போதெல்லாம், படத்தின் வசூல் பற்றி இளைஞர்கள் அதிகமாகக் கவலைப்படுகிறார்கள். அமெரிக்காவில் எவ்வளவு வசூல், ஐரோப்பாவில் இவ்வளவு வசூல் என்று அவர்களின் நேரமும் ஆற்றலும் வீணாகிறது. கோடிகள் செலவழித்து படம் தயாரிப்பவர்கள் இதுபற்றி கவலைப்பட்டுக் கொள்வார்கள்.





# ஆடைகளை அணிவதில் தனித்துவம்

ஆர்.ஆர்.ஆர். திரைப்படத்திற்கு சமீபத்தில் கோல்டன் குளோப் விருது கிடைத்தது. இந்த நிகழ்ச்சி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர். நடிப்பில் ராஜமௌலி இயக்கத்தில் வெளியான படம் 'ஆர்ஆர்ஆர்'. இப்படம் உலகம் முழுவதும் கடந்த மார்ச் 25ஆம் திகதி வெளியாகி நல்ல விமர்சனங்களை பெற்றது. சமீபத்தில் ஒரிஜினல் பாடல் பிரிவில் இப்படத்தின் 'நாட்டு நாட்டு' பாடல் கோல்டன் குளோப் விருதை வென்றது. இந்த நிகழ்ச்சியானது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்ட நட்சத்திரங்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது. இதில் நட்சத்திர நடிகர்களும் நடிகைகளும் கலைஞர்களும் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆடைகளுடன் கலந்து கொள்வார்கள். இந்த விழாவில் கலந்து கொண்ட தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம்சரண் சிறந்த ஆடை அணிந்து விழாக்களில் கலந்து கொள்ளும் நட்சத்திர நடிகர்களின் பட்டியலில் முதல் பத்து இடத்தில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இத்தகைய பட்டியலில் இடம் பிடித்திருக்கும் முதல் இந்திய நடிகர் இவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ராம் சரண் தன்னுடைய நடிப்பில் மட்டுமல்லாமல், கலந்து கொள்ளும் ஒவ்வொரு நிகழ்விலும் பிரத்யேகமான ஸ்டைலுடன் கூடிய ஆடையை அணிவதில் அலாதி விருப்பம் கொண்டவர். கோல்டன் குளோப் விருது வழங்கும் விழாவில் சிவப்பு கம்பள வரவேற்பில் கலந்து கொள்வதற்காக உலக அளவில் புகழ்பெற்ற ஆடை வடிவமைப்பாளரான தருண் தஹிலியானி மற்றும் அவரது குழுமத்தின் தயாரிப்பில் உருவான ரீகல் மினிமலிஸ்ட் ஃபேஷன் பாணியில் வடிவமைக்கப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தார். அத்துடன் பேஷன் ஆடைகளை அணிவதில் தனித்துவமான அடையாளமாகவும் இவர் திகழ்கிறார்.



# சதிஷ் புதிய படத்தில்

இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் இணை இயக்குனராக பணியாற்றிய வெங்கி இயக்கத்தில் சதிஷ் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் பூஜையில் லோகேஷ் கனகராஜ் கலந்து கொண்டார். இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் இணை இயக்குனராக பணியாற்றி வெங்கி இயக்கத்தில் சதிஷ் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இதில் கதாநாயகியாக சிம்ரன் குப்தா நடிக்கிறார். இப்படத்தை அருள்நிதி நடிப்பில் வெளியான தேஜாவு படத்தை தயாரித்த வைட் கார்ப்பட் ஃபிலிம்ஸ் சார்பில் கே.விஜய் பாண்டி தயாரிக்கிறார். மேலும் ஆனந்தராஜ், ஜான் விஜய், ரமேஷ் திலக், தங்கதுரை, மதுசூதனன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் பூஜை நேற்று தொடங்கியது, இதில் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் கலந்து கொண்டார். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ள நிலையில், நடிகர் விஜய்யின் ஆசீர்வாதத்துடன் படத்தை தொடங்குகிறோம் என்று விஜய்யுடன் சதிஷ் மற்றும் படக்குழு இருக்கும் புகைப்படத்தை படக்குழு வெளியிட்டுள்ளது.



குடியரசு தினத்தை அவமதித்ததாக பிரபல நடிகை ரச்சிதா ராம் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்துகின்றனர். பிரபல கன்னட நடிகை ரச்சிதா ராம். இவர் தர்ஷன், ரவிச்சந்திரன் ஆகியோருடன் இணைந்து நடித்துள்ள 'கிராந்தி' என்ற படம் குடியரசு தினமான வருகிற 26ந்திகதி திரைக்கு வருகிறது. இந்த நிலையில் சினிமா பட விழாவில் ரச்சிதா ராம் பங்கேற்று பேசும்போது, குடியரசு தினத்தை அவமதித்து கருத்து தெரிவித்ததாக எதிர்ப்புகள் கிளம்பின.

அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலைத்தளத்தில் பலர் வற்புறுத்தினர். ரச்சிதா ராம் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கர்நாடக மாநில அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் தலைவர் சிவலிங்கப்பா மாத்தூர் பொலிசில் புகார் செய்தார். அவர் அளித்த புகார் மனுவில், ''நடிகை ரச்சிதா ராம் குடியரசு தினத்தை மறந்து 'கிராந்தி' படத்தை கொண்டாடுங்கள் என்று பேசி இருக்கிறார்.

இது அரசியல் அமைப்புக்கு எதிரானது. அரசியல் அமைப்பு சட்டம் அமுலுக்கு வந்த நாளை அவமதிக்கும் செயல் ஆகும். எனவே ரச்சிதா ராம் மீது தேசதுரோக வழக்கு பதிவு செய்ய வேண்டும்'' என்று கூறியுள்ளார். ரச்சிதா ராம் மீது பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்துகின்றனர்.

# குடியரசு தினத்தை அவமதித்ததாக ரச்சிதா ராம் மீது வழக்கு



இந்தி நடிகர் கார்த்திக் ஆர்யன் ஒரு படத்தில் வெறும் 10 நாட்கள் மட்டுமே நடிக்க ரூ.20 கோடி சம்பளம் வாங்கிய தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்திய நடிகர்கள் வாங்கும் சம்பள தொகையை கேள்விப்பட்டு ஏற்கனவே பலரும் ஆச்சரியத்தில் உறைந்துள்ளனர். இந்தி நடிகர்கள் ரூ.150 கோடி ரூ.200 கோடி என்று வாங்குகிறார்கள். படங்களின் லாபத்திலும் பங்கு கேட்கிறார்கள். தமிழ், தெலுங்கு நடிகர்கள் சம்பளமும் உயர்ந்து உள்ளது. இத்தனைக்கும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள்தான் கால்ஷீட் கொடுக்கிறார்கள். 30 நாட்களில் நடித்து முடிக்கும் படங்களும் உள்ளன. இந்த நிலையில் இந்தி நடிகர் கார்த்திக் ஆர்யன் ஒரு படத்தில் வெறும் 10 நாட்கள் மட்டுமே நடிக்க ரூ.20 கோடி சம்பளம் வாங்கிய தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கார்த்திக் ஆர்யன் தனது முதல் படமான 'பியார் கா பஞ்சநாமா' படத்துக்கு ரூ.1 கோடியே 25 லட்சம் வாங்கி இருந்தார். கார்த்திக் ஆர்யன் அளித்துள்ள பேட்டியில், ''நான் நடித்த ஒரு படத்துக்கு ரூ.20 கோடி சம்பளம் வாங்கியது உண்மைதான். அந்த படத்தை 10 நாட்களில் முடித்து விட்டோம். தயாரிப்பாளருக்கு நிறைய லாபம் கிடைத்தது. எனவே அதில் நடிக்க ரூ.20 கோடி வாங்கியது தவறு இல்லை'' என்றார். கார்த்திக் ஆர்யன் தற்போது அனுராக் இயக்கத்தில் ஆஷிக்கி 3 மற்றும் ஷெகஜாதா ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

# 10 நாட்கள் நடிக்க ரூ.20 கோடி சம்பளம்

# குளிர்காலத்தில் பச்சிளம் குழந்தையை பராமரிப்பது எப்படி?

குளிர்ந்த காலநிலையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். குளிர் காற்று மற்றும் வீழ்ச்சி வெப்பநிலை பிறந்த குழந்தைகளுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும். எனவே, ஒரு பெற்றோராக, உங்கள் பிள்ளை நோய்வாய்ப்படாமல் அவர்களைப் பாதுகாப்பதில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் புதிதாகப் பிறந்த குழந்தையின் உடல் முழுமையாக வளர்ச்சியடையாததால், மாறிவரும் வானிலை நிலையைச் சமாளிப்பது அவர்களுக்கு சவாலாக உள்ளது. மேலும், குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்பதை அறிவது கடினம். சில நேரங்களில் குழந்தையின் அழுகைக்கான காரணம் புரியாது. ஒவ்வொரு முறையும் மருத்துவரிடம் அழைத்துச் செல்ல முடியாமல் போகலாம். எனவே, குழந்தைக்கு எந்த பிரச்சினையும் இல்லாத சூழலை உருவாக்க வேண்டும்.



வறண்ட தோல், செதில் தோல், டயபர் சொறி, அசௌகரியம், கரடுமுரடான தோல், பொதுவான காய்ச்சல் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகள் இந்த குளிர்காலத்தில் புதிதாகப் பிறந்த குழந்தைகளை தொந்தரவு செய்யலாம். இது நடக்காமல் இருக்க குழந்தைகளுக்கு என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இங்கே பார்க்கலாம்.

குளிர்காலத்தில், குழந்தைகளை அடிக்கடி குளிப்பாட்ட வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஸ்பாஞ்ச் துடைப்பால் மெதுவாக துடைப்பதன் மூலம் உடலை சுத்தம் செய்யலாம். உங்கள் குழந்தையை குளிப்பாட்ட வேண்டும் என்றால், வெந்நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். ஏனெனில் இது குழந்தையின் தோலின் பாதுகாப்பு அடுக்கை சேதப்படுத்தும். குழந்தைகளை எப்போதும் வெதுவெதுப்பான நீரில் குளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. புதிதாகப் பிறந்த குழந்தையை நோய்வாய்ப்படாமல் பாதுகாக்க இது மிகவும் முக்கியமானது.

குளிர்காலத்தில் வறண்ட சருமத்தைத் தவிர்க்க, புதிதாகப் பிறந்த குழந்தையை எண்ணெய் கொண்டு மசாஜ் செய்யவும். இந்த எண்ணெய் மசாஜ்கள் குழந்தையின் உடல் வெப்பநிலையை அதிகரித்து இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. குழந்தை மசாஜ் செய்ய உயர்தர இயற்கை எண்ணெய்களை மட்டும் தேர்வு செய்யவும். குழந்தைகளுக்கு பாதாம், ஆலிவ், அஸ்வகந்தா கலந்த எண்ணெயைப் பயன்படுத்தலாம் குளிர் காலநிலை காரணமாக குழந்தைகளின் மூக்கில் அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. இதற்கு மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட நாசி சொட்டுகளைப் பயன்படுத்தவும். இது குழந்தை நாசியைத் திறப்பதை எளிதாக்குகிறது.

எனவே, குளிர்ந்த காலநிலையில் நாசி சொட்டுகள் கிடைக்க வேண்டும், ஆனால் வழக்கமாக பயன்படுத்தக்கூடாது.

குளிர்ந்த காலநிலையில் இருந்து குழந்தையைப் பாதுகாக்க, பல ஆடைகளை அணிவதற்குப் பதிலாக குழந்தையின் தோலில் எரிச்சல் ஏற்படாத மென்மையான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கவும்.


சூடான ஆடைகளுடன், அவர்களின் தொப்பி மற்றும் கையுறைகளை அகற்ற மறக்காதீர்கள். குளிர்காலம் முழுவதும், உங்கள் குழந்தைக்கு குளிர்ந்த உணவுகளை ஊட்டுவதை முற்றிலும் நிறுத்த வேண்டும். அவ்வப்போது தயாரிக்கப்பட்ட உணவை ஊட்டவும். எஞ்சிய உணவை தர வேண்டாம், ஏனெனில் இது அவர்களுக்கு நோயை தரும்.



இந்தக் குளிர்காலத்தில், குழந்தை மீது சூரியக் கதிர்கள் ஒவ்வொரு முறையும் படுகிறதா என்பதை உறுதி செய்து, குழந்தையை அழைத்துக் கொண்டு பத்து நிமிடம் வெளியில் நடப்பது அவர்களின் ஆரோக்கியத்துக்கு நல்லது.

# உதடுகளில் வெடிப்புகள் ஏற்படுவதை தடுக்க எளிய வழிகள்...









வறண்ட காற்று, சூரிய ஒளி, அடிக்கடி உதடுகளை நாவினால் ஈரப்படுத்துதல் உட்பட பல்வேறு காரணங்களால் உதடுகளில் வெடிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். குளிர்காலத்தில் பாதிப்பு கூடுதலாகவே இருக்கக்கூடும். ஒருசிலருக்கு உதடுகளில் வெடிப்பு உண்டாகி இரத்தக்கசிவும் ஏற்படும். எனவே, இவற்றை குணப்படுத்த எளிய வீட்டு வைத்திய முறைகளை பார்க்கலாம்...

உதடு வெடிப்புகளுக்கு எளிய மற்றும் பயனுள்ள தீர்வுகளில் ஒன்றாக உள்ளது பெட்ரோலியம் ஜெல். இது உதடுகளை மேலும் சேதத்திலிருந்து பாதுகாப்பதுடன், ஈரப்பதத்துடன் இருக்கவும் உதவுகிறது.

இயற்கையாக ஈரப்பதத்தைத் தக்கவைக்க தேன் உதவுகிறது. இதிலுள்ள ஆன்டிமைக்ரோபியல் பண்புகள் தொற்றுநோயைத் தடுக்கவும் உதவுகிறது. எனவே, உதடுகளில் சிறிதளவு சுத்தமான தேனைத் தடவி, ஒருசில நிமிடங்கள் உலரவிட்டு பின்னர் துடைக்கலாம்.

மற்றொரு இயற்கை மாய்ஸ்சரைசர் தேங்காய் எண்ணெய் ஆகும். இது உதடுகளின் வெடிப்புக்கு சிகிச்சையளிப்பதில் பயனுள்ளதாக உள்ளது. இதிலுள்ள கொழுப்பு அமிலங்கள் சருமத்துக்கு ஊட்டமளிப்பதுடன், ஈரப்பதமாக்கவும் உதவுகிறது. தேனை போன்றே தேங்காய் எண்ணெயை உதடுகளில் அவ்வப்போது தடவி, ஒரு சில நிமிடங்கள் கழித்து துடைத்து விடவும்.

இயற்கையான தாவரமான கற்றாழையில் இனிமையான மற்றும் ஈரப்பதமூட்டும் பண்புகள் நிறைந்துள்ளன. எனவே, உதடுகள், முகம் என சருமத்துக்கு நேரடியாகப் பயன்படுத்தலாம்.

இயற்கையான துவர்ப்புப் பொருளான எலுமிச்சை சருமத்தை இறுக்கி, பளபளப்பாக்க உதவுகிறது. ஒரு சில துளிகள் எலுமிச்சை சாற்றுடன் சிறிதளவு தேன் கலந்து உதடுகளில் தடவவும்; சில நிமிடங்கள் உலரவிட்டு கழுவி விடவும்.

இதுதவிர அதிகளவில் தண்ணீர் குடிப்பதன் மூலம், சருமத்தை நீரேற்றமாக வைக்கலாம். உதடுகளை அடிக்கடி நாக்கினால் ஈரப்பதமாக்குவதையும் தவிர்க்க வேண்டும். உதடு தைலம் அல்லது மாய்ஸ்சரைசிங் க்ரீம் பயன்படுத்தும்போது உதடுகளில் வெடிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

# செல்ஃபி உலா



சிவராஜா தக்கீஷன்
ஒலிபரப்பாளர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் / நேத்ரா T V



ரமேஷ் ஶ்ரீதரன்



புனித பிரியா பன்னீர் செல்வம்



Athvik



Kali Kali



சனாதனன் சனாவின்
மௌனமொழி படக்குழுவினர்



இந்துஜா குடும்பம்



S.N.Vinoth



meena




Sukchain & Noka



கிருஷாந்தி கிருஷா



## நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்



## கணிதம்

| | | | |
|---|---|---|---|
| 39 + 17 = __ | 69 - 29 = __ | 25 + 35 = __ | 79 - 73 = __ |
| 54 + 21 = __ | 81 - 32 = __ | 38 + 43 = __ | 32 - 28 = __ |
| 65 + 32 = __ | 96 - 37 = __ | 64 + 18 = __ | 86 - 58 = __ |

## தொடர்பு படுத்துங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







## திக்குவல்லை மண்ணில் பிறந்து

# இலக்கிய உலகை மெருகூட்டிய அலி மாஸ்டர்

மனமோ இன்னும் மறக்கவில்லை அந்த நாளை. உந்தன் 85 ஆவது பிறந்தநாளில் வாழ்த்துச் சொல்ல சந்தோசமாக வந்தேன். மறுநாள் உங்கள் இறந்த நாளாக இருக்கும் என்ற வேதனை அறியாத அப்பாவியாக..

ஊருக்கோர் சேவகனாக பாசத்தின் மன்னனாக திக்குவல்லை கண்ட மௌனப் படைப்பாளியான எம்.எச்.எம். அலி மறைந்து 6 வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால் அவர் நினைவுகள் உள்ளுக்குள் இன்னும் உருண்டு கொண்டுதான் இருக்கிறது. பல பரிமாணங்களை கொண்ட எம்.எச்.எம்.அலி ஒப்பற்ற பாடல்களாலும் கவிதைகளாலும் ஓவியங்கள். நடன நாடக கலை நிகழ்ச்சிகளாலும் கலை இலக்கிய உலகை மெருகூட்டியவர். ஈழக்கலைஞராக,ஓவியராக,ஆசிரியராக சமூக சீர்திருத்தவாதியாக நடிகராக எழுத்தாளராக பன்முக ஆளுமை கொண்டிருந்தார் அவர்.



மனிதராகப் பிறந்து பல இன்னல்களையும் துன்பங்களையும் கடந்து மின்னல் போல கழியும் வாழ்வதனை கறை படிந்த வாழ்வாகக் கரைத்திடாது சேவை ,அன்பு, பண்பு நிறைந்த வாழ்வாக வாழ்ந்து சோதனைகளை சாதனைகளாக்கி புனிதராக வாழ்ந்து மரணித்த அவர் இன்றும் எல்லோர் மனதிலும் வீற்றிருக்கிறார்.அலி மாஸ்டர் என்று செல்லமாக அழைக்கப்படும் எம்.எச்.எம். அலி 1932 ஜனவரி 18 ஆம் திகதி ஹாமீம் மற்றும் ரஸீனா உம்மாவுக்கு இரண்டாவது மகனாக பிறந்தார். இவரின் இருசகோதரர்களில் மூத்தரவான எம்.எச்.மொஹமட் (கமர் மாஸ்டர்) ஆசிரியராகவும் கலைஞராகவும் நன்கு அறியப்பட்டவர். அதே போன்று அவரின் இளைய சகோதரரான எம்.எச்.எம். ஷம்ஸ் நாடறிந்த எழுத்தாளர். கவிஞர், பாடகர் என பல பரிமாணங்களை கொண்டவர். திக்குவல்லை 'அலீலா வளவு' தான் இவரின் பிறப்பு முதல் இறப்பு வரை அடைக்கலம் கொடுத்த வீடாகும்.

தனது ஆரம்பக் கல்வியை திக்குவல்லை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் (தற்பொழுது மின்ஹாத் பாடசாலை) ஆரம்பக் கல்வியை பெற்ற அவர் பாடசாலை காலத்திலேயே கலை இலக்கியத் துறைகளில் ஆர்வம் காட்டி திறமைகளை வெளிப்படுத்தினார். ஏ.எச்.எஸ்.மொஹமதின் வழிகாட்டல் அவரின் கலை உணர்வுகளை வெளிப்படுத்த உந்துசக்தியாக அமைந்தது. செல்வராஜகோபால் ஆசிரியர் தான் அவரை முறையாக வழி நடத்தி நாடறிந்த எழுத்தாளராக உயர வழிகாட்டிய நல்லாசானாகும். அதனை அவர் பல இடங்களில் குறிப்பிட்டும் இருக்கிறார். இது தவிர ஏ.டபிள்யு முபாரக், எம்.ஆர்.மொஹமட்,முஹம்மது லதீப்,எம்.ஜ.சுகூர்,எஸ்.எஸ்.சின்னதுரை போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

ஜனுல் ஷாகிராவை மணந்த இவர் ஐந்து பிள்ளைகளை இந்த உலகிற்கு வழங்கியுள்ளதோடு அஷாயிர், மாஷாயிர், அஷீரா, மஷீரா மற்றும் இஷாரா ஆகியோரே அவர்களாவர். 1958 ஆம் ஆண்டில் தனது 26 ஆவது வயதில் ஆசிரிய சேவையில் இணைந்து 30 வருடங்களுக்கு மேல் நல்லாசானாக பணியாற்றியுள்ளார். மின்ஹாத் கனிஷ்ட பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்ற அவர் 1990 வரை 32 வருடங்கள் அயராது சேவையாற்றினார். மாணவர்களின் உள்ளங்களை வெல்லும் வகையில் சிறப்பாக ஆசிரியப் பணியாற்றிய அவர் கல்விச் சுற்றுலா, கலைநிகழ்ச்சிகள், கண்காட்சி, சித்திரம், சஞ்சிகை வெளியீடு என மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. 1990 இல் ஓய்வு பெற்றாலும் சிறுவர்களுக்குக் கற்பிக்க பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியர்கள் இன்மை காரணமாக தொண்டர் ஆசிரியராக மீண்டும் மின்ஹாத்தில் இணைந்து பணியாற்றினார். இவ்வாறு 2013 வரை மேலும் 23 வருடங்கள் இடைவிடாது சேவையாற்றி பல தலைமுறைகளின் அறிவுக்கண்களை திறந்துள்ளார் அலி மாஸ்டர். 1972 ஆம் ஆண்டில் அட்டாளைச்சேனை ஆசிரியப் பயிற்சிக் கலாசலையில் பயிற்சி பெற்று வெளியேறிய அவர் மின்ஹாத் பாடசாலையில் மட்டுமன்றி அலுபொத்த முஸ்லிம் வித்தியாலயம், தங்கல்ல முஸ்லிம் வித்தியாலயம் என்பவற்றிலும் சேவையாற்றியுள்ளார். இயங்குகலை, ஓவியம், கைப்பணி, சிறுவர் இலக்கியம், நாடகம், நடிப்பு,என்பன இவர் திறமை காட்டிய துறைகள் எனலாம்.

முஸ்லிங்களின் பாரம்பரிய கலைகளான கோலாட்டம் ,களிகம்பாட்டம் போன்றன மறைந்து விடாமல் பாதுகாப்பதில் இவரின் பங்கு அளப்பரியது. 50 வருடங்களுக்கு மேலாக களிகம்பாட்டம். கோலாட்டம், றபான்.நடனம் போன்றவற்றை வளர்த்துப் பாதுகாக்க அவர் செய்த சேவைகள் மறக்க முடியாதது. மாணவ மாணவிகளை அழைத்துக் கொண்டு விழாக்கள்.கந்துரிகளில் மேடையேற்ற அவர் அயராது பாடுபட்டார்.திக்குவல்லை என்றாலே கோலாட்டம் எனும் அளவிற்கு சிறப்பாக இந்தக் கலையை அழியாது காக்க பாடுபட்டார் அலி மாஸ்டர். அது மட்டுமன்றி 40 வருடங்களுக்கு மேலாக திருமண வீடுகளில் மணமேடைகளை (ஜோடனை) அமைப்பதில் கைதேர்ந்தவராக இருந்துள்ளார்.





இவரது முயற்சியால் ஓவியக் கண்காட்சிகள் அடிக்கடி நடைபெறும்.சிறந்த ஓவியரும் கைப்பணி நிபுணருமான அலியின் படைப்புகள் பாடசாலைகளில் நடைபெறும் கண்காட்சிகளில் நிச்சயம் இடம்பிடிக்கும்.

பெரிதாக எதனையும் சாதிக்காமல் தங்களை ஜாம்பவான்களாக காட்டிக் கொள்வோர் மத்தியில் மிகவும் எளிமையானவராக திகழ்ந்த அலி மாஸ்டர் செயல்மூலம் கற்றல்,பாபுல் குர்ஆன்,இளஞ்சுடர் .சின்னச் சிறகுகள்(சிறுவர் புத்தகம்) போன்ற புத்தகங்களை எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.குர்ஆனை இலகுவாக ஓதும் வகையில் 'பாபுல் குர்ஆனை' அறிமுகம் செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளது பலருக்கும் தெரியாது. 1980 முதல் சுமார் 10 வருடங்கள் வரை இளஞ்சுடர் எனும் மாணவர் சஞ்சிகையொன்றை வெளியிட்டு மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பங்காற்றினார் அலி. தான் நீண்ட காலமாக எழுதி வந்த பாடல்களை தொகுத்து 'சின்னச் சிறகுகள்' என்ற பெயரில் வெளியிட்டார். மாணவர்களுக்காக இவர் வெளியிட்ட செயல்நூல்கள் அக்காலப் பகுதியில் மிகவும் பிரபலமானவை.

சமயத் துறையிலும் இவரின் பங்களிப்பு அளப்பரியது. ஸாவியா மத்ரஸாவை 35 வருடங்களுக்கு மேலாக நடத்தி மாணவர்களுக்கு குர்ஆன் ஓதவும் நோன்புகாலத்தில் ஹிஸ்பு மஜ்லிஸ்களை நடத்தவும் அலி மாஸ்டர் பங்காற்றியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இலைமறை காயாக இவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்கா. இந்த நிலையில் 1994 ஆம் ஆண்டு இவருக்கு 'அரங்க வேந்தன்' விருது வழங்கப்பட்டதோடு 1998 இல் பிரதேச செயகத்தினால் நடத்தப்பட்ட சாஹித்திய விழாவின் போது கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2007 இல் 'மாத்தொட்ட கலா பிரசாதினி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.


அவர் மறைந்தாலும் அவரின் நினைவுகள் இன்னும் நீங்காதுள்ளன.தந்தையின் வழியில் அவரது புதல்வர் அஷ்ஷெய்க் மஷாயிர் பங்காற்றி வருவதோடு தற்பொழுது தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார். அவரின் பணிகள் மேலும் தொடர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.





**இஷ்ரா மபாஸ்**
மருத்துவ பீட மாணவி
(யூனானி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை)
கொழும்பு பல்கலைக்கழகம்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181



# சதுர ரயர் போட்ட காரோட்டி

சதுர ரயர் போட்ட காரை ஓட்டிக்கொண்டிருப்பவரின் பெயர் இந்தக் கதைக்கு முக்கியமில்லை. அவரது மனம் பெருத்த மனம்தான் முக்கியம்.

சின்னவன் குப்புறப் படுத்துக்கொண்டு வரைந்து கொண்டிருந்தான். அவனது வரைவுலகு வித்தியாசமானது. வர்ணங்களின் கலவை அலாதியானது. அவன் வரைந்தவற்றை வீட்டுச் சுவரெங்கும் ஒட்டிக் காட்சிப்படுத்தினான். அவனளவில் பத்திரப்படுத்துபவன் என்றும் சொல்லலாம்.

அவன் வயலை நீலமாக்கினான்; வானத்தைப் பச்சையாக்கினான். கடலை மஞ்சளாக்கினான். காட்டைச் சிவப்பாக்கினான். காட்டு மரங்களில் பல்வர்ணக் குருவிகளின் முகங்களில் பூக்கள் என்றெல்லாம் வரைவான்.

வாகனங்களில் அவனுக்குப் பிரியம். கிட்டத்தட்ட எல்லா வாகனங்களையும் 'பீப்' எழுப்பி ஓடியிருக்கிறான். ஒவ்வொன்றுக்கும் அதனதன் வகைச் சத்தம் எழுப்புவான். வாகனங்களை வரையத் தொடங்கும் போது புதியபுதிய வடிவங்களை உருவாக்கும் கார் உற்பத்திக்காரனாக மாறிவிடுவான். அவனைப் பொறுத்தவரை அவனுக்குப் புதுமையுணர்வு புதிதுபுதிதாய்ப் படைக்கும் ஆர்வம் சிந்தனைப் போக்கு.

சின்னவிரல் தூரிகை பத்து நூறு காரூர்திகளை வரைந்திருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. ஒவ்வொரு வடிவம். பெயரும் வைத்துவிடுவான்.

லொலி, பீஞ்ச், கொரோ, வீலர், லோலோ இப்படி அவன் உருவாக்கம்.

அவன் வரையும் எல்லாக் கார்களுக்கும் ரயர் கறுப்பாயிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. மாற்றினான்.

வர்ணமயம் அழகாயிருந்தது. பிறகு ஒரு தடவை யோசித்தான். எல்லாக் கார்களுக்கும் ரயர் வட்டமாக, வலயமாக இருக்கிறது. வடிவத்தை மாற்றினால் என்ன. வட்டவடிவக் கார் மட்டும்தான் ஓடுமா? அவனது மூளையில் புத்துணர்வு படர்ந்தது. சதுர ரயர் போட்ட கார்களை வரையத் தொடங்கினான். அவனுக்கு அது புதுமையாயிருந்தது.

சதுர ரயர் போட்ட காரைத்தான் பெருத்த மனக்காரன் ஓட்டிக்கொண்டிருக்கிறான். அவனது சேட்டின் வர்ணமும் அப்படித்தான் இருந்தது. சதுரக்கோடு கோடுகளினுள் ரயர்கள். அப்படியொரு சேட்டைப் போட்டிருந்தான்.

காரோட்டிக்குப் பின்வரும் விடயங்களில் கவலை இல்லை.

- ★ கார் தொடங்கிய இடத்தில் நிற்பது.
- ★ காருக்கு பிறேக் இல்லாதது.
- ★ கார் அவருக்கு சொந்தமற்றிருப்பது.
- ★ ரயரை மாற்றும் கடைக்காரனுக்கு சிரமமாக இருப்பது.
- ★ மாற்று ரயர் இல்லாமல் இருப்பது.
- ★ தனக்கு சதுர ரயரோ வட்ட ரயரோ முக்கோண ரயரோ எந்த வித்தியாசமும் தெரியாது இருப்பது.

அவனது வேலை காரோட்டுவது. அடிப்படை மூலத்தை மாற்றுவது பற்றி அவனுக்குக் கவலை கிடையாது.

காரோட்டியின் கார் கற்பனைக் கார். அழகாக ஓடுகிறது. சிலவேளை வேகமாகப் பறக்கிறது. சிலவேளை நீந்துகிறது. சிலவேளை தாவுகிறது.

சின்னவன் மீண்டும் வரைகிறான். அவனுக்கு அடிப்படையை மாற்றுவது பற்றி கவலை கிடையாது. அவன் வரைகிறான். காருக்கான சிறகு... செட்டை.... வால்.....

மீண்டும் சதுர ரயர் போட்ட கார் அவனது வீட்டுச் சுவரில் ஓடுகிறது.

பொன்மீரா

# புத்தகத் திருவிழாவும் புதுவரவுகளும்




இலக்கிய வெளியின் பிரகாசம் விழும் இடமாக புத்தகக் கண்காட்சி நிகழ்வொழுங்குகள் அமைகின்றன. தமிழ் மொழி சார்ந்து இலங்கையிலும், தமிழகத்திலும், ஐரோப்பிய வெளியிலுமென நிறையவே நிகழ்கின்றன.

அண்மைக் காலத்தில் கிழக்கிலும், வடக்கிலும் நடைபெற்ற சில புத்தகக் காட்சிகளும் விற்பனைக்கூடங்களுமான நிகழ்வுகள் ஆரோக்கியமானதே. இதைத் தவிரவும் சர்வதேச புத்தகக் கண்காட்சி பி.எம்.ஐ.சி.எச்சில் வருடா வருடம் நிகழ்வதுண்டு. இங்கு தமிழ் வாசக விற்பனைப் பரப்பு விசாலிப்பது மிகக்குறைவே. எனினும் சிங்கள மொழியூடான வெளியீடுகளும் வாசகப்பரப்பும் விசாலித்து நிற்பதைக் காணமுடியும். சிங்களமொழி இலக்கிய வளர்ச்சியின் அளவுகோலாக இதனை அணுகலாம்.



தமிழகத்தில் வருடந் தோறும் ஜனவரியில் புத்தகத் திருவிழா நடப்பதுண்டு. சில ஆண்டுகளின் பின் கடந்த ஆறாம் திகதி தொடக்கம் நடைபெற்று இருபத்தியிரண்டாம் திகதி முடிவுற்ற சென்னைப் புத்தகத்திருவிழா 2023 இல் மிகுந்த அவதானிப்பை பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சியின் இன்னொரு பரப்புகையாக இது அமைந்தது. இலங்கை நூல்களை தமிழ்நாட்டு மற்றும் புலம் பெயர் தேசத்து வெளியீட்டாளர்கள் நிறைய வெளியிட்டனர்.

புதிய உலகம் போன்ற இலங்கைப் புத்தகக் களங்களும் இயங்கின. தினமும் இலக்கிய பிரியமுடன் கைகோர்த்து நூல் வெளியிட்டு வைபவங்கள் நிகழ்ந்தேறின. ஈழத்து இலக்கிய ஆளுமைகளும் கலந்துகொண்டிருந்தனர். குறிப்பாக தோழர் ரியாஸ் குரானா ஈழத்தின் நூல்களை அறிமுகம் செய்வதில் முன்னின்றார். பாத்திமா புத்தக நிலையம் சார்ந்து தோழர் சப்ரி இயங்கினார்.

ஒரு உயிர்ப்பான புத்தகச்சந்தை வாசிப்பு மற்றும் வாசகரின் மைய விரிநிலையைப் புலப்படுத்தியது. புதிய இலக்கிய வரவெண்ணிக்கை அதிகரித்தது. முன்னமில்லாத அளவு இலங்கை படைப்புகள் மீது ஒளிபாய்ச்சப்பட்டதாக நம்பலாம். பழைய, புதிய வெளியீட்டகங்கள் பல இயங்கின. இதற்குள் வெளியீட்டு அரசியலொன்றையும் காணலாம்.

ஈழத்தின் மலையகம், வடக்கு முஸ்லிம், விளிம்பு நிலைப்பட்ட படைப்புக்கள், அறிமுகமற்ற புதிய இளந்தலைமுறை மீதும் ஒளி பாய்ச்சப்பட்டிருந்தால் இலக்கிய சமநிலை பேணப்பட்டிருக்கும் என நம்பலாம். ஒருவகை இலக்கிய வெளியீட்டு அரசியல் இயக்கம் கொண்டிருந்தமை அவதானிப்புக்குரியது.

இனி வருங்காலத்தில் இலங்கையை மையப்படுத்திய அல்லது தமிழக வெளியீட்டுக்களங்கள் இலக்கியச் சமநிலையை வெளியீட்டு முறைமைக்குள் பேணும் என நம்பலாம்.

# முயலாடு முன்றில் 06

பசியாறும் முயல்களின் மகிழ்ச்சி இன்பமானது குழந்தைகளும் பசியாறும் பொழுது ஆனந்தமானது. சிறுவர் ஆரோக்கியம் குறித்த கவனக் குவிவு சமகால உலகில் கேள்வியாகி நிற்கிறது.

உணவுப் பழக்கவழக்கம், உணவு முறைமை, புத்தாக்க உணவியல், பொருளாதார இழப்பு, பெற்றோர், சிறார் மனோபாவமென சிறுவர்கள் மீது ஆரோக்கியம் கேள்வியாகி நிற்கிறது.

இந்தப் பின்புலம் போஷாக்கு குறைபாடான சமூகத்தைத் தோற்றுவித்து மந்த புத்தியில் மூழ்கி அறிவெழுச்சியைப் பின் தள்ளி விடவும் கூடியது. உணவிலும் ஒற்றுமை வளர்க்க வேண்டும். பகிர்ந்துண்டு மகிழ வேண்டும்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' அறங்களிலெல்லாம் மிகச்சிறந்தது பகிர்ந்துண்பது தான்.

அதனாற் தான் 'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதலின்று'' விருந்தினரை போற்றும் வாழ்வு செழிப்புறுவதாக வள்ளுவரும் உரைக்கிறார்.

உணவு அடிப்படை உயிர்வாழ்வு ஆகாரம்;. அது ஆரோக்கியமாகப் போஷாக்கு மிக்கதாக மிளிர வேண்டுமல்லவா. உடலுக்கு மாறுபாடற்ற உணவை ஊட்டிப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். வளர்ச்சி என்பது ஆள் உயர்வு மட்டுமல்ல. அறிவு, நுண்ணறிவு, மனம், ஆற்றல், உடல் உள, வலு எல்லாம் வளர வேண்டும்.

மூன்றாம் உலகத்தில் சிறுவருலகு வறுமையின் பிடிக்குள் சிதைவுறுகிறது. இதன் முதல் துன்பமாகப் பசி இருக்கிறது. பசியை வெல்ல வேண்டுமென்பதில் சிறுவர் மீது கவனக் குவிப்பு அவசியமாகிறது.

சிறுவர் உணவுக் கூம்பகத்தின் மீது நிறையுணவுப் பண்பாட்டின் மீது பெற்றோர் கட்டமைக்கும் கலாசாரம் செழிப்புற வேண்டும்.

இன்றைய பாடசாலைச் சூழலில் துரித உணவுகள் அல்லது சிற்றூண்டியுணவுகள் ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்கி விடுகிறது. இந்த ஆரோக்கியமின்மை கற்றல் ஈடுபாட்டிலும், நல மேம்பாட்டிலும் ஆரோக்கியமற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. எனவேதான் பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டுக்கு வழியாக உணவுப் பழக்க வழக்கத்தையும் கருத்திலெடுத்து நிறையுணவு மீது புதிய கலாசாரத்தைக் கட்டமைக்க வேண்டும்.

உணவும் உடல் நலமும் வெவ்வேறானவை அல்ல. அவை ஒன்றோடொன்று இணைந்தவை. காத்திரமான உணவு முறை உடல் உள வாழ்வியலில் சாதகத்தன்மையை உயிர்ப்பிக்கும்.

இயற்கைதான் உணவைத் தருகிறது. இன்றைய நாகரிக மனிதன் இயற்கையை மிஞ்சிக்கொண்டு உணவுக் கட்டமைப்பை செயற்கைப்படுத்தியதன் விளைவு பாரதூரமானது. குழந்தை நோய்களும் புதிய வகையில் சிறுவர்களை ஆட்கொள்வதைத் காணுகிறோம். இந்நிலை கட்டற்ற உணவுக் கலாசாரத்தின் பக்க விளைவுதான்.

குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கும் உணவு ஒழுங்கு சீரமைக்கப்படல் வேண்டும் சமச்சீர் உணவு மீது கவனம் வேண்டும். விரைவுணவுக் கலாசாரத்தை நிறுத்தி விட சிறார்கள் முனைப்புடன் இருத்தல் வேண்டும்.

உலகெங்கும் போரினால் சிறுவர்கள் அநாதைகளாகின்றனர். இழக்கப்படுகின்றனர் என்றால் உணவின்றி உயிரிழக்கும் குழந்தைகளையும் காணுகிறோம்.

இன்றைய பொருளாதார சூட்சுமம் போஷாக்குணவற்ற பிள்ளைகளையே சமகால உலகுக்கு பரிசளித்திருக்கிறது. இது இந்நூற்றாண்டின் முதல் இழிவு எனலாம்.

அங்கம் 18

# முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா



அறிஞர் அண்ணா ஒரு சமயம் சேலத்தில் உள்ள நண்பர் ஒருவர் வீட்டிற்கு விருந்து உண்ணச் சென்றார். இலை போட்டு முட்டை, அப்பளம் உட்பட உணவும் பரிமாறப்பட்டது. காற்று கொஞ்சம் பலமாக வீசவே அப்பளம் காற்றில் பறந்தது. உடனே அண்ணா விருந்து பரிமாறியவரை பார்த்து "அப்பளம் என்ன விலை?" என்று கேட்டார். அதற்கு அவர் காலணா என்றார். "முட்டை என்ன விலை?" என கேட்டார் அண்ணா "நாலணா" என்றார் பரிமாறியவர். உடனே அண்ணா "காலணா தலைவிரித்தாடுகிறது. நாலனா அமைதியாயிருக்கிறது" என்றாராம். இதை கேட்ட நண்பர் வாய்விட்டு சிரித்தாராம்.

அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்றதும் கோயில் அறங்காவலர் பதவிகளில் யார் யாரை அமர்த்துவது என்பது பற்றிய பல கருத்துக்கள் நிலவி வந்தன. ஆனால் அண்ணா "கோயில் அறக்காவலர்களாக கட்சிக்காரர்களை நியமிக்கக்கூடாது" என்று உத்தரவிட்டார். அதற்கான காரணமாக "கட்சிக்காரர்களுக்கு கோயில் ஐதீகம் தெரியாது. கட்சிக்காரர்களை அறங்காவலர்களாக நியமித்தால் அவர்கள் கோயில் கொடுக்கும் பொங்கலை சாப்பிட்டுவிட்டு, கோயிலிலேயே தூங்கிவிடுவார்கள் அதனால் கட்சிக்குத்தான் இழப்பு" என்றும் கூறினார் அண்ணா.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர் விநாயகம் எழுந்து "நான் கொடுத்த ஆண் புலிக்குட்டி மிருகக்காட்சி சாலையில் நன்கு பராமரிக்கப்படவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். கொடுத்த பெண் புலிக்குட்டி நன்றாக பராமரிக்கப்படுகிறது" என்று குற்றம் சாட்டினார். உடனே அண்ணா எழுந்து "சம்பந்திகள் இருவரும் உட்கார்ந்து பேசி தீர்த்துக்கொள்ளுங்கள"; என்றார். உடனே சபையில் சிரிப்பொலி எழுந்து.

ஒரு சமயம் நிருபர்கள் அண்ணாவிடம் "உங்களுக்கும் ஒரு நடிகைக்கும் தொடர்பு இருக்கிறதாமே?" என்று கேட்டார். அண்ணாவுக்கும் அந்த நடிகைக்கும் எந்த விதத்திலும் தொடர்பு கிடையாது. இருந்தும் அண்ணா அந்த நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு "அவர் படி தாண்டா பத்தினியும் அல்ல, நான் முற்றும் துறந்த முனிவரும் அல்ல" என்றார். நிருபர்களிடையே பலத்த சிரிப்பு ஏற்பட்டது.

ஒரு சமயம் சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர் விநாயகம் எழுந்து ஒரு கேள்வியை எழுப்பினார். "திருத்தணி



முருகன் கோயில் பகுதியில் தண்ணீர் வழங்க செய்யும் திட்டம் கார்த்திகை மாதத்திற்குள் நிறைவேற்றப்படுமா?" என்று கேட்டார். அதற்கு அண்ணா அவர்கள் "தமையன் விநாயகருக்கு இளையவர் சுப்பிரமணியம் பேரில் தான் எவ்வளவு அக்கறை" என்றார். உடனே சபையில் சிரிப்பு சத்தம் எழுந்தது.

அண்ணா முதலமைச்சராக இருந்த போது ஒருநாள் சாதிக் பாட்சாவுடன் காரில் திருச்சிக்கு சென்று கொண்டிருந்தார். வழியில் பொதுப்பணித் துறையில் வேலைகள் நடந்து கொண்டிருந்தது. அதனால் கார் நிறுத்தப்பட்டது. வெகுநேரம் ஆகியும் கார் செல்ல அனுமதி கிடைக்காததால் கோபமடைந்த சாதிக் பாட்சா பொறியாளர்களை கூப்பிட்டு கண்டித்தார். ஆனால் அண்ணா சிரித்தவாறே அதைப்பார்த்துக் கொண்டிருந்தார். சிரித்ததற்கு சாதிக்பாட்சா அண்ணாவிடம் காரணம் கேட்டதற்கு அந்த பொறியாளர்கள் நினைத்தால் அடுத்த தேர்தலில் நின்று அமைச்சராகலாம். ஆனால் நம்மால் இனிமேல் படித்து பொறியாளர்கள் ஆக முடியுமா? நம் பதவிக்கு உள்ள மதிப்பை நினைத்தேன். சிரிப்பு வந்தது" என்றாராம் அண்ணா.

அண்ணா முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு 1968 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூ ஹேவன் நகரிலுள்ள யேல் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து சொற்பொழிவாற்ற வேண்டுமென்று அழைப்பு வந்தது. அண்ணாவின் அறிவாற்றலுக்கு கிடைத்த அங்கீகாரம் இது. இருப்பினும் அண்ணா அமெரிக்காவிற்கு புறப்பட்டு செல்லுமுன் அப்போதைய பிரதமர் இந்திரா காந்திக்கு இது பற்றி கடிதம் எழுதினார். கடிதத்தில் "யேல் பல்கலைக்கழகத்தில் என்ன பேச வேண்டும் என்று நீங்கள் ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்களா?" என்று எழுதியிருந்தார். அண்ணாவின் கடிதத்திற்கு பதில் எழுதிய இந்திரா காந்தி, "பல்கலைக்கழகத்திலிருந்து உங்களுக்கு அழைப்பு வந்தது குறித்து மகிழ்ச்சி. அங்கு நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதுபற்றி பேசி வாருங்கள்!" என்று குறிப்பிட்டிருந்தார்.

தனது திறமைக்காக கிடைத்த அமெரிக்க வாய்ப்பையும் அண்ணா இந்திய நாட்டிற்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதியதே இக்கடிதம் எழுதியதற்கு காரணமாகும். அண்ணா 1968ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இத்தாலி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இத்தாலி நாட்டிற்கு சென்ற அண்ணா, ரோம் நகருக்கு சென்றார். அங்கு வாடிகன் நகரில் கத்தோலிக்க கிறிஸ்தவ சமய தலைவர் போப் ஆண்டவரை சந்தித்தார். அப்போது கோவா விடுதலை வீரர் ரானடேயை சிறையிலிருந்து விடுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு வேண்டிக் கொண்டார். பின்னாளில் ரானடே விடுதலையும் பெற்றார்.

அண்ணா இத்தாலி விஜயத்தையடுத்து அமெரிக்கா சென்றார். அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக்கழகம் அண்ணாவுக்கு ஏப்ரல் 22ஆம் திகதி சிறப்பு விருதினை அளித்தது.

அண்ணா ஏப்ரல் 23ஆம் திகதி யேல் பல்கலைக்கழகத்தில் பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு திருக்குறள், தொல்காப்பியம் குறித்து வகுப்பு நடத்தினார். இதன் மூலம் தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்தார்.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக மாணவர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்று பெயரெடுத்தவர்கள். அவர்கள் பல்வேறு நாட்டு அறிஞர்களிடம் பல்வேறு கேள்விகள் கேட்கும் பழக்கம் கொண்டவர்கள். அம்மாணவர்களின் கேள்விகளுக்கு பல அறிஞர்கள் பதில் கூறமுடியாமல் திணறியதும் உண்டு. அண்ணாவையும் யேல் பல்கலைக்கழக மாணவர்கள் சோதிக்க விரும்பினர். ஆனால் அண்ணா அம்மாணவர்களின் கேள்விகளுக்கு சிறிதும் தயக்கமின்றி பதில்கூறி அனைவரையும் வியக்க செய்தார். அண்ணாவின் இத்திறமை பற்றி அந்நாளில் பல்வேறு பத்திரிகைகள் புகழ்ந்து பாராட்டி செய்திகள் வெளியிட்டன.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

---

# ஜனரஞ்சக இயக்குனர் சுந்தர் சி



தமிழ் சினிமாவின் ஜனரஞ்சக இயக்குனர், நடிகர், பாடகர், குஷ்பூவின் கணவர் சுந்தர் சி (21 சனவரி 1968). இவர் தமிழ்த் திரைப்பட இயக்குனரும் நடிகருமாவார். இவர் ஈரோடு மாவட்டத்தில் பிறந்தவர், தமிழில் 24 திரைப்படங்களை இயக்கியுள்ளார். தலைநகரம் படத்தின் மூலமாக கதாநாயகனாக அறிமுகமானார். ஆரம்பகாலத்தில், மணிவண் ணனிடம் உதவியாளராக இருந்த இவர் முறை மாமன் என்ற நகைச்சுவைத் திரைப்படம் வாயிலாக இயக்குனராக அறிமுகமானார். இவருடைய பல படங்களில் கதாநாயகியின் பெயர் இந்து என்பதாகும். உள்ளத்தை அள்ளித்தா, அருணாச்சலம், அன்பே சிவம் ஆகிய திரைப்படங்கள் இவருடைய இயக்கத்தில் குறிப்பிடத்தக் கவையாக அமைந்தன. மேட்டுக்குடி, வின்னர், நாம் இருவர் நமக்கு இருவர், லண்டன், கலகலப்பு போன்றவை இவர் இயக்கத்தில் வெளிவந்த நகைச்சுவைத் திரைப் படங்கள் ஆகும். 1995ம் ஆண்டு முறை மாமன் திரைப்படம் மூலமாக சுந்தர் சி. அறிமுகமானார், அதன்பிறகு முறை மாப்பிள்ளை, என்ற அருண் விஜய்யுடைய முதல் படத்தை இயக்கினார். ரஜினிகாந்த்துடைய அருணாச்சலம், கமல்ஹாசனுடைய அன்பே சிவம் மட்டு மின்றி நடிகர்கள் கார்த்திக், பிரசாந்த், அர்ஜூன், சரத்குமார், மற்றும் அஜித்குமார் ஆகியோருடைய திரைப்படங்களையும் இயக்கியுள்ளார். 2006ம் ஆண்டு தன்னுடைய இயக்குநர் பணியை விடுத்து,



தலை நகரம் திரைப்படம் மூலமாக நடிகரானார். ஆரம்பத்தில் சரியாக போகா விட்டாலும், பின்னர் இத்திரைப்படம் மிகப் பெரும் வெற்றியடைந்தது. 2007ம் ஆண்டு வெளிவந்த வீராப்பு திரைப்படமும் 2008ம் ஆண்டு சக்தி சிதம்பரத்தின் நடிப்பில் வெளியான சண்டை திரைப்படமும் வெற்றி அடைந்தன அதனைத் தொடர்ந்து வெளியான திரைப்படங்களான ஆயுதம் செய்வோம், பெருமாள், தீ உள்ளிட்டவைகள் ஓரளவே ஓட ஐந்தாம் படை, குரு சிஷ்யன், வாடா, நகரம் உள்ளிட்டவை படுதோல்வியைத் தழுவின. இவர் நடித்த திரைப்படமான முரட்டுக் காளை ஏற்கனவே 1980களில் வெளியான திரைப்படத்தின் மறு ஆக்கமாகும். இவர் இயக்கத்தில் வெளியான அரணமனை 1,2 போன்ற படங்கள் இவருக்கு நல்ல வரவேற்பை அளித்தன. 2017ம் ஆண்டில், தென்னிந்திய நான்கு மொழிகளில் ஒரே நேரத்தில் "நந்தினி" என்று தொடர் அவரின் மனைவி குஷ்புவுடன் இணைந்து தயாரித்தார். தமிழ் சினிமாவில் சுந்தர்.சி ஓர் ஜனரஞ்சக கலைஞர்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரியின் இஸ்லாமிய தின நிகழ்வு




கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரியின் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் இடம்பெற்ற 42 ஆவது இஸ்லாமிய தின நிகழ்வின்பின்னர் பொறுப்பாசிரியை பிர்தௌஸியா பாரூக், ஆசிரியர்கள் ரஷீத் எம். ஹாயிஸ், இர்ஷாத் ஹூசைன் குழுவினருடன் ஏற்பாட்டுக் குழு மாணவர்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.